பக்கங்கள் : 18+VIII

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 பங்குனி 21 ஞாயிற்றுக்கிழமை (03.04.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :128

# பாப்பரசர் காலமானார்!



வத்திக்கான்,ஏப்ரல்3

கத்தோலிக்கர்களின் திருத்தந்தை பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் தனது 84 ஆவது வயதில் இன்று அதிகாலை காலமானார். அவர் காலமான செய்தி இன்று அதிகாலை ஜி.எம்.ரி.நேரப்படி 21.37 (இலங்கை நேரப்படி அதிகாலை 2.30) இற்கு வத்திக்கானில் அறிவிக்கப்பட்டது.

கடந்த சில வாரங்களாக கடும் நோய்வாய்ப்பட்டிருந்த அருளப்பர், உடல் நிலை மோசமடைந்து இருதயச் செயற்பாடு செயலிழந்ததால் மரணம் அடைந்தார் என வைத்தியர்கள் தெரிவித்தனர்.

சென்.பீற்றர்ஸ் சதுக்கத்தில் பாப்பரசருக்கு நலம் வேண்டிப் பிரார்த்தனையில் ஈடுபட்டிருந்த ஆயிரக்கணக்கான மக்கள் இச்செய்தியைக் கேட்டு கதறி அழுதனர்.

பாப்பரசரின் பூதவுடல் ஒன்பது தினங்கள் அஞ்சலிக்கு வைக்கப்பட்டு பின்னர் அடக்கம் செய்யப்படும். அதன் பின்னர் புதிய திருத்தந்தையை தெரிவுசெய்யும் நிகழ்வு இடம்பெறும்.

தங்கள் திருந்தந்தைக்காக அவரது நலம் வேண்டி உலகெங்கும் கத்தோலிக்கர்கள் பிரார்த்தனைகளில் ஈடுபட்டிருந்தனர். வத்திக்கானில் சென்.பீற்றர்ஸ் சதுக்கத்தில் திரண்டிருக்கும் ஆயிரக்காணக்கான மக்கள் திருத்தந்தையின் பெயரைக் கூறி அழைத்து கண்ணீர் சொரிந்தபடி உள்ளனர் என்று அங்குள்ள செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர். 84 வயதான பாப்பரசர் கடுமையான இருதயம் மற்றும் சிறுநீரகக் கோளாறு காரணமாக சகிச்சை பெற்றுவந்தார்.

இதேவேளை, பாப்பரசருக்கு பிரியாவிடை கூறும் செய்திகளை உலகெங்கும் (18 ஆம் பக்கம் பார்க்க)

# பொலனறுவைப் பிரதேசத்தில் திரைமறைவுப் போர்க்களம்!

## புலிகளுக்கு எதிராக அரசு நிழல் யுத்தம் 'விடுதலைப் புலிகள்' ஏட்டில் குற்றச்சாட்டு

கிளிநொச்சி,ஏப்ரல்3

விடுதலைப் புலிகளுக்கு எதிராக அரசு நிழல் யுத்தம் ஒன்றை நடத்திவருவதாக விடுதலைப் புலிகளின் அதிகாரபூர்வ ஏடான 'விடுதலைப் புலிகள்' பத்திரிகை குற்றஞ்சாட்டியிருக்கிறது.

இந்த நிழல் யுத்தத்தின் ஒரு கட்டமாக பொலனறுவைப் பிரதேசம் திரைமறைவுப் போர்க்களமாக மாற்றப்பட்டிருப்பதாகவும் அந்தப் பத்திரிகை தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அதிகாரபூர்வ பத்திரிகையான 'விடுதலைப் புலிகள்' ஏட்டின் இந்த மாத இதழிலேயே இந்தக் குற்றச்சாட்டுக்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன.

சிங்கள அரசு ஆரம்பித்திருக்கின்ற நிழல் யுத்தத்தின் மூலம் தமிழர்களும் முஸ்லிம்களும் இலக்கு வைக்கப்படுகின்றனர் என்றும் அப்பத்திரிகை குறிபிட்டுள்ளது.

இராணுவ உதவியுடன் நடத்தப்பட்டுவரும் இத்தகைய நிழல் யுத்தக் கூலிப்படைகள் தங்கியுள்ள முகாம் ஒன்றை ஆங்கில ஊடகம் ஒன்று ஆதாரத்துடன் அம்பலப்படுத்தியிருந்தது. எனினும் இலங்கை அரசு இதனை மூடிமறைத்திருந்தது. அத்துடன் அதனைத் தொடர்ந்தும்

(18ஆம் பக்கம் பார்க்க)

### நாளைய உதயன் பத்திரிகையுடன் கல்விச் சுடர்

நாளைய (04.04.2005) உதயனுடன் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குரிய மாதிரி வினாத்தாள்-1 இணைப்பாக வெளிவருகிறது.

வினாக்களுக்குரிய விடைகள் செவ்வாய் (05.04.2005) உதயனில் பிரசுரமாகும்.

கல்விச்சுடர் தனிப் பிரதிகள் தேவைப்படுவோர் திங்கட்கிழமை தவிர்ந்த ஏனைய நாள்களில் எமது பணிமனையில் ரூபா 1 /= இற்குப் பெற்றுக்கொள்ளலாம்.

## அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர் கிளிநொச்சியில் புலிகளுடன் சந்திப்பு

கிளிநொச்சி.ஏப்.3

அமெரிக்க காங்கிரஸ் சபை உறுப்பினர் டெனி கே.டேவிஸ் நேற்று கொழும்பிலிருந்து தரை வழியாக புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு விஜயம் செய்தார்.

கிளிநொச்சிக்கு வருகைதந்த அவர் அரசியல்துறை நடுவப் பணியகத்தில் காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசனுடன் சுமார் ஒரு மணி நேரம் பேச்சு நடத்தினார்.

காங்கிரஸ் உறுப்பினருடன் அவரது பணிப்பாளர் டெனி கென்ட்ரலும் வருகை தந்திருந்தார்.

ஸ்ரீலங்கா அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான சமாதானப் பேச்சுக்களின் தற்போதைய நிலை குறித்தும் சுனாமியால் ஏற்பட்ட பாதிப்புக்கள் தொடர்பாகப் பேச்சுக்களில் கலந்துரையாடப்பட்டது.

கலந்துரையாடப்பட்ட விடயங்கள் குறித்து அமெரிக்க அரசுடன் கருத்துக்களைப் பகிர்ந்து கொள்வதாக டெனி டேவிஸ் தெரிவித்தார்.

பிற்பகல் முல்லைத்தீவுக்குச் சென்ற டெனி டேவிஸ் சுனாமியால் பாதிப்புற்ற பகுதிகளைப்

(18ஆம் பக்கம் பார்க்க)



அமெரிக்கக் காங்கிரஸ் உறுப்பினர் டெனி டேவிஸ் அவரது பணிப்பாளர் கென்ட்ரல் ஆகியோர் நடேசனுடன் கலந்துரையாடும் காட்சி.

புதிய காட்சியறை திறப்புவிழா அழைப்பு

பேரன்புடையீர் !

நிகழும் மங்களகரமான தாரண வருஷம் பங்குனித்திங்கள் 22ஆம் நாள் (04.04.2005) திங்கட்கிழமை காலை 9.52 மணி முதல் 10.40 மணிவரையுள்ள திருவோண நட்சத்திரமும் இடபலக்கினமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில் எம்மால் புதிதாக அமைக்கப்பெற்ற

சண்மாளிகையில்

35 ஆண்டுகளாக எம்மால் நடத்தப்பெறும் செல்லமுத்து புடைவை மாளிகை எனும் ஸ்தாபனத்தை புதுப்பொலிவுடன் ஆரம்பிக்க திருவருள் கைகூடி இருப்பதால் அத்தருணம் எமது உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரையும் வருகை தந்து விழாவைச்சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.



பிரதான வீதி, நெல்லியடி

உரிமையாளர் ச.சண்முகசுந்தரம் அவர்களும் ஊழியர்களும்

செல்லமுத்து புடைவைமாளிகை

# புதிய போப் பாண்டவரை தெரிவுசெய்வது எப்படி?



உலகில் வாழும் 100 கோடிக்கு மேற்பட்ட கத்தோலிக்க கிறிஸ்தவர்களுக்கு வாழும் கடவுளாக திகழ்பவர் போப் பாண்டவர். கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் முக்கிய செயற்பாடுகளை முடிவு செய்து அறிவிக்கும் அதிகாரம் இவருக்கு உண்டு. சிறு வயதில் இருந்தே இறைபணியில் ஈடுபட்டு தன்னலமற்ற சேவை செய்பவர் தான் போப் பாண்டவர் பதவிக்கு வரமுடியும்.

தற்போது போப் பாண்டவராக இருக்கும் இரண்டாம் ஜோன் போல் போலந்து நாட்டைச் சேர்ந்தவர். 1920 ஆம் ஆண்டு பிறந்த இவர், 1978ஆம் ஆண்டு போப் பாண்டவராகப் பதவி ஏற்றார்.

போப் பாண்டவர் பதவிக்கு தெரிவுசெய்யப்படுபவர்களின் இயற்பெயர் மாற்றி பாரம்பரிய பெயர் வைக்கப்படும். தற்போதுள்ள போப் பாண்டவரின் இயற்பெயர் கரோல் வோஜ்டிலா. இவர் போப் பதவிக்கு தெரிவானதும் இரண்டாம் ஜோன் போல் என்று பெயர் சூட்டப்பட்டார்.

கடந்த 27 ஆண்டுகளாக கத்தோலிக்கர்களின் தலைவராக இருந்த அவர், இறுதிக் கட்டத்தை எட்டிவிட்டதால் புதிய போப்பாண்டவரைத் தெரிவுசெய்வதற்கான ஆயத்தப் பணிகள் வத்திகான் நகரில் தொடங்கிவிட்டன. புதிய போப் பாண்டவர் பாரம்பரிய மரபுப்படி தெரிவுசெய்யப்படுவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

போப் பாண்டவர் மரணம் அடைந்ததும் வத்திக்கான் நகர அதிகாரிகள் தங்களுக்கு உள்ள அனைத்து அதிகாரங்களையும் தானாகவே இழந்துவிடுவார்கள். அந்த அதிகாரங்கள் அனைத்தும் வத்திக்கான் நகரில் உள்ள அப்போஸ்தல அரண்மனைக் காரியதரிசியிடம் சென்றுவிடும். இந்தப் பொறுப்பை தற்போது வத்திக்கான் கர்தினால் எதுர்டோ மார்ட்டினெஸ் சோமாலா வகித்துவருகிறார்.

புதிய போப் பாண்டவர் தெரிவுசெய்யப்படும் வரை இவர்தான் கத்தோலிக்க கிறிஸ்தவ அமைப்பின் தற்காலிக தலைவராக இருப்பார். இவர்தான் போப் பாண்டவரின் இறுதிச் சடங்கு ஏற்பாடுகளைச் செய்வார். போப் பாண்டவர் உடல் அடக்கம் செய்யப்படும் இடம் மற்றும் நினைவிடம் அமைப்பது போன்றவற்றுக்கும் இவர்தான் பொறுப்பு வகிப்பார்.

போப் பாண்டவரின் இறுதிச் சடங்குகள் முடிந்த பிறகு புதிய போப் பாண்டவரைத் தெரிவுசெய்யும் ரகசிய தேர்தலை நடத்தும் அதிகாரமும் இவருக்குத்தான் இருக்கிறது. போப் பாண்டவர் மரணம் அடைந்த 2 வாரத்துக்குள் புதிய போப் பாண்டவர் தெரிவுசெய்யப்படவேண்டும் என்பது விதியாகும்.

அந்தக் காலகட்டத்துக்குள் இவர் ரகசிய தேர்தலுக்கு வருமாறு அழைப்பு விடுப்பார். அதை ஏற்று கர்தினால்கள் அப்போஸ்தல அரண்மனைக்குச் சென்று ரகசிய தேர்தலில் வாக்குப் போடுவார்கள். இந்த வாக்கெடுப்பு அரண்மனையில் உள்ள சிஸ்டின் பிரார்த்தனைக் கூடத்தில் நடைபெறும்.

உலகம் முழுக்க பல்வேறு நாடுகளில் உள்ள 120 கர்தினால்கள் வாக்குப் போட்டுப் புதிய போப் பாண்டவரைத் தெரிவுசெய்வார்கள். கடைசியாக எடுத்த கணக்கெடுப்புப்படி 119 கர்தினால்கள் வாக்குப்போடும் தகுதி பெற்றுள்ளனர். இவர்களில் 90 சதவீதம் பேர் தற்போது வத்திக்கான் நகரில் உள்ளனர்.

வாக்கெடுப்பு நடக்கும் தினத்தன்று 119 கர்தினால்களும் அப்போஸ்தல அரண்மனைக்கு சென்றதும் அரண்மனையின் கதவு, ஜன்னல்கள் மூடப்படும். அங்கு வாக்கெடுப்பு நடத்தப்படும்.

எந்த கர்தினாலுக்கு மூன்றில் 2 மடங்கு பேரின் ஆதரவு கிடைக்கிறதோ அவர் புதிய போப் பாண்டவராக அறிவிக்கப்படுவார். அப்படி 3இல் 2 பங்கு வாக்குக் கிடைக்காவிட்டால் மீண்டும், மீண்டும் இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்படும்.

30 தடவை ரகசிய வாக்கெடுப்பு நடத்திய பிறகும் யாருக்கும் பெரும்பான்மை கிடைக்காவிட்டால் புதிய விதிமுறை கடைப்பிடிக்கப்படும். அதன்படி வாக்குப் போடும் கர்த்தினால்களில் சரிபாதி எண்ணிக்கையுடன் கூடுதலாக ஒரு வாக்கு பெறுபவர் புதிய போப் பாண்டவராகத் தெரிவுசெய்யப்படுவார்.

இதற்குத் தயாராக கர்தினால்கள் வத்திக்கான் நகரில் உள்ள சந்தா மராத்தா ஹவுஸ் சொகுசு ஹோட்டலில் தங்கி உள்ளனர்.

புதிய போப் பாண்டவர் தெரிவுசெய்யப்பட்டதும் அதைக் குறிக்கும் வகையில் அரண்மனையில் வெள்ளைப் புகை விடப்படும். இதைப் பார்த்ததும் வத்திக்கான் மக்கள் தங்களுக்கு புதிய போப் பாண்டவர் வந்துவிட்டார் என்று மகிழ்ச்சி வெள்ளத்தில் குதிப்பார்கள்.

புதிய போப் பாண்டவர் ரகசிய வாகடுப்பு மூலம் தெரிவுசெய்ய இயலாவிட்டால் கறுப்புப் புகை வெளியிடுவார்கள் ஆனால், இந்தத் தடவை அதற்கு அவசியம் வராது என்று கர்தினால்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். ★

# முதலாவது ஒருநாள் போட்டியில் இந்திய அணி அபார வெற்றி!

கொச்சி,ஏப்.3

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் கொச்சினில் நேற்று நடந்த முதலாவது ஒருநாள் போட்டியில் இந்தியா 87 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான டெண்டுல்கர் இரண்டாவது ஓவரிலேயே ஆட்டம் இழந்தார். அடுத்து வந்த அணித் தலைவர் கங்குலி ஓட்டம் ஏதும் எடுக்காமல் ஆட்டம் இழந்து வெளியேறினார்.

இக்கட்டான நிலையில் களம் இறங்கிய ட்ராவிட்டும் ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான ஷேவாக்கும் இணைந்து ஆடிய அபார ஆட்டத்தால் இந்திய அணி நிமிர்ந்தது.

இருவரும் சேர்ந்து மூன்றாவது விக்கெட்டுக்கு 201 ஓட்டங்களைக் குவித்தனர். ஷேவாக் 108 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார்.

அடுத்துக் களமிறங்கிய யுவராஜ், காப், டோனி ஆகியோர் சொற்ப ஓட்டங்களில் ஆட்டம் இழந்தனர். ட்ராவிட் 104 ஓட்டங்களை எடுத்தபோது ஆட்டம் இழந்தார்.

50 ஓவர்களில் 8 விக்கெட் இழப்புக்கு 281 ஓட்டங்களை இந்தியா பெற்றது.

களம் இறங்கிய பாகிஸ்தான் அணியின் ஆரம்பத் துடுப்பாட்டக்காரர்கள் ஓட்டங்களைக் குவித்தபோதும், இந்திய வீரர்களின் பந்து வீச்சுக்கு முகம்கொடுக்கமுடியாது போனது. விக்கெட்டுக்கள் மளமளவெனச் சரியத் தொடங்கின.

194 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது பாகிஸ்தான்.

விளையாட்டு

அணித்தலைவர் இன்ஸமாம் 37 ஓட்டங்களையும் முகமது கபீஸ் 42 ஓட்டங்களையும் நவீத் உல்ஹசன் 25 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

துடுப்பாட்டத்தில் சிறப்பாக ஆடாத டெண்டுல்கர் 50 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். (3)

சதமடித்த ட்ராவிட்டும் ஷேவாக்கும்.



# எல்லைப்படை மாவீரர் நினைவு உதைபந்தாட்டம்: சிவானந்தா, அன்ரனீஸ் அணிகள் இன்று மோதல்

யாழ்ப்பாணம்,ஏப்.3

எல்லைப்படை மாவீரர் நினைவாகவும் சுனாமியால் பாதிக்கப்பட்ட சிறார்களின் கல்வி வளர்ச்சிக்காகவும் தமிழீழ விளையாட்டுத் துறையின் யாழ்.மாவட்டப் பிரிவின் ஆதரவுடன் உதயனின் ஊடாக அனுசரணையுடன் வலிகாமம் லீக் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்றைய ஆட்டத்தில் சிவானந்தா வி.கவும் மணற்காடு அன்ரனீஸ் வி.கவும் மோதுகின்றன.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் பிற்பகல் 4மணிக்கு இடம் பெறும் ஆட்டத்திலேயே இந்த அணிகள் மோதுகின்றன.

மாலை 5 மணிக்கு இடம்பெறும் மற்றோர் ஆட்டத்தில் சென்.பீற்றர்ஸ் வி.கவும் சென்.நீக்கலஸ் வி.கவும் பங்குபற்றுகின்றன.

(3-190)

# எல்லைப்படை மாவீரர் நினைவு உதைபந்தாட்டம்: ஒருபார்வை

நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்கள் இரண்டும் மிகவும் விறுவிறுப்பாக உதைபந்தாட்ட ரசிகர்களுக்கு விருந்தாக அமைந்தன.

சென்.சேவியர் விளையாட்டுக் கழகத்திற்கும் கல்வளை விநாயகர் விளையாட்டுக் கழகத்திற்கும் இடையில் முதலாவது ஆட்டம் இடம்பெற்றது.

பாதி ஆட்டம் ஆரம்பித்து 17ஆவது நிமிடத்தில் கல்வளை விநாயகர் விளையாட்டு வீரர் மயூரன் தனது பகுதிக்குள் சேம்சயிட் கோலினை அடித்தார்.

தொடர்ந்து இரு அணியினரும் கோல் பெறுவதற்கான சந்தர்ப்பங்கள் கிடைக்கப்பெற்றும் அதனைச் சரியாக அவை பயன்படுத்தவில்லை. இதனால் முதல்பாதி ஆட்டம் 1:0 என்ற நிலையில் முடிவடைந்தது.

இரண்டாவது பாதி ஆட்டம் ஆரம்பமாகி 2ஆவது நிமிடத்தில் சென்.சேவியர் அணி வீரர் கோல் அடிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தும் அதை சரியாகப் பயன்படுத்தவில்லை.

ஒரு கட்டத்தில் கல்வளை விநாயகர் விளையாட்டு கழகத்தின் பின்வரிசை வீரர்களின் தடுப்பு நடவடிக்கைகளினால் சென்.சேவியர் அணியினரின் கோல் மேலும் சந்தர்ப்பங்கள் தடுத்துநிறுத்தப்பட்டன.

இரண்டு அணியினரும் கோல் பெறுவதற்காக பலமுயற்சிகளை மேற்கொண்டு கோல் பரப்பிற்குள் பந்துகளைக் கொண்டுசென்றும் கோல் பெறமுடியவில்லை. இதனால் இரண்டாவது பாதி ஆட்டம் முடிவடையும்போது இரு தரப்பினரும் கோல் எதுவும் போடாததினால் சென்.சேவியர் அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

உதயன்
ஊடக அனுசரணை

இரண்டாவது ஆட்டத்தில் பொமேர்ஸ் அணியும் யூனியன் அணியும் மோதின. ஆட்டம் ஆரம்பமானது முதல் இரு அணியினரும் மிகவும் விறுவிறுப்பாக உற்சாகத்துடன் விளையாடினர்.

பொமேர்ஸ் விளையாட்டு கழகத்தினருக்கு கிடைத்த தண்டனை உதையை பாக்கியநாதர் அடித்தார். அதனை முன்வரிசைவீரர் வைகுந்தன் தலையினால் இடித்தார் - அது வெளியே சென்றது.

தொடர்ந்து இரு அணி வீரர்களும் தமது முழுச்சக்தியைத் திரட்டி விளையாடினர். இதன் போது பொமேர்ஸ் விளையாட்டுக்கழக அணிவீரன் வைகுந்தன் தனது அணிக்கான முதலாவது கோலினை மிகவும் அற்புதமான முறையில் அடித்தார்.

இதேவேளை, யூனியன் விளையாட்டுக் கழகம் ஆட்டம் முடிவடைவதற்கு 5 நிமிடங்கள் இருக்கையில், யூனியன் வி.க. வீரன் மெடிக்கன்ஸ் அடித்த பந்து கோல் கம்பத்தினுள் சென்றது. இதனை மத்தியஸ்தர் 'ஒவ்சையிட்' என அறிவித்தார். தொடர்ந்து ஆட்டம் இடம் பெற்றது. ஆட்டம் முடிவதற்கு இரண்டு நிமிடங்கள் இருக்கையில் மீண்டும் தமது அணிக்கான கோலினை வெஸ்லி அடித்தார். அதுவும் மத்தியஸ்தரினால் 'ஒவ்சையிட்' என கூறப்பட்டது. இதனைத் தொடர்ந்து யூனியன் விளையாட்டு கழக அணியினர் மத்தியஸ்தரின் தீர்ப்பு பிழையானது எனக் கூறி மிகுதி இரண்டு நிமிடங்கள் விளையாடாமல் மைதானத்தில் நின்றனர். இரண்டு நிமிடங்கள் முடிவடைந்தும் மத்தியஸ்தர் பொமேர்ஸ் விளையாட்டுக் கழகத்தினருக்கு வெற்றியெனத் தீர்ப்பளித்து ஆட்டத்தினை முடித்தார். (3-190)

# பருத்தித்துறையில் இறுதியாட்டம் இன்று

யாழ்ப்பாணம்,ஏப்.3

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டமும் பரிசளிப்பும் இன்று பிற்பகல் 3 மணிக்கு திக்கமுனை மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இறுதியாட்டத்தில் வதிரி டயமன்ஸ் வி.கவும் ஆதிசக்தி வி.கவும் மோதுகின்றன.

கழகத்தின் தலைவர் சி.நந்தகுமார் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் வடமராட்சி விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் வி.பிரியன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

(3)

# 40 வயதுக்கு மேற்பட்டோர் அணித்தெரிவு இன்று

யாழ்ப்பாணம்,ஏப்.3

யாழ். உதைபந்தாட்ட லீக் 40 வயதுக்கு மேற்பட்டோர் அணி ஒன்றைத் தெரிவு செய்யவிருக்கின்றது.

இந்த அணித்தெரிவு இன்று மாலை 4.30 மணிக்கு யாழ். பொது விளையாட்டரங்கில் இடம்பெறவிருக்கின்றது.

இந்த அணியில் இடம்பெறவிரும்பும் - யாழ். லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்கள் திறமையான வீரர்களை அனுப்புமாறு யாழ். லீக்கின் செயலாளர் மு.பிரான்ஸிஸ் கேட்டுள்ளார்.

(3-190)

# மின்னொளியில் கரபந்தாட்டம்

யாழ்ப்பாணம்,ஏப்.3

அரியாலை 86ஆவது சுதேசிய திருநாள் கொண்டாட்டத்தை ஒட்டி - மாவட்ட மட்ட அணிகளுக்கு இடையேயான மின்னொளியிலான கரபந்தாட்டச் சுற்றுப்போட்டி இன்று ஞாயிற்றுக் கிழமை இரவு 7மணியளவில் அரியாலை அருணோதயா சனசமூக நிலைய மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இன்றைய ஆட்டங்களில பங்குபற்றும் அணிகளில் விவரம் வருமாறு:

★ இரவு 7மணி - மட்டுவில் வளர்மதி வி.க. எதிர் கே.கே.எஸ். வி.க.

★ இரவு 8மணி - அச்சுவேலி வாலிபர் வி.க. எதிர் அரியாலை ஐக்கிய வி.க. (3-190)

# றோயல், சென்.மேரிஸ் வெற்றிபெற்றன

யாழ்ப்பாணம்,ஏப்.3

எல்லைப்படை மாவீரர் நினைவாக சுனாமியால் பாதிக்கப்பட்ட சிறார்களின் கல்வி வளர்ச்சிக்காக, தமிழீழ விளையாட்டுத் துறையின் யாழ். மாவட்டப் பிரிவின் ஆதரவுடனும் உதயனின் ஊடக அனுசரணையுடனும் வலிகாமம் உதைபந்தாட்ட லீக், சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் நேற்றைய ஆட்டங்களில் றோயல், சென்.மேரிஸ் விளையாட்டுக் கழகங்கள் வெற்றிபெற்றுள்ளன.

முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் றோயல் விளையாட்டுக் கழக அணியும் அண்ணா விளையாட்டுக்கழக அணியும் மோதின. இதில் றோயல் விளையாட்டுக்கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் அண்ணா விளையாட்டுக் கழக அணியை வெற்றிகொண்டது.

இரண்டாவது ஆட்டத்தில் சென். றோக்ஸ் விளையாட்டுக்கழக அணியும் சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணியும் மோதின.

இரண்டு அணியினரும் ஆட்டநேரத்தில் எதுவித கோலினையும் பெறாததினால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. ஆட்டம் வெற்றி தோல்வி காண்பதற்காக சமநிலை உடைப்பு உதை வழங்கப்பட்டது. இதில் சென்.மேரிஸ் விளையாட்டுக் கழக அணி 4:3 என்ற கோல் கணக்கில் சென்.றோக்ஸ் விளையாட்டுக் கழக அணியை வெற்றிகொண்டது. (3-190)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

## தேர்தல் என்று மிரட்டி காரியம் பார்க்கும் வேலை

முக்கிய மூன்று விடயங்களுக்கு இம்மாத இறுதிக்குள் தீர்வு கிட்டாவிட்டால் மக்கள் முன்னால் போய் ஆணை கேட்பதைத் தவிரத் தமக்கு வேறு வழி ஏதுமில்லை என்று தெரிவித்திருக்கிறார் ஜனாதிபதி சந்திரிகா அம்மையார்.

அதாவது, தேர்தல் ஒன்றுக்கு அழைப்பு விடுவதைத் தவிர தமக்கு வேறு மார்க்கம் இல்லை என்ற ரீதியில் எச்சரிக்கைத் தகவல் ஒன்று ஜனாதிபதி தரப்பிலிருந்து வெளியாகியிருக்கின்றது.

தாம் செய்ய விரும்புகின்ற - தம்மால் செய்யப்பட வேண்டிய - மூன்று விடயங்களுக்கு ஒத்துழைப்பு நல்க நீங்கள் முன்வராவிட்டால் உங்கள், நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகளைக் காலாவதியாக்கி மீண்டும் மக்களிடம் போய் வாக்குப் பிச்சை கேட்கும்படி உங்களைச் செய்துவிடுவேன் என்று எம்.பிக்களுக்குச் சொல்லாமல் சொல்லி மிரட்டல் விடுக்கின்றார் அம்மையார்.

அவர் சுட்டிக்காட்டும் - அவர் அவசரமாகச் செய்ய எதிர்நோக்கும் - விடயங்கள் மூன்று.

முதலாவது - ஆழிப்பேரலை அழிவு தொடர்பான நிவாரண மற்றும் மீள்கட்டுமானப் பணிகளை மேற்கொள்வதற்குப் புலிகளுடன் சேர்ந்து பொதுக்கட்டமைப்பு ஒன்றை உருவாக்குவது. அதைச் செய்தால் இலங்கைக்குச் சர்வதேச உதவி சாத்தியமாகும். தமது அரசு எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடிகளிலிருந்தும் மீளமுடியும். அந்தப் பொதுக்கட்டமைப்பை ஸ்தாபிக்காமல் இழுத்தடித்தால், சர்வதேச சமூகத்தின் எதிர்ப்பும், அதிருப்தியும் தீவிரமாகி அவற்றை எதிர்கொள்ள முடியாத இக்கட்டு தமது அரசுக்கு நேரும் என்பதும் அவருக்குத் தெரியும்.

அடுத்தது-மின்சாரசபையை மறுசீரமைத்தலும், பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் கணிசமான பங்குகளை இந்திய நிறுவனங்களுக்கு விற்றலும், இதைச் செய்தால்தான் பெரும் கடன் சுமையிலிருந்து அந்த அமைப்புக்களையும் அதன் மூலம் அரசையும் நாட்டின் பொருளாதாரத்தையும் ஓரளவேனும் மீட்க முடியும் என்பதும் அவருக்குப் புரியும்.

இந்த இரண்டு நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவிடாமல், அவருக்கு முட்டுக்கட்டை போடுகின்றது அவரது அரசின் பிரதான பங்காளிக் கட்சியான ஜே.வி.பி.

மூன்றாவது - அரசமைப்பு விதிகளில் மாற்றம் கொண்டு வருவது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவியில் தமது இரண்டாவது பதவிக் காலத்தின் அந்தத்தில் நிற்கிறார் சந்திரிகா அம்மையார். அரசமைப்பு ஏற்பாடுகளை மாற்றினாலேயொழிய அதிகாரத்தில் தொடர்ந்து அவர் நீடிப்பது இயலாத காரியமாகும்.

ஆனால், இந்த மூன்றாவது விடயத்தை நிறைவேற்ற விடாமல் - செய்ய அனுமதிக்காது- குறுக்கே நிற்கிறது பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி.

இப்படித் தனக்கு அவசியமான - அவசரமான - முக்கிய விடயங்களைச் செய்யவிடாமல் குறுக்கே நிற்போருக்கு ஓர் அதிர்ச்சி வைத்தியம் கொடுக்கவே மக்கள் ஆணைபெறுவது என்ற கயிற்றை அவிழ்த்து விட்டிருக்கின்றார் சந்திரிகா அம்மையார்.

தமக்கு முட்டுக்கட்டையான - தடைக்கல்லான - இரண்டு தரப்புகளிலும் இருக்கும் எம்.பிக்களில் பலர் ஒருவருடத்துக்குள் இந்த எம்.பி.பதவியை இழந்து மக்கள் முன் மீண்டும் செல்லத் தைரியம் இல்லாத காரணத்தினாலும் மீண்டும் பொதுத் தேர்தல் நடந்தால் தாங்கள் எங்கே தெரிவுசெய்யப்படாது போய் விடுவமோ என்ற அச்சத்தினாலும் - பொதுத் தேர்தலை எதிர்கொள்ள விரும்பாது - ஜனாதிபதியாகிய தமது எதிர்பார்ப்பை நிறைவு செய்யும் விதத்தில், இது விடயத்தில் தத்தமது கட்சிகளின் முடிவுகளுக்கு மாறாகப் 'பல்டி' அடித்து, செயற்படுவார்கள் என்று நப்பாசை கொள்கிறார் குமாரதுங்க.

அதையே, அவரது மக்கள் ஆணைகோரும் மிரட்டல் வெளிப்படுத்தி நிற்கின்றது.

தற்போதைய நாடாளுமன்றம் 2004 ஏப்ரல் 2ஆம் திகதி நடைபெற்ற பொதுத் தேர்தலில் தெரிவு செய்யப்பட்டாலும், அதன் முதல் கூட்டம் ஏப்ரல் 22 ஆம் திகதியே நடைபெற்றது. எனவே, அந்த நாடாளுமன்றத்தின் ஒருவருட ஆயுள், வரும் 22ஆம் திகதியே பூர்த்தியாகின்றது. அதன் பின்னரே அந்த நாடாளுமன்றத்தைத் தாம் விரும்பிய நேரத்தில் கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு வருகின்றது.

அதை மனதில் வைத்தே இந்த மாத இறுதிக்கு முன்பாக முக்கியமான மூன்று விடயங்களும் நிறைவேற்றப்பட வேண்டும் என்ற காலக்கெடுவை அவர் விதிக்கின்றார்.

பொதுத்தேர்தல் அச்சுறுத்தலைக் காட்டித் தமக்கு விரும்பியவகையில் பிற கட்சிகளின் எம்.பிக்களை மடக்க எடுக்கும் ஜனாதிபதியின் முயற்சி வெற்றி பெறுமா என்பது சந்தேகமே.

அந்த முயற்சி வெற்றிபெறாத நிலையில் தேர்தல் ஒன்றுக்கு அவர் போனாலும் அதன் முடிவு அவருக்கு சார்பாக அமையுமா என்பதும் கேள்விக்குறியே.

# பொது நிர்வாக அமைச்சு அனுமதி வழங்கியதும் சுகாதாரத் தொண்டர்களுக்கு நியமனம் கிடைக்கும்

### மாகாணச் சுகாதாரத்துறை அதிகாரி தகவல்

திருகோணமலை.ஏப்.3

பொது நிர்வாக அமைச்சின் திட்டமிடல் முகாமை சேவை சபையின் அனுமதி கிடைக்கப் பெற்றதும் சுகாதாரத் தொண்டர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படும்.

இவ்வாறு வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

இதுவிடயமாக மேலும் தெரிவித்துள்ளதாவது:-

சுத்திகரிப்பு (சுகாதார) தொழிலாளர், சாதாரண தொழிலாளி பரிசாரகர்கள் என ஆயிரத்து 420 பேருக்கு வடக்கு - கிழக்கு மாகாணத்தில் பதவி வெற்றிடம் உள்ளது. இவற்றை நிரப்புவதற்கு ஏற்பாடுகள் நடைபெற்றதோடு. நேர்முகப் பரீட்சையும் நடைபெற்றது.

இந்த நிலையில் கல்முனைப் பிரதேச பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவில் இந்த நேர்முகப்பரீட்சையில் குழறுபடிகளும் முறைகேடுகளும் இடம் பெற்றதாக முறைப்பாடு கிடைக்கப்பெற்றது.

இதனை அடுத்து, முன்னாள் ஆளுநர் மேஜர் ஜெனரல் அசோக ஜயவர்த்தன இந்த நியமனங்களை தற்காலிகமாக இடைநிறுத்தும்படி பணித்திருந்தார். அதனால், நியமனம் வழங்கல் தடைப்பட்டது.

தற்போதைய ஆளுநர் வெற்றிடங்களின் தேவை கருதி கல்முனை தவிர்ந்த பிற இடங்களுக்கு நியமனங்கள் வழங்கும்படி பணித்துள்ளார். இது குறித்து தமது மட்டக்களப்பு, வவுனியா மாவட்டங்களுக்கான விஜயத்தின் போதும் தெரிவித்துள்ளார்.

இதனை அடுத்தே பொதுநிர்வாக அமைச்சின் அனுமதியை எதிர் பார்த்து நிற்கின்றோம் - என்று அவர் மேலும் சொன்னார்.

சர்வதேச சுகாதார நிறுவனங்கள், உள்ளூர் சுகாதாரத் தொண்டர் நிறுவனங்கள் என்பவற்றில் பணி புரிந்த சுகாதாரத் தொண்டர்கள் பற்றியும் கருத்தில் எடுக்கப்படும் - என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-290)

# பருத்தித்துறை வைத்தியசாலையில் புதிதாக மனநோயாளர் விடுதி

### 60 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்படும்

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை மன நோயாளர் விடுதி 60 மில்லியன் ரூபா செலவில் நவீன முறையில் புதிதாக அமைக்கப்படவுள்ளது.

இவ்விடுதி சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்னர் வைத்தியசாலை ஆரம்பிக்கப்பட்ட கட்டடத்தில் வசதிகள் ஏதுமின்றி இயங்கி வருகிறது. இடிந்து உடைந்துபோன இவ் விடுதிக்கு தற்போது கூரையாக அரச சார்பற்ற நிறுவனம் ஒன்று வழங்கிய கூடாரமே பயன்படுத் தப்பட்டு வருகின்றது.

இப்பழைய விடுதியை அழித்து அதே இடத்தில் நவீன வசதிகளுடன் கூடிய மன நோயாளர் விடுதி ஒன்றைக் கட்ட யாழ். பிராந்திய சுகாதாரத் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் எஸ்.கேதீஸ்வரன் தலைமையிலான கட்டடப்பொறியியலாளர், வடிவமைப்பாளர் ஆகியோர் கொண்ட குழு ஒன்று வைத்தியசாலைக்கு நேரில் சென்று நிலைமைகளைப் பார்வையிட்டது.

இதன் தொடர்ச்சியாக, மேற்படி வைத்தியசாலையில் நவீன மன நோயாளர் விடுதியைக் கட்டுவதற்காக 60 மில்லியன் ரூபா நிதி உதவியை 'நிக்கொட்' நிறுவனம் வழங்க முன்வந்துள்ளது.

கடந்த 25 வருடங்களுக்கு முன்னர் வடபகுதியில் மனநோய் சிகிச்சைகளுக்கு பிரபல்யம்பெற்ற வைத்தியசாலையாக மந்திகை ஆதார வைத்தியசாலை விளங்கியமை தெரிந்ததே. (8-173)

# பருத்தித்துறை நலன்புரி நிலையங்களில் எய்ட்ஸ் விழிப்புணர்வுக் கருத்தரங்கு

### செஞ்சிலுவைச் சங்கம் நடத்தும்

குடத்தனை.ஏப்.3

ஆழிப்பேரலை அனர்த்தத்தினாலும், யுத்த அனர்த்தத்தினாலும் இடம்பெயர்ந்து பருத்தித்துறை பிரதேசத்தில் உள்ள நலன்புரி நிலையங்களில் தங்கியிருக்கும் குடும்பங்களுக்கு எய்ட்ஸ் பற்றிய விழிப்புணர்வு வழங்கப்படவுள்ளது.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் பருத்தித்துறைக்கிளையின் தொண்டர்கள் இந்த விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை நடத்தவுள்ளனர் என செஞ்சிலுவைச் சங்கத்தின் பருத்தித்துறைக் கிளையின் தலைவர் சூ.தவராசா தெரிவித்தார்.

இந்த விழிப்புணர்வை வழங்கவுள்ள தொண்டர்களுக்கான பயிற்சி வகுப்புக்கள் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்ப்பாணத் தலைமையகத்தில் நடைபெற்று வருகின்றன என்றும் -

இந்தப் பயிற்சிக்கான செஞ்சிலுவைச் சங்கத்தின் கொழும்பு தலைமையக எய்ட்ஸ் திட்டத்திற்கான இணைப்பாளர் எஸ்.பிறேமதிலக்க வழங்கி வருகின்றார் என்றும் -

அவர் மேலும் தெரிவித்தார். (எ-78-15)

# 105 தற்காலிக வீடுகள் நேற்றுமுன்தினம் கையளிப்பு

கரவெட்டி.ஏப்.3

ஆழிப்பேரலை அனர்த்தத்தால்பாதிப்புற்றவர்களுக்கான தற்காலிக வீடுகள் தும்பளையில் கையளிக்கப்பட்டன.

வடமராட்சி, தும்பளை கிழக்கில் வீடுகளை இழந்தவர்களுக்கே நேற்றுமுன்தினம் 105 தற்காலிக வீடுகள் கையளிக்கப்பட்டன.

'கியூடெக்', 'போரூட்', 'லீட்ஸ்', 'ஒக்ஸ்பாம்' ஆகிய நிறுவனங்களின் உதவியுடன் இந்தத் தற்காலிக வீடுகள் அமைக்கப்பட்டன.

தும்பளை கடற்றொழிலாளர் சங்க செயலாளர் எம்.மகேந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்த வைபவத்தில் பொதுச்சுடரை வடமராட்சி அரசியற்துறைப் பொறுப்பாளர் இன்பன் ஏற்றி வைத்தார்.

தற்காலிக வீடுகளை வடமராட்சி கடற்புலிகளின் அரசியல் பொறுப்பாளர் அன்பழகனும், பாலர் பாடசாலையை வடமராட்சி மகளிர் பிரிவுப் பொறுப்பாளர் அன்புவும், மலசல கூடத்தினை தும்பளை கிழக்கு கிராம சேவகர் எஸ்.சிவலிங்கமும், கிணற்றினை வடமராட்சி சுனாமி அனர்த்த செயலகப் பணிப்பாளர் எஸ்.பாலையாவும் திறந்து வைத்தனர்.

சிறப்புரைகளை 'போரூட்' நிறுவன நிர்வாகப் பணிப்பாளர் எஸ்.பிறெடி, அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் உபதலைவர் பேராசிரியர் சிவானந்தன், சுனாமி அனர்த்த செயலணிப்பணிப்பாளர் எஸ். பாலையா, பருத்தித்துறை உதவிப் பிரதேச செயலர் எஸ்.ராஜ்குமார் ஆகியோர் நிகழ்த்தினார்கள்.

(8-70)

# கொழும்பு தமிழ்ச்சங்கத்தின் மாடிக்கட்டடத் திறப்புவிழா

கொழும்பு.ஏப்.3

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் புதிய 2ஆம் மாடிக்கட்டடத்திறப்பு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4மணிக்கு இல7, 57ஆவது ஒழுங்கை, உருத்திரா மாவத்தை, கொழும்பு-06 என்ற முகவரியில் நடைபெறவுள்ளது.

கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவர் பெரியதம்பிப்பிள்ளை விஜயரெத்தினம் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் பிரதம விருந்தினராக சீகல் புரொப்பட்டீஸ் அன்ட் பிரைவேற் லிமிட்டெட்டைச் சேர்ந்த ந.வாகீசன் கலந்து கொள்வார்.

நிகழ்வில் கணபதிப்பிள்ளை நவரெட்ணசிங்கம் மண்டபத்தை ந.வாகீசனும், செனட்டர் எஸ்.ஆர்.கனகநாயகம் அவர்களின் நூற்றாண்டு நினைவுக் கூடத்தை சிசான் கனக ஈஸ்வரனும், வெள்ளியம்பலம் பாக்கியம் நினைவுக் கூடத்தை சாம் வாகீசனும், திருமதி செல்லம்மா இராஜேந்திரம் நினைவுக்கூடத்தை திருமதி செல்லம்மா இராஜேந்திரம் குடும்ப அங்கத்தவரும், ஹரிஸ் அன்டமெனுக் பிறைவேற் லிமிட்டட் நிறுவனத்தினரின் அன்பளிப்பு மண்டபத்தை மாணிக்கம் அரியரட்ணமும், மட்.இரா.மயில்வாகனம் ஜே.பி நினைவுக்கூடத்தை மயில்வாகனம் சுதாகரனும் திறந்து வைப்பர்.

இத்திறப்பு விழா நிகழ்வில் ஆசியுரையை சங்கத்தின் முன்னாள் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான முனைவர் கா.பொ.இரத்தினமும், சிறப்புரையை சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி உப அதிபர் செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகனும் நிகழ்த்துவர்.

நிகழ்வில் மலர் வெளியீட்டை கொழும்புத் தமிழ்ச் சங்க ஆட்சிக்குழு உறுப்பினர் வீ.ஏ.திருஞானசுந்தரம் நிகழ்த்துவார். கலை நிகழ்வும் இடம்பெறும்.

(எ-202)

# மரக்கறிகளின் விலைகள் குடாநாட்டில் வீழ்ச்சி

யாழ்ப்பாணம்.ஏப்.3

யாழ்.குடாநாட்டில் மரக்கறி வகைகளின் விலைகள் வெகுவாக வீழ்ச்சியடைந்துள்ளன. இதனால் உற்பத்தியாகும் கத்தரிக்காயை சந்தைப்படுத்த முடியாத விவசாயிகள் அவற்றை ஆடு,மாடு போன்ற கால்நடைகளுக்கு தீவனமாகப் பயன்படுத்தி வருகின்றனர்.

குடாநாட்டில் கொழும்பிலிருந்து தருவிக்கப்பட்ட உருளைக்கிழங்கு கிலோ 70 ரூபா முதல் 80 ரூபாவரையும், கரட், லீக்ஸ் போன்றவை கிலோ 50 ரூபாவாகவும், ஏனைய மரக்கறி வகைகள் அனைத்தும் கிலோ 50 ரூபாவுக்கு குறைவாகவும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

குறிப்பாகக் கத்தரிக்காய், பயிற்றங்காய் போன்ற மரக்கறி வகைகள் கிலோ 10 ரூபாமுதல் 20ரூபா வரை விற்பனையாகின்றன - இவற்றின் உற்பத்தி அதிகரித்துள்ளமையால் சந்தைப்படுத்த முடியாத நிலை உருவாகியுள்ளது. இதனால், கால்நடை வளர்ப்போர் கத்தரிக்காயை பச்சையாக வெட்டி கால்நடைகளுக்குத் தீவனமாக பயன்படுத்தி வருகின்றனர்.

இது ஒருபுறமிருக்க கடந்த மாரி காலத்தின் போது குடாநாட்டில் மரக்கறி வகைகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டதால் சிலவியாபாரிகள் தம்புள்ளையிலிருந்து அவற்றை எடுத்து வந்து சந்தைப்படுத்தினார்கள். குடாநாட்டில் மரக்கறி உற்பத்தி அதிகரித்துள்ளதால் தற்போது தம்புள்ளையிலிருந்து மரக்கறிவகைகளை எடுத்து வருவதை தனியார் வியாபாரிகள் நிறுத்தியுள்ளனர். (8-173)

### நாளை

பங்குனி 22
திங்கட்கிழமை
04.04.2005
திதி : தசமி
முற்பகல் 11.38 வரை.
நட்சத்திரம் : திருவோணம்
பிற்பகல் 04.04 வரை.
சுபநேரம் : 12.00 - 01.30
ராகுகாலம் : 07.39 - 09.09
(யாவும் பழைய நேரப்படி)

### உதயவாக்கு

எமது மனதைக் கட்டுப்பாடற்ற காட்டாக்காலி மிருங்கள் போல அலையவிடாது மனதுக்கு கடிவாளம் போட்டு எம்மைக்குள் வைத்திருக்க வேண்டும்.

# வடமராட்சி மீனவருக்கு 3 ஆம் கட்டமாக மீன்பிடிப் படகுகள்

வடமராட்சி.ஏப்.3

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட வடமராட்சிப் பிரதேச மீனவர்களுக்கு 'ஹியூ மெடிக்கா' நிறுவனம் மூன்றாம் கட்டமாக மீன்பிடிப் படகுகளையும் வலைகளையும் வழங்கவுள்ளது.

இதற்கென இதுவரை சுமார் 75 மீன்பிடிப்படகுகளும் வலைகளும் கொழும்பிலிருந்து எடுத்துவரப்பட்டுள்ளன.

இதுவரை 'ஹியூமெடிக்கா' நிறுவனம் இரண்டு கட்டங்களாக சுமார் 125 மீன்பிடிப்படகுகளையும் அவற்றிற்கான வலைகளையும் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு வழங்கியுள்ளது. (8-173)

# வடக்கு, கிழக்கிற்குப் பொதுவான கலைகளை இணைத்து....

*(11 ஆம் பக்கத் தொடர்ச்சி)*

இருவரும் பதற்றமடையவில்லை. 'ஓ' என அலற வில்லை. வயது சென்ற மாமி இரு கைகளை யும் கூப்பி கடவுளிடம் சங்கமமாகிவிட்டார்.

இறப்பு நிச்சயம் என்பது உறுதியாகிவிட் டது. இன்னும் ஓரிரு நிமிடங்களுக்குள் தண் ணீருக்குள் மூழ்கி இறந்து விடுவதென்பது உறுதி யாகிவிட்டது. நான் மனைவியின் கைகளைப் பிடித்தபடி அவளின் முகத்தைப் பார்த்துக் கூறினேன். சித்திரா நாம் இறப்பது உறுதியாகி விட்டது. நாம் இதனை ஏற்றுக்கொள்வோம். ஒன்றாக இறக்கப்போகிறோம். நல்லவேளை, மகன் தப்பி வெளியே இருக்கிறான் என்றேன், சித்திரா மறுமொழி கூறவில்லை. அவளுக்கும் பல சிந்தனைகள் தோன்றியிருக்கக்கூடும். அந்த ஒரு கணத்துள் எனக்குள் வந்த உணர் வுகள் முக்கியமானவை. எனக்கு ஆன்மா, கடவுள் என்பவற்றில் பெரிய நம்பிக்கை இல்லை. எதையும் பகுத்தறிவோடு (Rational) பார்த்துப் பழகிய என் அனுபவத்துக்குள் அவை வருவதில்லை. அதுவே காரணம்.

ஒரு கணம் யோசித்தேன் சாவு எப்படி இருக்கும்? ஒரு கறுப்புத் திரையாக இருக்குமா? அதன பின்... நினைவுகளின்றி நித்திரை கொள் வது போல இருக்குமா? அல்லது சமயங்கள் கூறுவது போல எமது ஆன்மா எமது உடலில் இருந்து பிரிந்து நடப்பதைப் பார்க்கப்போகி றதா? கறுப்புத்திரை உண்மையா? ஆன்மா உணமையா? ஒரு கண நேரத்துக்குள் இதனை நாம் அறியப்போகிறோம். அறிந்தாலும், எப்படி அந்த உண்மையை மக்களிடம் சொல்வது? ஒருகணப்பொழுதில் அந்த அனுபவத்தை ஏற்க மனம் தயாராகிவிட்டது. இறப்பு உறுதி என்றதும் பதற்றம் ஏற்படவில்லை. நிதானமே மனதுள் நிறைந்திருந்தது. இறப்பு உறுதி என்றான பிறகு பதற்றமின்றிக் காரியங்களைச் செய்யும் தற்கொலைப் போராளிகளின் மனோ நிலையினை அக்கணத்தில் என்னால் உணர முடிந்தது. எனினும், வாழ்வு ஒருமுறைதான் இனி உலகமும் அந்த அனுபவமும் நமக்கில்லை என்ற ஓர் ஆழமான சோகம் மனதில் - புகை மூட்டம்போலப் படிந்திருந்து.

சித்திரா தப்பும் வழிகளில் ஈடுபட்டிருந்தாள். வீட்டுக்கு மேல் சென்று தண்ணீர்த்தாங்கிமேல் ஏறலாம் என்றால். தப்புவதற்கு வழி தெரிந்த தும் மனம் செயற்பட ஆரம்பிக்கத் தொடங்கியது. அம்மாவை விட்டு எப்படிச் செல்வது? மனதிற் குள் ஒரு போராட்டம். அம்மா அசைய முடியாத வர். 81 வயது அவர் கூப்பிய கையைக் கீழே இறக்காமல் என்னைக் கடவுள் காப்பாற்றுவார். உங்களால் மேலே ஏறமுடியும் போங்கள் என்று உத்தரவிட்டார்,

தண்ணீர் மேலே வந்தால் வீட்டுக்குள் உள்ள மேசைமீது ஏறுங்கள் என்று கூறிவிட்டு நாங்கள் இருவரும் மேலே சென்றோம். மாமியை விட்டு வருகிறேனே என்று மனம் போராடிக் கொண்டிருந்தது.

மேலே சென்றபோது இன்னொரு வகையான சத்தம் கேட்டது. தண்ணீர் மீண்டும் செல்லும் சத்தம் 'சித்திரா தண்ணீர் போகிறது', என்றேன் மனம் மகிழ்ச்சியில் ஆழ்ந்தது. மீண்டும் வாழப் போகிறோம். நண்பர்களைக் காணப்போகிறோம்; நாடகம் போடப்போகிறோம்; புத்தகம் வாசிக் கப் போகிறோம்; சங்கீதம் இரசிக்கப்போகிறோம் என்று. வாழ்வதில் ஆசையால் வந்த இன்பம் அது.

ஒரு சிறிது நேரத்துக்குள் இறப்புக்கும் வாழ்வுக்கும் இடையிலான பயண மனோநிலை. அது ஒரு வித்தியாசமான அனுபவம் அது சொல்லி உணர்த்த முடியாத ஒருவகை அனுபவம்.

தண்ணீர் வற்றிக்கொண்டு சென்றபோது வெளியிலிருந்து மாணவர்களின் குரல்கள் கேட்டன. நம்மைத்தேடிக் காப்பற்ற மனித சமூகம் வந்துவிட்டது என்ற உறுதி பிறந்தது.

சாகரத்தின் வருகையால் தனித்துப் போனோம் என்று எண்ணிய நாம், மக்களின் குரல்கேட்டு மீண்டும் மனித சாகரத்துள் ஐக்கி யமானோம். இனி நாம் தனியரல்ல என்ற உணர்வு பிறந்தது.

கீழே வந்த பிறகுதான் இழப்பின் உச்சம் தெரிந்தது. எனதும் எனது மனைவியினதும் சேகரிப்பாக 3 ஆயிரம் நூல்கள், எழுத்துப் பிரதிகள் 450, செந்நெறி இசை (கர்நாடக, இந்துஸ்தானி, ஐரோப்பிய) ஒலிப்பதிவு நாடாக் கள் தமிழ்நாட்டில் தெருக்கூத்துப்பற்றி ஊர் ஊராகச் சென்று 40 கலைஞர்களிடம் உரை யாடிச் சேகரித்த 45 ஒலிப்பதிவு நாடாக்கள் இன்னும் கல்விசார் ஆவணங்கள். ஒருகணம் நம் ஆராய்ச்சி வாழ்க்கை தொலைந்துவிட்டது போல ஓர் உணர்வு.

இது எமக்கு இழப்பில் 3 ஆவது அனுபவம். 1987 இல் இந்திய அமைதிப்படை எங்கள் வீட்டின் பின்புறத்தில்தான் இறங்கியது. அவர் களின் செல்லடிக்குத் தப்பி விழுந்து விழுந்து நல்லூரை நோக்கி ஓடி அங்கிருந்து கொழும்பு சென்றோம். மீண்டும் வந்தபோது பல நூல்கள் அழிந்திருந்தன. அரிய ஆவணங்கள் பல வற்றை இழந்திருந்தோம்.

**யாழ்.நூலகத்தை யாரோ எரித்தனர்;**
**எமது நூல்களை நாமே எரித்தோம்!**

1990 இல் ஈழப்போர் உச்சம் கண்டு யாழ்ப் பாணக் கோட்டை பிடிபட்ட காலத்தில் பல நூல களையும் வீட்டையும் அப்படியே விட்டுவிட்டு ஒரு கைப்பையுடன் வெளியேறினோம். அண் மையில்தான் மிஞ்சிய நூல்கள் இங்கிருந்து சிலவற்றை மட்டக்களப்புக்குக் கொண்டு சென் றோம். இப்போது சுனாமி பெரும்பாலானவற்றை வாரிச் சென்றுவிட்டது.

சேற்றோடு சேறாக சிதிலமடைந்து கிடந்த பல நூல்களைக் காய்ந்தபின் நாமே எரித் தோம். யாழ். நூலகத்தை யாரோ எரித்தனர். எம் நூல்களை நாமே எரித்தோம். என்ன கொடுமை இது!

எனினும், நாம் சோர்ந்து விடவில்லை சித் திரா தீவிரமாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்காக செயற்படத்தொடங்கினார். நாங்கள் பின்னர் வாழ்வோம். என்ற அவைக்காற்று நிகழ்வு செயதோம். துயரம் கூடக்கூட தீவிரமாக வாழும ஆசை தோன்றவேண்டும். துயரத்தை வெல் லும் வழியும் அதுதான். மக்களை உற்சாகப் படுத்த வேண்டும். மக்களுக்கு உறுதிதர வேண்டும். நாமும் உறுதிபெறவேண்டும், மஹா கவி கூறியது போல "மீண்டும் தொடங்கும் மிடுக்கு" அது. *(முற்றும்)* ★


உ
கணபதி துணை

**நவக்கிரி அருள்மிகு ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலய**
**வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம் - 2005**

03.04.2005 ஞாயிறு காலை 10.00 மணிக்குக் கொடியேற்றம்
08.04.2005 வெள்ளி மாலை வசந்தோற்சவம்
10.04.2005 ஞாயிறு மாலை வேட்டைத் திருவிழா
11.04.2005 திங்கள் மாலை சப்பரத் திருவிழா
12.04.2005 செவ்வாய் காலை 10.30 மணிக்குத் தேர்த்திருவிழா
13.04.2005 புதன் காலை 10.00 மணிக்குத் தீர்த்தோற்சவம்
(ஊர் மக்களால் அன்னதானம் வழங்கப்படும்)
14.04.2005 வியாழன் மாலை பூங்காவனத் திருவிழா

விளம்பர அனுசரனை:
AJANTHAS TEXTILES - பரிபாலன சபையினர்.
54, Grand Bazaar, Jaffna.T.P. 021 222 2899 (சி.41983) (39-14-26)



பருத்தித்துறை
நிதர்சன் கிறீம் ஹவுஸ் ஆதரவில்
பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்திய
உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின்

**இறுதிப் போட்டியும் பரிசளிப்பு விழாவும் ~ 2005**

இடம் :- திக்கமுனை மைதானம்
காலம் :- 2005-04-03 (இன்று) பி.ப. 3.00 மணி
தலைவர்:- திரு.சி.நந்தகுமார்
(தலைவர், பரு. ஐக்கிய விளையாட்டுக் கழகம்)
பிரதம விருந்தினர்:- திரு.V.பிரியன்
(விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர், வடமராட்சி)

இறுதிப்போட்டி
**வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழகம்**
எதிர்
**ஆதிசக்தி விளையாட்டுக்கழகம்**

*சுற்றுப்போட்டியில் பங்குகொண்ட கழகங்கள், விளையாட்டு ஆர்வலர்கள் மற்றும் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

நிர்வாகத்தினர்,
பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம்.
(43789) (46-24-14)



**களநிலை அரங்கச் செயலாளிக்கான பயிற்சி**

- செயல்திறன் அரங்க இயக்கம் பொதுச் சேவை நிறுவனங்களில் பணியாற்றுவோர்களுக்கும் அரங்கத் துறையில் ஈடுபடுவோர்க் குமான அரங்கப் பயிற்சி ஒன்றை நடத்தவுள்ளது. இப் பயிற்சியில் அரங்கப் பயிற்சிகளும் கிராம அபிவிருத்திச் செயற் திட்டங்களில் ஈடுபடுவதற்கான அடிப்படைப் பயிற்சிகளும் உள்ளடக்கப்படுகின் றன.
- பயிற்சி 03 மாத காலம் வாரத்தில் 04 நாள்கள் நடைபெறும். பயிற்சியைச் சீரான முறையில் முடித்துக்கொள்பவர்களுக்குத் தொழில் ரீதியான வழிகாட்டல்கள் வழங்கப்படும்.
- பயிற்சி திருநெல்வேலியில் அமைந்துள்ள செயல்திறன் அரங்க இயக்கத்தில்நடைபெறும்.

**வேண்டப்படும் தகைமை:**
G.C.E. A/L உயர்தரத்தில் சித்தியடைந்திருத்தல்.
☞ நாடகம் சார் அனுபவம், பயிற்சி
☞ வயதெல்லை: 20 - 30
☞ பொது சேவையில் ஈடுபட்ட அனுபவம்
விண்ணப்ப முடிவு திகதி: 10.04.2005

*தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:*
Active Theatre Movement
செயல்திறன் அரங்க இயக்கம்,
'அருளகம்'
ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
(சி-41978) (38-24-14)


## ஆனைக்கோட்டையில் விபத்து; மினிபஸ் பலத்த சேதம்

சுதுமலை,ஏப்.3

ஆனைக்கோட்டைச் சந்தியில் நேற்று மாலை இடம்பெற்ற பஸ் - மினிபஸ் விபத்தில் மினிபஸ் பலத்த சேதமடைந்தது.

காரைநகரில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த பஸ்ஸும் அதே வழியால் யாழ்ப்பாணம் நோக்கிவந்த மினிபஸ்ஸும் இவ்வாறு விபத் துக்குள்ளாகின.

பயணிகள் பஸ்ஸை மினிபஸ் முந்திச் செல்ல முற்பட்டது என்றும் -

இதன்போது பஸ்ஸில் மோதுண்டு மினி பஸ்ஸின் முன்பகுதி பலத்த சேதமடைந்தது என்றும் - கூறப்பட்டது. (எ-ரி)

## 'நந்தியின் சிறுகதைகள்' நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம்,ஏப்.3

'நந்தியின் சிறந்த சிறுகதைகள் - 12' என்னும நூல் வெளியீடு இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பேராசிரியர் செ.சிவஞானசுந்தரத்தின் இலக் கியப் பணிகளை நினைவுகூரும் வகையில் இந்த நூல் வெயியீடு ஏற்பாடு செய்யப்பட் டுள்ளதாகக் அறிவிக்கப்பட்டது. (எ-202)

## மரண அறிவித்தல்

### திருமதி கணபதிப்பிள்ளை (P.K.) பூமணி

காரைநகர், தங்கோடையைப் பிறப்பிட மாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கணபதிப்பிள்ளை (P.K.) பூமணி அவர்கள் நேற்று (02.04.2005) சனிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் அப்புத்தளை காலஞ்சென்ற நாகமுத்து தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை (P.K.) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ் சென்ற பொன்னம்மா, செல்லம்மா, பாக்கி யம், ஐயம்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும் வேலாயுதம், தேவராசா, மகேஸ்வரி, ஆனந்தராசா, பாலசுப்பிரமணி யம் ஆகியோரின் அன்புத் தாயாரும் வசந்த மலர், விக்கினேஸ்வரி, குணராசா, புவனேஸ் வரி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.04.2005) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடை பெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக சாம்பலோடை இந்துமயானத்திற்கு எடுத் துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவி னர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*காரைநகர்.* தகவல்: மக்கள், மருமக்கள்.
(43794)(42-14-11-26)


**தேவை**

*ஓட்டோச் சாரதி தேவை.*
*சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.*
தொடர்பு:
**ரொக் பேணிச்சர்ஸ்**
316, ஆஸ்பத்திரி ,வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 0777 536108, 077 3126896.
(43792) (24)



**இந்தவார புதிய வெளியீடுகள்!**

**1. V.C.D. SONGS**
A லண்டன்
B மாயாவி
C மண்ணின் மைந்தன்

**A.C.D SONGS**
A சச்சின்
B டச்சி மீ
C சுயவிருப்பம்

2. சிம்ரன் கிட்ஸ்
3. லவ் வெயிலியர் சோங்ஸ்
V.C.D பாடல்களை முதல் முறையாக டிஜிற்றல் ஒலி நயத்துடன் கேட்டு மகிழுங்கள்

**D.V.D FILMS**
படம்
A. மகாபாரதம் B. ஆலயம், ஐயா, தேவதையைக் கண்டேன்

**V.C.D. + DVD**
இந்தியாவில் பிரசித்திபெற்ற ஸ்தலங்களும் அதன் சிறப்பியல்புகளும்
☞ மொத்த வியாபாரிகளுக்கு விசேட விலைக்கழிவு உண்டு.

CDS CITY
கஸ்தூரியார் வீதி (ராஜா தியேட்டருக்கு முன்பாக),
யாழ்ப்பாணம். (43787) (24-14)


## மரண அறிவித்தல்கள்

### வைத்திலிங்கம் லோகேஸ்வரன்

(இளைப்பாறிய மின் அத்தியட்சகர், இலங்கை மின்சார சபை)



சரசாலையைப் பிறப்பிடமாகவும் தபாற்கந் தோர் வீதி, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் லோகேஸ்வரன் (இளைப்பாறிய மின் அத்தியட்சகர்) நேற்று (02-04-2005) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் வைத்திலிங்கம் - காலஞ்சென்ற சின் னம்மா தம்பதிகளின் ஏக புத்திரனும் காலஞ் சென்ற சின்னத்துரை - மீனாம்பிகை தம்பதி களின் மூத்த மருமகனும் சிவகுமாரியின் அன் புக் கணவரும் லோகேஸ்வரி, குகனேஸ்வரி (ஆசிரியை, சாவகச்சேரி இந்துக் கல்லூரி), இரத்தினேஸ்வரி ஆகியோரின் ஆசை அண் ணாவும் நவரத்தினம் ("விமலாஸ்" சாவகச்சேரி), அரன்மகன் (ஆசிரி யர், கல்முனை), சுமுகலிங்கம் (ஆசிரியர், வேரவில் இந்து மகா வித்தியாலயம்), சிவஞானசோதி (கனடா), சிவானந்தம் (இளைப்பாறிய தொழில்நுட்பவியலாளர்), காலஞ்சென்ற சிவராசா (பரிசோதகர், இலங்கை போக்குவரத்துச் சபை), சிவதேவி (ஆசிரியை, சாவ. இந்துக் கல்லூரி), Dr.சிவபாலன் (புதுக்குடியிருப்பு) ஆகியோரின் அன்பு மைத்துனரும் திருமதி வித்தியாமாறன், சுகந்தன், லதா, தீபா, குருவரதன், சாயினி, கவிதா (பொறியியலாளர், கனடா), காவேரி (பொறியியலாளர் - கனடா), கஜேந்திரன், சசிகரன் (மருத்து வபீடம்), ஸ்ரீரங்கன் (பொறியியலாளர்), சிவதர்சனா (மருத்துவபீட மாணவி), சேந்தன், லக்ஸ்மன், ரமணி, கோபி, சர்மிளா, மாதங்கி, அரவிந்தன், ஆரணியா, ஆரமுதன் ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03-04-2005) காலை 10 மணிக்குத் தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரியில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காகச் சாவகச்சேரி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

*விமலாஸ்,*
*சாவகச்சேரி.*
(43788) (24-14)

தகவல்:
லயன் எஸ்.கே.நவரத்தினம்
(மைத்துனர்).

### திருமதி ஸ்ரீபத்மா கந்தையா (சரசு)



நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் லண்டனில் வசித்தருவமாகிய திருமதி ஸ்ரீபத்மா கந்தையா அவர்கள் 29-03-2005இல் சிவபதமடைந்து விட்டார் என்பதை கவலையுடன் தெரிவித் துக்கொள்கின்றோம்.

இவரது இறுதிக்கிரியைகள் இன்று (03-04-2005) ஞாயிற்றுக்கிழமை லண்டனில் நடைபெறும்.

பு.சேதுப்பிள்ளை,
*19/1, மலர்மகள் வீதி,*
*அரியாலை.*
T.P.: 222 6232
(43788) (24-14)

தகவல்:
திருமதி புண்ணியமூர்த்தி சேதுப்பிள்ளை
(மைத்துனி) குடும்பத்தினர்.

# கனடாவில் உணவு விநியோக தொழிற்றுறையில் முத்திரை பதித்துவரும் யாழ்ப்பாணத்தவர்!

## முன்னோடி விருதும் பெற்றார் அவர்

கனடாவில் 'கேட்டறிங்' தொழிற்றுறையில் தொடர்ச்சியாகப் பத்தாண்டுகளைப் பூர்த்திசெய்துள்ள யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 'பாபு' என



அழைக்கப்படும் கந்தையா இராஜகுலசிங்கத்துக்குத் தமிழர் தகவலின் தொழிற்றுறை முன்னோடி விருது கிடைத்துள்ளது.

அத்துடன், யாழ். சென்.ஜோன்ஸ் கல்லூரியின் மாணவர் தலைவராக இருந்த எஸ்.தி. அகிலன் ஞாபகார்த்த தங்கப்பதக்கமும் அவருக்குக் கிடைத்துள்ளது.

பாபு என்பது கனடாவில் உள்ள உணவுப் பிரியர்கள் மத்தியில் நன்கு பிரபல்யமான ஒரு செல்லப் பெயராக இன்று புகழடைந்து நிற்கின்றதென்றால் அதற்குக் காரணம் 'பாபு கேட்டரிங்'கின் தரம், சுவை, சுத்தம், அளவான விலை என்பன மட்டுமன்றி வாடிக்கையாளர்களை அன்புடன் உபசரித்து உணவு வழங்கும் பண்பும்தான். இதனால், இவர்களது வாடிக்கையாளர்கள் தொகை அதிகரித்து வருவது போன்று இவர்களது தயாரிப்புகளின் வகைகளும் அதிகரித்து வருகின்றன.

1992 ஆம் ஆண்டில் வீட்டு நிலவறையொன்றில் மனைவி, பெற்றோர், இளைய சகோதரி ஆகியோரின் உதவியுடன் குடிசைக் கைத்தொழில் பாணியில் உணவு தயாரித்து விற்பனை செய்யும் தொழிலை ஆரம்பித்த பாபு, தொடக்க காலத்தில் பலத்த சிரமங்களைச் சந்திக்க நேர்ந்தது. சுவிஸ் வங்கியில் புரிந்த நல்ல சம்பளத்துடனான தொழிலைத் துறந்து அதிலிருந்து கிடைத்த மொத்த நிதியுடன் 1993 இல்




கடை வைப்பதற்கான இடமொன்று விலைக்கு வர ஏதோவொரு துணிச்சலுடன் அதனை எடுத்து விட்டார்.

ஆரம்பத்தில் இடியப்பம் மட்டுமே தயாரிப்பதாகவிருந்தது. அதனுடன் சேர்த்து சம்பல் (அப்போது சொதி இல்லை) மட்டுமே. அளவில் கொழுத்த பெரிய இடியப்பம். மார்க்கட்டில் நல்ல பெயர் கிடைத்தது. ஆனால், எதிர்பார்த்தவாறு வருமானம் கிடைக்கவில்லை. முதலும் போய் கடனும் ஒரு லட்சமாக, கடையை விற்பதற்கு விளம்பரம் போட்டது ஒரு வித்தியாசமான அனுபவம்.

1997 - 98 இற்குப் பிறகு நிலைமையில் மாற்றம் ஏற்பட்டது. இன்று கனடியத் தமிழர் சமூகத்தில் மட்டுமன்றி பலவின மக்கள் மத்தியிலும் 'பாபு' வின் தயாரிப்புகள் தனியிடத்தை வகிக்கின்றன. முயற்சியுடையார் இகழ்ச்சியடையார் என்பதற்குப் பாபு நல்லதோர் உதாரணமாகத் திகழ்கின்றார்.

ஸ்காபரோவில் ஷெப்பார்ட் வீதியிலுள்ள 4800 ஆம் இலக்கக் கட்டடத்தில் பாபு கேட்டரிங் அமைந்திருக்கும் பகுதி இப்போது அந்த நிறுவனத்துக்குச் சொந்தமானது. சிறுகச்சிறுக அந்தப் பகுதியில் பெரும் பகுதியைத் தமக்குச் சொந்தமாக்கி தமது தொழிலை விரிவுபடுத்தி வருகின்றார். காலை, பகல், இரவு ஆகிய மூன்று நேரத்துக்குமான பிரதான உணவுகள் அங்கேயே தயாராகின்றன. சோற்றினில் பலவகை, றொட்டியில் பல சுவை. இடியப்பம், பிட்டு, தோசை, அப்பம் என்று எல்லாமே உண்டு. இனிப்பு, உறைப்பு, காரம் நிறைந்த ஐம்பதுக்கும் அதிகமான சிற்றுண்டி வகைகள். தனியான வெதுப்பகம் (பேக்கரி) அதில் பாண், பணிஸ், கேக் என்று பல வகைகள் தொடர்ந்து தயாராகின்றன. சுடச்சுட உணவு மட்டுமல்ல, சுடச்சுட வியாபாரமும்தான்.

இப்போது சைவச் சாப்பாடு, விரதச் சாப்பாடு என்பவற்றுக்குத் தனியான ஒரு பகுதி பாபு கேட்டரிங்கில் உருவாக்கப்பட்டுள்ளது. இங்கு பயன்படுத்தப்படும் பாத்திரங்கள் சைவ உணவு தயாரிப்புக்கு மட்டுமே பயன்படுத்தப்படுபவை. சுத்தமான சைவமாக இருக்க வேண்டும் என்பதற்காக இவ்வாறு, இங்குள்ள அனைத்து மக்களினதும் உணவுத் தேவையை நிறைவு செய்யும் வகையில் இவர்களது சேவை உயர்ந்துள்ளதுடன், இதன் மூலதனமும் goodwillஉம் சேர்ந்து பல லட்சங்களைத் தாண்டியுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

கனடாவில் கேட்டரிங் தொழிற்றுறையில் தொடர்ச்சியாகப் பத்தாண்டுகளைப் பூர்த்தி செய்துள்ள பாபு அவர்களின் சொந்தப் பெயர் கந்தையா இராஜகுலசிங்கம். ஒன்பது பிள்ளைகளைக் கொண்ட குடும்பத்தில் ஆண் மகவுகளில் மூன்றாவதாகப் பிறந்தவர். யாழ். இந்துக் கல்லூரியில் கல்வி பயின்றவர். பாடசாலையில் 1972 இல் இவரும் இவரது அண்ணனும் சமகாலத்தில் Prefect ஆக இருந்ததும் 1973 இல் Senior prefect ஆக இருந்ததும் முக்கிய பதிவுகள்.

சிங்கள அரசு கொண்டு வந்த தரப்படுத்தலையடுத்து உயர் கல்வி மறுக்கப்பட்ட சில நண்பர்களுடன் தரை வழியாக இந்தியா -பாகிஸ்தான் ஊடாக ஈரான் சென்று அங்கு இருவருடங்கள் தொழில் புரிந்ததும் பின்னர் ஜேர்மனி சென்று வேலை பார்த்ததும் தமது வாழ்வின் மறக்க முடியாத நினைவுகள் என்கிறார் பாபு. ஜேர்மனியில் பீரிமன் பல்கலைக்கழகத்தில் Information Technology உயர் கல்வியைக் கற்று, இருவருடங்கள் ஜேர்மன் மொழியும் பயின்று அங்கு புதிய குடிவரவாளர்களுக்கான மொழி பெயர்ப்பாளராகச் சில வருடங்கள் பணியாற்றினார். அவ்வேளையில் இன உணர்வால் உந்தப்பட்ட இவர், பல வழிகளில் தம்மாலியன்ற உதவிகளைத் தாயக விடுதலைக்குச் செய்ததை அவருடன் பழகியவர்கள் அறிவர். அப்பணியை இன்றும் தளராது தொடர்ந்து வருகின்றார். (3)




சுனாமியால் பாதிக்கப்பட்ட குடத்தனையைச் சேர்ந்த 183 சிறுவர்களுக்கு தலா 500 ரூபா வீதம் சேமிப்புக் கணக்குகளை ஹொலண்டில் வசிக்கும் தாமோதரம்பிள்ளை சபாரத்தினம் ஆரம்பித்துள்ளார்.

இலங்கை வங்கியின் மானிப்பாய் கிளையில் இந்தக் கணக்கை அவர் ஆரம்பித்தபோது கிளை உதவிப் பொதுமுகாமையாளர் என். சச்சிதானந்தம் சேமிப்புப் புத்தகங்களை அவரிடம் கையளித்தபோது எடுத்தபடம். வங்கி முகாமையாளர் என்.ஜெயரட்ணம் அருகில் காணப்படுகின்றார். (3-135)

# தொழில் வங்கித் திட்டத்துக்கு நல்ல வரவேற்புக் கிட்டியுள்ளது

யாழ்வணிகர் கழகம் ஆரம்பித்துள்ள தொழில் வங்கித் திட்டத்துக்கு நல்ல வரவேற்புக் கிடைத்துள்ளது வேலையற்று இருக்கும் இளைஞர்கள், யுவதிகளுக்கு வேலை வழங்க வேண்டும் என்ற குறிக்கோளுடன் ஆரம்பிக்கப்பட்டது தொழில் வங்கித்திட்டம்.

யாழ்ப்பாணத்தில் புதிய புதிய வர்த்தக நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டபோதும் அந்தத்துறையில் பணியாற்றக்கூடிய பணியாளர்களைப் பெறுவதில் சிக்கல்களை எதிர்நோக்குவதாக அந்த வர்த்தக நிறுவனங்கள் தெரிவித்து வந்தன.

பத்திரிகைகளில் விளம்பரம் செய்து ஆள்களை நேர்முகப் பரீட்சைக்கு அழைத்தாலும் திறமையான பணியாளர்களை வேலைக்கு அமர்த்த முடிவதில்லை என்று அந்த நிறுவனங்கள் முறைப்பட்டுவந்தன.

இந்த நிலையில் தொழில் வங்கித் திட்டத்தை யாழ்வணிகர் கழகம் அறிமுகம் செய்தது பல்வேறுபட்ட தகுதியுடையவர்கள் இந்தத் தொழில் வங்கியில் பதிவுகளை மேற்கொண்டனர்.

இதுவரை சுமார் 2 ஆயிரம் பேர் இந்த வங்கியில் பதிவுகளை மேற்கொண்டுள்ளனர்.

அந்த வங்கி மூலம் தினமும் 10பேர் வரை வேலைவாய்ப்பைப் பெறுகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது. தரமானவர்களை வர்த்தக நடவடிக்கைகளுக்கு வழங்க முடிந்துள்ளது. அத்துடன், வேலையற்றவர்களுக்கு வேலை வழங்கவும் முடிந்துள்ளது என வணிகர் கழகப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

இந்த வங்கியில் மேலும் புதியவர்கள் தமது பதிவுகளை மேற்கொள்வதன் மூலம் வேலை வாய்ப்பைப் பெறவாய்ப்புக்கிட்டும் என அவர் நம்பிக்கை தெரிவித்தார். (3)

| | | | |
|---|---|---|---|
| வெ. # ▲ ராகு | | | சனி |
| புதன் | இராசிச் சக்கரம் | | |
| செவ். சந். | | | |
| | | | கேது வியா. |

# இந்த வார இராசி பலன்

## 03.04.2005 – 09.04.2005

**மாற்றம்:**
03.04.2005 இல் மகரத்தில் சந்திரன் நிற்கும்

### மேடம்

வீடுமனை செலவு அதிகரிக்கும். அடிக்கடி அலைச்சல் கொடுக்கும். தொழில் நிலையில் மாற்றங்கள் கொடுக்கும். அடிக்கடி உணர்ச்சிவசப்படுவீர்கள். சிலர் அவமானப்படுத்துவார்கள். பொறுமையாகக் காரியங்களைச் சாதிப்பீர்கள். வயிற்று வருத்தம், நாரிநோ கொடுக்கும். உடனிருப்பவர்களை எதற்கும் தயார்படுத்துவீர்கள். வியாபாரிகள் சமயத்துறைகளைச் சேர்ந்தவர்கள் நன்மை" அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்:-* ஞாயிறு, திங்கள், புதன்.

### இடபம்

தொழில் துறையில் புதிய திட்டமிட்டுச் சிறப்பு அடைவீர்கள். வீட்டில் எதிர்ப்பாலார்கள் கடும் எதிர்ப்புத் தெரிவிப்பார்கள். பணவரவு உண்டு. புதிய செய்திகள் வெளிநாட்டிலிருந்து வரும் பலன் உண்டு. சனீஸ்வரனின் தாக்கத்தால் பிறரிடம் வீண்குறை கேட்க நேரிடும். நெஞ்செரிவு, பித்தக் கொதிப்பு வர இடமுண்டு. நிர்வாக பீடத்தவர்கள் - குருத்துறையினர்கள் படிப்படியாக முன்னேற்றம் அடைவார்கள்

*அதிர்ஷ்டநாள்கள்:-* திங்கள், புதன்.

### மிதுனம்

தொழில்பீடத்தில் கடும் முயற்சி எடுப்பீர்கள் - இடமாற்றங்களால் நன்மைகள் ஏற்படும். பொருளொன்று தவறிப்போக இடம் உண்டு. புதிய பொறுப்பொன்று தொழில்பீடத்தில் வரஇடமுண்டு. உஷ்ணபீடைகள் கொடுக்கும். வியாபாரிகள் நன்மை அடைவர்.

*அதிர்ஷ்டநாள்கள்:-* புதன், வியாழன்.

### கடகம்

சகோதரர்களுக்கு நன்மை ஏற்படும். மாமன் வழியினர் உதவிகள் செய்வார்கள். வெளிநாட்டு வாய்ப்புக்களைத் தேட முற்படுவீர்கள். பொருளில் நிதானமாக இருக்கவும். கறுப்புப் பொருள்களைக் கொண்டு திரியாதீர்கள். வாய்வுக் குழப்பங்கள் கொடுக்கும். அரசியல்வாதிகள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்:-* புதன், வியாழன்.

### சிங்கம்

துணிவுடன் செயற்பாடு இருக்கும். நண்பர்களின் உதவிகள் கிடைக்கும். பணவரவு அதிகரிக்கும். சகோதரர்களின் நன்மைகளுக்காக மிகுந்த பிரயாசைப்படல். வீட்டில் திருத்தங்கள் செய்ய யோசனை வரும். நாரி உளைவு இருக்கும். புதிய திட்டங்களை உருவாக்குவீர்கள். வியாபாரிகளுக்கு பொருள் வரவு அதிகரிக்கும்.

*அதிர்ஷ்டநாள்கள்:* புதன், வியாழன்.

### கன்னி

நண்பர்களின் உதவிகள் கிடைக்கும். புதிய பொறுப்புக்களால் அதிக இலாபங்கள் ஏற்படும். வீட்டில் கலகலப்பு இருக்கும். உறவினர் வருகை மகிழ்ச்ச' கொடுக்கும். புதிய திட்டங்கள் மாமன், மைத்துனர், வழியினர் மூலம் உருவாகும். வாய்வு, கை,கால்பிடிப்பு ஏற்படும். குருத்தொழில் செய்பவர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்:-* திங்கள், வியாழன்.

### துலாம்

உருக்குலைந்த திட்டத்தை உருவாக்க எத்தனை சிந்தனை உங்களுக்கு தொழில்பீடத்தில் பிரச்சினைகளை சந்திப்பீர்கள் எதிர்ப்புக்களுக்கு மத்தியில் மலர்ந்து வருவீர்கள். பணவரவு உண்டு. தாய்வழியில் வந்தவருக்காக செலவுகள் செய்வீர்கள். புதிய பிரச்சினைகளை சமாளியுங்கள். சட்டத்தரணி, ஆசிரியர் தொழிலில் அதிக வருமானம் கிடைக்கும்.

*அதிர்ஷ்டநாள்கள்:-* திங்கள் வியாழன்

### விருச்சிகம்

ஏமாற்றமான காலமாகும். புதிய திட்டங்கள் காலதாமதமாகும். தூரதேசச் செய்திகள் மனமகிழ்ச்சியைக் கொடுக்கும். இடமாற்றங்கள் சகஜம். குடும்பத்தில் மனக் கலக்கம், வயிற்றில் குழப்பம் ஏற்படும். வியாபாரிகள், காவல்துறையினர், நன்மை அடைவார்கள். வீடு மனையில் மாற்றங்கள் ஏற்படும். அரசியல்வாதிகள், வியாபாரிகள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்:-* ஞாயிறு, திங்கள், புதன்.

### தனுசு

புதிதாக மாற்றங்கள் கொடுக்கும். திட்டமிட்டுச் செயற்படுவீர்கள். பணப்புழக்கம், புதிய பொறுப்புக்கள் தேடிவரும். ஆலயத்திருப்பணி தொடரும். வீட்டுச் செலவுகள் அதிகரிக்கும். பழைய பாக்கியில் சில வசூலாக இடமுண்டு. சளித்தொல்லை கொடுக்கும். காவல்துறையினர், ஆசிரியத் துறையினர் நன்மை அடைவர்.

*அதிர்ஷ்டநாள்கள்:* ஞாயிறு, திங்கள், புதன்.

### மகரம்

பிரயாணமொன்று காத்திருக்கும். அடிக்கடி இடமாற்றம். தொழில் ரீதியில் மாற்றங்கள் கொடுக்கும். பொருள்பிரச்சினை உண்டு. சகோதரத்துடன் கருத்து வேற்றுமை ஏற்பட இடம் உண்டு. புதிய நட்புக் கிடைக்கும். கால்பிடிப்பு, சளித்தொல்லை ஏற்பட இடமுண்டு.

*அதிர்ஷ்டநாள்கள் :-* ஞாயிறு, திங்கள், புதன்.

### கும்பம்

குற்றம் பார்த்தால், சுற்றம் இல்லை என்பார்கள். பணவரவு கொடுக்கும். அன்னிய நாட்டிலிருந்து பணவரவு வரலாம். இடமாறலாம். வீட்டுச் செலவுகள் அதிகரிக்கும். எதிரிகளால் தொல்லைகள் வரும். தொழில் ஸ்தானத்தில் புதிய திட்டங்கள் உருவாகும். ஆசிரியர்கள், நீதித் துறையினர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்:-* ஞாயிறு, திங்கள், வியாழன்.

### மீனம்

தொழில் சிறப்புக் கொடுக்கும். இடமாற்றம் ஏற்படும். பணவரவு. மேலதிகாரிகள் உதவிகள் கிடைக்கும். அயலவர்கள், சகோதர வழியினர் உதவி செய்வார்கள். தூரதேசப்பிரயாண யோசனை, புத்திரர் சிறப்பு, வியாபாரிகளுக்கு நன்மை கிடைக்கும்.

*அதிர்ஷ்டநாள்கள்:-* ஞாயிறு, திங்கள், வியாழன்.

**மகாதேவா ஜோதிடம்**

ACF
நியூட்ராஜென் (Nutragen - Tamil script)
NUTRAGEN

Trust Quality Innovation
Creamy Vanilla Flavour

உயர் பூரண
ஆரோக்கியத்திற்கு

Promalt

புறோமோல்ட்

200 கிராம் - 225/=

Nutritional Booster

Nutraceutical
Contains Dietary
Fibre

(43768) (54-11-16)

விநியோகஸ்தர்:
சிவன் மாளிகை
116, K.K.S. றோட், யாழ்ப்பாணம்.
தொலைபேசி:-
021-222 2996

எல்லா மருந்தகங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

## விவரம் திரட்டல

வலி.தெற்கு,ஏப்.3

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகளில் பணியாற்றி வரும் உத்தியோகத்தர்கள் பற்றிய பூரண விவரங்கள் திரட்டப்பட்டு வருகின்றன.

வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் கே.சபாபதிப்பிள்ளை இதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளார்.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள 72 உள்ளூராட்சி சபைகளிலும் கடமையாற்றி வரும் சகல உத்தியோகத்தர்களினதும் விவரங்களைத் திரட்டுவதற்கான படிவங்கள் இதன் பொருட்டு சகல சபைகளின் செயலாளர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (8-152)

## அலுவலகம் திறப்பு

குடத்தனை,ஏப்.3

யாழ் மாவட்ட சுகாதாரத் தொண்டர்களுக்கான அலுவலகம் ஒன்று நாளை திங்கட்கிழமை காலை 10 மணிக்குக் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரிக்கு அருகில் உள்ள தனியார் வீடொன்றில் திறந்துவைக்கப்படவுள்ளது.

இந்தத் திறப்புவிழா நிகழ்விற்கு ஒவ்வொரு பிரிவு சுகாதாரத் தொண்டர்களின் நிர்வாகிகளையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (எ-78)

இணையப்பிரியர்களுக்கு ஓர் அரியசந்தர்ப்பம்
PLANET
i-NET BROWSING CENTRE
(HI-SPEED LINE) (128kb/sec)

Start Time 8.00 am
Close Time12.00 mn

CD WRITING
SCANING
PRINTING
TYPING
Multi card Support

PLANET Hi Speed i-net Browser
53, ADIYAPATHAM ROAD
THIRUNELVELI.


அனைத்தும் அதிவேக நவீன
தொழில் நுட்பத்தைகொண்ட
intel pentium4 கணனிகள்.

மணித்தியாலத்திற்கு
30 ரூபா மட்டுமே

இச்சலுகை 30.04.05
வரை மட்டும்





53, ஆடியபாதம் வீதி.
திருநெல்வேலி.
யாழ்ப்பாணம்.
Fully air-conditions

PLANET
i-net browsing centre

உங்கள் வளர்ச்சிக்கு எங்கள் வழிகாட்டி

ASUS intel
PLANET
I-NET BROWSING CENTRE
53,ADIYAPATHAM ROAD,
THIRUNELVELI,
JAFFNA. SRI LANKA.

உங்களுக்குத் தெரியுமா?
இலங்கையில் அதிநவீன கணனிக் கற்கையை
முதன் முதலாக அறிமுகப்படுத்துகிறது. NIIT
யாழ் மண்ணிலும் பயில்வதற்கான ஏற்பாடு

இதன் மூலம்............
Microsoft இனால் அங்கீகரிக்கப்பட்ட
(MCSD) நிபுணர்களாவதற்கான சந்தர்ப்பம்
சர்வதேச பல்கலைக்கழகங்களில் பட்டம்
பெறுவதற்கான நேரடி அனுமதி
வேலை வாய்ப்புக்களுக்கான சந்தர்ப்பங்கள்
அதிகரிக்கும்

Java
C++
Semester 1

Futurz Classic Curriculum

B.Sc
Degrees
From
International
Universities
(USA,UK,
Australia,
Canada
& New Zealand)

HIT
Enterprise
Java
SQL 2000
Semester 2

VC#
Mobile
Technologies
Semester 4


DNIIT

VB.NET
ASP.NET
XML
Semester 3

NIIT enabled by cyberSKILLS

The World Largest Computer Educator
347, Kasthuriyar Road, Jaffna
TP 021 222 7250 / 4590 567

# ஐ.நா. செயலாளர் நாயகம் கொபி அனான் மீதான ஊழல் அவதூறுக்கு முற்றுப்புள்ளி



ஐ.நாவுடன் சுவிஸ் நிறுவனம் ஒன்று ஈராக்கிற்கு உணவுப் பொருள்களை வழங்குவதற்குச் செய்துகொண்ட ஒப்பந்தம் ஒன்றில் ஊழல்கள் இடம்பெற்றிருந்தமை தொடர்பாக நடைபெற்ற சுயேச்சையான விசாரணையொன்றில் ஐ.நா. செயலாளர் நாயகத்துக்கும் அந்த ஊழல் சம்பவத்துக்கும் எதுவிதத் தொடர்புமில்லையென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐ.நா.சபையின் மிக உயர்ந்த பதவியிலிருக்கும் ஒரு பிரமுகர் தொடர்பாக இவ்வாறான ஒரு புகார் அல்லது சந்தேகம் எழுந்திருக்கவே கூடாது. ஆனால், ஊழல் விவகாரத்தில் கோபி அனானின் புதல்வர் சம்பந்தப்பட்டிருப்பதனாலேயே அவர் மீது சில நாடுகள் அவதூறு கற்பிக்க முயன்றுள்ளன.

இந்த விசாரணை முடிவு கொபி அனானுக்குப பெரும் மன ஆறுதலைக் கொடுத்துள்ளது.



ஐ.நாவின் உணவுக்கு எண்ணெய் ஊழல் தொடர்பான சுயேச்சை விசாரணைக் குழுவின் தலைவர் போல் ஏ.வொல்கர் (நிற்பவர்) அறிக்கையை வெளியிட்டபின் நியூயோர்க்கில் பத்திரிகையாளர்கள் முன் பேசுகிறார்.

பதவிக்காலம் முடிவுற இன்னும் கொஞ்சக்காலமே இருக்கும் நிலையில் அவப்பெயர் ஒன்றை அவர்மீது சுமத்திவிட சில நாடுகள் பகீரதப்பிரயத்தனம் மேற்கொண்டிருந்தன. அதிர்ஷ்டவசமாக இப்பொழுது அந்த அவப்பெயர் நீக்கப்பட்டு கொபி அனான் முன்போல் தலைநிமிர்ந்துள்ளார்.

விசாரணை முடிவையடுத்து, அவர் வெளியிட்ட ஆறுதல் மொழிகள் வருமாறு:-

"பல்வேறு வேதனைகளுக்கும் உண்மையற்ற குற்றச்சாட்டுகளுக்கும் பின்னர் சுயேச்சையான இந்த விசாரணை என்னைக் கௌரவமாக விடுவித்திருப்பது உண்மையாகவே பெரும் ஆறுதலைத் தருகின்றது.



பூட்டான் மன்னர் ஜக்மேசிங்கோ வாஞ்சுக்

''ஐ.நாவின் உணவுக்கு எண்ணெய்த் திட்டத்தின் கீழ் ஈராக்கிலிருந்து எண்ணெயைப் பெற்றுக்கொண்டு அதற்குப் பதிலாக உணவை வழங்குவதற்கான உடன்படிக்கையில் 'கொட் டெக்னா' என்ற சுவிஸ் நிறுவனம் கையெழுத்திட்டிருந்தது.

1998 இல் செய்துகொள்ளப்பட்ட இந்த ஒப்பந்தத்தின்கீழ் வருடத்துக்கு 10 பில்லியன் டொலர் பணத்தை இந்த நிறுவனம் பெற்றுவந்தது. இந்த 67 பில்லியன் டொலர் ஒப்பந்தம் 1996ஆம் ஆண்டு ஆரம்பித்து 2003ஆம் ஆண்டில் முடிவுற்றது. இதன்படி, ஐ.நா. பொருளாதாரத் தடைக்குட்பட்டிருந்த ஈராக் (சதாம் ஹுசைன் ஆட்சியின் போது) எண்ணெயை ஏற்றுமதி செய்து அதற்குப் பதிலாக மனிதாபிமானப் பொருள்களை இறக்குமதி செய்ய அனுமதிக்கப்பட்டிருந்தது.

இந்த விவகாரத்தில் ஏற்பட்டதாகக் கூறப்பட்ட ஊழல் பற்றி முன்னாள் அமெரிக்க சமஷ்டி 'றிசேர்வ்' அமைப்பின் தலைவர் போல் வொல்க்கர் தலைமையிலான சுயேச்சைக் குழு விசாரணை நடத்தியது. விசாரணைக் குழுவின் முக்கிய கவனம் சுவிஸ் நிறுவனத்தில் பணிபுரிந்த அனானின் புதல்வர் கோஜோ பற்றியும் அனானைப் பற்றியதுமாகவே இருந்துள்ளது. விசாரணையின் பின் வெளியிடப்பட்ட அறிக்கையில், அனானின் மகன் பணிபுரிந்த நிறுவனம் மேற்கொண்ட ஒப்பந்தம் தொடர்பாக அவர் தமது செல்வாக்கைப் பிரயோகிக்கவில்லையென்பதைத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளது. என்றாலும், இந்தச் சர்ச்சையில் அனான் மெத்தனமாக இருந்துவிட்டார். மேல் எழுந்தவாரியாகவே விசாரணைகள் நடைபெற்றுள்ளன என்றும் தெரிவித்திருக்கிறது. வொல்கர் அறிக்கையில் சுவிஸ் நிறுவனத்தின் மீது கடும் குற்றச்சாட்டுத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஒப்பந்தம் கையெழுத்தானதின் பின்னர் அந்த நிறுவனம் அனானின் மகனுடனான தொடர்புகளை மறைத்துவிட முயன்றுள்ளது. கோஜோவும் தமது தந்தையைத் தவறாக வழிநடத்தியுள்ளார் என்று அந்த அறிக்கை கூறியது.

**அனானின் மகன் உண்மையை மறைத்தார்**

அனான், தனது மகன் உண்மைக்கு மாறாகவே நடத்தியிருக்கிறார் என்பதை கொபி அனான் ஒப்புக்கொண்டுள்ளார்.

நான் என் மகனை நேசிக்கிறேன். அவரிடம் உயர்ந்த கௌரவமான நடத்தையை நான் எதிர்பார்த்தேன். ஆனால், அதற்கு மாறாகச் சாட்சியங்கள் இருப்பது எனக்கு மிகவும் கவலையை அளித்துள்ளது என்று கூறியுள்ளார்.

வாஷிங்ரன் வட்டாரங்களில் அனானுக்கு மிகக் கவனத்துடன் ஆதரவு தெரிவிக்கப்பட்டது. ஆனால, போர்த்துக்கல் உடனடியாக வெளியிட்ட அறிக்கையில் அனான் மீது நம்பிக்கை வெளியிட்டது.

விசாரணை அறிக்கையில் அனான் முழு அளவிலான விசாரணையொன்றுக்கு உத்தரவிடாமல்போனது பற்றிக் குறை கூறப்பட்டிருந்தபோதிலும், 1998இல் 'கொன்டெக்னா' நிறுவனத்துக்கு ஒப்பந்தத்தை வழங்குவதற்கான தீர்மானத்தில் முறையில்லாத செல்வாக்கு செயலாளர் நாயகத்தின் தரப்பில் பிரயோகிக்கப்பட்டதாகக் கூறுவதற்கு எதுவித ஆதாரமும் இல்லாயென்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனானின் புதல்வர் பற்றி அறிக்கையில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது:-

1998ஆம் ஆண்டு காலப்பகுதியில் கோஜோவின் செயற்பாடுகள் தொடர்பாகச் சில முக்கியமான கேள்விகளுக்கு விடைகாண வேண்டியிருக்கிறது. உணவுக்கு எண்ணெய்த் திட்டத்தின் கீழ் அவருக்கிருந்த அந்தஸ்து, அவரது தொழில் மற்றும் நிதிச் செயற்பாடுகள் பற்றிய கேள்விகள் இருக்கின்றன.

இந்த விடயங்கள் தொடர்பான விசாரணைகள் தொடர்வதாகவும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

★★★

## உலக வலம்

# அதிகாரங்களை பூட்டான் மன்னர் மக்களிடம் கையளிக்கிறார்

**பூட்டானில் மக்கள் ஆட்சி**

நேபாளத்தில் ஜனநாயக முறையில் தெரிவு செய்யப்பட்ட அரசையும் நாடாளுமன்றத்தையும் ஒதுக்கிவைத்துவிட்டு மன்னர் கஜனேந்திரா அதிகாரத்தைத் தன் கையில் எடுத்துக்கொண்டிருக்கும் அதேவேளையில், இமாலய ராஜ்யங்களில் இன்னொன்றான பூட்டானில் இருந்து இதற்கு நேர்மாறான தகவல்கள் வந்துகொண்டிருக்கின்றன.

முழுமையான மன்னர் ஆட்சியிலிருக்கும் - இந்நாட்டில் இரண்டு கட்சி ஜனநாயக முறையை அமுல்படுத்துவதற்கு அந்நாட்டு மன்னர் முன்வந்துள்ளார். புதிய அரசியல் வரைவுத் திட்டம் நாட்டில் உள்ள குடிமக்கள் அனைவருக்கும் அனுப்பப்படும்; அவர்களின் கருத்துக்கள் அறியப்படும் என்று மன்னர் தெரிவித்துள்ளார்.

மலைகள் அடர்ந்த பூட்டான் நாடு இமாசலப் பிரதேசத்தின் தென்கிழக்குச் சரிவுப் பகுதியில் திபெத்திற்கு வடக்குக் கிழக்கின் எல்லையில் இந்தியாவுக்குத் தெற்கு மேற்குப் பகுதியில் அமைந்துள்ளது. இதன் தலைநகர் திம்பு. இதன் வெளிநாட்டுக் கொள்கை இந்தியாவினால் கவனிக்கப்படுகின்றது. ஓர் ஒப்பந்தத்தின்கீழ் இந்தியா இந்நாட்டுக்கு மானியம் ஒன்றை வழங்கிவருகின்றது.

1960ஆம் ஆண்டு அங்கு காணப்பட்ட அடிமை முறை ஒழிக்கப்பட்டது. சாதிமுறையும் ஒழிக்கப்பட்டது. பெண்களுக்கு விடுதலையும் வழங்கப்பட்டது. மன்னர் ஜிக்யே சிங்யே வாஞ்சுக் 16 வயதில் சிம்மாசனம் ஏறினார். வாஞ்சுக் வம்சத்தில் இவர் 4ஆவது ஆட்சியாளராவார். அதிகாரப் பரம்பல் நான்கு ஆண்டுகளுக்கு முன் ஆரம்பமாயிற்று. அப்பொழுது அரசின் தினசரிக் கடமைகளை ஓர் அமைச்சர் சபையிடம் மன்னர் ஒப்படைத்தார். அது மட்டுமன்றி, நாடாளுமன்றம் அதன் முக்கால்வாசி உறுப்பினர்களால் தீர்மானிக்குமானால் அரசர் பதவியை இல்லாமல் செய்யவும் அவர் சம்மதம் தெரிவித்தார்.

இப்பொழுது உருவாக்கப்பட்டுள்ள 34 அத்தியாயங்களைக் கொண்ட அரசியல் அமைப்பு நகலில் அரசின் பணிகள், சமயத் தலைவர்களின் கடமைகள், குடிமக்களின் கடமைகள் யாவும் வரையறுக்கப்பட்டுள்ளன. இந்த அரசியல் திட்டத்தை மக்கள் ஏற்றுக்கொள்கிறார்களா என்பதை அறிவதற்கான பொதுசன வாக்கெடுப்பு ஒன்று வருடக் கடைசியில் நடத்தப்படவிருப்பதாகத் தெரிகின்றது.

அரசருக்கு முழு அதிகாரம் வழங்கியிருந்த 1953ஆம் ஆண்டு அரச அதிகார சட்டம் புதிய அரசியல் சட்டத்தின் மூலம் நீக்கப்பட்டுவிடும்.

இப்பொழுது 49 வயதான அரசர், தமது குடிமக்கள் அனைவரும் இந்தப் புதிய அரசமைப்பை ஆராய்ந்து தமது கருத்துக்களை அனுப்பிவைக்க வேண்டும் என விருப்பம் தெரிவித்திருப்பதாக அந்நாட்டுப் பிரதம நீதியரசர் சொனம் டொப்தியோ கூறியிருக்கிறார்.

தமது புதிய திட்டம் பற்றி பூட்டான் மன்னர் அந்நாட்டின் ஒரே செய்திப் பத்திரிகையான குவொன்சலுக்கு அளித்துள்ள பேட்டியில், நாடு அரசனை விட மிகமுக்கியமாகும். நாட்டின் இறைமை, உறுதிப்பாடு மற்றும் அதன் மேன்மை யாவும் வேறு எல்லாவற்றுக்கும் மேலாக மதிக்கப்படவேண்டும் என்று கூறியுள்ளார்.

★★★

**அபயஸ்தாபனம் அமெரிக்காவுக்கு சூடு**

மனித உரிமைகள் பற்றிய அமெரிக்காவின் செயற்பாடுகளைச் சர்வதேச அபயஸ்தாபனம் கண்டித்திருக்கிறது.

தனது வீட்டை முதலில் ஒழுங்குபடுத்திக் கொள்ளாமல் உலக நாடுகளின் மனித உரிமைகள் பற்றி அமெரிக்கா அறிக்கைகளை விடுத்துக்கொண்டிருப்பதாகச் சர்வதேச அபயஸ்தாபனம் கூறியுள்ளது. ஈராக்கிலுள்ள போர்க் கைதிகள், கவுத்தமாலாவிலுள்ள பயங்கரவாதத்துக்கெதிரான போர்க்கைதிகள் விடயத்தில் அவர்களின் மனித உரிமைகளைக் கௌரவிக்க அமெரிக்க அரசு தவறிவிட்டது என்று தெரிவிக்கும் உலக அபயஸ்தாபனம், சர்வதேச சட்டங்களை அமெரிக்கா மீறிவரும்வரை, வெளிப்படையாகவே ஜெனிவா ஒப்பந்த ஷரத்துக்களை உதாசீனம் செய்துவரும்வரை ஜனநாயகத்தை வளர்க்கவும் மனித உரிமைகளை நிலைநாட்டவும் அது கொண்டிருக்கும் கொள்கைகள் பலவும் சந்தேகத்துடன்தான் நோக்கப்படும் என்று தெரிவித்துள்ளது.

அமெரிக்க அதிகாரிகள் தொடர்ந்தும் சட்டத்துறை துஷ்பிரயோகங்களைப் புரிந்து வருவதால் அமெரிக்காவின் தார்மீக அதிகாரம் சீரழிக்கப்பட்டு வருகின்றது எனச் சர்வதேச அபயஸ்தாபனத்தின் அரச உறவுகள் பணிப்பாளர் அலெகஸன்றா அரியாகா தெரிவித்துள்ளார்.

★★★

# காஸா பற்றிய சர்வஜன வாக்கெடுப்பு: இஸ்ரேலில் தீர்மானம் தோல்வி

**காஸா பற்றிய சர்வஜன வாக்கெடுப்புத் தீர்மானம் தோல்வி**

காஸா நிலப்பரப்பிலிருந்து யூதக் குடியேற்றவாசிகளை அப்புறப்படுத்துவது தொடர்பாகச் சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை நடத்த வேண்டும் என இஸ்ரேலிய நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட தீர்மானம் தோற்கடிக்கப்பட்டுவிட்டதால் பிரதம மந்திரி ஏரியல் ஷெரோனின் திட்டத்துக்கு ஏற்படவிருந்த பெருந்தடங்கல் ஒன்று நீக்கப்பட்டுள்ளது.

காஸா நிலப்பரப்பிலிருந்து இஸ்ரேலியர்களை வாபஸ் பெறக்கூடாதென்று பெரும் எடுப்பில் போராடி வந்தவர்களுக்கு இந்தத் தீர்மானம் பெரும் அடியாகவிருக்கும் என்று கருதப்படுகின்றது.

தீர்மானம் வாக்கெடுப்புக்கு விடப்பட்ட போது பிரசன்னமாய் இருந்த 114 உறுப்பினர்களில் 72 பேர் எதிர்த்தும் 39 பேர் ஆதரித்தும் வாக்களித்தனர். மூன்று பேர் வாக்களிக்கவில்லை.

காஸா நிலப்பரப்பிலிருந்து அங்கு குடியேறியுள்ள சுமார் 8,000 இஸ்ரேலியர்களையும் படைகளையும் அங்கிருந்து திருப்பி அழைப்பதற்கான தீர்மானம் ஏற்கனவே இஸ்ரேலிய நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது; அமைச்சரவையும் ஏற்றுக்கொண்டுள்ளது. இந்த ஆண்டின் முடிவில் இவர்களை வாபஸ் பெறுவது முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மக்கள் கருதது அறிவதற்கான தீர்மானம் நிறைவேறியிருக்குமானால், இந்த ஷெரோனின் திட்டம் நீண்ட காலத்துக்குத் தள்ளிப் போடப்பட்டிருக்கும்.



அதிபர் றொபர்ட் முகாபே

காஸாப் பகுதியிலிருந்து இஸ்ரேலியரை வாபஸ் பெறும் திட்டத்தை ஷெரோனின் லிக்குயிட் கட்சியிலேயே மூன்றில் ஒரு பகுதியினர் எதிர்க்கிறார்கள். நிதி அமைச்சர் பெஞ்சமின் நேத்தன் யாகுவும் இதில் ஒருவர். தீவிர பழைமைவாதக் கட்சியான ஷாஸ் கட்சியின் ஆதரவும்கூடக் கிடைக்கவில்லை.

காஸா நிலப்பரப்பிலிருந்து பலவந்தமாகக் குடியேற்றப்பட்ட இஸ்ரேலியர் வெளியேற்றப்படவேண்டும் என்பது பலஸ்தீன அமைதிக் கோரிக்கைகளில் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.

★★★

**சிம்பாப்வேயில் பொதுத்தேர்தல்**

சிம்பாப்வே நாட்டில் பொதுத்தேர்தல் நடைபெற்றுள்ளது. கடந்த வியாழனன்று நடைபெற்ற பொதுத் தேர்தலில் சிம்பாப்வே மக்கள் கடும் குளிரையும் பொருட்படுத்தாமல் காலையிலேயே வரிசைகளில் நின்று வாக்களித்துள்ளார்கள். கடந்த 1980ஆம் ஆண்டிலிருந்து பதவியிலிருந்து வரும் அதிபர் றொபர்ட் முகாபே (81) மீண்டும் ஐந்து ஆண்டுகளுக்குப் பதவியிலிருக்க மக்கள் ஆணையைக் கோரி நிற்கின்றார்.

எதிர்க்கட்சியினர் ஜனநாயக மாற்றம் தேவையென்று பிரசாரம் செய்து வந்தார்கள். அவர்கள் அனைவரும் பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயரின் கைப்பொம்மைகள் என்று முகாபே வர்ணித்திருந்தார். முகாபேயின் சானு - பி.எப். கட்சியே வெற்றிபெறும் என்று கருதப்பட்டாலும், கடும் எதிர்ப்பு இருப்பதாகத் தெரிகிறது. முகாபே தொலையவேண்டும். அப்பொழுதுதான் சிம்பாப்வே மக்கள் நிம்மதியாக வாழமுடியும் என்று சிம்பாப்வே றோமன் கத்தோலிக்க திருச்சபைத் தலைவர் ஒருவர் கூறியுள்ளார்.

வெள்ளையர்களுக்குச் சொந்தமான பல தோட்டங்களையும் பண்ணைகளையும் பறித்துவிட்டதால் மேற்கத்திய நாடுகள் தம்மீது ஆத்திரம் கொண்டுள்ளதாக முகாபே கூறிவருகின்றார்.

*


STUDY IN LONDON

UNIVERSITY OF EAST LONDON

STUDY AT A TOP BRITISH UNIVERSITY

Undergraduate & Postgraduate

September 2005 Intake

- Architecture
- Finance Money & Banking
- Art, Fashion & Design
- Electronic & Electrical Eng.
- Manufacturing System Eng.
- Internet Engineering
- Bio - Sciences
- Bio Medical Sciences
- E.Commerce
- Sports Sciences
- Business Studies
- PG Diploma
- Civil Engineering
- Accounting & Finance
- Media & Communication
- Software Engineering
- Computer Forensics
- Computer Networks
- LLM
- LLB

BA · BSc · MA · MSc · MBA · MPhil / PhD

OVER 1000 COURSES AVAILABLE

Affordable Tuition · Free Consultation · No Charges · Visa Guidence

Immediate Offers Made to Genuine

For Appoinments Contact :
Mr. Loho Gunesekara - Lohos Group
Official Representative & Education Adviser
Tel No's : 0777-917929 / 0714-124446
E-mail : loho@dialogsl.net web : www: uel.ac.uk

Office : Lucky Plaza Building
SH2, 6th Floor,
St. Anthony's Mw., Colombo 03.
(Weekdays by appoinment only 8 a.m. - 2 p.m.)

தமிழ் தொடர்புகளுக்கு :- Call Doctor INDRANI - 2862376

# வலி.தென்மேற்கில் நாய்களுக்குத் தடுப்பூசி

யாழ்ப்பாணம்,ஏப்.3

விலங்கு விசர்நோய் தடுப்புத் திட்டத்தின் கீழ் வலி.தென்மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

நாளை திங்கட்கிழமை காலை 9மணி தொடக்கம் 10.30 மணி வரை மானிப்பாய் மேற்கு திருவள்ளுவர் சனசமூக நிலையததிலும், முற்பகல் 10.30 மணி தொடக்கம் 12 மணி வரை மானிப்பாய் வடக்கு பாரதி சனசமூக நிலையத்திலும், பிற்பகல் ஒரு மணி தொடக்கம் 4.30 மணிவரை மானிப்பாய் பிரதேச சபையின் தலைமையகத்திலும் தடுப்பூசிகள் போடப்படும்.

எதிர்வரும் 5ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9மணி தொடக்கம் 10.30 மணிவரை மானிப்பாய் கிழக்கு ஆனந்தன் வைரவர் கோயிலடியிலும் முற்பகல் 10.30 மணி தொடக்கம் 12மணி வரை மானிப்பாய் மெமோறியல் லேன் திருப்பதி ரெலிக்கொம் நிலையத்திலும் பிற்பகல் ஒரு மணி தொடக்கம் 4.30 மணிவரை நவாலி வேலக்கைப் பிள்ளையார் கோயிலடியிலும் தடுப்பூசிகள போடப்படும். (3-202)




## றோயல் தங்கப் புதையல் போட்டி

ஒன்று... இரண்டு...மூன்று ஓட்டப்போட்டியா? இல்லை றோயல் குளுக்கோஸ் தங்கப்புதையல் போட்டியில் பங்குபற்றுவோருக்கு தலா ஒரு பவுண் வீதம் தங்க நாணயங்களை முதலாவது, 2ஆவது, 3ஆவது பரிசுகளாக குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படும் அதிர்ஷ்டசாலிகளுக்கு வழங்கப்படவிருக்கிறது. நீங்கள் செய்யவேண்டியது இதுதான். றோயல் குளுக்கோஸ் (6) வெற்றுப்பெட்டிகளைச் சேகரியுங்கள். றோயல் குளுக்கோஸ் வாங்கும்போது பற்றுச்சீட்டினை நீங்கள் றோயல் குளுக்கோஸ் வாங்கும் வியாபாரியிடம் கேட்டுவாங்கத் தவறாதீர்கள். பின்பு 6 வெற்றுப் பெட்டிகளையும் பற்றுச்சீட்டினையும் இணைத்து பின்வரும் முகவரிக்கு அனுப்பிவையுங்கள் அல்லது நேரில் கையளியுங்கள்.

**றோயல் தங்கப் புதையல் போட்டி,**
**சிவா நறுமணப் பூங்கா,**
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 222-2567

மேற்படி போட்டியில் 31.03.2005 முதல் 31.06.2005 வரை கொள்முதல் செய்யும் பற்றுச்சீட்டுக்கள் மட்டுமே செல்லுபடியாகும்.
றோயல் குளுக்கோஸ் புயல்வேகத்தில் உங்களுக்கு இழந்த சக்தியை மீட்டுத் தருகின்றது.

வட மாகாண ஏக விநியோகஸ்தர்கள்:
**சிவா நறுமணப் பூங்கா,**
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 222-2567




## றோயல் குளுக்கோஸ்

**பிரபல பார்மசிகளிலும், கடைகளிலும் கிடைக்கும்.**

இறக்குமதி செய்து பொதி செய்வோர்
றோயல் இன்டஸ்ரீஸ்
கொழும்பு - 12
T.P:- 0777 - 277670, 011 - 4712439.

(54- )


# முதலாம் ஆண்டு சிரார்த்த தினம்



தோற்றம் 29.03.1942

மறைவு 16.03.2004

## அமரர் சின்னத்தம்பி கணேசன்

ஓராண்டு ஓடி மறைந்தாலும் உங்கள் நினைவு மறையாது
தீராத வேதனையால் தினந்தினம் நாம் துடிக்கின்றோம்
வேராக நீயிருந்து குடும்பத்தைக் காத்த அன்புத்தெய்வமே!
ஆத்மா சாந்தியடைய ஆண்டவனை வேண்டுகின்றோம்.

நாளை(04.04.2005) திங்கட்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல் :சறோஜினிதேவி கணேசன்(மனைவி)

மகேசன் வீதி,
நவாலி வடக்கு, நவாலி.

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரங்கள்,மைத்துனர்கள்.

(C41896)(51-15-45-11)

# நிலவு.com இன் தமிழ் கணினி 2005

## கண்காட்சியும் கருத்தரங்கும் விற்பனையும்

காலம்: ஏப்ரல் 6 ஆம் திகதி முதல் 11 ஆம் திகதி வரை
காலை 9.00 மணி முதல் மாலை 7.00 மணி வரை
இடம்: யாழ் இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபம்

10% முதல் 30% வரை விஷேட விலைக் கழிவு

பங்குபற்றுபவர்களில் 1 அதிஷ்டசாலிக்கு P IV கணினி, 10 பேருக்கு மேலும் பரிசில்கள்

## கண்காட்சித் தலைப்புக்கள்

கணினி ஊடான பாடசாலைக் கல்வி
தமிழ் மொழி ஊடான கணினிக் கல்வி
தமிழில் சுயகற்றலுக்கான பல்லூடக குறுவட்டுக்கள்
கணினி வழி பரீட்சைக்கான குறுவட்டுக்கள்
சிறுவர்களுக்கான கதைகள் பாட்டுக்கள்
இணையம், மின்னஞ்சல் - பயன்பாடும் பாவனையும்
கணினி வன்பொருள் - ஒரு தெளிவான விளக்கம்
கணினி வலையமைப்பு - ஓர் பார்வை
மின் இதழ்கள் - குடாநாட்டிற்குள் சாத்தியப்படுமா?
கணினிச் சஞ்சிகைகள், புத்தகங்கள்
மென்பொருள் குறுவட்டுக்கள்
கணினி மூலம் ஜாதகம் - பரீச்சித்துப் பாருங்கள்
அபாக்கஸ் - முதலாவது கணினி பார்வைக்கு
தேடலுக்கான கணினிப் பரீட்சை

## கற்றலுக்கான பல்லூடக குறுவட்டுக்கள்

MS Word, MS Excel, MS PowerPoint, MS Access, Internet &e m@il, PageMaker, PhotoShop, CorelDraw, PhotoDraw, Advance PhotoShop, Computer Hardware, MS FrontPage, DreamWeaver, 3D Studio MAX, ASP, JSP, Flash, Visual Basic, JAVA, Windows Basics, Oracel, MAYA, HTML, Software Collections, Thamizha, Thirukkural

275, Jaffna Road, Manipay. T.P : 0777 740 413

## உங்களுக்கு ஒரு சவால்

கண்காட்சி அரங்கில் ஒவ்வொரு மணிநேரமும் கேட்கப்படும்கேள்விகளுக்கு சரியான விடை தெரிந்தவர்களுக்கு உடனடி பரிசு

கம்ப்யூட்டர் ருடே இப்பொழுது 48 பக்கங்களுடன்
பழைய புத்தகங்களும் விஷேட விலைக்கழிவில் பெற்றுக்கொள்ளலாம்.

## விஷேட கருத்தரங்கு

09-04-2005 சனி காலை 10.00 மணி
Internet &e m@il
09-04-2005 சனி மாலை 03.00 மணி
Net Working
10-04-2005 ஞாயிறு காலை 10.00 மணி
MultiMedia

சான்றிதழ்கள் வழங்கப்படும்

கருத்தரங்கிற்கான பதிவுகள் நிலவு.com, FOCUS மற்றும் கண்காட்சி மண்டபத்திலும் மேற்கொள்ளப்படும்

ஊடக அனுசரணை: உதயன்

# தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை மீறுவதில் ஆசிய நாட்டுத் தலைவர்கள் சகலரும் ஒரே மாதிரியானவரே!



மு.திருநாவுக்கரசு

**ஈழத்தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் இப்போது மிக முக்கியமான கட்டத்துக்கு வந்திருக்கிறது. ஆயிரத்துத் தொளாயிரத்து ஐம்பதுகளில் இருந்து தமிழர்கள் தமது உரிமைகளைப் பெறுவதற்குச் சமஷ்டி முறையை ஒரு உகந்த தீர்வாகக் கருதினர். அதற்காகப் பல அகிம்சைப் போராட்டங்களை நடத்தினர். ஆனால், ஒற்றையாட்சி என்ற வட்டத்துக்கு வெளியே வருவதற்குச் சிங்கள அரசியல் தலைவர்கள் மறுத்தனர். அதனால், தமிழர்களின் விடுதலைப் போராட்டம், ஆயுதப் போராட்டமாக உருவெடுத்தது. இப்போது அவர்கள் பலமான நிலைக்கு வந்துவிட்ட கட்டத்தில், சமஷ்டி ஆட்சி முறையைக் கொண்டுவருவது குறித்துச் சற்றுச் சாதகமாகச் சிந்திக்கத் தொடங்கியுள்ளனர் தெற்கின் தலைவர்கள்.**

**எனினும், சிங்கள பௌத்த பேரினவாதமோ அதனை எதிர்க்கிறது. ஒற்றையாட்சிக்கும் ஒருமைப்பாட்டுக்கும் வித்தியாசம் காணக்கூடாது என்று கண்ணைக் கட்டிக்கொண்டு கண்டிக்கிறது; எதிர்க்கிறது.**

**இதேவேளை, தமிழ் மக்களோ, பிரிந்து செல்வதற்கான சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டை முன் வைக்கும் அரசியல் விழிப்புணர்வையும் வளர்ச்சியையும் முதிர்ச்சியையும் அடைந்துள்ளனர்.**

**அது குறித்துத் தமிழ் மக்கள் அனைவரும் தெரிந்துகொள்ளவேண்டும். சுயநிர்ணய உரிமை குறித்த பூரண அறிவைப் பெறவேண்டும்; விளங்கிக்கொள்ளவேண்டும் என்ற நோக்குடன் -**

**சிறந்த அரசறிவியலாளரும் அரசியல் ஆய்வாளருமான 'திரு மாஸ்டர்' எனச் செல்லமாக அறியப்படும் மு.திருநாவுக்கரசு எழுதிய 'சமஷ்டியா தனிநாடா' என்ற நூலின் மூன்றாவது அத்தியாயமான 'பிரிந்து செல்வதற்கான சுயநிர்ணய உரிமையும் அதன் வரலாற்று நடைமுறையும்' என்ற பகுதி தொடர் சிறப்புக் கட்டுரையாக உதயனில் வெளியாகி வருகிறது.**

**இவ்வாரம் அதன் ஆறாவது பகுதியை வாசியுங்கள்**

## பிரிந்து செல்வதற்கான சுயநிர்ணய உரிமையும் அதன் வரலாற்று நடைமுறையும்

தொடர் சிறப்புக் கட்டுரை 6

தென்னிந்தியாவில் சுயமரியாதை இயக்கப் பின்னணியில் இதற்கான சிந்தனை ஓட்டங்கள் இருந்த போதிலும், அவை அத்திசை நோக்கிய வளர்ச்சியை எட்டமுடியவில்லை. காலனித்துவ எதிர்ப்புக்கு அப்பால் முஸ்லிம் எதிர்ப்பு, இந்தோ. - பாக். பகைமை, இந்தோ - சீன பிரச்சினைகள் என்பனவெல்லாம் இணைந்து மேற்படி வகையான இந்திய தேசியத்தைத் தகவமைக்க உதவின. இந்திய தேசியத்திற்கு இவ்வாறு ஓர் எதிர்நிலை யதார்த்தம் வரலாறு பூராவும் அவசியப்பட்டுள்ளது.

இந்தியத் தேசியத்திற்குள் ஆரிய சமாஜம், பிரம சமாஜம், பூதான இயக்கம் போன்ற பல சீர்திருத்த இயக்கங்களும் சாதி, சமத்துவம், பெண்ணுரிமை, எழுத்தறிவு இயக்கம் போன்ற சீர்திருத்தக் கருத்துக்களும் இருந்த போதிலும், இவை அடிப்படையில் காலனித்துவத்தை எதிர்ப்பதற்குத் தேவையான ஒரு வகை ஒட்டுவேலைச் சமரசங்களே தவிர தேசிய சமூக நிர்மாணிப்புக்களல்ல. அத்துடன் இவற்றில் பெரிதும் பாதகமான அம்சங்களும் இருந்தன. இவை ஒடுக்கப்படும் சாதி, சமய இனம் சார்ந்தோரது உரிமைகளையும், சுரண்டப்படுவோரது நலன்களையும் ஒடுக்குவோரதும் சுரணடுவோரதும் தயவு, தாட்சண்யம், இரக்கம் என்பவற்றில் தங்கிநிற்க வேண்டியவைகளாக்கின. காலனித்துவத்திற்கு எதிரான அகிம்சைப் போராட்டங்களை இந்திய தேசியப் போராட்டம் பெரிதும் முன்வைத்தது. ஆனால், ஒடுக்கப்படும், சுரண்டப்படும் மக்கள் சம்பந்தமாக அத்தகைய அகிம்சைப் போராட்டங்களை அது முன்வைக்காமல் ஒடுக்குவோரதும், சுரண்டுவோரதும் தயவைக் கோரிநிற்குமாறு செய்தது. "ஹரிசனங்கள்" என்ற நாம கரணமும், பூதான இயக்கம் என்ற பெயரும் இவற்றை விளங்க மிகவும் போதுமானவை. இவை ஒடுக்கப்படுவோரிற்கு நிமிர்வையும், போர்க்குணத்தையும், முனைப்பையும் கொடுக்கத் தவறின.

### தேசியத் தன்மையை கொள்கையாகக் கொண்டது சுயமரியாதை இயக்கம் மட்டுமே

நில உடைமையாளர்களிடமிருந்து நில மற்றோர் நிலங்களைத் தானமாகப் பெறுதல் என்பதே இதன் தத்துவம். புண்ணியவான் பாவிகளுக்கு நிலத்தைத் 'தானமாகக்' கொடுப்பதை இது மதரீதியிற் குறித்து நிற்கின்றது. இது கூனிக்குறுகுதலையும் கையேந்தலையும் போதிக்கின்றது.

தென்னாசியப் பிராந்தியத்தில் எழுந்த எந்தவொரு பிரிவினரது தேசியவாதத்திற்குள்ளும் விதிவிலக்கின்றி இனக்குழு உணர்வே மேலோங்கியிருந்தது. ஆனால், அதிக தேசிய தன்மையைக் கொள்கையளவில் கொண்டதாக அமைந்திருந்தது. ஈ.வெ.ரா.வினது சுயமரியாதை இயக்கந்தான். பின்பு அதன் வழிவந்த பல இயக்கங்களும் இத்தகைய நிலைக்குரியவையல்ல.

சுயமரியாதை இயக்கத்திடம் மட்டுந்தான் தேசியத்திற்கு உரியதான சமூகக் கண்ணோட்டம் இருந்தது. அடிம[illegible]த்திலிருந்து அது தேசிய இயக்கம் பற்றிச் சிந்தித்தது. காலகதியில் அது தூர்ந்தும் நலமிழந்தும் போ[illegible]ன் அப்பாசறையில் உதித்தோரே கால கதியில் அதற்கான நோய்க்கூறாயும் மாறினர். பிரிந்து செல்லும் சுயநிர்ணய உரிமைக்கான திராவிட நாட்டுப் போராட்டம் இந்தோ. - சீன. யுத்தத்தின் பின்னணியில் முற்றிலும் கைவிடப்பட்டது. முஸ்லிம்களுக்கு வெளியே இந்துக்கள் மத்தியில் எழுந்த பிரிந்து செல்வதற்கான முதலாவது போராட்டம் இதுவாகும்.

இதன் பின்பு குறிப்பிடக்கூடியது பிரிந்து செல்வதற்கான சீக்கியரின் காலிஸ்தான் போராட்டம். காலிஸ்தானின் கடற் தொடர்பற்ற புவியியல் அமைவிடம் (Land-Locked) அதன் தனிநாட்டுப் போராட்டத்திற்குப் பெரும் தடைக்கல்லாய் அமைந்தது. அது பாகிஸ்தானையோ அன்றி இந்தியாவையோ ஒட்டித்தான் வாழ வேண்டிய நிர்ப்பந்தம் உண்டு. இப்பின்னணியில் இந்து இந்தியாவிற்கும் இஸ்லாமியப் பாகிஸ்தானுக்கும் இடையிலான சீக்கியரின் முரண்பாட்டில் இந்துக்களை விடவும் இஸ்லாமியர் தமக்கு அதிகம் ஆபத்தானவர்கள் என்ற சீக்கியரின் வரலாற்றுரீதியான பயம் அவர்களின் பிரிந்து செல்வதற்கான உணர்வை அதிகம் பின் தள்ளியது.

பிரிட்டிஷ்காரர் தமது நோக்கு நிலையிலிருந்து 1935ஆம் ஆண்டு பர்மாவை இந்தியாவிலிருந்து பிரித்தனர். பௌத் தம் என்ற மதவேறுபாடு இங்கிருந்ததை அவ தானிக்கலாம். பின்பு மத அடிப்படையில் பாகிஸ்தான் 1947ஆம் ஆண்டு பிரிந்தது. இந்த வரிசையில், மத அடிப்படையிலான சீக்கியரின் போராட்டமும் எழுந்தது. இந்துக்களுடனான மதப் பிரச்சினை சீக்கியரின் போராட்டத்தைத் தூண்டிய போதிலும் அதன் பலவீனமான புவியியற் பின்னணியில் இஸ்லாமியருடனான அதன் மதப் பிரச்சினை அவர்களின் போராட்ட உணர்வைத் தடுத்தது.

சுதந்திரத்தின் பின் இந்திய மண்ணில் தனிநாட்டுப் போராட்டங்கள் மூச்சற்றுப் போயின. உள்நாட்டுக் காரணிகள் மட்டுமன்றி இதற்குப் பல வெளிநாட்டுக் காரணிகளும் இருந்தன. உலகளவில் சோஷலிச சித்தாந்தந்தான் பிரிந்து செல்வதற்கான சுயநிர்ணய உரிமையை அதிகம் முன்னிறுத்தியது. ஆனால், இரண்டாம் உலக யுத்த காலத்திலும் அதன் பின்பும் சோஷலிச அரசு பிறள்வடைந்து அதுவே சுயநிர்ணய உரிமையை மீறும் சக்தியாக மாறும் பின்னணியில் உலகளாவிய பின்தள்ளல் இக்கோட்பாட்டிற்கு ஏற்பட்டது. இப்பின்னணியில் இந்தியாவிற்குள்ளும் இக்கோட்பாடு நலிவடைந்தது. தேசியம், தேசிய சுயநிர்ணய உரிமை என்பன பற்றிய சிந்தனைப் பிரச்சினை இந்தியாவிற்குள் மட்டுமன்றி முழு ஆசியாக் கண்டத்திலுமே உண்டு. அந்த வகையில் கண்டரீதியான சிந்தனை, நடைமுறைத் தாக்கமும் இதிற தனது பங்கைச் செலுத்தியுள்ளது. பொதுவாக ஆசியாக் கண்டம் முழுவதிலும் அதன் தேசிய வாதத்தில் இனக்குழுவாத முனைப்பு அல்லது மன்னராட்சிக் கலாசார முனைப்பு மற்றும் ஜனநாயக விரோதப் பண்புகள் என்பன அதிகம் செல்வாக்குச் செலுத்துகின்றன. ஆசிய தேசிய வாதம் பற்றிய லெனினினது அச்சம் ஒன்று இங்கு கவனிக்கத்தக்கது. "...... ஐரோப்பாவைப் போலவே சுதந்திரமான தேசிய இன அரசுகளின் ஓர் அமைப்பாக வளர்வதற்குரிய கால அவகாசம் ஆசியாவிற்குக் கிடைக்குமா இல்லையா என்பதை நம்மால் கூறமுடியாது."

காலனித்துவத்தின் வருகையைத் தொடர்ந்து காலனி ஆதிக்கமே கண்ணுக்குத் தெரிந்த முதன்மையான எதிரி என்பதால் அதனை முன்னிறுதத் அகரீதியான தேசியப் பண்புகளைப் புறந்தள்ளி அல்லது உள்ளூரக் காணப்பட்ட தேசியத்திற்கு முரணான அம்சங்களை ஒரு பொய்ச் சமரசத்திற்கு உள்ளாக்கி ஒரு போலித் தேசியம் முன்வைக்கப்பட்டது. யாந்திரீகமாகத் தேசியத்தைப் பார்க்காமல் சமூகப் பண்பியலாகத் தேசியத்தைப் பார்க்கவேண்டும். வெறுமனே ஏகாதிபத்திய எதிர்ப்பு, தொலைத் தொடர்பு, வீதிப்போக்குவரத்துப் போன்ற அடிக்கட்டுமானங்களுக்குள்ளால் மட்டும் அல்லது அவற்றை முதன்மைப்படுத்தி மட்டும் தேசியத்தைப் பார்க்க முடியாது. வாழ்நிலையில் ஒரு சமூகமானது தேசியத் தன்மை பெற்றுள்ளதா, சமூகரீதியில் தேசிய சமத்துவமும், உரிமைகளும் நிலவுகின்றனவா என்ற நிலையிலிருந்து பார்க்க வேண்டும். ஏனெனில், தேசிய சமூக அமைப்பிற்தான் எல்லாவித வளர்ச்சிக்குமான விரிந்த முன்னிலைத தளம் இருக்கின்றது. தேசியம் தான் சமூகரீதியாகவும் வாழ்நிலை ரீதியாகவும் வளர்ச்சிக்குக் குந்தகமாய் உள்ள தடைகளை உடைத்து அனைத்து மனிதர்களும் தம்திறனுக்கும் விருப்பத்திற்கும் ஏற்ப செயற்படுவதற்குரிய சமூக வாழ்நிலைப் பிற்புலத்தை உருவாக்குகின்றது. தேசிய விருத்தியை ஒரு சமூகம் அடையாத நிலையில் மொத்தச் சமூக வளர்ச்சிக்கான தடைகள் அங்கு மலிந்திருக்கும். இத்தகைய தேசிய வளர்ச்சியின்மையும் தடைகளும் அந்நியரின் தலையீடுகளுக்கும் செல்வாக்கு வளர்ச்சிக்கும் வழிவாய்க்கால்களாய் அமைந்துவிடுகின்றன.

### றஷ்யப் புரட்சிக்கு முன்னரே சோஷலிஸத்துடன் தேசியவாதம் குறித்துக் கூறியவர் சுன்-யாட்-சென்

ஆசியாவில் இந்தியாவிற்கு அடுத்து சீனா பற்றிய தேசிய மதிப்பீடும் இங்கு அவசியமானது. 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் டொக்டர் சுன்.யாட்.சென் சீன தேசிய வாதத்திற்குத் தலைமை தாங்கத் தொடங்கினார். டொக்டர் சுன்.யாட்.சென் ஆசியாவில் எழுந்த கேள்விக்கிடமற்ற சிறந்ததோர் தலைவன். ஒரு வைத்தியராகத் தன் வாழ்வை ஆரம்பித்த சுன்-யாட்-சென், காயப்பட்ட போராளிகளுக்கு வைத்தியம் செய்கையில் தன்னையும் ஒரு போராளியாக மாற்றிக்கொண்டார். அதன் பாதையில் அவர் தலைவரானார். இவர் அன்பும், மனிதநேயமும், மக்கள் மீது மாசற்ற அக்கறையும் பற்றும் கொண்டவர். சீனா உடைந்திடக் கூடாது என்பதற்காக யுத்தப் பிரபு யுவான் - ஷி-கை என்பவரிடம் தன் பதவியை 1911 ஆம் ஆண்டு விட்டுக்கொடுத்தவர். றஷ்யப புரட்சிக்கு முன்னரே தேசியவாதம் பற்றிச் சிறந்ததோர் கண்ணோட்டத்தை சோஷலிச எணணங்களுடன் கலந்து வடிவமைத்தார். இதன் பொருட்டு "மக்களின் மூன்று கோட்பாடுகள்" என்றதோர் கொள்கையை முன்வைத்தார். தேசிய வாதம், ஜனநாயகம், வாழ்வாதாரம் (சோஷலிசம்) என்பனவே அம்மூன்று கோட்பாடுகளாகும். (Three Principles of the people nationalism, democracy and livelihood (Socialism) சுன்- யாட்-சென் ஏகாதிபத்தியத்தையும், மன்னராதிக்கத்தையும், சீனப் பிரபுக்களாதிக்கத்தையும் ஒரே வேளையில் எதிர்த்து சீன தேசிய அரசை அமைக்கப் போராடினார். சீன தேசியவாதத்தில் முழுநிறைவான ஜனநாயகத்தை உருவாக்க செயல்பூர்வமான திட்டங்களை முன்வைத்தார். நடைமுறையில் அவர் தன்னை ஒரு சிறந்த ஜனநாயக வாதியாக முன்நிறுத்தினார். மக்களின் அடிப்படை வாழ்வாதாரத்திற்கு அரசு வகை செய்ய வேண்டும் என்ற கருத்திற் பற்றுறுதியுடன் செயற்பட்டார். அவரது வாழ்வாதாரக் கோட்பாடானது கணிசமானளவு சோஷலிச நலன்களை நினைவூட்டவல்லதாய் இருந்தது.

சுன்- யாட்-சென் தலைசிறந்த ஒரு தேசியக் சிந்தனையாளனாயும் அதனைச் செயற்படுத்தவல்ல தலைவனாயும் இருந்தார். இவரது வாழ்க்கைக் காலத்தில் உலகெங்கும் காணப்பட்ட தேசிய சிந்தனைகளுள் ஒப்பீட்டு ரீதியில் அனைத்தையும்விடத் தலைசிறந்த தேசியவாதப் போராட்டமாக சுன்- யாட்-சென் தலைமையிலான போராட்டமே இருந்தது.

சீனாவில் தேசியம் ஸ்தாபிதமடைய முன்பே சுன்-யாட்-சென் காலமானார். அவரின் பின் பதவிக்குவந்த சியாங்- கை-செக் அனைத்தையுமே பலியிட்டார். சுன்-யாட்-சென் தேடிவைத்தவற்றைப் பலியிட்டது மட்டுமன்றி பல்லாயிரக் கணக்கான ஆண்டுகால சீனப் பேரரசுக் கலாசார சகதிக்குள் சீன மக்களைத் தள்ளிவிடுவதும் சாத்தியப்பட்டது. மா-ஓ-சே-துங் ஏகாதிபத்தியத்தை மிகச் சிறப்பாக எதிர்த்தாரேயாயினும் பாட்டாளி வர்க்க சர்வதிகாரம் என்ற பெயருக்குள் சமூக ரீதியாக மன்னராட்சிக் கலாசார ஏதேச்சாதி காரம் அங்கு உயிர்வாழ முடிந்தது.

மன்னராட்சிகளும், ஏதேச்சாதிகாரங்களும் தேசியத்தின் எதிரிகள். தேசியத்திற்குள் தலையாய கோரிக்கைகளாக அமைபவை ஏகாதிபத்தியம், மன்னராதிக்கம், ஏதேச்சாதிகாரம் என்பன வீழவேண்டும் என்பது தான்.

தேசியத்திற்கு முன் நிபந்தனை ஜனநாயகம். சோஷலிசத்திற்கு அந்த ஜனநாயகமே முன் நிபந்தனையாகும். அதாவது ஜனநாயகம் இல்லையேல் தேசியமுமில்லை, சோஷலிசமுமில்லை. மா.சே.துங்காலத்தில் சீனா அதன் பழைய பேரரசு நிலப் பரப்பிற்கு உரிமை கோரி திபெத்துக்குள் படையெடுத்ததைத் தவிர வேறு தேசங்களை ஆக்கிரமித்து ஆதிக்கம் புரியாத நாடு. 1949 ஆம் ஆண்டுச் சீனப்புரட்சியின் வெற்றியை நினைவு கூரும் வகையில் 1950 ஆம் ஆண்டு சீன இராணுவம் திபெத்தை ஆக்கிரமித்தது. அதை இந்தியப் பிரதமராய் இருந்த நேரு கைதட்டி வரவேற்றார். இந்தியாவில் எழக்கூடிய தேசிய இன எழுச்சிகளை அச்சுறுத்துவதற்கு நேரு அதனைத் தான் செய்யவேண்டியிருந்தது. ஆசிய நாடுகளின் தலைவர்கள் எல்லோரும் தேசிய இனங்களை விழுங்குவதில் அல்லது தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை மீறுவதில் ஒரேமாதிரியே இருந்தார்கள். உலகிலுள்ள அனைத்து இனப்பண்பாட்டுப் பிரிவுகளிலிருந்தும் தெளிவாகப் பிரித்துப் பார்க்கப்படத்தக்க தனி விஷேட இனப்பண்பாட்டு அடையாளத்தைக் கொண்டவர்கள் திபெத்தியர். ஹீனயானம், மகாயானம், வஜ்ரயானம் ஆகிய மூன்று பௌத்தப் பிரிவுகளில் திபெத்தியர் மூன்றாவது பிரிவைச் சேர்ந்தவர்கள். உலகிலேயே வஜ்ராயனத்தைப் பின்பற்றும் ஒரேயொரு இனம் திபெத்தியர்தான்.

### சீனாவின் பாத்திரத்தின் பொருட்டு திபெத்திய விவகாரத்தில் இந்தியா நழுவியது

திபெத் ஒரு கடல்வழித் தொடர்பற்ற பிரதேசம் (Land Locked) என்ற வகையில் அதற்கு ஓர் இயல்பான பலவீனமுண்டு. திபெத்தைப் பிரித்தானியா, சீனா, இந்தியா ஆகிய அரசுகள் தத்தம் பாதுகாப்பு நோக்கு நிலையிலிருந்தே அணுகின. காலத்திற்குக் காலம் இவ்வரசுகளின் பாதுகாப்பு வியூகத்துக்குள் திபெத்தின் தேசிய இன நலன்கள் நசிந்து போயின. சீன வரலாற்றிலும், உலக வரலாற்றிலும் மாஓ-சே-துங்கிற்கு தனிச் சிறப்பான இடம் இருப்பதை மறுக்க முடியாது. அதேவேளை, திபெத்திய இனத்தின் மீதான ஒடுக்குமுறையையும் நியாயப்படுத்த முடியாது. பழைய பேரரசக் கண்ணோட்டத்திலிருந்து கொண்டு பேரரசு நிலப்பரப்பிற்கு உரிமை கோருவது, நிலமானிய கலாசாரத்தை மாற்றவும நவீனமயப்படுத்தவும் வேண்டுமென்று கூறிப் படையெடுப்பது, பாதுகாப்புக் காரணத்தைக் காட்டி ஓரினத்தை ஒடுக்குவது என்பன எப்போதும் உலகளாவிய ரீதியில் பிழையான முன்னுதாரணங்களுக்கே வழிவகுக்கும்.

## ஈ.வெ.ராவின் சுயமரியாதை இயக்கப் பாசறையில் உதித்தவர்களே அதற்கான நோய்க் கூறாகவும் மாறினர்

ஆரம்பத்தில் தனது உள்நாட்டுத் தேசிய இனங்களின் பிரச்சினை என்ற கண்ணோட்டத்தில் நின்றுகொண்டு திபெத்தின் மீதான சீனப் படையெடுப்பை நேரு ஆதரித்தார். பின்பு அவரது தேசிய பாதுகாப்பு ஆலோசகர்களின் வற்புறுத்தலின் பேரில் நேரு திபெத்தியரை ஆதரிப்பவராய் மாறினார். சீன கொம்யூனிச எதிர்ப்பு நிலைப்பாட்டில் நின்றுகொண்டு

மேற்குலகமும் இந்தியாவும் திபெத்திற்கு ஆதரவளித்தன. ஆனால், உலகரங்கில் தவிர்க்கப்படமுடியாத சீனாவின் பாத்திரத்தின் பொருட்டும், சீனாவுடனான தமது நலன்களின் பொருட்டும் மேற்குலக நாடுகளும் இந்தியாவும் திபெத்திய விவகாரத்தில் நழுவத் தொடங்கின.

அடுத்து கவனத்திற்கு உரியது மத்திய கிழக்கு என அழைக்கப்படும் மேற்காசியா. இப்பிரதேசத்தில் வாழும் அரபு - இஸ்லாமிய மக்கள் 22 அரசுகளாகத் துண்டுபட்டுள்ளனர். இவர்கள் தொடர்ச்சியான நிலப்பரப்பைக் கொண்டுள்ளனர். ஒரே மொழியைப் பேசுகின்றனர். ஒரே பத்திரிகையை வாசிக்கின்றனர். ஒரே வானொலியைக் கேட்கின்றனர். ஒரே இஸ்லாத்தைப் பின்பற்றுகின்றனர். ஆனாலும், உடைந்து பல்வேறு சிறு சிறு அரசுகளாய் உள்ளனர். எவ்வளவுதான் நவீன சாதனங்களும், போக்குவரத்துக்களும், நவீன வசதிகளும் இவர்களிடம் இருந்தபோதிலும், இவர்கள் அனைவருக்கும் எதிரான ஒரு பொது எதிரியாகிய ஏகாதிபத்தியம் இருந்தபோதிலும், இவர்கள் அனைவரையும் பாதிக்கவல்ல அரபு - இஸ்ரேலியப் பிரச்சினை இருந்தபோதிலும் இவர்கள் அனைவராலும் இணைந்து ஒரு பொதுத்தேசிய இனமாகவும் தேசிய இன அரசாகவும் எழமுடியவில்லை. அரபுக் கலாசாரத்திலிருக்கும் இனக்குழுவாதப் பண்பே இங்கு அதிகம் கோலோச்சுகிறது.

(வளரும்)

## PRINCIPAL REQUIRED
## CHANDRAN INTERNATIONAL SCHOOL

Applications are invited from those with qualification and experience for the Post of Principal for our Chandran International School (English Medium) at Kilinochchi.

Initial Salary would be Rs.15,000.00 per month. This Figure shall be negotiable based on experience and qualification.


Please send Applictions to reach us **on or before 27.04.05**

**To:**

**The Director,**
**CHANDRAN INTERNATIONAL SCHOOL,**
**KILINOCHCHI.**

(21-14-26) (C/41928)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



### அமரர் முருகேசு நமசிவாயம்

**தோற்றம்** 1912~07~05 **மறைவு** 2004~03~15

எம்மை விட்டுப் பிரிந்து ஓராண்டு ஆகின்றது
உம்மைநினைத்து எம் உள்ளம் ஏங்குகின்றது
தினம் தினம் உம்மை எண்ணித் தவிக்கின்றோம்.
*உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்*

சுதுமலை மேற்கு,
மானிப்பாய். (43640)(46-26-14) **- குடும்பத்தினர்.**

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மாநிட சமூகத்தில் 29 10 1941



இறைவனின் சமூகத்தில் 02 03 2005

### எலிசபேத் அமிர்தரட்ணதேவி இராசரத்தினம் (சின்னா ரீச்சர்)

சின்னா எனச் செல்லமாய் நாமழைத்த
எம்மாவி நிகர் அருமை அக்காவே – அன்னையெனச்
சொன்னாலும் கூடுமோ? சோகமது தீருமோ?
மின்னே நீவீர் எமக்கு இழைத்த பணி.

மண்ணில் நாம் நலம் வாழ
வளமான நல்வாழ்வு எமக்கமைய,
எண்ணில் பணிகள் ஏற்றமுறப் புரிந்தீர்
ஏணிப்படியாய் எமக்கமைந்தீர்
பண்ணில் நும் புகழ் பாடும்
பாவியர் நுமைப் பிரிந்து பரிதவித்தோம்
விண்ணரசு உமக்கு இனிதே விளங்க(மேவ)
வேதனையிலும் ஆண்டவரைப் பிரார்த்திக்கின்றோம்.

அண்மையில் எங்களை விட்டுப்பிரிந்த எமது அருமைச் சகோதரி அமிர்தரட்ணதேவி இராசரட்ணம் அவர்களின் மரணச்சடங்கில் கலந்துகொண்டும், ஆறுதல் அளித்தும், அனுதாபச் செய்திகள் அனுப்பியும், மலர் வளையங்கள் வைத்தும், தொலைபேசியில் தொடர்புகொண்டும் இன்னும் பல வழிகளிலும் பங்களிப்புச் செய்த அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அருள்வாசா,பேக்கரி லேன்,
உடுப்பிட்டி.
(43715) (54-15-17)

திரு.திருமதி இரத்தினசபாபதி, மில்கா, கொட்வின் (ஜீவா குடும்பம்),
திரு.திருமதி மகாரட்ணம் (சுட்டி குடும்பம்),
திரு.திருமதி முத்துரட்னானந்தன், நிரேஷ்,
திரு.திருமதி ஜோசப் (துங்கா குடும்பம்).


புத்தாண்டை முன்னிட்டு
FedEx Express
வழங்கும் விசேட சலுகை
ஐரோப்பிய நாடுகளுக்கான 1Kg பொதிகளுக்கு 675/= மட்டுமே
தொடர்புகளுக்கும், மேலதிக விபரங்களுக்கும்
திருமுருகன் கொம்நெற்
259,கே.கே.எஸ் றோட், யாழ்ப்பாணம். (Opposite All Ceylon Distributors) Tel - 021 222 7835 Fax - 021 222 7836
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி,யாழ்ப்பாணம் (பலநோக்கு கூ.ச.முன்பாக) Tel - 021 222 7560 Fax - 021 222 7310
வெளிநாட்டு தொலைபேசி அழைப்புகளுக்கு 6/=
ஐக்கிய அரபு இராச்சிய நாடுகளுக்கு 25/= முதல் 40/=
இந்தியாவுக்கு 25/=
இச்சலுகை 2005.04.20 வரை மட்டுமே
எமது நிறுவனத்துக்கு வேறு கிளைகள் இல்லை


## வேலையாள்கள் தேவை

ஹைற்றோலிக் பிறஸ் மெசினில் வேலை செய்வுதற்கு வேலையாள்கள் தேவை. பயிலுநருக்கு N.A.B. ஊடாகப் பயிற்சி வழங்கப்படும் (முன் அனுபவம் உள்ளவர்களும் சேர்த்துக்கொள்ளப்படுவர்).
நேரில் வரவும்.

சந்திக்கும் நேரம்:
9.00 மணி தொடக்கம் 5.00 மணி வரை
**செல்வா ஹாட்வெயர்ஸ்**
120, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(சி-41478)

## விபத்தில் பெண் படுகாயம்!

யாழ்ப்பாணம்,ஏப்.3

யாழ்.ஐந்துசந்திப் பகுதியில் வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்ற விபத்துச் சம்பவமொன்றில் பெண்ணொருவர் படுகாயமடைந்தார்.

வேகமாய் வந்த ஓட்டோவும் மோட்டார் சைக்கிளும் விபத்து ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கு எத்தனித்தவேளையே, வீதியை விட்டு விலகிய ஓட்டோ மின்கம்பத்தின் மீதும், மோட்டார் சைக்கிள் வீதியில் வந்த பெண்மீதும் மோதி விபத்துக்குள்ளாகின எனத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவத்தில் கொட்டடிப் பகுதியைச் சேர்ந்த வீரசிங்கம் மேரிஜெசிந்தா (வயது 51) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

இவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

உடனடியாகச் சம்பவ இடத்திற்கு வந்த யாழ்.பொலீஸார், சேதமடைந்த நிலையில் காணப்பட்ட ஓட்டோவையும் மோட்டார் சைக்கிளையும் விசாரணையின் பொருட்டுப் பொலீஸ் நிலையத்துக்கு எடுத்துச் சென்றனர்.

(8-12)

## 31 ஆம் நாள் நினைவலைகள்

அன்னை மடியில் 10 - 02 - 1950



இறைவன் அடியில் 04 - 03 - 2005

### அமரர் S.K.சிவபாலன்

- இசைப்பேராசிரியர் -
*(அண்ணாமலைப் பல்கலைக்கழகம்–சிதம்பரம்)*

எங்கள் குடும்பத் தலைவரும் தியாக தீபமாக விளங்கிய
எங்கள் அன்புச் சகோதரனும் அருமை மைத்துனரும்
ஆசை மாமாவும் ஆகிய அன்புத் தெய்வமே!
நீங்கள் மறைந்து மாதம் ஒன்று ஆனால் என்ன எத்தனை
வருடங்கள்தான் ஆனாலும் எம்மால் மறக்கவே முடியாது!

பட்டங்கள் 29 பெற்றும் அறிவு நூல்கள் 7 வெளியிட்டும் பண்ணிசைப் பாமாலை, திருவாசகத்தேன் எனும் இரு ஒலிப்பேழைகளை வெளியிட்டும் புகழ்பெற்ற உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

*ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!*

இன்று (03.04.2005) ஞாயிறு முற்பகல் 11 மணியளவில் அன்னாரது ''கமலவாசா'' சித்தன்கேணி இல்லத்தில் நடைபெறுகின்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் பங்குகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

''கமலவாசா'',
பாடசாலை ஒழுங்கை, சித்தன்கேணி. (43607)(32-14-26) – **குடும்பத்தினர்.**



G.C.E. O/L படித்த மாணவர்களுக்கு இதோ ஓர் அரிய சந்தர்ப்பம்

3C, 3S or 3B, 3C தகமையுடன் வெளிநாட்டில் உயர்கல்வி.

UK, USA, Canada, Singapore, Cyprus, Malasia, Australia, New Zealand, Rusian போன்ற நாடுகளில் மேற்படிப்பைத் தொடர்வதற்கு University, College அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுத்தருகிறது.

அதுமட்டுமல்லாது Rusian University களில் நீங்கள் M.B.B.S முடிப்பதற்கான முழுவருட அனுமதிக்கட்டணம் 2500$ (1 year)

மலேசியாவின் Tafe College மிகப்பெரிய Technical கல்லூரி ஆகும். Automotive Enginerring, Multimedia Computing, Computer & Network Technology, Software Engineering Technology, Business Accounting, Finance, Business Management போன்ற பெரிய அளவிலான படிப்பை குறைந்த செலவில் படிப்பதற்கு சலுகைகளைப் பெற்றுத்தருகிறது.

April, May, June மாதங்களுக்கான பதிவுகள் இப்போது நடைபெறுகின்றன.

இலகுவான தங்குமிட வசதிக்கட்டணம்
பகுதிநேர வேலைவாய்ப்பு (Part Time Jobs)




Courses Available
- Computing
- Business Management
- Engineering & Mathematical Sciences
- Art
- Business Studies
- Law
- Urban Planning
- Social Sciences
- Architecture & Construction
- Education & Training
- Humanities
- Sciences
- Commercial Management
- Tourism Management
- Research Degree MA/MPHIL/PHD
- MBA
- MSC & MA
- Bachelor of Business Administration
- BSc. (Hons.)
- BA
- E-Business
- Biotechnology
- Microbiology
- Software Engineering
- Information Technology
- Computer Administration
- Medichine
- Economics
- Hotel Management
- Accounting
- Marketing Management
- Travel & Tourism

Picasso

SKY LINE TRAVELS & SERVICES
PROFESSIONAL OVERSEAS EDUCATIONAL CONSLTANTS
No. 253- 1/2, Galle Road, Wellawatte, Sri Lanka. Tel: 0115512484, 0115511927
E-mail: Mohamedhaniffa_riyas@yahoo.co.uk


## வீட்டுக்கிருத்திய அழைப்பு



அமரர்
### சுப்பிரமணியம் சிவராஜா
(பிரபல வாகனத் தரகர்)

**பிறப்பு** 22-08-1940
**இறப்பு** 19-02-2005

அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை (04.04.2005) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளன. அந்நிகழ்விலும் தொடர்ந்து இடம்பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் பங்குகொண்டு அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

☞ இந்த அழைப்பையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகைதருமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**அன்புடன் மனைவி, மக்கள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

டச்சு வீதி,
சாவகச்சேரி. (C/41962)(50-14-26)

# வடக்கு, கிழக்கிற்குப் பொதுவான கலைகளை இணைத்து ஈழத்தமிழருக்கான தேசியக் கலைகளை உருவாக்கலாம்



**பேராசிரியர் சி.மௌனகுரு கிழக்குப் பல்கலைக்கழகத்தின் நுண்கலைத்துறைத் தலைவராகப் பணிபுரிகிறார். யாழ்ப்பாணத்தில் பாடசாலை ஆசிரியராகவும் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளராகவும் பல்கலைக்கழக ஆசிரியராகவும் பணிபுரிந்தவர். இவர், ஆசிரியர் மட்டுமல்லர். எழுத்தாளர், நடிகர், நெறியாளர், ஆய்வாளர், திறனாய்வாளர் என்று பன்முகங்களைக் கொண்டவர்.**

**மூன்று மாதங்களுக்கு முன் எமது மக்களில் பெரும் எண்ணிக்கையானோரை நிர்க்கதிக்கு ஆளாக்கிய 'சுனாமி' எனப்படும் கடற்கோளினால் தாக்கப்பட்டவர்.**

**பேராசிரியர் துலங்கும் அகன்ற துறைகள் குறித்தும் அவற்றில் அவர் பெற்ற அனுபவங்கள் குறித்தும் உதயனுக்கு வழங்கிய சிறப்புச் செவ்வியின் முதலாவது பகுதி கடந்த 27.03.2005 ஆம் திகதிய உதயனில் வெளியாகி இருந்தது. இரண்டாவது பகுதியை இன்று வாசியுங்கள்.**

★ *கேள்வி:* கூத்தரங்கிலும் சிறுவர் அரங்கிலும் தீவிர செயற்பாட்டாளனாக இருக்கின்ற நீங்கள் இன்றைய ஈழத்துத் தமிழ் நாடக அரங்கப் போக்குகள் பற்றி என்ன சொல்கிறீர்கள்?

❑ *பதில்:* நீங்கள் மேலே குறிப்பிட்ட மூவகை அரங்குகளும் வெவ்வேறு வகைகளில் வளர்ந்து வருவது இன்றைய ஈழத்துத் தமிழ் நாடக அரங்கப் போக்கு எனலாம்.

**கூத்தரங்கில்** - அதனை ஈழத்துத் தமிழரின அடையாளமாக்கும் முயற்சிகள், அதனை ஒரு செவ்வியல் அரங்காக்கும் முயற்சிகள், அதனை ஒரு சமூகச் செயற்பாட்டு அரங்காக்கும் முயற்சிகள் என்பன மேற்கொள்ளப்படுகின்றன. இவை இன்றைய கூத்தரங்கப்போக்குகள்.

**சிறுவர் அரங்கு** - சிறுவர்களின் உளவளத்தினை மேலும் வளர்ச்சியுறப் பண்ணும் வகையிலும் சமகாலப் பிரச்சினைகளைப் புரிந்து அவற்றுக்கு முகம்கொடுக்கும் வகையிலும் செயற்படும் வகையிலும் வளர்ச்சியுறுகிறது.

**நவீன அரங்கு** - நியம அரங்கு, அரசியல் அரங்கு, பிரயோக அரங்கு, தெருவெளி அரங்கு, ஊர்வல அரங்கு, சூழ் அரங்கு, மறைந்துநிற்கும் அரங்கு, நோய் தீர் அரங்கு, ஆற்றுப்படை அரங்கு எனப் பல பெயர்களில் நடைபெறுகிறது.

மக்கள் பிரச்சினைகளை மக்களுக்கு உணர்த்தும் பெரிய காரியத்தை நவீன அரங்கு ஆற்றுகிறது.

★ *கேள்வி:* இவற்றில் ஈடுபடுபவர்கள் பற்றியும் இவ்வரங்கு பற்றியும் உங்கள் அபிப்பிராயம் என்ன?

❑ *பதில்:* பலர் ஈடுபடுகிறார்கள். எனக்குத் தெரியவந்ததை மாத்திரமே நான் இங்கு குறிப்பிடுகிறேன். யாழ்ப்பாணத்தில் நாடக அரங்கக் கல்லூரி (சண்முகலிங்கம்) அரங்கச் செயற்பாட்டுக்குழு - TAG (சிதம்பரநாதன்; விந்தன்), செயற்திறன் அரங்க இயக்கம் (ATM) (தேவானந்த), திருமறைக் கலாமன்றம் (மரியசேவியர் அடிகளார்), சுன்னாகம் அவைக்காற்றுக் கலைக் கழகம் (அரிச்சந்திரன்), தெஸ்பியன் கலைக் கழகம் (கந்தவேள்), பாரம்பரிய கலை மேம்பாட்டுக் கழகம் (மெற்றாஸ் மெயில்), குயில்கள் (கோகிலா மகேந்திரன்), கலைபண்பாட்டுக் கழகம் (கனகரத்தினம்).

வன்னிப் பெருநிலப்பரப்பில் கலைக்கல்லூரி (பாலசிங்கம், புதுவை அன்பன்), நுண்கலைக் கல்லூரி, கவின்கலை மன்றம் (கண்ணதாசன்), பேபி ஆசிரியை ஆற்றுபடை அரங்கக் குழு (விந்தன்).

கிழக்கு மாகாணத்தில் கிழக்குப் பல்கலைக் கழக நுண்கலைத்துறை (மௌனகுரு, பாலசுகுமார், ஜெயசங்கர்), கூத்துக்களரி (பாலசுகுமார்), மூன்றாவது கண் (ஜெயசங்கர்), சூரியா பெண்கள் இயக்கம் என்பன பிரபல்யமானவை.

வடபுலம், வன்னி, கிழக்கு மாகாணம் தவிர திருமலை, கொழும்பு, மன்னார், மலைநாடு போன்ற பல இடங்களிலும் இஸ்லாமியர் மத்தியிலும் பல நாடகக் கழகங்கள் உள்ளன.

யாழ்பபாணத்தில் அண்மையில் தேவானந்தின் கண்ணிவெடி சம்பந்தமான நாடகம் பார்க்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. நல்ல தயாரிப்பு. வன்னி நிலப்பரப்பில் மக்கள் பிரச்சினைகளை மக்களுக்கு உணர்த்தவும், விடுதலை வேட்கையூட்டவும் அரங்கு பல வழிகளில் பாவிக்கப்படுவதாக அறிகிறேன். அவற்றைப் பார்க்கும் வாய்ப்புக் கிட்டவில்லை. எனவே, அபிப்பிராயம கூற முடியவில்லை. பத்திரிகைகள் மூலம் அவை தாக்கமானதாக உள்ளன என அறியமுடிகிறது.

காலத்துக்குக் காலம் அரங்கின் வடிவமும் அரங்கக் கோட்பாடுகளும் மாறிக் கொண்டிருக்கின்றன. உலகில் ஏற்படும் மாற்றங்கள் இங்கும் நிகழ்கின்றன. நாடகம் ஒரு கலை என்ற வகையில் முதலில் அதற்கெனச் சில அடிப்படை விதிகள், அழகியல்கள், தன்மைகள், விழுமியங்கள் என்பன உண்டு. இவற்றை உள்வாங்கிய நிலையில் இந்நவீன அரங்குகள் அமையின் அவை சிறப்பாக இருக்கும்.

## நெருங்கிய உறவுக்கு உதவ வல்லது இது

ஒவ்வொரு பிரதேசத்திலும் பல்வேறு வகையான அரங்கக் குழுக்கள் செயற்படுகின்றன. இவற்றினிடையே ஒற்றுமையும், புரிந்துணர்வும் அவசியம். 'நாடகம்' என்ற அடிப்படையில் இவை ஒன்றிணைவதும் பெரு நாடக விழாக்கள் நடத்துவதும் பயன்தரு முயற்சி என்று கருதுகிறேன். சிங்கள மக்களிடமும் நாடக மன்றங்கள் உள்ளன.

அவற்றுள் பல, மக்கள் பிரச்சினைகளை மக்களுக்கு உணர்த்துவன. அக்குழுக்களுடனும் தொடர்புகள் மேற்கொள்ளப்படவேண்டும். நாடக உறவு குறுகிய வட்டங்களைத் தாண்டியதாக - சாதி, மத, பிரதேச, இன வட்டங்களைத் தாண்டியதாக - சர்வதேச வியாபகமாக அமையவேண்டும். நாடகக் கலையின் நோக்கமும் அதுவே.

★ *கேள்வி:* ஈழத்துத் தமிழ் அரங்க வளர்ச்சிக்கு அவசியமாகத் தேவைப்படுபவைகள் எவை என்று கருதுகிறீர்கள்?

❑ *பதில்:* ஈழத்துத் தமிழ் அரங்க வளர்ச்சிக்கு அவசியமாகத் தேவைப்படுபவை மூன்று,

**1. திறன் வாய்ந்த கலைஞர், 2. திறன் வாய்ந்த நெறியாளர், 3. திறன் வாய்ந்த விமர்சகர்.**

திறன் என்பது அறிமுறையிலும் (Theory) செய்முறையிலும் (Practical) திறன் பெற்றிருப்பதாகும்.

திறன்வாய்ந்த கலைஞர்கள் நடிப்பில் குரலை உணர்வு பூர்வமாக வெளிப்படுத்துவதில், உடல் அசைவில், கற்பனையாற்றலில் முறையான-நிறைந்த - பயிற்சியும் நாடக அறிவும் பெற்றவர்களாயிருத்தல் வேண்டும்.

நடிகர்கள் மாத்திரம் நாடகக் கலைஞர்கள் அல்லர். அதில் பங்குகொள்ளும் அரங்க விதானிப்பாளர், அரங்க இசை அமைப்பாளர், நடன அமைப்பாளர், ஒப்பனையாளர், ஒலி, ஒளி அமைப்பாளர் அனைவரும் தத்தம் துறைகளிற் திறமையான பயிற்சி பெற்றவர்களாயிருத்தல் வேண்டும். அத்தோடு, இத்துறைசார் வரலாறு, அத்துறைசார் சாதனையாளர் பற்றிய அறிவும் பெற்றிருத்தல் வேண்டும்.

நாடக நெறியாளர் நாடக அறிவும் ஆளுமையும் பெற்றவர்களாயிருக்கவேண்டும். நாடகம் பறறிய ஆழமான அறிவும் நெறியாளுகை பற்றிய விசேட பயிற்சியும் இவர்களுக்கு அவசியம். நாடகத்தின் பல துறைகளில் (நடிப்பு, அரங்க விதானிப்பு, இசை, நடனம்) பொதுவான அறிவும் இவர்களுக்கு மிக அவசியம். உலகத்தின் சிறந்த நாடக நெறியாளர்கள் பற்றிய அறிவுடன் அத்தகையோரின் நாடகத்தில் நூல் மூலமோ, ஒளிப்பதிவு நாடாவிலோ பார்த்திருத்தல் வேண்டும்.

**நாடக விமர்சகர்கள் எம்மிடையே இல்லை**

எம்மிடம் நாடக விமர்சகர்கள் இல்லை. நாடகம் நல்லது, கூடாது அல்லது சுமார் என்று அபிப்பிராயங்கள் கூறுபவர்கள் மாத்திரமே உள்ளனர். அபிப்பிராயம் அகவயமானது. அபிப்பிராயம் விமர்சனம் ஆகாது. விமர்சனம் புறவயமானது. விமர்சனத்திற்கு நாடகம் பற்றிய பல்வேறு அம்சங்களிலும் புலமை வேண்டும். நாடகக்காரனை வழிநடத்தும் ஆற்றலும் அறிவும் ஆளுமையும் நாடக விமர்சகனுக்கு அவசியம்.

இத்தனைக்கும் மேலால் நமது நாடகக் கலைஞர்களுக்குத் தேவையானவை ஏனைய பிற துறைகள் பற்றிய பரந்த அறிவு நமது பலம், பலவீனம் பற்றிய சுய மதிப்பீடு, இதற்கும் மேல் தேவை, அர்ப்பணிப்பு, அர்ப்பணிப்பு, அர்ப்பணிப்பு அதற்கும் மேல் தேவை. உழைப்பு, உழைப்பு, உழைப்பு.

★ *கேள்வி:* வடக்கு - கிழக்குப் பற்றி இன்று பலரும் பேசிக்கொள்கிறார்கள். ஒரு புலமையாளன் என்ற வகையில் இதுபற்றி உங்கள் உணர்வலைகள் என்ன?

❑ *பதில்:* நான் கிழக்கிலே பிறந்தவன் எனக்கு இப்போது 61 வயது. கிழக்கில் 35 வருடங்கள் வாழ்ந்திருக்கின்றேன். வடக்கில் 17 வருடங்கள் வாழ்ந்திருக்கிறேன். இரண்டு பிரதேசப் பண்பாடுகளையும் வாழ்க்கை முறைகளையும் நான் அறிவேன். என் மனைவியின் பூர்வீகம் யாழ்ப்பாணம். என் மகன் வடக்கிலேதான் மணம் புரிந்துள்ளான. வடக்கிற்கெனச் சில பண்பாட்டுத் தனித்துவங்கள் உள்ளன. கிழக்கிற்கெனச் சில பண்பாட்டுத் தனித்துவங்கள் உள்ளன. வடக்கிலே இறந்தோரை எரிப்பர். கிழக்கிலே இறந்தோரைப் பெரும்பாலும் புதைப்பர். வடக்கிலே கறியோடு தயிர் கலந்து சாப்பிடுவர். கிழக்கிலே சோற்றோடு தயிரும், தேனும் கலந்து சாப்பிடுவர். வடக்கிலே ஆகம முறையில் பிராமணர் பூசை செய்யும் இந்து மரபு பெரும்பான்மை, கிழக்கிலே ஆகம முறை சாரா பத்தாசி (பத்ததி) முறையில் பூசாரிமார் பூசை பண்ணும் இந்து மரபு பெரும்பான்மை. மேளம், பரதம், நாதசுரம், கர்நாடக சங்கீதம் என்பன வடக்கில் பிரதானம் பெறுகையில் உடுக்கு, மத்தளம், பறை, சொர்ணாளி, சவணிக்கை, கூத்து, சிலம்பு என்பன கிழக்கில் பிரதானம் பெறுகின்றன. சமூக அமைப்பு, சாதி முறைகளிலும் இரு பிரதேசங்களிலும் வேறுபாடுண்டு.

கிழக்கிலே காணப்படும் இவையெல்லாம ஒரு காலத்தில் வடக்கிலும் இருந்தன. ஆனைகோட்டை அகழ்வாராய்ச்சியில் புராதன தமிழ் மக்கள் இறந்தோர் உடலைப் புதைத்துள்ளதாக அறிகிறோம். உடுக்கும், பறையும், மத்தளமும் கூத்தும் வடக்கிலே முன்பு பெரிதளவில் இருந்தமைக்குச் சான்றுகளுண்டு, வடக்கு பழைமையிலிருந்து வேகமாக மாறிவிட்டது. புராதன பண்பாடுகளைக் கிழக்கு இன்றும் பேணுகிறது. பிற கலாசாரத்தாக்கம் இன்னும் அங்கு அதிகம் ஏற்படாமையே அதற்குக் காரணம்.

இரு பிரதேசங்களிலும் காணப்படும் பண்பாடுகள் ஒரு நாணயத்தின் இருபக்கங்கள் ஒரு பக்கம் மாத்திரம் நாணயமாகிவிடாது. இரண்டு பக்கங்களும் மிக அவசியம். ஒரு பண்பாட்டை மற்றைய பண்பாடு ஏற்கவும் மதிக்கவும் கற்றுக்கொள்ள வேண்டும். இரு பரதேசப் பண்பாடுகள் பற்றிய ஆழமான ஆய்வுகள் அவசியம். இதுவரை அவை ஆய்வு செய்யபடவில்லை. பிரதேச ஆய்வுகள் செய்வோரை பிரதேசவாதிகள் என முத்திரை குத்தும் புலமை வழமைதான் நம்மத்தியில் நிலவுகின்றது. வித்தியாசங்களை ஏற்றுக்கொள்ளவும். ஒற்றுமைகளை இனங்கண்டு இணைத்து, உறுதிப்படுத்தவுமான புரிந்துணர்வு - மனப்பாங்கு இரு பிரதேசங்களின் இளந்தலைமுறையினருக்கு நாம் கற்றுத்தர வேண்டும்.

**ஈழத்து தமிழ் இன்னிய அணி**

★ *கேள்வி:* வடக்கிற்கும் கிழக்கிற்கும் இடையில் நெருங்கிய உறவை வலுப்படுத்த கலைகள் உதவுமென்று நீங்கள் குறிப்பிடுவதை விவரியுங்கள்?

❑ *பதில்:* நான் முன்னரேயே குறிப்பிட்டேன் ஒற்றுமைகளை இணைத்தல் என்று இங்குதான் கலை முக்கிய இடம்பெறுகின்றது. வட பகுதி இழந்துவிட்ட கூத்து, மத்தளம், உடுக்கு, சலணிக்கை போன்றன கிழக்கில் இன்றும் வழக்கிலுள்ளன.

சிறு தெய்வக்கோயிற் சடங்குப் பாடல்கள், கும்மி, வசந்தன், கரகம், காவடி என்பன இரண்டு பிரதேசங்களுக்கும் பொதுவானவை. இவைகளை மையமாக வைத்து ஈழத்துத் தமிழருககான தேசிய நாடகம், நடனம், இசை என பனவற்றை உருவாக்கவேண்டும்.

இம்முறையில் எமது பல்கலைக்கழக நுண்கலைத்துறை பிரக்ஞை பூர்வமாகச் செயற்படுகின்றது. ஈழத்தமிழருக்கு உரித்தானதும் கிழக்கில பயில நிலையிலுள்ளதுமான பறை, தப்படடை, மத்தளம், உடுக்கு, சலணிக்கை, சல்லாரி, சதங்கை, சிலம்பு, றபாணம், சங்கு, சேகண்டி, எக்காளம் என்பவற்றையம் வடக்கில் வழங்கும் நாதசுரம், மேளம் என்பனவற்றையும் கொண்டு நாம் எமது பல்கலைக்கழகத்தில் நீண்ட ஆராய்ச்சியின் பின் ஈழத்து தமிழ் இன்னிய அணியை (Elathu Tamil Band) உருவாக்கியுள்ளோம். 35 பேர் பங்குகொள்ளும் இவ்வணியில் பங்குகொள்வோர் வாத்தியங்களை இசைத்துக்கொண்டும் கூத்து ஆட்டங்களை ஆடிக்கொண்டும் செல்வார்கள். இங்குதான் கலை இரு பிரதேசங்களையும் இணைக்க உதவுகிறது. இந்த இன்னிய அணி எமது நாடக விழாக்களுக்குப் பாவிக்கப்பட்டது. இம்முறை முதற் தடவையாகப் பட்டமளிப்பு விழாவுக்குப் பயன்படுத்தப்படுகிறது. ஈழத்தமிழர் இன்னிய அணி (Tamil Band) பல்கலைக்கழக அங்கீகாரம் பெறுவது மிக முக்கிய நிகழ்வு.

## சுனாமியின் போது மரணத்தை எதிர்கொள்ள ஆயத்தமாகி மீண்டும் வாழ வந்த சந்தர்ப்பம் விநோதம்

**மூன்றாவது கடல்கோள்**

★ *கேள்வி:* அண்மையில் சுனாமிப் பேரலை கிழக்குப் பிரதேசத்தை அழித்திருக்கிறது. இதில் நீங்கள் நேரடியாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றீர்கள். உங்கள் அனுபவத்தை 'உதயன்' வாசகருடன் பகிர்ந்துகொள்ளுங்களேன்.

❑ *பதில்:* எங்கள் வீட்டின் முற்றத்தில் நின்று பார்த்தால் ஏரி, ஆறு, நாவலடித்தீவு, அப்பால் கடல் எல்லாம் தெரியும். வீட்டின் முன் பரந்த வெட்டைவெளி, ஆற்றோரம் அமைந்த மாடி வீடு அது.

26 ஆம் திகதி காலை முன்பு கேட்டறியாச் சத்தங்கள் எழ, வெளியில் வந்துபார்த்தேன். நாகபடம் வானை நிறைத்து எழுவதுபோல நாவலடித் தீவைத் தாண்டி ஆற்றுக்குள் பேரலைகள் விழுவதையும் ஆறு நிரம்பி எம்வீட்டை நோக்கி அலைகள் விரைந்து வருவதையும் கண்டேன். எனக்குத் தமிழகத்தை அழித்த கடல்கோள்தான் ஞாபகத்திற்கு வந்தது. இது மூன்றாவது கடல்கோள். இலங்கையை அழிக்கப்போகின்றது என்று எண்ணியபடி மனைவியிடம் சித்திரா 'கடல் வருகிறது ஓடுங்கள், அல்லது மேலே ஏறுங்கள்' என்று கூறியபடி குசினிக்குள் சென்று அங்கிருந்த காலை உணவான உப்புமாவையும் தண்ணீர் ஜக்கையும் எடுத்தபடி மேலே சென்றேன். இரண்டு நாள்கள் மேலே இருக்கவேண்டி வருமோ என என் அடிமனம் எண்ணியிருக்கவேண்டும்.

சித்திரலேகா (எனது மனைவி) தன் 81 வயதுத் தாயாரையும் அழைத்தபடி என்னைப் பின் தொடர்ந்தார். மாடியில் நின்றபடி கீழே நடப்பது அனைத்தையும் பார்த்தோம். தண்ணீர்ப் பாம்புகள் பல வருவதுபோல பல பலவென வளவுக்குள் புகுந்தன. எமது கராஜ்ஜில் தண்ணீர் மோதியபோது கராஜ் கதவுகள் திறந்தன. கராஜ்ஜில் நின்ற எமது கார் தண்ணீரில் மிதந்தபடி றோட்டால் சென்றது. திடீரென கராஜ் இடிந்து விழுந்தது. படபடவென வீட்டு மதில்கள் உடைந்து தரையிற் சாய்ந்தன. கீழே நிறுத்திவைத்திருந்த TVS மோட்டார் சைக்கிள் மிதந்துசென்றது.

வீட்டின் முன் கதவைப் படாரென உடைத்தபடி தண்ணீர் வீட்டுக்குள் பாய்ந்தது. சுழன்று சுழன்று தண்ணீர் நாம் நிற்கும் இடத்தை நோக்கி உயர்ந்தது. கீழே இருந்த கதிரை, சோபா, அலுமாரி, புத்தகங்கள் எல்லாம் மிதக்கத் தொடங்கின. அனைத்தையும் பார்த்தபடி நானும் மனைவியும் செயலற்று நின்றோம்.

**செவ்விகண்டவர்: தே.தேவானந்த்**

*(14 ஆம் பக்கம் பார்க்க)*

# திருமணக் கார் (குளிரூட்டியது) வாடகைக்கு



★ திருமண வைபவங்கள் (அலங்காரத்துடன்)
★விசேட வைபவங்கள் ★ சுற்றுலாக்கள்

போன்ற அனைத்துச் சேவைகளுக்கும் புத்தம் புதிய (ஆங்கில இலக்கம் கொண்ட) குளிரூட்டிய நவீன கார் சாரதியுடன் நியாயமான செலவில் உயர்ந்த சேவையுடன் வாடகைக்குக் கிடைக்கும்.

T.P.: 077-3086939,
0777-246117,
(26-11-14) 077-6018467. (43613)

தொடர்பு: ரட்ணம்,
சோமசுந்தரம் பாலர் பாடசாலை,
22,சோமசுந்தரம் அவனியூ,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.



# தேவை

கொக்குவில் சந்தியில் இயங்கும் மூக்குக்கண்ணாடியகத்திற்கு ஓரளவு ஆங்கில அறிவுள்ள பெண் விற்பனையாளர் தேவை.

வயதெல்லை (25~35)

உங்கள் விண்ணப்பங்களைக் கீழ்க்காணும் முகவரிக்கு 10~04~2005 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கவும்.

முகாமையாளர்,
இல.91, கே.கே.எஸ். வீதி,
(43747)(26-11-14) கொக்குவில் சந்தி, கொக்குவில்.



# யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்

## பதவி வெற்றிடங்கள்

எமது சங்கத்தில் பின்வரும் நிரந்தரப் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பிக்கவிரும்புவோர், எமது சங்கத்தினால் வழங்கப்படும் விண்ணப்பப் படிவத்தை அலுவலக வேலைநாள்களில் பெற்றுப் பூர்த்திசெய்து 12.04.2005 ஆம் திகதி பி.ப.4.00 மணிக்கு முன்பு கிடைக்கத்தக்கதாக 'பொதுமுகாமையாளர், யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், கலாசாலை வீதி, திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்' என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ அனுப்பிவைத்தல் வேண்டும்.

1. எழுதுநர் (நிரந்தரம்) குறி/இல: 302/15 (31/99)
சம்பள அளவுத்திட்டம்: 3500-65X10-70X10-4850
2. விற்பனை உதவியாளர் (நிரந்தரம்) குறி/இல:308/15 (31/99)
சம்பள அளவுத்திட்டம்: 3500-65X10-70X10-4850
3. சாரதி (லொறி) (நிரந்தரம்) குறி/இல: 312/13 (31/99)
சம்பள அளவுத்திட்டம்: 4000-75X10-80X10-5550
4. தொழிலாளர் (நிரந்தரம்) குறி/இல: 318/17 (31/99)
சம்பள அளவுத்திட்டம்: 3000-55X10-60X10-4150

மேலதிக விவரங்களையும் விண்ணப்பப் படிவத்தினையும் சங்கப் பிரதம அலுவலகத்தில் ரூபா 10/- செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

பொது முகாமையாளர்,
(சி.41955)(42-11-14-26) யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து).



உ



# சண்டிலிப்பாய் அருள்மிகு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் தேவஸ்தானம்

## பார்த்திப வருஷ மஹோற்சவப் பெருவிழா - 2005

14-04-2005 வியாழக்கிழமை பகல் 11.00 மணிக்குக் கொடியேற்றம்
18-04-2005 திங்கட்கிழமை மாலை கப்பல் திருவிழா
20-04-2005 புதன்கிழமை மாலை 3.00 மணிக்கு
விஸ்வப்பிரம்மஸ்ரீ பாலச்சந்திரன் அவர்களின் கைவண்ணத்தில் உருவான முருகப்பெருமானுக்குரிய தேர் வெள்ளோட்டம்
23-04-2005 சனிக்கிழமை இரவு சப்பரத் திருவிழா
24-04-2005 ஞாயிற்றுக்கிழமை பகல் 10.00 மணிக்குத் தேர்த்திருவிழா
25-04-2005 திங்கட்கிழமை பகல் 10.00 மணிக்குத் தீர்த்தோற்சவம்
சாயரட்சையுடன் கொடியிறக்கம்
27-04-2005 புதன்கிழமை வசந்தோற்சவம்
29-04-2005 வெள்ளிக்கிழமை வைரவ பொங்கல்

மஹோற்சவ காலத்தில் தினமும் மாலை 5.30 மணி முதல் 6.30 மணி வரை தெய்வீகச் சொற்பொழிவு இடம்பெறும்.

விழா நாள்களில் தினமும் பகல் அன்னதானம் வழங்கப்படும்.

ஆலய அன்னதானத்துக்கு நிதியுதவிபுரிய விரும்புவோர் தமது காணிக்கையை ஆலய அன்னதானச் சபையினரிடம் செலுத்திப் பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளவும்.

☞ தற்காலிகக் கடைகள் 06-04-2005 புதன்கிழமை ஏலத்தில் விடப்படும். அன்றையதினமே கடை அமைப்போர் முழுப்பணத்தையும் செலுத்திப் பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளவும்.

அடியார்கள் வந்து அம்பிகையைத் தரிசித்து அருள்பெற்றுய்யுமாறு அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

(43759)(26-11-14) - தர்மகர்த்தா சபையினர்.


# இராமநாதபுரம் சனசமூக நிலையத் திறப்பு விழா

கிளிநொச்சி, இராமநாதபுரம் கலைச்சுடர் சனசமூக நிலையப் புதிய கட்டடத் திறப்பு விழா நாளை திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

சனசமூக நிலையத் தலைவர் சு.ரவீந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் ந.இரவிராஜும் சிறப்பு விருந்தினர்களாக கரைச்சிப் பிரதேச செயலர் க.சுலோஜினி, பிரதேச சபை விசேட ஆணையாளர் பொன்.நித்தியானந்தன், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் த.உஷா ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக வட்டக்கச்சிப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் சுடர், சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் இளமுருகன் ஆகியோரும் கலந்துகொள்வர். (8-405-202)

# இடர் முகாமைத்துவம் தொடர்பான பயிற்சி நெறி

யாழ்.மாவட்டத்திலுள்ள கிராம சேவையாளர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் மற்றும் வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு இடர் முகாமைத்துவம் தொடர்பான பயிற்சிநெறி இடம்பெற்று வருகின்றது.

இரண்டாவது தொகுதியினருக்கான பயிற்சி நாளை திங்கட்கிழமை தொடக்கம் 3 நாள்களுக்கும் மூன்றாவது தொகுதியினருக்கான பயிற்சி எதிர்வரும் 7ஆம் திகதி தொடக்கம் 3 நாள்களுக்கும் யாழ்.செயலகத்தில் நடைபெறவுள்ளது. 18 தொகுதிகளாக நடத்தப்படவுள்ள இப்பயிற்சி நெறியில் முதல் தொகுதியினருக்கான பயிற்சி கடந்த 30 ஆம் திகதி நடைபெற்றது. (8-73-202)

# இலவசச் சீருடைகள் பற்றிய விவரங்களை அனுப்பப் பணிப்பு

வலிகாமம் தெற்கு,ஏப்.3

வலிகாமம் கல்வி வலயத்தில் உள்ள பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு 2006ஆம் ஆண்டுக்கு வழங்கப்படுவதற்குத் தேவையான இலவசச் சீருடைகள் பற்றிய விவரங்களை இம்மாதம் 5ஆம் திகதிக்கு முன்னர் வலிகாமம் கல்வி வலயத்துக்கு அனுப்பிவைக்குமாறு திட்டமிடல் உதவிக் கல்விப் பணிப்பாளர் க.சந்திரபாலன் பாடசாலை அதிபர்களுக்கு அறிவித்துள்ளார். (8-152)

# நிரந்தர வீடமைப்புக்கான அடிக்கல் நாட்டல்

மட்டக்களப்பு மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிரந்தர வீடமைப்புத் திட்டத்தின் ஆரம்ப நடவடிக்கையாக முதலாவது நிரந்தர வீட்டிற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் கடந்த மாதம் 21 ஆம் திகதி திராய் மடுக்கிராமத்தில் இடம்பெற்றது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் மட்டக்களப்பு மாவட்டக் கிளையால் முன்னெடுக்கப்படும் இந்த நிரந்தர வீட்டுத்திட்டத்தின் ஆரம்ப வைபவத்தில் அமைச்சர்களான அமீர் அலி, அதாவுட செனவிரட்ண மற்றும் மட்டக்களப்பு அரச அதிபர் சண்முகம், திராய் மடு பிரதேச செயலர், தமிழர் புனர்வாழ்வுக் கழக சுவிஸ் கிளைத் தொண்டர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (8)


## தனிப்பட்ட/குழு வகுப்புகள்

ANIMATIONS IN FLASH MX & SWISH
MS OFFICE, Photoshop, AutoCAD
3D VIEWS, PERSPECTIVE VIEWS
வீட்டுப் படங்களும் வரைந்து கொடுக்கப்படும்
15(47), யாழ்.வீதி, சிறாம்பியடி, யாழ்ப்பாணம். (43786)



# துயர் பகிர்கின்றோம்

எமது கல்லூரி ஆசிரியை
திருமதி கோகிலாதேவி தவராசா
அவர்களின் அன்புத் தாயார்

திருமதி
## சிவபாக்கியம் செல்வநாயகம்

அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அவர்தம் குடும்பத்தினருடன் துயர் பகிர்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்,
கொக்குவில் இந்துக்கல்லூரி. (சி-41974)



# கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியை
திருமதி கோ. தவராசா
அவர்களின் அன்புத் தாயார்

திருமதி
## சிவபாக்கியம் செல்வநாயகம்

அவர்கள் காலமான செய்திகேட்டு நாம் ஆழ்ந்த துயருறுகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்,
யா/கொக்குவில் இந்துக்கல்லூரி,
கொக்குவில்
(26-11-14) (சி-41973)



2005 புதிய பாடத்திட்டத்திற்கு அமைவான

# வரலாறு தரம் 7

ஆக்கம்:
திரு.ம.சிவரூபன் B.A. (HONS)
(வரலாற்றுத்துறை ஆசிரியர்)

வெளியீடு:
ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை,
235, காங்கேசன்துறை வீதி,
(சி-41959)(26-11-14) யாழ்ப்பாணம்.



# மனோதத்துவ வைத்தியம் (GENERAL PSYCHO THERAPY)

இப்பொழுது யாழ்ப்பாணத்தில்

05-04-2005 - 10-04-2005

முன்கூட்டியே பதிவுசெய்யவும்

இளைஞர்களே!
☆ சக்தி குறைவு ☆ ஞாபக மறதி ☆ பயம் ☆ நடுக்கம்
☆ நித்திரைக் குறைவு ☆ ஆண்மைக் குறைவு ☆ நீரிழிவு நோய்
என்பவற்றால் தாழ்வு மனப்பான்மையா?

கவலையை விடுங்கள். ஆரம்ப மனநோய் பாதிப்பு உடனடியாக நீக்க என்னுடன் உடனடியாகத் தொடர்புகொள்ளுங்கள். ஆண்மைச் சக்திக் குறைவுதான் உங்கள் கவலையா? மனோதத்துவ வைத்தியத்தாலும் மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம். பலர் இங்கே சிகிச்சை பெற்றுப் பூரண சுகமடைந்தமைக்கு ஆதாரம் உண்டு.

குறிப்பு: இறுதி நேரத்தில் வருவதைத் தவிர்க்கவும்

தொடர்புகளுக்கு: பலரது பாராட்டைப் பெற்ற
பிரபல மனோதத்துவ நிபுணர்
Dr.P.ஆறுமுகம் S.M.P.
A.S.N. சுற்றுலா விடுதி,
392/A, மணிக்கூண்டு வீதி, யாழ்ப்பாணம்
(பெருமாள் கோயிலுக்கும் வெலிங்டன் சந்திக்குமிடையில்).
Govt. Regd. No. 9492
Hot Line: 0777 569205 T.P.: 3181, 5399
(முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும்)
(சி-41917) (26-11-14)



# செலிங்கோ இன்சூரன்ஸ் கம்பனி லிமிட்டெட் சுன்னாகம்

புதிதாக ஆரம்பிக்கப்பட்ட சுன்னாகக் கிளைக்கான விற்பனை ஆலோசகருக்கான

## பதவி வெற்றிடங்கள்

தகைமைகள்:
க.பொ.த.சாதாரண தரம்
க.பொ.த. உயர்தரம்

வயது: 18 இற்கு மேற்பட்டவர்கள்

விண்ணப்ப முடிவு திகதி: 11-04-2005

விண்ணப்பங்கள் வந்து சேரவேண்டிய முகவரி:

- முகாமையாளர்,
செலிங்கோ இன்சூரன்ஸ்
கம்பனி லிமிட்டெட் (ஆயுள்),
145, 146, K.K.S. வீதி,
சுன்னாகம்.
T.P.: 0773 - 107764.
(சி-41942) (26-11-14)



# பிள்ளையார் இன் A தரம் உல்லாசப் பயணிகள் தங்குமிடம்

## (PILLAYAR INN A GRADE HOTEL APPROVED By the Ceylon Tourist Board) GARDEN RESTAURANT

வெளிநாட்டினர், உள்நாட்டினர்களுக்கு ஏற்ற அனைத்து வசதிகளுடன் யாழ்.நகரில் உல்லாசப் பயணிகளுக்கு ஒரு சுகமான அனுபவம் புத்தாண்டை முன்னிட்டு காடின் றெஸ்ரோறன்ட் 01-04-2005 இலிருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்திய சமையல் வல்லுநரால் உணவுகள் வழங்கப்படும்.

16 குளிரூட்டப்பட்ட அறைகளுடன் இணைந்த குளியலறைகள் இலங்கை உல்லாசப் பிரயாண சபையால் யாழ்.மண்ணில் அங்கீகரிக்கப்பட்ட உணவகம் மற்றும் ஹோட்டல், 200பேர் வரை அமரக் கூடிய அனைத்து வைபவங்களுக்கும் ஏற்றவகையில் குளிரூட்டப்பட்ட மண்டபம், இருக்கை வசதிகளுடன் விசாலமான வாகனத் தரிப்பிடம் மற்றும் பொழுதுபோக்கு அம்சங்களுடன் கூடிய புல்வெளிகள், சுவையான உணவுவகைகள், தரமான சிறந்த கொக்ரெயில்ஸ் (COCKTAILS) விசேடமாகப் பிறக்கப்போகும் புத்தாண்டை முன்னிட்டு இன்று தொடக்கம் காடின் றெஸ்ரோறன்ட் காலை 9 மணி முதல் இரவு 12 மணி வரையும் திறந்திருக்கும். உங்களுக்குப் பிடித்தமான கொக்ரெயில்ஸ் (COCKTAILS) ஒபறோய் ஹோட்டலிலும் ஓமான் நாட்டுப்பாதுகாப்பு அமைச்சு மாலைதீவு உல்லாசப் பயண ஹோட்டலிலும் கடமையாற்றிய வல்லுநரால் வழங்கப்படும். (Manager Restaurant and Bar)

எமது அன்பான வாடிக்கையாளர்கள் ஒருமுறை விஜயம் செய்து எமது சேவைகளின் தரத்தை அறியலாம்.

இவைகளெல்லாவற்றிற்கும் நீங்கள் நாடவேண்டிய இடம்:

PILLAYAR INN
31, MANIPAY ROAD,
JAFFNA.
கொழும்பு:
G.2 - 10, Anderson Flats,
NARAHENPITA,
COLOMBO - 5. (43745)(26-11-14)

Tel. 021 - 222- 5595
Tel. 021 - 222 - 2829
Fax. 021 - 222 - 5595
Email Piyarinn @ Sltnet.lk
Website. www. pillaiyar inn. com
Tel. 011 - 4-517814
Mobile 0777- 758594.

# நெருக்கடி நிறைந்த காலத்தில் ஆற்றிய பணி பேராயர் ஜெபநேசனின் சேவையில் பெரும்பதிவு

**தென்னிந்தியத் திருச்சபையின் பேராயராகக் கடந்த 12ஆண்டுகள் இறைபணியாற்றி வந்த பேராயர் கலாநிதி சுப்பிரமணியம் ஜெபநேசன் கடந்த 28ஆம் திகதி தமது சேவையிலிருந்து ஓய்வுபெற்றுள்ளார்.**

**தமிழ்ப் பற்றும் ஆழ்ந்த தமிழ் மொழிப் புலமையும் நிறைந்த பேராயர் ஜெபநேசன் ஆற்றிய பணிகள் குறித்து விவரிக்கிறது இந்தக் கட்டுரை.**

தென் இந்தியத் திருச்சபை - யாழ். ஆதீனத்தில் கடந்த 12 ஆண்டுகளாகப் பணியாற்றிய பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசன் கடந்த மார்ச் மாதம் 28ஆம் நாள் தம் பதவியிலிருந்து ஓய்வுபெற்றார். 1947ஆம் ஆண்டு தென் இந்தியத் திருச்சபை உருவானது. இத திருச்சபையின் ஆதீனங்களில் ஒன்றான யாழ். ஆதீனம், கடந்த 57 ஆண்டுகளில் மூன்று பேராயர்களின் திருப்பணியைப் பெற்று, ஆன்மீக வாழ்வில் வளம்பெற்றுத் திகழ்ந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

அருட்கலாநிதி எஸ்.குலேந்திரன், அருட்கலாநிதி டி.ஜே.அம்பலவாணர் ஆகியோர் முதலிரண்டு பேராயர் ஆவர். இவர்கள் இறைபதம் அடைந்துவிட்டனர். மூன்றாவது பேராயரான அருட்கலாநிதி எஸ். ஜெபநேசன் தற்போது ஓய்வுபெற்றுள்ளார். அடுத்த ஐந்து மாதங்களுக்குள் நான்காவது பேராயர் தெரிவுசெய்யப்படுவார் என அறிகின்றோம்.

தற்போது ஓய்வுபெற்ற பேராயர் எஸ். ஜெபநேசன் யாழ். ஆதீனக் குருத்துவக் கல்லூரியின் அதிபராகத் தொடர்ந்து நான்கு ஆண்டுகள் பணியாற்றுவாரென அறிகின்றோம்.

### நெருக்கடி நிறைந்த காலத்தில் பேராயரின் சேவை

பேராயர் ஜெபநேசன் கடந்த 12ஆண்டுகளாக யாழ். ஆதீனத்தை நடத்திவந்த பாதை எப்போதும் ரோஜாமலர்ப் படுக்கையாக இருக்கவில்லை. இந்தப் பாதையில் ஷெல் வீச்சு - விமானக் குண்டு வீச்சு - தங்கள் சொந்த வீடுகளில் வாழமுடியாமல் அகதிமுகாம்களில் தத்தளிக்கும் தமிழ்மக்களின் அவலம் - கொள்ளை - வன்செயல் பிரச்சினைகள் - இடம்பெயர்வு என பற்பல துன்பங்கள் ஏற்பட்டன.

எனினும், இவற்றின் மத்தியில் தளராமல் - சோராமல் - நீபோகும் இடமெல்லாம் உன்னோடு இருப்பேன். நான் உன்னைக் கைவிடுவதுமில்லை. உன்னை விட்டுவிடுவதுமில்லை என்ற திருவாக்கை உறுதியாக நம்பி, தனது இலக்கை நோக்கிய பயணத்தை ஒருபோதும் தவறவிடாமல், இயேசுபிரானின் திருவடிகளைப் பின்பற்றி, உண்மையான சேவை நோக்கைக் கொண்டு திருப்பணியைத் தனது பொறுப்பிலுள்ள சபைகளும் நிறுவனங்களும் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் வளம்பெற்றுவாழ நற்பணியாற்ற வழிநடத்தினார்.

### கல்வியில் நிறைந்த ஆளுமை

பேராயர் உதித்த குடும்பம், குருத்துவக் குடும்பம் என்றே கூறலாம். அவரின் தகப்பனார் வண. எஸ்.என். சுப்பிரமணியம், தாயார் எலிஸ் கனகம்மா - சேவை மனப் பான்மை கொண்ட ஆசிரியை. அவரின் சகோ தரர் இருவர் - ஆஸ்திரேலியாவில் திருப்பணியாற்றி வருகின்றனர். இத்தகைய சிறந்த பின்னணியில் தோன்றிய பேராயர் ஜெபநேசன் கல்வித்துறையில் நாட்டம் கொண்டு, பட்டங்கள் பல பெற்றவர். யாழ். பல்கலைக் கழகத்தில் இவர் கலாநிதிப் பட்டமும் பெற்றுள்ளார்.

யாழ்ப்பாணக் கல்லூரியில் அதிபராகப் பணியாற்றியவேளை இவர் அங்கு சிறந்த சேவையாற்றியிருந்தார். இக்காலத்தில், இறைவன் தன்னைத் திருப்பணியாற்ற அழைக்கிறார் என்பதை உணர்ந்தவர். ஆண்டவரின் அன்புக்கரம் தன்மேல் வைக்கப்பட்டதென அனுபவித்தார். அதன் விளைவாக இறையியல் கற்று செரம்பூர் பல்கலைக்கழகத்தில் பி.டி. பட்டத்தைப் பெற்றார்.

பின்னர், யாழ். பல்கலைக்கழகத்தின் பேராயராக 1993இல் நியமிக்கப்பட்டார். 2005 ஆம் ஆண்டுவரை பேராயராக நற்பணியாற்றிய இவர், தமிழர் சமுதாயத்தைச் சீராக்கும் பணியில் திருச்சபைகள் ஈடுபடவேண்டுமென்ற குறிக்கோளுடன் இறுதிவரை அயராது உழைத்தார். பேராயராயிருந்த காலத்தில் இவர் எட்டு நூல்களை எழுதி வெளியிட்டார். சமயக் காழ்ப்புணர்வின்றி பிற சமயக் கொள்கைகளை நன்கு கற்றறிந்த ஆயர் ஜெபநேசன், அவர்களுடன் அன்புடன் உரையாடி தமது குருமாரையும் சமய உரையாடலில் ஈடுபட வழிநடத்தினார். திருமதி விமலா ஜெபநேசன் மேல்நாட்டு சங்கீதத் துறையில் சிறந்த பட்டங்கள் பெற்றவர். இவர் ஆதீன சபைகள் மேல்நாட்டு சங்கீதத் துறையில் மட்டுமல்ல, கர்நாடக இசைத் துறையிலும் ஈடுபட்டவர். சமய வழிபாட்டை இறைவனுக்குத் தகுந்த முறையில் நடத்தவேண்டும் என்ற உணர்வுடன் சபைப் பாடகர் குழுக்களை வழிநடத்தியதும் திருமதி விமலா ஜெபநேசன் ஆற்றிய பணிகளில் குறிப்பிடத்தக்கது.

### சுனாமி நிவாரணப் பணியில் பேராயர் ஜெபநேசன்

பேராயர் ஜெபநேசன் தமது பணிக்காலத்தில் போரின் விளைவால் பாழடைந்த தேவாலயங்களைப் புனரமைப்பதுடன், புதிய ஆலயங்களை ஒதுக்கப்பட்ட இடங்களிலும் நிர்மாணித்துள்ளார். மேலும், தமிழ் மக்கள் போரினாலும், சமீபத்தில் ஏற்பட்ட சுனாமிப் பேரழிவினாலும் அழிவுகளைச் சந்தித்தபோது ஏனைய மிஷன் சபைகளுடன் சேர்ந்து, மக்களின் துயர்துடைப்புப் பணியில், தமது குருமாருடனும் பொதுநிலையாளருடனும் சேர்ந்து ஈடுபட்டார்.

இலங்கை அரசு தமிழ் மக்களுக்கு அடிக்கடி செய்துவரும் அட்டூழியங்களையும் அடக்குமுறைகளையும் வெளிநாடுகளில் அம்பலப்படுத்துவதிலும் பேராயர் பின்னிற்கவில்லை. பேராயர் அஞ்சாமல் தமிழ் மக்களுக்காகக் குரல்கொடுத்து, தம்மால் இயன்றளவு தமிழ் மக்களின் மேம்பாட்டிற்காகத் தமது குருமாருடன் சேர்ந்து பணியாற்றியதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## தமிழருக்கு எதிரான அடக்குமுறைகளை உலகறியச் செய்ததில் பேராயருக்கும் பங்குண்டு

ஆதீன சபைகளின் ஆன்மீக வளர்ச்சியில் ஊக்கமாக ஈடுபட்ட பேராயர், சபைகளின் ஒருமைப்பாட்டிற்காகத் தம்மை அர்ப்பணித்துச் செயற்பட்டவர். இத்துறையில், நற்பணியாற்றும் மற்றைய சபைத் தலைவர்களுடனும் இவர் ஒத்துழைத்துச் செயற்பட்டு வந்தார். தகுதிவேறுபாடின்றி அனைவரையும் தகுந்த முறையில் அன்பினால் அரவணைத்து மகிழ்விக்கும் நற்பண்பு இவரிடம் நிறைந்திருந்தது. 'ஏழைமக்களின் சிரிப்பில் இயேசு பிரானைக் காண்கிறேன்' என்று கூறி, தமது குருமாரையும ஏழை மக்களுக்கு வேண்டிய பணியில் ஈடுபட வழிநடத்தியவர் பேராயர் ஜெபநேசன்.

காலம் விரைவாக மாறி வருகிறது. ஒரு புதிய காலச சூழலில் பணியாற்ற அழைக்கப படுபவர்களுக்கு பேராயர் முக்கிய ஆலோசனை ஒன்றைத் தெரிவித்துள்ளார். சமயம் என்பது ஒரு வாழ்க்கை முறை. அது அன்பில் முளை கொள்ளும் - அரவணைப்பில் வளரும - பிறர்துன்பம் துடைப்பதில் முன்னிற்கும்.



இதனைப் பலர் அறியா நிலையில் இருக்கின்றனர். அதனால், புறநிலையான சட்டங்களிலும், புரிந்துகொள்ள முடியாத தத்துவச் சிக்கல்களிலும் மட்டும் சமயம் பற்றிய தேடலை மேற்கொள்பவர்களாக நம் மத்தியில் பலர் உள்ளர்.

எனவே, இனிவரும் திருப்பணியர் சமயத்தை அதன் இயல்பான வடிவில் அன்பு - அரவணைப்பு - துன்பம் துடைக்குந் திருப்பணி ஆகிய வடிவங்களில் தரிசித்து, அதனை விளக்கி செயற்படுத்துபவாகளாகச் சமயத்தை நடைமுறைப்படுத்தவேண்டும். அத்துடன், இறையரசை இன்றைய சமுதாயத்தில் காட்டும் திருப்பணியில் அனைவரும் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும் என்பதே பேராயரின் ஆலோசனையாகும்.

கடந்த பன்னிரு ஆண்டுகளாக நம் மத்தியில் நற்பணியாற்றிய பேராயர் ஜெபநேசனும திருமதி விமலா ஜெபநேசனும் எல்லாம வல்ல இறைவன் நிறைவாக ஆசீர்வதிக்க வேண்டுமென இறைவனை இறைஞ்சுகிறோம்.

- அருளாளன் -

---

## மனித மேம்பாட்டுக்காக உழைப்போம்

### ஞாயிறு நற்பிரசாதம்

உயிர்ப்பு என்றொரு புதிய அத்தியாயம் எழுதப்படவேண்டுமெனில் அதன் பின்னணியில் இறப்பு என்னும் நிகழ்வு இருக்கவேண்டும். விதையானது தன்னை அழித்து உருமாற்றி பெருவிருட்சமாகத் தனது இருப்பை, உயிர்ப்பை உறுதிப்படுத்திக்கொள்கிறது. தியாகிகளின் இறப்பு விடுதலைக்கு உயிர்ப்பூட்டுகிறது. இது உலக நடைமுறை யதார்த்தமாகும்.

இயேசுவின் இறப்பு வித்தியாசமானதாகும். தனக்காக தற்பெருமை, புகழ், செல்வத்துக்காக வாழ்ந்து மடியும் சாதாரண மனித வாழ்வைப் போன்றதல்ல இயேசுவின் இறப்பு. சமுதாயத்திற்கும் முழு உலகிற்கும் புதிய விழிப்பை, உயிர்ப்பை, நம்பிக்கையைக் கொடுத்த இறப்பாகும்.

பாவிகளுக்கு மன்னிப்பு, ஒடுக்கப்பட்டோருக்கு உரிமைவாழ்வு, சிறைப்பட்டோருக்கு விடுதலை, பகைவருக்கு அன்பு, துன்புறுவோருக்கு ஆறுதல் இவற்றையே போதனையிலும், செயலிலும் நிருபித்தார். மனித மாண்பையும், மனித நேயத்தையும், முழுமனித விடுதலையையும் நிலைநிறுத்த சாவை வென்று உயிர்த்தெழுந்தார்.

உயிர்த்த இயேசுவின் உறுதியுடன் மனித விழுமியங்களுக்கும் மனித நேயத்திற்கும் எதிரான நடவடிக்கைகள் அனைத்தையும் அகற்றிவிடுவோம். உயிர்ப்புள்ள சிந்தனையும் செயற்பாடும் கொண்டு மனித மேம்பாட்டுக்காக உழைப்போம்.

இன்றைய காலகட்டத்தில் அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டு பல்வேறு உதவிகளை எதிர்பார்த்திருக்கும் நம் சகோதரர் மட்டில் அக்கறை கொள்வோம். எமக்குக் கிடைத்த சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி பிறரது வாழ்வுக்கு உயிர்ப்பூட்டுவோம்.

எஸ்.யேசுதாஸ்
கொழும்புத்துறை.

---

## பாப்பரசர் நலம்பெற வேண்டி உலகம் முழுவதும் பிரார்த்தனை



வத்திக்கான், ஏப்.3

மிகவும் கவலைக்கிடமான நிலையில் இருக்கும் பாப்பரசர் நலம் பெறுவதற்காக உலகம் முழுவதும் பிரார்த்தனைகள் நடைபெற்றுவருகின்றன.

அவரது தாய்நாடான போலந்தில் மக்கள் கண்ணீருடன் பிரார்த்தனையில் ஈடுபட்டு வருகின்றனர். இரவு முழுவதும் தேவாலயங்கள் திறந்திருந்தன. நாடெங்கும் லட்சக்கண்கான மக்கள் பிரார்த்தனையில் ஈடுபட்டுவருகின்றனர்.

"பாப்பரசர் அனுபவிக்கும் வேதனையை நினைத்து வருத்தப்படுகிறேன். அவர் இறந்து கொண்டிருக்கிறார் என்பதை மட்டும் நினைத்து நான் கவலைப்படவில்லை. அவருடைய இடத்தை வேறு எவராலும் நிரப்பமுடியாது என்பதால் மிகவும் துயரத்தில் ஆழ்ந்திருக்கின்றேன்" என்று பிரார்த்தனையில் ஈடுபட்ட மூதாட்டி ஒருவர் கூறினார்.

பிலிப்பைன்ஸ் நாட்டில் சிறப்புப் பிரார்த்தனைக் கூட்டங்கள் நடைபெற்றுவருகின்றன. நெருக்கடியான இந்த நேரத்தில் இறைவனின் வழிகாட்டுதலுக்காகவும் போதிய மனை வலிமையை அருளுமாறும் பிரார்த்தனை செய்கிறோம் என்று கார்டினஸ் ஜெய்ம் சின் தெரிவித்தார்.

மெக்சிகோவில் சிறப்பு பிரார்த்தனைக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அமெரிக்காவில் நியூயோர்க்கின் முக்கிய தேவாலயமான பற்றிக் தேவாலயத்தில் கிறிஸ்தவர்கள் கூட்டுப் பிரார்த்தனையில் ஈடுபட்டுள்ளனர்.

கல்கத்தாவில் பாப்பரசருக்காகச் சிறப்புப் பிரார்த்தனை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

(08)




---

## தொடர்ந்து பத்து ஆண்டுகளுக்கு இந்தோனேசியாவில் பூகம்ப அபாயம்

### நிபுணர்கள் எச்சரிக்கை

ஜகார்த்தா,ஏப்.3

இந்தோனேஷியாவை மேலும் பல பூகம்பங்கள் பெரிய அளவில் தாக்கும் அபாயம் இருப்பதாக பூகம்ப நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

அமெரிக்காவில் உள்ள உல்ஸ்டர் பல்கலைக்கழகச் சுற்றுச்சூழல்" துறைப் பேராசிரியர் ஜான் மெக்ளாஸ்கி நிருபர்களிடம் கூறியதாவது:-

டிசெம்பர் 26ஆம் திகதி ஏற்பட்ட பூகம்பம் தொடர் பூமி அதிர்ச்சிகள் ஏற்படக்கூடிய நிலைமையை உருவாக்கியுள்ளது. இந்த விளைவு, இன்னும் 10 ஆண்டு காலத்துக்கு நீடிக்கும். அடுத்து ஏற்படும் பூகம்பங்களால் ஆயிரக் கணக்கானவர்கள் பலியாவார்கள்.

டிசெம்பர் 26ஆம் திகதி ஏற்பட்ட பூகம்பத்தால், பூமியின் மேல் பகுதி மீதான அழுத்தம் உயர்ந்துள்ளது. இதன் காரணமாகத்தான் கடந்த மாதம் பூகம்பம் ஏற்பட்டது. இதனால் மேலும் பூகம்பங்கள் ஏற்படும் அபாயம் உள்ளது.

ஒவ்வொரு முறை பூகம்பம் ஏற்படும்போதும் அது அடுத்தடுத்து பூகம்பங்கள் உருவாகக் கூடிய சூழலை ஏற்படுத்துகிறது - என்றார்.(8)

உலக அரங்கில்

## உலக வங்கியின் தலைவராக போல் உல்போவிட்ஸ் நியமனம்

வாஷிங்ரன்,ஏப்.3

உலக வங்கியின் புதிய தலைவராக அமெரிக்காவின் பாதுகாப்புத்துறை துணைச் செயலர் போல் உல்போவிட்ஸ் கடந்த வெள்ளிக்கிழமை நியமிக்கப்பட்டார். உலக வங்கிச் சபை உறுப்பினர் இந்த நியமனத்துக்கு ஏக மனதாக ஒப்புதல் அளித்தனர்.

உலக வங்கியின் தற்போதைய தலைவராக உள்ள ஜேம்ஸ் உல்பென்சனின் பதவிக் காலம் சில வாரங்களில் முடிகிறது.

உலக வங்கி மற்றும் ஐ.எம்.எவ். ஆகியவற்றில் அதிகபட்சமாக முதலீடு செய்துள்ள நாடு அமெரிக்காதான்.

இதன் தலைவர் பதவி குறித்து இரண்டாம் உலகப்போரின் முடிவில் அமெரிக்காவுக்கும் ஐரோப்பிய யூனியனுக்கும் இடையே ஓர் உடன்பாடு ஏற்பட்டது. இதன்படி, உலக வங்கியின் தலைவராக எப்போதுமே ஓர் அமெரிக்கர்தான் தேர்ந்தெடுக்கப்படவேண்டும். அந்தத் தலைவர் யார் என்பதை அமெரிக்க அதிபர் தான் அறிவிப்பார். அதேசமயத்தில் ஐ.எம.எவ் நிர்வாக இயக்குநராக ஐரோப்பாவில் உள்ள நாடுகளைச் சேர்ந்த ஒருவர் நியமிக்கப்படுவார். (8)

# இலவசம்
## இளைஞர்களுக்கான பயிற்சி

150 நாடுகளில் பயிற்சி நடத்தும்

(வாழும் கலைப்பயிற்சி அறநிலையம் இந்துகலாசார அமைச்சின் அனுசரணையுடன் அளிக்கிறது)

இதில் கிடைக்கும் பயன்கள்:

- ★ மன இறுக்கம் மன உளைச்சல் நீக்கி, ஆத்ம சக்தியை உணர்ந்து ஆன்மீகவழியில் ஊக்கம்கொண்டு செவ்வனே பணிசெய்ய
- ★ நினைவாற்றல் பெருக
- ★ உடல் ஆரோக்கியமும் புத்துணர்ச்சியும் பெற
- ★ நேர்மை, வாய்மை, மனிதநேயத்துடன் மகிழ்ச்சியான வாழ்க்கையை அமைத்துக்கொள்ள

18 வயது முதல் 30 வயதிற்குட்பட்ட இருபாலாருக்கும் 16.04.2005 ஆம் திகதி முதல் 22.04.2005 ஆம் திகதி வரை 7 நாள்களுக்கு காலை 7.00 மணிமுதல் மாலை 7.00 மணிவரை. இலவச காலை, மதிய, மாலை உணவுடன் யாழ்.நகர், சுழிபுரம், பருத்தித்துறை, நெல்லியடி ஆகிய நான்கு முகாம்களில் பயிற்சி நடக்கும். குறைந்த இடமே உள்ளதால் இலவச அனுமதிச் சீட்டு பெற்றுக்கொள்ள உடன் தொடர்புகொள்ள:

**பதிவு இடம் நேரம்**

| | |
|---|---|
| நாவலர் மணி மண்டபம், நல்லூர். (கந்தசாமி கோயில் எதிரில்) யாழ்ப்பாணம். தொ.பே.இல: 222 3893 காலை 10.00 மணிமுதல் மாலை 4.00 மணிவரை | யா/வேலாயுதம் ம.வி., பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பருத்தித்துறை. காலை 9.00 மணிமுதல் மாலை 3.00 மணிவரை. திங்கள் முதல் வெள்ளி வரை. |
| 51, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். தொ.பே.இல: 222 6043 காலை 10.00 மணிமுதல் மாலை 4.00 மணி வரை | |

குறிப்பு: ஒவ்வொரு முகாமிலிருந்தும் திறமைமிக்க பத்து நபர்கள் மேற்பயிற்சிக்காக வெளிநாடு அனுப்பப்படுவர். பரீட்சை எதுவும் இல்லை. காலை மதிய மாலை உணவு இலவசம்.



## மணமகன் தேவை

யாழ்.நாயன்மார்கட்டைச் சேர்ந்த கௌரவமான குடும்பத்தில் பிறந்த சைவபோசனமுள்ள 42 வயது உயரம் 5'4" A/L சித்தியடைந்த அழகான, சிவந்த நிறமுள்ள புரட்டாதி நட்சத்திரம். மீனராசி நற்குணமுள்ள பெற்றோரை இழந்த சகோதர சகோதரிகள் அற்ற தன் தாய்க்காகத் தன் வாழ்வை அர்ப்பணித்த மணமகளுக்கு இந்தத் தகைமைகளுக்கேற்ற பொருத்தமான மணமகனை (சைவபோசன முள்ள) உறவினர் எதிர்பார்க்கின்றனர். சீதனம் ஓரளவு உண்டு. நேரில் பேசித் தீர்மானிக்கலாம். ஜாதகக் குறிப்புடனும் மற்றும் குடும்ப விவரங்களுடனும் உடனே தொடர்புகொள்ளவும்.

தொடர்புகளுக்கு: G.நடேசன்,
740, நாவலர் வீதி, மாம்பழம் சந்தி, அரியாலை, யாழ்ப்பாணம்.

(43777)


## 31ஆம் நாள் இதய அஞ்சலி



அமரர் இசைப் பேராசிரியர்
**எஸ்.கே.சிவபாலன்**
(அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம்)
இன்று அன்னாரை நினைவு கூர்ந்து
அஞ்சலி செய்கின்றோம்
- உரிமையாளரும் ஊழியர்களும்
ஸ்ரீலங்கா புத்தகசாலை
234, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

(சி-41750)(21-19-16)

# 40 பயனாளிகளுக்கு சுழற்சிமுறையில் கடன்

யாழ்ப்பாணம்,ஏப்.3

கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள ஆட்டுப்பட்டிக் கிராமத்தில் 'நிக்கொட்' நிதியுதவியுடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் 40 பயனாளிகளுக்கு சுழற்சி முறையில் கடன் வழங்கியுள்ளது.

ஜீவனோபாய ஆதார செயற்பாட்டு கடன் திட்டம் பற்றிய கலந்துரையாடலின்போது தலா 5 ஆயிரம் ரூபா வீதம் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டது.

இக்கலந்துரையாடலில் நிக்கொட் நிறுவன உதவித் திட்டப் பணிப்பாளர் நவரட்ணராஜா, நிக்கொட் நிறுவன மாவட்ட இணைப்பாளர் கெங்காதரன், தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பொறியியலாளர் சி.நிருத்தன் ஆகியோர் கலந்துகொண்டனர். (8-202)

# சுனாமியால் இழந்த வாகன ஆவணங்களை வழங்க நடவடிக்கை

வட்டக்கச்சி,ஏப்.3

சுனாமி அனர்த்தத்தால் இழந்த ஆவணங்களை மீள வழங்குவதற்கான நடவடிக்கைகளை தமிழீழ போக்குவரத்துப் பிரிவினர் மேற்கொண்டுள்ளனர்.

முதற்கட்டமாக எதிர்வரும் 6ஆம் திகதி முல்லைத்தீவு பிரதேச செயலகத்திலும் எதிர்வரும் 8 ஆம் திகதி மருதங்கேணி பிரதேச செயலகத்திலும் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணி வரை விசேட செயலகங்கள் நடைபெறவுள்ளன.

சுனாமியால் இழந்த பயண அனுமதி அட்டை, தமிழீழ மோட்டார் ஊர்தி ஆவணங்கள் இச்செயலகங்கள் மூலம் வழங்கப்படவுள்ளன. (8-405-202)

# சிறுவர் நூலகம் திறந்து வைப்பு

வலிகாமம்,ஏப்.3

இணுவில் பொதுநூலகத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள சிறுவர் நூலகம் கடந்த 31ஆம் திகதி மாலை நான்கு மணிக்கு உத்தியோக பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

இணுவில் பொதுநூலகம், சனசமூக நிலையம் என்பவற்றின் புனருத்தாரண மூன்றாவது ஆண்டு நிறைவு தின விழாவின் போது சிறுவர் நூலகம் திறந்து வைக்கப்பட்டது.

சிறுவர் நூலகத் திறப்பு விழாவை தொடர்ந்து இணுவில் பொது நூலகக் கலாசார மண்டபத்தில் ஆண்டு விழா வைபவம் நடைபெற்றது.

அ.கிரிதரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் க.வேலுப்பிள்ளை சிறுவர் நூலகத்தை நாடாவெட்டித் திறந்து வைத்தார். சிறுவர் நூலகத்துக்கான நிதியுதவியை சுவிஸ் நாட்டில் வாழும் வி.தில்லையம்பலம் வழங்கியுள்ளார்.

ஆண்டு விழாவில் பிரதம விருந்தினராக பருத்தித்துறை மாவட்ட நீதிபதி கந்தையா அரியரட்ணமும், சிறப்பு விருந்தினர்களாக மானிப்பாய் சோதி வேம்படி மகா வித்தியாலய அதிபர் தி.அருட்பிரகாசபிள்ளை, யாழ். பல்கலைக் கழக கல்விசார் நூலகர் திருமதி ஸ்ரீ காந்தலட்சுமி சிவனேசன் ஆகியோரும் கலந்துகொண்டு உரையாற்றினர்.

பொதுநூலகத்தினரால் நடத்தப்பட்ட பொது அறிவு பரீட்சை, 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை என்பவற்றில் சித்தியடைந்த மாணவர்களுக்கான பரிசுகளை திருமதி பிறேமா அரியநாயகம் வழங்கினார்.

நூலகத்துக்கென பல நூல் தொகுதிகள் அன்பளிப்பு செய்யப்பட்டன. நூலகர், கணனி ஆசிரியர்கள், முன்பள்ளி ஆசிரியர்கள் இதன் போது கௌரவிக்கப்பட்டனர். (8-152)

## JAFFNA SCIENCE ASSOCIATION
### 13th ANNUAL SESSIONS
### 6th 7th & 8th APRIL 2005

**Wednesday, 6th April 2005**
**Venue: Library Auditorium, University of Jaffna,.**

| | |
|---|---|
| 8.45 hr | Lighting of the oil lamp and the ceremonial opening<br>Chief guest's Address: Prof.Eric H. KarunanayakeProf. Kandiah Balasubramaniam Gold Medal Lecture: |
| 9.30 hr | "Beyond the Human Genome" Prof. Eric H. Karunanayake |
| 10.30 hr | **Theme Seminar : Social Welfare**<br>Speakers Topics<br>Dr. Jeyampathy Samarakoon :Environmental Welfare<br>Dr. P .Lukumar :Health Welfare<br>Miss S.Arulanantham :Economic Welfare<br>Mrs. Kokila Mahendran :Cultural Welfare |
| 13.30 hr | Sectional Chairperson's address<br>Section A: Dr. N. Sivayogan "UNDERSTANDING CHAOS" |
| 14.15 hr | Section B: Dr. S. Mahesan "Distance e-Learning" |
| 15.15 hr | Review lecture I: Prof. R. Kumaravadivel "Physics of Tsunami" |
| 16.00 hr | Popular lecture I: Dr. S. Raviraj "Tsunami related Medical Problems" |

**Thursday, 7th April 2005**

| | |
|---|---|
| **8.30 hr.** | **Presentation of Research Papers-Parallel Sessions** |
| 15.00hr | Sectional Chairperson's address - Section C:<br>Dr. K. Sivapalan "Health of Young people" |
| 15.45 hr | Popular lecture II Dr. S. Navaneethan<br>"Current Developments in Management of Sub-fertility" |

**Friday, 8th April 2005**

| | |
|---|---|
| 9.00 hr | Sectional Chairperson's address - Section D:<br>Dr. P. Pushparatnam<br>"சாட்டி தொல்லியல் அகழ்வாய்வின் முக்கியத்துவம்" |
| 9.45 hr | Review Lecture II : Dr.A. S. Sosai<br>"சேது சமுத்திரத் திட்டமும் இலங்கையில் அதன் தாக்கமும்" ஒரு நோக்கு |

**Sectional Business Meeting and Annual General Meeting**

| | |
|---|---|
| 10.45 hr | Sectional Business Meeting |
| 11.45 hr | Annual General Meeting |

ALL ARE CORDIALLY INVITED
Dr. A. Senthuran, General Secretary, Jaffna Science Association.

(C/41969)(50-21-19-16)


## புத்தாண்டை முன்னிட்டு விசேட சலுகை

இன்று முதல் எமது நிறுவனத்தில் பிரதியாக்கம் செய்யும் அனைத்து அளவுகளிலுமான போட்டோக்களை அனைத்து வாடிக்கையாளர்களும் கொழும்பு விலையில் பிரதியாக்கம் செய்து பெற்றுக்கொள்ள முடியும் என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறோம்.

**4 R - 9/=**

**மூர்த்தி லேசர் டிஜிற்றல் கலர் லாப்**
யாழ்.வீதி, மானிப்பாய்.
T.P. : 021 - 222 2884



## MICRO CODE TECHNOLOGY
(COMPUTER ACADEMY)

The Complete Business Solution — Extended Enterprise System

முதல் முறையாக யாழ். மண்ணில் அறிமுகப்படுத்தும்

**TALLY - 6.3**

Indian qualified Lecturers

**Diploma Course**
Ms - Office
Hard Ware Engineering
Desk top Publishing
Accounting
Web Designing
Graphic Designing
**Programming Course**
Visual basic
Java
Oracle
C++
**Computer Studies for Children**
Micro Soft Kids (Grade - 3-7)
Diploma in Computer Studies (Grade 8-A/L)

பிரிவு - 01 06-04-2005
பிரிவு - 02 11-04-2005
பிரிவு - 03 18-04-2005

உடனடி ஆரம்பம்

அலுவலர்களுக்கான மாலை நேர வகுப்புகளும் ஆரம்பமாகவுள்ளன.

தொடர்புகளுக்கு:
NORTHERN TECHNOLOGY (PVT) LTD.
Kannathiddy Road, Jaffna (admission only)
Or
MICRO CODE TECHNOLOGY
No.34, Punkankulam, Eachamoday Junction, Jaffna.
Or
No.88, Temple Road, Jaffna.
On Line 077 6687825 077 6621966

(43775) (24-21-19-16)


## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 1985 – 08 – 08



மறைவு 2003 – 04 – 03

**அமரர் மரியதாஸ் பிரதீபன்**

ஆண்டுகள் இரண்டு ஓடி மறைந்தாலும்
நினைவுகள் மட்டும் மறையவே மறையாது!
மாண்டு நீர் போனாலும்
உங்களை நினைந்தபடியே
இவ்வுலகில் நாங்கள் வாழ்கின்றோம் பிரதீபனே!
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அல்பா மிக்சர் ஒழுங்கை,
மானிப்பாய்.
- குடும்பத்தினர்.

(43769)(42-19-16-19)

## 21ஆம் ஆண்டு நினைவுகளுடன்...

தோற்றம் 17 – 01 – 1947



மறைவு 25 – 03 – 1984

**அமரர் கோபாலு நித்தியானந்தசுந்தரம் (நித்தி)**

(நீர்ப்பாசனத் திணைக்கள உத்தியோகத்தர்)

மூவேழ ஆண்டுகள் கழிந்ததையா!
மூப்பும் நாம் எய்தி முதியவர்களானாலும்
காப்பின்றிக் கண்கலங்கியே நின் இனிய
வாழ்நாளை மனதிருத்தி மன்றாடுகின்றோம்
நீ நற்கதி பெற்று நம்பன் தன்னருகில்
பேரருள் பெற்று இன்புற்றிருக்கவென்றே!

மனைவி: வசந்தா,
மகன்மார்: லேகேஸ், மகேஷ்,
மகள்: தாரகா.

கல்லூரி வீதி,
பருத்தித்துறை.

(43783)(42-19-16-19)

## மணிவிழாக் காணும் உத்தமர் வாழி!



சைவத் தமிழ் இசைவாரிதி
**சிவத்திரு. வ.குமாரசாமி ஐயா**
அகவை அறுபதை நிறைவு செய்து அறுபத்தொன்றில் காலடி பதித்து மணிவிழாக் கண்ட வாரியார் வாரிசு வாழி! வாழி!! தத்துவ முத்துக்களை அள்ளி வீசி சிந்திக்க வைக்கும் சைவாசாரிய சிகாமணியே! அறுபத்தொன்றை பதினாறாக மாற்றி என்றும் பதினாறாக இருந்து பன்றிக் கோட்டு ஸ்ரீ விஸ்வலிங்க மகாகணபதிப் பெருமானின் திருவருளால் சைவத் தொண்டாற்ற வேண்டுமென அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

பா.சண்முகானந்தா,
பன்றிக் கோட்டுப்பிள்ளையார் கோயில் அடியார்கள்.
(43746)(42-11-16)



# VACANCY
### *PRINCIPAL JAFFNA COLLEGE INSTITUTE OF AGRICULTURE*

APPLICATIONS ARE INVITED FOR THE ABOVE MENTIONED POST

1. EDUCATIONAL AND OTHER QUALIFICATIONS

M.Sc Degree in Agriculture of a recognized university and minimum two years (2) experience including Teaching /Training
OR
B.Sc. Degree with Second class (Hons.) in Agriculture of a recognized university and minimum Five (5) years experience including Teaching/ Training

Age: Below 55 years
Salary: Negotiable
Applications should accompany the c.v with the names and addresses of two non related referees and copies of certificates. Applications should be sent to the below mentioned address on or before 30th April 2005.

**Secretary, Management Council**
C/o. Principal,
Jaffna College Institute of Agriculture,
Maruthanamadam,
Chunnakam.


# கலந்துரையாடல்கள்

யாழ்ப்பாணம்,ஏப்.3

புத்தூர் வளர்மதி சனசமூக நிலையத்தினர் நடத்தும் 'காணி விவகாரமும் அதனால் ஏற்பட்ட முரண்பாடுகளை இனம் கண்டு தீர்வை நோக்கிய பார்வையும்' எனும் தொனிப்பொருளிலான கலந்துரையாடல் இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 4 மணியளவில் வளர்மதி முன்பள்ளி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வுத் தலைவர் இ.தர்மலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கலந்துரையாடலில் விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்கள், கிராமிய உழைப்பாளர்கள் சங்கப் பிரதிநிதிகள் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், ஆர்வலர்கள் எனப்பலர் கலந்துகொள்ளவுள்ளனர்.

(8-13)

☆ ☆ ☆

யாழ்ப்பாணம்,ஏப்.3

யாழ்,பல்கலைக்கழக விவசாய பீடத்தின் 'பீட முன்கற்றோர் அவை' அங்குரார்ப்பண முன் ஏற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு விவசாயபீட பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

(8-202)

☆ ☆ ☆

யாழ்ப்பாணம்,ஏப்.3

யாழ்.மாவட்ட உள்ளூராட்சி சபைகளில் கடமையாற்றும் சகல உள்ளூராட்சி உதவியாளர்களுக்கான விசேட கலந்துரையாடல் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேசசபை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இக்கலந்துரையாடலின்போது உள்ளூராட்சி உதவியாளர்களது பதவியை உறுதிப்படுத்தல், சேவை பிரமாணக் குறிப்பு, வேதன அளவுத் திட்டம், கடமைப்பட்டியல், நிர்வாகப் பொறுப்பு ஆகியன தொடர்பான விரிவான அறிக்கை தயாரிக்கப்படவுள்ளது.

இதேவேளை எதிர்வரும் 8ஆம் திகதி யாழ். செயலகத்தில் இடம்பெறவுள்ள கலந்துரையாடல் தொடர்பாகவும் இக் கலந்துரையாடலின் போது ஆராயப்படவுள்ளது.

எனவே சகல உள்ளூராட்சி உதவியாளர்களும் இக்கலந்துரையாடலுக்கு வருகை தருமாறு வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை உள்ளூராட்சி உதவியாளர் அறிவித்துள்ளார்.

(8-203-185)

# லங்கா சிமெந்து நிறுவனத்துக்கு புதிய தலைவர் நியமனம்

யாழ்ப்பாணம்,ஏப்.3

லங்கா சிமெந்து நிறுவனத்தின் புதிய தலைவராக எம்.எச்.எம்.நவவி ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளார்.

முன்னாள் பெருந்தெருக்கள் போக்குவரதது சுற்றாடல் துறை அமைச்சரும் முன்னாள் சுகாதார சமூக சேவைகள் ஆயுர்வேத மற்றும் முஸ்லிம் சமயகலாசார அமைச்சருமாகிய நவவி 30 வருடங்களுக்கு மேலாக அரசியலில் ஈடுபட்டு வருபவர். (எ-202)

# 'பவளக்கொடி' இசைநாடகம்

யாழ்ப்பாணம்,ஏப்.3

புங்குடுதீவு புனித அந்தோனியார் திருவிழாவை முன்னிட்டு கலாபூஷணம் செ.மெற்றாஸ் மயில் தயாரிதது வழங்கும் "பவளக்கொடி" இசை நாடகம் எதிர்வரும் 10 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை இரவு 8 மணிக்கு புங்குதீவு புனித அந்தோனியார் ஆலய முன்றிலில் அமைந்துள்ள வீரமாமுனிவர் கலையரங்கில் நடைபெறவுள்ளது.

சமய சமூகத் தொண்டரும் கொழும்பு தொழில் அதிபருமான கா.தில்லைநாதனின் ஆதரவில் இந் நிகழ்வு நடைபெறவுள்ளது.

இதேவேளை - ஈஸ்வரஞான சாகித்தியஇசையரசு என்ஆர். கோவிந்தசாமியின் புதல்வர்கள் என் ஆர். கே.இரத்தினகுமார், என்.ஆர்.கே.வாகீஸ்வரன் ஆகியோர் இணைந்து வழங்கும் நாதஸ்வர நாதவேள்வியும் அன்றையதினம் மாலை 6.30 மணிக்கு மேற்படி கலையரங்கில் நடைபெறும்.

(8-202)


# பதவி வெற்றிடம்
# காப்புறுதி முகவர்கள் தேவை

கல்வித் தகைமைகள்: க.பொ.த.சாதாரண தரம் (கணிதம், ஆங்கிலம் உட்பட), க.பொ.த.உயர்தரம்.
வயதெல்லை: 18-55 வரை

ஆர்வமுள்ள ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். தங்கள் சுயவிவரக் கோவையுடன் எங்கள் அலுவலகத்தில் 05.04.2005ஆம் (செவ்வாய்க்கிழமை) திகதி பி.ப. 2 மணி தொடக்கம் பி.ப.5 மணிவரை நேரில் சமுகமளிக்கவும்.

குறிப்பு: பகுதிநேர முகவர்களாகத் தொழிற்பட விரும்புவோரும் சமுகமளிக்கலாம்.

**மனிதவள முகாமையாளர்,**
**யூரோவில் முதலீட்டு நிறுவனம்,**
**இல.866, பருத்தித்துறை வீதி,**
**நல்லூர்.**
(சி.41920)(42-11-16)



## Sri Lanka Red Cross Society Health and Psychosocial Programme Jaffna District

### The Post of Office/Field Assistant

Sri Lanka Red Cross Society, seeking applications for the above post for the implementation of the above Programme. Application should be sent under Registered cover to reach on or before 7th of April 2005 to:

**The Branch Executive Officer,**
**Sri Lanka Red Cross Society,**
**Jaffna District Branch,**
**No: 73, Kandy Road, Jaffna.**

Requirements:

General Certificate of Education (Advance Level)
Experience in Community Based Programmes
Excellent Communication and team work skills
Computer skills (Word, Excel, database)
Excellent knowledge of Tamil and English, verbal and written

Duties:
- Monitoring of psychosocial & health activities in field
- Reporting & data entry
- Planning & Conducting of workshops

Interview will be held on 11th of April morning. Please supply contact number in the application. Only short listed candidates will be called for an interview.

**Secretary,**
Sri Lanka Red Cross Society,
No:73, Kandy Road, Jaffna (43764)



ENGLISH MEDIUM



பாலர் பாடசாலை

புதிய பிரிவுகள் ஆரம்பம்
APRIL 25
புதிதாய் சேரும் மாணவர்களுக்கு APRIL மாதத்திற்கான கட்டணம் அறவிடப்படமாட்டாது.
Play Group
Montessori
Pre School
BRITISH BUSINESS SCHOOL
HOT LINE : 021-222-5796



UNIT

நாங்கள் என்றும் புதுமையை விரும்புபவர்கள். அதுவும் எமது புதுவருடத்தில் புதியவையுடன்

கனடாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட Compaq PIII கணனிகள் வியப்பூட்டும் விலையில்.

புத்தம் புதிய P4 கணனிகள் பிரமிக்கத்தக்க கொழும்பு விலைக்கே.

Ultra Speed stock clearing sale

PC/CD/VCD/DVD ப்ளேயர்கள் 1400/- முதல்

2250/- - 1750/- மட்டுமே
4200/- - 3600/- மட்டுமே(FM)
11500/- - 9900/- (கோம் தியேட்டர்)
16500/- - 14900/- (கோம் தியேட்டர்)
28000/- - 24900/- (கோம் தியேட்டர்)

சகல கணனி உதிரிகளும் கொழும்பு விலைக்கே.

☆ இவ்வளவு குறைந்த விலையில் எப்படி விற்க முடிகிறது! தரமான பொருட்கள் வழங்கப்படுகின்றனவா?
☆ இப்படி சந்தேகங்கள் போட்டியாளர்களால் வதந்திகளாக விதைக்கப்படுகின்றது.
☆ எங்கள் நிறுவனம் உலக அளவில் போட்டி போடும் ஒரு நிறுவனம்.
☆ பரீட்சித்துப் பார்ப்பதற்கென்றே தனி அலகை நிறுவி இருப்பவர்கள் நாங்கள்.

அத்தி பூத்தது போல் வரும் சந்தர்ப்பங்களை நழுவ விடாதீர்கள்.

An Indian Enterprise

தரமான கணனி உதிரிகளை குறைந்த விலைக்கு, சர்வதேச தர நிர்ணய அங்கீகாரம் பெற்றநிறுவனங்களிடமிருந்து இறக்குமதி செய்து வழங்குகிறோம்.

Note: சலுகை விலை கையிருப்பு உள்ளவரை மட்டுமே. எங்கள் பொருட்கள் யாவும் வாரண்டியுடன் கூடியது.

347, K.K.S. Road, Manohara Theatre Junction, Jaffna.



இப்பொழுது இலங்கையில்
அக்யூரேட் 007
ஜாக்குவார் 009
சாரங்கள்
பெனியன்கள்
உள்ளாடைகள்
கைக்குட்டைகள்



Lungies (Sarongs)
Vests
Briefs
Kerchiefs
Direct Importers Wholesalers & Retailers
SOLE DISTRIBUTORS
OCEANICK IMPEX
192, Main Street, Colombo-11.
Tel: 2336720, 2327168 Wholesale: 2384131
Fax: 2326961 E-mail: oceanick192@yahoo.com

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

எஞ்சின் மறுசீரமைக்கப்பட்ட மிக நல்ல நிலையிலுள்ள 135 தொடர் இலக்கமுடைய CG 125 ஜப்பான் மோட்டார் சைக்கிள், Carro டிபிறீட்சர் (Door கண்ணாடி) என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 0777 671555, 021 226 3500 (நெல்லியடி). (43766)

கொழும்பு - 15, தமிழ் மக்கள் செறிந்து வாழும் குடியிருப்புப் பிரதேசத்தில் நான்கு அறைகளுடன் அமைந்த மாடிவீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய தொ.பே. இல. 2522561. (சி-41995)

## கார் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள 19 தொடரிலக்கமுடைய நிசான்சனி PB 13 இன சில்வர் நிறக்கார் (சுப்பர் சலூன் - குளிரூட்டப்பட்டது) விற்பனைக்கு உண்டு. விலை ரூபா 12 லட்சம். விலையில் மாற்றம் ஏற்படாது. தொடர்பு: இல.396, கைலாசபிள்ளையார் கோயிலடி, உதயன் விருந்தினர் விடுதி ஒழுங்கை, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். சனி, ஞாயிறு காலை 9-6 மணிக்கிடையில் பார்வையிடலாம். (43737)

புதிய Nissan FB 15 கார் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 166, முதலாம் குறுக்குத்தெரு (வேம்படி பாடசாலைக்கு எதிர்) யாழ்ப்பாணம். (43761)

## வீடு விற்பனைக்கு

பழைய பொலீஸ் நிலைய வீதி, சாவகச்சேரியில் 4½ பரப்புக் காணியில் அமைந்த 9 அறைகள் கொண்ட பெரிய வீடு விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: சே.கிருஸ்ணகுமார், விதானை வளவு, மானிப்பாய். T.P.: 222 7802 (43749)

## காணி விற்பனைக்கு

மீசாலை வடக்கு, சியாமளா மில் ஒழுங்கையில் டச்சுவீதிக்கு அண்மையில் மா, பலா, தென்னை உட்பட நன்னீர்க் கிணற்றுடனே 14 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: க.கந்தசாமி, கனகசுந்தரம் வீதி, மீசாலை மேற்கு, T.P.: 222 3906 (43750)

கோண்டாவில், இருபாலை வீதிக்கு மிக அன்மையில் கலாசாலை வீதியில் பழைய ஆணித் தொழிற்சாலைக்கு வடக்கெல்லையில் கலாசாலை வீதி முகப்பைக்கொண்ட 4 பரப்பு 6.4 குளி நிலம் விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P 222 6137. (43739)

## கடை விற்பனைக்கு

கே.கே.எஸ். வீதியில் தற்போது வியாபார ஸ்தாபனமாக இயங்கிக்கொண்டிருக்கும் கடை ஒன்று உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 021 - 222 - 2990, 0777 - 744863. (சி-41924)

ஸ்ரான்லி வீதியில் 37அடி நீளமும் 13 அடி அகலமும் கொண்ட கடை விற்பனைக்கு உண்டு. தொடர்பிற்கு 0773144868, 021 4590275. (43755)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

Prima உயிர் Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுகாதார முறைபடி உடன் சுத்தம் செய்து தினமும் பெற்றுக்கொள்ளலாம். (Electronic நிறுவை).தொடர்பு: நல்லூர் வீடியோ சென்ரர் வளவு, 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (43639)

புறொயிலர் இறைச்சிக்கோழிகளும் மற்றும் விறாத்துக் குஞ்சுகளும் விற்பனைக்குண்டு. சுத்தம் செய்து தினமும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: S.சிவகுமாரன், கல்வியங்காட்டுச் சந்தி, பெற்றோல் செற் அருகிலுள்ள புலவனார் வீதி. (43744)

## கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டு முறை தடுப்பு மருந்து போடப்பட்ட Original Prima Broiler குஞ்சுகள், பேட்டுக்குஞ்சுகள் 11.04.2005 திங்கட்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறை, நெல்லியடிக் கிளையிலும் சுட்டி பாம் வட்டுக்கோட்டை, சந்நிதி பாம் தொண்டைமானாறு, ஐங்கரன் களஞ்சியம், திருநெல்வேலி. முருகன் - சாவகச்சேரி, நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை முத்திரைச்சந்தையடி, நல்லூர். (43743)

## ஆட்டோ விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள wp JP 51... தொடரிலக்கம் உடைய ஆட்டோ விற்பனைக்கு உண்டு. தொடர்புக்கு:
சங்கர் 0777 222262 (21-19-17)
(43772)

## காணி விற்பனைக்கு

யாழ். நாவற்குழியில் பயிர்செய்யப்பட்ட தோட்டக்காணி 32 பரப்பில் 15 மாமரங்கள், 2 நல்ல தண்ணீர்க் கிணறு, சுற்றி வரவேலி, பிரதான A-9 வீதியிலிருக்கும் நெற் களஞ்சியத்திற்கு எதிராக) அகலமான பாதை கொண்ட அமிர்தா வீதியில் உள்ள தோட்டம் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:
0114 516633
E.mail - gnani @ wow.lk
(சி-41944) (21-19-17)

## மணமகள் தேவை

கௌரவ குடும்பம், 1975ஆம் ஆண்டு பிறந்த, அனுஷம் 3ஆம் பாதம் பாவக்கிரகம் 31¼ 12இல் செவ்வாயுள்ள U.K., P.R உள்ள அழகான மணமகனுக்கு நல்ல அழகான சிவந்த மணமகள தேவை. இங்கு வந்து திருமணம் செய்வார். தொடர்பு: M.ரவீந்திரன், துர்க்கை அம்மன கோயில் பின் வீதி, சாவகச்சேரி. (43732)

யாழ்.இந்து கௌரவ குடும்பம், வர்த்தக மணமகனுக்கு சுத்த போசன 35 வயதுக்கு உட்பட்ட மணமகள் தேவை. வேலாயுதபிள்ளை J.P. இல.10, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்(43701)

## மணமகன் தேவை

கௌரவ குடும்பம், 1977ஆம் ஆண்டு, அச்சுவினி நட்சத்திரம், முதலாம் பாதம், கிரகபாவம் (13) உள்ள மிகவும் அழகான சிவில் என்சினியா வேலை பார்க்கும் மணமகளுக்கு என்சினியர், டாக்டர், எக்கவுண்டன் மணமகன தேவை. உடன் தொடர்புகொள்க: M.ரவீந்திரன், துர்க்கை அம்மன கோயில் பின் வீதி, சாவகச்சேரி. (43734)

கௌரவ குடும்பம் 1972ஆம் ஆண்டு, பூரட்டாதி நட்சத்திரம், 3ஆம் பாதம் 29¼ பாவக்கிரகம், B.A. பட்டதாரி அழகான ஆசிரியைக்கு உயர் அரச உத்தியோகம் அல்லது பட்டதாரி ஆசிரியா மணமகன் தேவை. (மாமிசபோசனம் அற்றவர் விரும்பத்தக்கது) தொடர்பு: M.ரவீந்திரன், துர்க்கை அம்மன் கோயில் பின் வீதி, சாவகச்சேரி. (43733)

கௌரவ குடும்பம், 1973ஆம் ஆண்டு, 12இல் செவ்வாய், புனர்பூசம் நட்சத்திரம், 4ஆம் பாதம், பட்டதாரி ஆசிரியைக்கு நல்ல அரச உத்தியோகம் பார்க்கும் மணமகன் தேவை. தொடர்பு: M.ரவீந்திரன், துர்க்கை அம்மன் கோயில் பின் வீதி, சாவகச்சேரி. (43735)

## திருமண சேவை

சீதனம் இல்லாமல் திருமணம் செய்யாதிருப்பவர்கள், கொடுத்துச் செய்யக்கூடியவர்கள், சீதனம் கொடுக்க வசதியில்லாது திருமணஞ் செய்யாதிருக்கும் பெண்களை மனம் விரும்பி ஏற்கும் ஆண்கள் எங்களிடம் வெளிநாட்டு ஜாதகங்கள் உள்ளன. நேரிலோ, தபால் மூலமோ தொடர்புகொள்ளவும். ஸ்ரீ நாகபூசணி அம்மன் திருமண மாலை, இல.289A, பட்டாணிச்சூர், மன்னார் றோட், வவுனியா. T.P.: 024 4588410, 0776 630207 (43302)

## தேவை

அலுவலகம் ஒன்றிற்கு 800 சதுர அடி பரப்பிற்குக் குறையாத கட்டடம்/ வீடு பலாலி வீதி, திருநெல்வேலியில் தேவை. தொடர்பு: 077 6351871, 071 4840351. (43631)

ரெலிபோன் ஒன்று தேவை. தொடர்புகளை வைத்திருப்பவர் Suntel, SLT எதுவாயினும் விற்க விரும்பினால் உடன் தொடர்பு கொள்ளவும். தொடர்பு: 077 6363642. (43778)

## பணிப்பெண் தேவை

வீட்டில் தங்கியிருந்து அரச உத்தியோகம் பார்க்கும் குடும்பம் ஒன்றின் இரு பிள்ளைகளையும் பராமரித்து வீட்டு வேலைகளையும் கவனிக்கக்கூடிய 45 வயதிற்கு மேற்பட்ட பணிப்பெண் தேவை. தொடர்பு: விளம்பர இல.2542, மே/பா உதயன் (வடமராட்சியை சேர்ந்தவர்கள் விரும்பத்தக்கது.) (43597)

## வீடு/அறை வாடகைக்குத் தேவை

யாழ்.நகரை அண்டிய பிரதேசத்தில் இருவர் தங்கியிருக்க சமையலறையுடன் கூடிய வீடு/அறை வாடகைக்குத் தேவை.
தொடர்புக்கு: **0777 222262**
(43682)

## SKY COMPUTER SYSTEM

No. 109, Kandy Road, Chundikuli, Jaffna.
Hot-Line: -0777 222478

**விற்பனைக்குண்டு**

Pentium III 500MHZ IBM Computer with Multimedia

10 GB Hard Disk
128 MB RAM
25,500/-

ஒருவருட உத்தரவாதத்துடன்
Unlimited Software & free dust cover
15" Monitor - 6,500/-
(சி-41920) கச்சேரிக்கு அருகில (21-14)

## COMPUTER SERVICE

$P_4$ Computer 2 வருட உத்தரவாதத்துடன் தரமான Hard ware உடன Example: Kingston Ram Life-time warrenty G1GABYTE Mother board 3 Years Warrenty on board Sound and VGA Card)
கொழும்பு பல்கலைக்கழக கணனி விஞ்ஞான Computer Science - பட்டதாரி மாணவனால் எடுத்துக் கொடுக்கப்படும்.
☛ அத்துடன் கணனிகள் திருத்தியும் கொடுக்கப்படும்.
(43740)(21-19-17)
தொடர்பு:
071 6087510 or 077 6087510

## கடற்றொ[illegible]லாளர் சங்க பிரதிநி[illegible]களுடனான கலந்துரையாடல்

தென்மராட்சி,ஏப்.3

தென்மராட்சிப் பிரதேச கடற்றொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகளுக்கான கலந்துரையாடல கடந்த 31ஆம் திகதி தென்மராட்சி அரசியல் துறைச் செயலகத்தில் நடைபெற்றது.

நாவற்குளி, கச்சாய், பெரியமாவடி, கோயிற்குடியிருப்பு, பியோரியார் ஆகிய கடற்றொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகள் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டு தமக்குள்ள பிரச்சினைகள் குறைபாடுகளை எடுத்துக் கூறினார்கள்.

தென்மராட்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் ஈஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இக் கலந்துரையாடலில், யாழ்.மாவட்ட கடற்புலிகளின் பொறுப்பாளர் அருணன், யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத் தலைவர் சி.தவரட்ணம், சாவகச்சேரி பங்குத் தந்தை அருட்திரு. ரவிச்சந்திரன் அடிகள், யாழ்.மாவட்ட கடற்தொழில் திணைக்கள உதவிப் பணிப்பாளர் க.தர்மலிங்கம், யாழ். மாவட்ட உதவிக் கூட்டுறவு ஆணையாளர் செ.கனகசபாபதி ஆகியோர் கலந்துகொண்டனர். (8-117)

## விற்பனைக்கு

பாவித்த நல்ல நிலையிலுள்ள Sony T.V. (Japan), VEDIO டெக், AUDIO DUB டெக், PIONEER செற், DVD MP3 பிளேயர், AUDIO கெசற் டெக், அம்பு என்பன உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: ஜெகன் வீடியோ, ஓடியோ சென்ரர் சட்டநாதர் வீதி, திருநெல்வேலி.
T.P.: 0776 547245
(43682) (21-19-17)

## EXPOAIR

*your friend in the skies...*



**VACANCY**
**TICKETING & RESERVATIONS AGENT - FEMALE**

IF YOU:
- Are above 18 years of age and possess a pleasing personality.
- Have passed the GCE(O)Level Examination.
- Like meeting people and enjoy interacting.
- Speak fluently in Tamil and English.
- Are Computer literate.
- Are willing to work long hours and a team player.

Then here's the opportunity to join our Airline which is rapidly expanding, where the sky is the limit and be a member of our dedicated team of customer service oriented personnel.

**Please apply within 7 days with full details and 2 non-related referees to:**

**DIRECTOR**
**Sales & Marketing - Passenger**
**EXPO AVIATION (PVT) LIMITED**
**1E, Stanley Road, Jaffna.**

## பிறக்கப்போகும் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு---!
## எமது வாடிக்கையாளர்களின் நன்மை கருதி ஒரே கூரையின் கீழ் தனது சேவையை மேலும் விஸ்தரிக்கவுள்ளது

**01.04.2005 ஆம் திகதி முதல் தினசரி சொகுசுபஸ் சேவை/வான் சேவை**
**கொழும்பு - யாழ் - யாழ் - கொழும்பு**

kit | more Mobitel

திங்கள், வியாழன், சனி ஆகிய மூன்று நாள்களிலும் கொழும்பு - யாழ்.சொகுசு பஸ் வெள்ளவத்தையில் இருந்து காலை 5.00 மணிக்குப் புறப்படும்.

யாழ்-கொழும்பு முதல் பஸ் காலை 7.00 மணிக்குப் புறப்படும் இரண்டாவது பஸ் 7.30 மணிக்கு நெல்லியடி, பருத்தித்துறை, கொடிகாமம் ஊடாக கொழும்பைச் சென்றடையும்.

★ஒரு நாளில் ஒரு பயணத்துக்கு ஒரு டிக்கட் குலுக்கல் முறை மூலம் இலவசம்!

**எமது முகவர்களுக்கு ஒரு நற்செய்தி**
1. Kit Card 100 - 400 - 1000
2. More Card 350 - 1000
3. Sim Card

**பதிவுகளுக்கு:**
1. பஸ்நிலையத்துக்குமுன்உள்ள Atlas Telecom
2. அற்லஸ், இல. 77, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
3. அற்லஸ், இல. 01, கண்டி வீதி, கொடிகாமம்.

மொத்தமாகவும் (சில்லறையாகவும்) பெறும்முகவர்களுக்கு விசேட சலுகைகளுடன் எமது பொருள்களைப் பெற்றுக்கொள்ள வசதிகள்செய்து கொடுக்கப்படும்.தேவை ஏற்படின் தங்கள் வசதியைக் கருத்திற்கொண்டு பொருள்களை உரிய இடத்துக்குக் கொண்டுசென்று வழங்கப்படும்.




**Atlas - அற்லஸ்**

தொடர்புகளுக்கு:- **அற்லஸ் கொமினிகேஷன்**
1. பஸ்நிலையத்துக்கு முன் உள்ள Atlas Telecom :- 222 2031
2. அற்லஸ், இல. 77, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் :- 222 2557, 2990
3. அற்லஸ், இல. 01, கண்டி வீதி, கொடிகாமம் :- 2263400, 2263411,

(C-41638)(53-11)

# நினைவு கூருகின்றோம்



தோற்றம் 24 04 1928

மறைவு 04 03 2005

அமரர்

## செல்லத்துரை அருணாசலம்

(ஓய்வுபெற்ற ஊழியர், இலங்கை வங்கி)

பூவுடலை நீக்கிப் புகழுடம்பைப் பெற்றுக்கொண்ட உங்களை இன்று நினைவுகூர்ந்து அஞ்சலி செய்கின்றோம்.

ஓம் சாந்தி!

01, முதலியார் வீதி,
நாவலர் வீதி, குண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.
(ß/41924)(50-14)

அன்பு மனைவி,
மக்கள், மருமக்கள்,
சகோதரர்கள், உற்றார்,
உறவினர்கள்.

# 46 ஆவது அகவையில்

ஈரவிழிகளுடன் நெஞ்சை உருக்கும்
19 ஆம் மாத நினைவஞ்சலி



அமரர்

## வைத்திலிங்கம் ஜெகதீஸ்வரன்

வித்தாக தாயின் மடியில் 03-04-1959

விதியின் சதியால் காலனின் பிடியில் 03-09-2003

கனிவாக என்னை கைபிடித்த நாள் முதலாய்
கைதனில் தேன் போன்று இனித்ததுவே நம் வாழ்வு
விருப்போடு நாம் இணைந்து பெற்றெடுத்தோம் - நான்கு
மழலைச் செல்வங்களை, விதியின் சதியால் - ஹயஸ்
ஏறிவந்த காலனவன் கரடிபோக்குச் சந்தியிலே
உன் உயிரை காவு கொண்டான் - நான்கு
மழலைகளையும் என்னையும் தவிக்க விட்டு உன்னை
எடுத்துச் சென்றானே, 19 மாதங்களாகியும்
நெஞ்சினிலே உன்னை நினைத்து -உன்
உருவப்படம் முன்நின்று உருகுகிறோம் - உங்கள்
ஆத்மா சாந்திபெற வேண்டி உங்கள் பாதக்கமலத்துக்கு
எங்கள்கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கை ஆக்குகின்றோம்.

374, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

உங்கள் பிரிவால் வாடும்:
அன்பு மனைவி,பிள்ளைகள்.

(43803)(15-18-30)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி செல்வநாயகம் சிவபாக்கியம்



138, சிவப்பிரகாசம் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திருமதி செல்வநாயகம் சிவபாக்கியம் அவர்கள் நேற்று (02.04.2005) சனிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சரவணமுத்து - அன்ன லட்சுமி ஆகியோரின் அன்பு மகளும் காலஞ்சென்ற செல்வநாயகம் அவர்களின் பாசமிகு துணைவி யும் கோகிலாதேவி (ஆசிரியை, யா/கொக்குவில் இந்துக் கல்லூரி), ஜமுனாதேவி (இலங்கை வங்கி, 2ஆம் கிளை யாழ்ப் பாணம்), கிருபாகரன் (விலைமதிப்பீட்டுப் பரிசோதகர், கொழும்பு /EMV ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம்) சாந்தினி, மாலினி (ஆசிரியை, யா/சென்.சாள்ஸ் மகாவித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தாயா ரும் தவராசா (ஓய்வுபெற்ற கிராம உத்தியோகத்தர்), இராசநாயகம், (படவரைஞர், சிமெந்துக் கூட்டுத்தாபனம்), பாலசரோஜா, ஜெயசிங்கம் (கிளை முகாமையாளர், கூட்டுறவுச் சங்கம்) ஆகியோரின் அன்பு மாமியா ரும் ஜனனி, ஜனந்தன், ஜனந்தினி, பவித்திரா, ஜதுர்ஷன், கஜானனன், கஜீபன், ரிஷிகேஷ், ஜசிகேஷ், கஜப்பிரியன், ஷானுப்பிரியன், சாயிப பிரியா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (03.04.2005) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் இருந்து எடுத்துச்செல்லப் பட்டு கோம்பையன் மணல் இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும ஏற்றுக்கொள்ளவும்.

*இல. 138, சிவப்பிரகாசம் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (43797)(15-18-30)

தகவல்:
செ.கிருபாகரன் (மகன்).

## திருமதி நடராஜா சிவ்பாக்கியம்

யாழ்ப்பாணம், திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நடராஜா சிவபாக்கியம் அவர் கள் நேற்று (02.04.2005) சனிக்கிழமை லண்டனில் சிவபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா தம்பதியின் அன்பு மகளும் அமுதரட்ணம் (மலேசியா), ஜெகசோதி (கனடா), காலஞ்சென்ற பத்மா வதி, தங்கரத்தினம் (கனடா), சறோஜினிதேவி (கனடா), சிவனேசன் (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற ரட்ண நாதன், தவராஜா (கனடா), பாலசுந்தரம் (லண்டன்), கதிரவேலு (கனடா), காலஞ்சென்ற சண்முகலிங்கம், பத்மராணி (கொழும்பு) ஆகியோரின் மைத்துனியும் மனோகராஜா (U.K.) சந்திரலேகா, ஸ்ரீதரன் (U.K.), சற்குணராஜா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சோமா (U.K.), காலஞ்சென்ற இராஜேஸ்வரன், கமலாதேவி (U.K.), பாலரோகிணி (பிரான்ஸ்) ஆகியோரின் மாமியாரும் சத்தியேஷ் (U.K.), கிருஷாணி (U.K.), ஜனார்த்தனன், சுகன்யா (டென்மார்க்), லோகதாஸ் (டென் மார்க்), பிரசாந்தன், பவித்திரா, சுஜித்தா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெறவுள்ளன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'சாந்தினிகேதன்',*
*ஆடியபாதம் வீதி,*
*திருநெல்வேலி வடக்கு,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
சந்திரலேகா (மகள்).

(43797)(15-18-30)

# வீடியோ, புகைப்படக் கலைஞர்களுக்கு

யாழ்ப்பாணம்,ஏப்.3

நிதர்சனம் நிறுவனத்தின் ஒளிக்கலை ஒன்றி யத்தின ஏற்பாட்டில் வலிகாமம் வலயத்தைச் சேர்ந்த வீடியோ, புகைப்படக் கலைஞர்களுக் கான கூட்டம் இன்று பிற்பகல் 3 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில்நடை பெறவிருக்கின்றது. (ஐ-3)

# வடிசாலை கழிவுகளால் பாதிப்பென முறைப்பாடு

வரணியிலுள்ள மதுசார வடிசாலையிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுகளால் அயலில் உள்ள குடும்பங்கள் பாதிப்புறுவதாக முறைப்பாடு தெரி விக்கப்பட்டுள்ளது.

வடிசாலையிலிருந்து வெளியேற்றப்படும் கழிவு நீர் அருகில் உள்ள வயல்கள், வீடுக ளில் புகுவதால் துர்நாற்றம் வீசுவதாகவும் -

இங்கிருந்து வெளியேறும் புகையினால் அப்பகுதி மாசடைவதாகவும் தெரிவிக்கப்பட் டது. (எ-117)


## பிரத்தியேக வகுப்பு

A/L 2006, 2007

இணைந்தகணிதம்
(Combined Mathematics)

கொழும்புப் பல்கலைக்கழக பட்டதாரி ஆசிரியரால் வீட்டில் வந்து கற்பிக்கப்படும்.

தொடர்பு: 071 6087510
அல்லது 077 6087510

(43741)


# மரண அறிவித்தல்

## நடராசா காந்திகுமார்

புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் பிராண் ஸிஸ் றோட், வெள்ளவத்தையை வசிப் பிட மாகவும் கொண்ட பொறியியலாளர் நடராசா காந்திகுமார் 01.04.2005 வெள்ளிக்கிழமை கிளி நொச்சியில் அகாலமரணமானார்.

அன்னார் நடராசா அன்னலட்சுமி தம்பதிக ளின் அன்புப் புதல்வரும் சுப்பிரமணியம் - ஞானம்பிகை தம்பதிகளின் மருமகனும் சுகந் தியின் அன்புக் கணவரும் பீரீத்தாவின் அன புத் தந்தையும் நந்தகுமார், நடேசகுமார், ஜீவ குமாரி, செல்வகுமார், செல்வகுமாரி ஆகியோ ரின் சகோதரனும் செந்தில்குமார், சுதாஜினி, சுகிர்தினி அருள்குமரன் ஆகியோரின் மைத்து னரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இல.30, ரோகினி றோட், வெள்ளவத்தையில் வைக்கப்படும். கிரி யைகள் பொரளை இந்து மயானத்தில் நடை பெறும்.

இறுதிக்கிரியைகள் நடைபெறும் திகதி பற்றிய விவரம் பின்னர் அறியத்தரப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினா, நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சே.சுந்தரலிங்கம்.

(சி-41987)(15-18-30)


**லஷ்சுமி சினிமா**

இன்று மட்டும்
M.குமரன் சன் ஒப் மகாலட்சுமி
கா.நேரம்: 11.00. 3.00. 7.00 (ரீல்ஸ்)
04.04.2005 முதல் விஜயின் பிரியமானவளே
(C/41377)(29-16-17)

**நிறைஞ்சனாஸ் சங்கானை**

விஜய், திரிஷா நடித்த
கில்லி (ரீல்ஸ்)
கா.நேரம்: 11.00. 2.45. 6.00. (பு.நே)
(C/41377)(29-16-17)

**நாதன்ஸ் சினிமா** ஆஸ்பத்திரி முன்பாக யாழ்ப்பாணம்.
குளிரூட்டப்பட்டது.
சரத்குமார், நமிதா, வடிவேல் நடித்த
ஏய் (ரீல்ஸ்)
கா.நேரம்: 10.30. 2.30. 6.30. 9.30 (பு.நே.)
விரைவில் குருதேவா
(C/41380)(22-11-45)

**ராஜா** யாழ்ப்பாணம்

சில தினங்கள் மட்டும்
விஜய், பிரியங்கா சோப்றா, விவேக், நாசர் நடித்த
தமிழன் (ரீல்ஸ்)
காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30. (பு.நே.)
(C/41381)(29-16-17)

**நாகம்ஸ் சினிமா** சுன்னாகம்

இன்று முதல் பிரசாந், வடிவேல், மும்தாஜ் நடித்த
லண்டன் (ரீல்ஸ்)
காட்சி நேரம்: 11.00. 3.00. 7:00 (பு.நே.)
(C/41380)(29-16-17)

**மனோகரா** யாழ்ப்பாணம்

பாரதீபன, காவேரி,
மாஸ்டர் அஸ்வின் நடித்த
கண்ணாடி பூக்கள்
காட்சி நேரம்:
10.30, 2.30, 6.30, 9.30 (ரீல்ஸ்)
(C/41378)(29-16-17)


# 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 12-02-1942

மறைவு 04-03-2005

## அமரர் நாகலிங்கம் செல்லத்துரை

(ஜேர்மனி)

திதி : நவமி (03.04.2005)

*அன்புடன் பேசி ஆதரவாய் இருந்தீர்கள்*
*இன்றுடன் நீர் மறைந்து*
*மாதமொன்று அவசரமாய் ஓடியபோதும்*
*ஆறாத எம் துயரங்கள் ஓடிடுமா?*
*பரிவுடன் பாசமாய் எமை வளர்த்து*
*பாரினில் சீலமுடன் வாழவைத்தீர்கள்*
*உங்கள் நினைவுகள் எங்கள்*
*நெஞ்சங்களில் என்றும் நிலைத்திருக்கும்.*

*திருமதி மங்கையர்க்கரசி சண்முகலிங்கம்,*
*55,அத்தியடி, யாழ்ப்பாணம்.*

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(43795)(15-18-30)

# மரண அறிவித்தல்கள்

## சீனியர் இராசா



மயிலிட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும் சங்குவே லியை வசிப்பிடமாகவும் கொண்ட சீனியர் இராசா அவர்கள் 01.04.2005 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுவின் அன்புக் கணவரும் இராசேஸ்வரி, விஜயகுமார், சிவனேஸ்வரி, அருணகிரிநாதன், கெங்காதரன், சுரேந்திரன் ஆகியோ ரின் பாசமிகு தந்தையும் வரதராசாவின் அன்பு மாமனாரும் விஷ்ணுசாந்தி, சிவசக்தி, கிரிதரன ஆகி யோரின் பேரனும் காலஞ்சென்ற நடராசா, காலஞ்சென்ற சிவகுரு, சதா சிவம், அப்புத்துரை, கந்தையா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.04.2005) திங்கட் கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி இந்து மயா னத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: (43809)(15-18-30)
*சங்குவேலி தெற்கு, மானிப்பாய்.* இராசா விஜயகுமார் (மகன்).

## திருமதி விமலாதேவி காராளசிங்கம்



ஆலங்குழாய், சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாக வும் வசிப்பிடமாகவும் தற்போது சுதுமலையில் வசித்தவருமான விமலாதேவி காராளசிங்கம் அவா கள் 31.03.2005 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற காராளசிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான தம்பி ராசா - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான தம்பையா - விசாலாட்சி ஆகியோரின் அன்பு மருமகளும் பிறேமி (கனடா), காலஞ்சென்ற கவிதா ஆகியோரின் பாசமிகு தாயாரும் காந்தலிங்கத்தின் (கனடா) அன்பு மாமியாரும் ரம்மியாவின் பாசமிகு பாட்டியும் காலஞ்சென்ற V.T.கந்த சாமி, மகேஸ்வரி, புஸ்பலீலாவதி, தியாகராஜா, தர்மலிங்கம், யோகராஜா, ஜெயதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் சரஸ்வதியின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.04.2005) ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் சுதுமலையில் நடைபெற்றுப் பூதவுடல் தகனககிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*T.C.Lane,*
*சுதுமலை மேற்கு,*
*மானிப்பாய்.* (43801)(15-18-30)

தகவல்:
கா.பிறேமி (மகள்),
ச.கனகநாயகம் (மைத்துனர்).

## திருமதி ஆறுமுகம் மீனாட்சிப்பிள்ளை

அனுராதபுரத்தைப் பிறப்பிடமாகவும் பருத்தித்துறையை வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி ஆறுமுகம் மீனாட்சிப்பிள்ளை அவர்கள் நேற்று (02.04.2005) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அருளம்பலம் ஆறுமுகம் (அனுராதபுரம் P.W.D. பரிசோதகர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற தரு.திருமதி கதிரவேற்பிள்ளை அவர்களின் அன்பு மகளும் சந்ரோதயம் சுகுமாரன் (பிரதம சிறை அதிகாரி, கொழும்பு), ரகுபதி (உரிமையாளர் துவாரகாஸ் சுன்னாகம் - கொழும்பு) ஆகியோரின் அன்புத் தாயாரும் செந்தில்வேல் (ஓய்வுபெற்ற ஓவசியர் அனிரி மலேரியா), திருமதி லோக நாயகி ரகுபதி (உப அதிபர், இந்துக் கல்லூரி, கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற பரணீதரன், பாமினி, கோகுலன், துவாரகா, அஜீதன் (கணனி பொறியியலாளா) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.04.2005) ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 4 மணியளவில் ஏழாலை தெற்கில் நடைபெற்றுப் பூதவுடல் கொத்தியாலடி மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஏழாலை தெற்கு, ஏழாலை.* (43805)(15-18-30)

தகவல்:
ஆ.இரகுபதி (மகன்).

## மாணிக்கர் லோகேஸ்வரன் கவிதரன்

இணுவில், மஞ்சத்தடியைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிட மாகவும் கொண்ட மாணிக்கர் லோகேஸ்வரன் கவிதரன் (இணுவில் மத்திய கல்லூரி பழைய மாணவன்) ஜேர்மனியில் 30.03.2005 அன்று அகாலமரணமானார்.

அன்னார் லோகேஸ்வரன்-சுகிர்தமலர் தம்பதிகளின் (ஜேர்மனி) அன்பு மகனும் சிவரஜ்சன் (ஜேர்மனி), தர்சினி (ஜேர்மனி), ஸ்ரீவிசாகன் (ஜேர் மனி), மதுமதி (ஜேர்மனி) அனித்தா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), ரவிக்கிருஸ்ணன் (சென். ஜோன்ஸ் கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் திருஞானசம்மந்தன் (சம்பந்தர் இருப்பகம், யாழ்ப்பாணம்), திருமதி திருஞானசம்மந்தர் சங்கீதா (ஆசிரியை, இணுவில் இந்துக் கல்லூரி, ஏழாலை சைவ மகாஜன வித்தியாலயம் - பகுதி நேர ஆசி ரியர்) ஆகியோரின் பெறாமகனும் திருமதி சிவசுப்பிரமணியம் பூமணியின் அன்புப் பேரனும் சப்திகா (ஜேர்மனி), [illegible]ளா (ஜேர்மனி) ஆகியோரின் மாமனும் விஜயமூர்த்தி (ஜேர்மனி), ஜெயரஞ்சினி (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.04.2005) திங்கட்கிழமை ஜேர்மனியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: (43800)(15-18-30)
*மஞ்சத்தடி, இணுவில்.* சி.திருஞானசம்மந்தன் (பெரிய தந்தை).

# பாப்பரசரின் நிலைமை குறித்து புலிகள் இத்தாலிய அரசிடம் கவலை தெரிவிப்பு

## ரோமில் தமிழ்ச்செல்வன் அந்நாட்டு அதிகாரிகளைச் சந்தித்தார்

ரோம்.ஏப்.3

பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பரின் உடல் நிலை குறித்து விடுதலைப் புலிகளின் தலைமை கவலை தெரிவித்திருக்கின்றது.

புலிகளின் தலைமையின் சார்பிலும் தமிழ் மக்களின் சார்பிலும் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் ரோமில் இத்தாலிய அரசு அதிகாரிகளிடம் இதனை நேரில் தெரிவித்துக்கொண்டார்.

ஐரோப்பிய நாடுகளில் விஜயம் மேற்கொண்டுள்ள தமிழ்ச்செல்வன் தலைமையிலான அரசியல் குழுவினர் இத்தாலியின் தலைநகர் ரோமுக்கு வியாழக்கிழமை போய்ச்சேர்ந்தனர்.

அங்கு இத்தாலியின் வெளிவிவகார அமைச்சில் ஆசிய. பசுபிக். அந்திலாந்திக் பிரிவின் பணிப்பாளர் நாயகம் கலண்டியோ பசுபிக்கோவை தமிழ்ச்செல்வன் சந்தித்துக் கலந்துரையாடினார்.

கத்தோலிக்கர்களின் திருத்தந்தையாகிய பாப்பரசரின் உடல் நிலை மோசமடைந்திருப்பது குறித்து தமிழ் மக்களினதும் தேசியத் தலைவர் பிரபாகரனினதும் சார்பில் ஆழ்ந்த கவலையை தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இத்தாலிய மக்களினதும் அரசினதும் ஆழ்ந்த அனுதாபங்களை இத்தாலிய அதிகாரிகள் தமிழ்ச்செல்வனிடம் தெரிவித்தனர்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் மறுவாழ்வுப் பணிகளை முன்னெடுக்க பொதுக் கட்டமைப்பு உருவாக்கப்படவேண்டியதன் அவசியத்தை இத்தாலிய அதிகாரிகள் வலிறுத்தினர்.

பொதுக் கட்டமைப்பு ஒன்றை உருவாக்குவதற்காக நோர்வே அனுசரணையாளர்கள் முயற்சி மேற்கொண்டுள்ளனர். எமது தரப்பு ஆலோசனைகளை நோர்வேக்கு தெரிவித்துவிட்டோம். அந்த ஆலோசனையை நோர்வேத் தரப்பு இலங்கை அரசின் கவனத்துக்குச் சமர்ப்பித்துள்ளது. ஆனால், அந்த யோசனை குறித்து இன்னமும் முடிவை அறிவிக்காமல் அரசு இழுத்தடித்து வருகின்றது. - என்று தமிழ்ச்செல்வன் எடுத்துக்கூறினார்.

"இலங்கையில் கடந்த இரு தசாப்த காலமாக தொடர்ந்த யுத்தம் காரணமாகப் பாதிக்கப்பட்டிருந்த மக்கள், போர்நிறுத்த உடன்பாடு எட்டப்பட்ட பின்னர் நிம்மதி நிலையை அடைந்தனர். கடந்த மூன்று வருடங்களாக யுத்தம் ஓய்ந்திருந்தது. ஆனால், எதுவும் உருப்படியாக நடக்கவில்லை. இதனால் மக்கள் ஏமாற்றமடைந்த நிலையில் உள்ளனர்" என்று தமிழ்ச்செல்வன் இத்தாலிய அதிகாரிகளிடம் விளக்கினார். (ஐ-3)

# ராணுவ 'பீல்ட் பைக்' மோதி பாடசாலை மாணவி காயம்!

## சாவகச்சேரியில் நேற்று மாலை பதற்றம்

தென்மராட்சி.ஏப்.3

சாவகச்சேரியில் நேற்று மாலை படையினரின் மோட்டார் சைக்கிள் பாடசாலை மாணவி ஒருத்தியை மோதிய சம்பவத்தை அடுத்து அங்கு பெரும் பதற்றநிலை உருவாகியது.

படையினரின் 'பீல்ட் பைக்' எனப்படும் மோட்டார் சைக்கிள் மோதியதில் காயமடைந்த மாணவிக்கு யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

சாவகச்சேரி. சங்கத்தானை புளியடிச் சந்தியில் நேற்று மாலை 4 மணியளவில் இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றது.

உடுவில் மகளிர் கல்லூரியில் கல்வி பயிலும் விஜயகுமார் துஷிந்தா(வயது 15) என்ற மாணவியே காயமடைந்தார். 9ஆம் தரத்தில் கல்வி பயிலும் இவர், பாடசாலையில் பரீட்சையில் தோற்றிவிட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்த சமயமே விபத்தில் சிக்கினார். யாழ்ப்பாணத்தில் இருந்து பஸ்ஸில் சென்ற இவர், புளியடிச் சந்தியில் இறங்கி வீதியைக் கடக்க முயன்ற சமயம் எதிரே வந்த 'பீல்ட் பைக்' இவரை மோதியது என்று கூறப்படுகிறது.

சம்பவத்தை அடுத்து அங்கு கூடிய பொது மக்கள் இராணுவத்தின் மோட்டார் சைக்கிளை அடித்துச் சேதமாக்கியபின் தீக்கிரையாக்கினர். பெரும் எண்ணிக்கையில் திரண்ட மக்களைக் கலைப்பதற்காகப் பொலீஸார் கண்ணீர்ப் புகைக்குண்டுகளை வீசினர். இதனால் அங்கு பெரும் பதற்றம் உருவாகியது. அப்பகுதியில் இருந்த கடைகள் இழுத்து மூடப்பட்டன.

காயமடைந்த மாணவி சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்குக் கொண்டுசெல்லப்பட்டார்.

சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்குச் சென்ற தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.ஈழவேந்தன் தனது வாகனத்தில் மாணவியை ஏற்றிவந்து யாழ். ஆஸ்பத்திரியில் அவசர சிகிச்சைக்கு உட்படுத்த ஏற்பாடு செய்தார்.

விபத்தை அடுத்து ஏற்பட்ட பதற்றம் சிறிது நேரத்தில் தணிந்தது. (ஐ-3-31-117-202)

# கனகராயன்குளம் விபத்தில் இளம் பொறியியலாளர் மரணம்

கிளிநொச்சி,ஏப்.3

வன்னியில் கனகராயன்குளம் பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை 4 மணியளவில் இடம்பெற்ற வீதி விபத்தொன்றில் இளம் பொறியியலாளர் ஒருவர் உயிரிழந்தார்.

ஏ-9 வீதியில் இவர் செலுத்திச் சென்ற மோட்டார் சைக்கிள் லொறி ஒன்றுடன் விபத்துக்குள்ளாகியது.

புங்குடுதீவைச் சேர்ந்த நடராசா காந்திகுமார் (வயது 29) என்ற பொறியியலாளரே விபத்தில் உயிரிழந்தவராவார். வெள்ளவத்தையில் கட்டடப் பொறியியல் நிறுவனம் ஒன்றை நடத்தி வரும் இவர், மாதகலில் இடம்பெற்ற மரணச் சடங்கு ஒன்றில் கலந்துகொண்டுவிட்டுத் திரும்பிய சமயமே விபத்தில் சிக்கினார்.

வவுனியா நோக்கி இவர் பயணம் செய்துகொண்டிருந்தபோது எதிர்த்திசையில் வந்த லொறியுடன் விபத்து ஏற்பட்டது.

ஒரு வருடத்திற்கு முன்பே திருமணம் புரிந்த இவர், ஒரு குழந்தையின் தந்தை ஆவார். (ஐ-3)

# கொக்குவில் விபத்தில் யுவதி மரணம்!

யாழ்ப்பாணம்.ஏப்.3

காங்கேசன்துறை வீதியில் - கொக்குவில் பூநாறிமடம் பகுதியில் - நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற ஒரு விபத்துச் சம்பவத்தில் இருபத்தொரு வயதான யுவதி ஒருவர் உயிரிழந்தார்; இளைஞர் ஒருவர் படுகாயமடைந்தார்.

ஹன்டர் ரக வாகனம் ஒன்றும் மோட்டார் சைக்கிளும் மோதிக்கொண்டதால் இந்த விபத்து நேர்ந்தது.

மோட்டார் சைக்கிளில் சென்ற யுவதியே உயிரிழந்தார். மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்ற இளைஞர் படுகாயமடைந்தார்.

உயிரிழந்தவர் கொடிகாமத்தைச் சேர்ந்த கமலநாதன் கலைச்செல்வி (வயது 21) என்று அடையாளம் காணப்பட்டார். ஹன்டர் வாகனத்தின் சக்கரங்களுக்குள் சிக்குண்டே இவர் தலை சிதைந்து உயிரிழந்தார் என்று கூறப்படுகிறது.

காயமடைந்த இளைஞன் வடமராட்சி கிழக்கைச் சேர்ந்த பரிமளராசா சுதர்சன் (வயது 30) என்பவர் ஆவார். இவர்கள் இருவரும் யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவரும் ஒருவரைப் பார்ப்பதற்காக சுன்னாகத்தில் இருந்து மோட்டார் சைக்கிளில் யாழ். நகருக்கு வந்துகொண்டிருந்த சமயமே விபத்தில் சிக்கினர்.

சம்பவம் நடந்த இடத்துக்கு உடனடியாக வந்த போக்குவரத்துப் பிரிவுப் பொலீஸார் யுவதியின் சடலத்தை ஜீப்பில் ஏற்றி ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்சென்றனர். காயமடைந்த இளைஞரும் ஏற்றிச்செல்லப்பட்டு ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார். அவருக்கு அங்கு அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை அளிக்கப்பட்டது.

விபத்து நடந்த இடத்தில் வன்செயல்கள் நிகழ்வதைத் தடுப்பதற்காக கலகம் அடக்கும் பொலீஸார் நிறுத்தப்பட்டிருந்தனர். விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனம் ரெலிக்கொம் நிறுவனத்துக்குச் சொந்தமானது என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ். மேலதிக நீதிவான் ஸ்ரீநிதி நந்தசேகரன் நேற்றிரவு விபத்து நடந்த இடத்தையும் யுவதியின் சடலத்தையும் பார்வையிட்டார். (ஐ-7-12)

## பாப்பரசர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பத்திரிகைகள் நேற்றைய தினமே வெளியிடத் தொடங்கின.

இத்தாலியின் பிரபல பத்திரிகைகளும் திருத்தந்தைக்கு விடை கூறும் செய்திகளை வெளியிட்டன.

புதிய பாப்பரசரை தெரிவுசெய்வதற்காக கர்தினால்கள் ஏற்கனவே வத்திக்கான் வந்து சேர்ந்துள்ளனர். (ஐ-3-12)

## அமெரிக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பார்வையிட்டதோடு முல்லைத்தீவு அரசஅதிபர். சுகாதார உத்தியோகத்தர். கடற்றொழிலாளர் அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் பிரதிநிதிகளையும் சந்தித்துக் கலந்துரையாடினார். பின்னர் புதுக்குடியிருப்பிலுள்ள காந்தரூபன் அறிவுச் சோலை சிறுவர் இல்லத்துக்கு விஜயம் செய்து அங்குள்ள சிறுவர்களோடு அளவளாவினார். காந்தரூபன் அறிவுச்சோலை சிறுவர்கள் பான்ட் வாத்திய அணிவகுப்புடன் அவரை வரவேற்றனர்.

இரவு கிளிநொச்சி நகருக்குத் திரும்பிய டெனி கே.டேவிஸ் இரணைமடுச் சந்தியில் உள்ள விடுதியில் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள மக்கள் பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடினார். விடுதலைப் புலிகளின் திட்டமிடல் செயலகத்தைச் சேர்ந்தவர்கள், சுகாதார. மருத்துவத்துறையைச் சேர்ந்தவர்களென பலதரப்பட்டோரை அவர் சந்தித்துக் கலந்துரையாடினார்.

அரசியல், அபிவிருத்தி, புனர்வாழ்வு, மீள் கட்டுமான விடயங்களென பலதரப்பட்ட விடயங்கள் இச்சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது.

அமெரிக்கக் காங்கிரஸின் ஜனநாயகக் கட்சி உறுப்பினரான டேவிஸ் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு விஜயம் செய்திருப்பது முக்கியத்துவம்வாய்ந்த விஜயமாக நோக்கப்படுகிறது. (ஐ-3-12)

## பொலனறுவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூடிமறைக்க முனைகின்றது.

போர்நிறுத்த விதிகளின்படி ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டு 30 நாள்களுக்குள் அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் இயங்கும் அனைத்து ஆயுதக்குழுக்களினதும் ஆயுதங்கள் களையப்படவேண்டும். எனினும் இதனை மீறி அரசு செயற்படுவதானது சர்வதேச கண்காணிப்பைக் கொண்ட போர்நிறுத்த உடன்பாட்டைக் கொச்சைப்படுத்துகின்ற செயலாகுமென கருத வேண்டியுள்ளது.

அரசுக்கு சமாதானத்தில் நம்பிக்கை இல்லை. போர் மூலம் தமிழீழ விடுதலைப் புலிகளை வென்று தமிழர்களை ஒடுக்கவேண்டும் என்பதே சிங்கள அரசின் நோக்கமாகும். இது தொடருமாயின் நிஜ யுத்தமொன்றின் பரிணாம வளர்ச்சியை எவராலும் தடுக்கமுடியாது.

அரசின் இனவாத நோக்கங்கள் வெளியில் செல்லக்கூடாது என்பதற்காகவே அண்மையில் வெளிநாட்டு ஊடகவியலாளர்களுக்குத் தணிக்கை கொண்டுவரப்பட்டது.

பொதுக்கட்டமைப்பு விவகாரத்தில் அரசு இன்றும் சாதகமான போக்கை வெளியிடவில்லை. இதன் காரணமாக இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபையைப் போன்றே இந்தப் பொதுக்கட்டமைப்பு விடயமும் கானல் நீராகிப்போகும் நிலை ஏற்படப்போகிறது.

- இவ்வாறு 'விடுதலைப் புலிகள்' இதழ் சுட்டிக்காட்டியுள்ளது. (ஐ-12-13)


IIS CITY CAMPUS

MBA

( Master of Business Administration )

Manipal பல்கலைக்கழகத்தின் மேற்படி கற்கை நெறி எமது நிறுவனத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது. பாழ் ' குடாநாட்டில் பயில விரும்புவோர் அல்லது கற்கைநெறி தொடர்பாக ஆர்வம் உடையோருக்கான கருத்தரங்கு ஒன்று நடாத்துவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. மேற்படி கருத்தரங்கில் பல்கலைக்கழகத்தின் இலங்கைக்கான பிரதிநிதிகளும் கலந்து கொள்ளவுள்ளார்கள்.

இடம்: IIS பிரதான மண்டபம்
#100, மணிக்கூட்டு வீதி. யாழ்ப்பாணம்.

காலம்: 16.04.2005
மாலை 03.00 மணி

ஆர்வமுடையோர் பங்கு பற்றிப் பயன் பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்

மேலதிக விபரங்களுக்கு :
Mrs. Chelvy Suntheresen, Centre Manager
T.P : 021 222 8060

Director
IIS, City Campus,
# 181, Navalar Road, Jaffna.



அத்தி பூத்தது போல

விபரங்களுக்கு15ஆம் பக்கம் பார்க்கவும்


## மரண அறிவித்தல்

### கந்தையா சபாரத்தினம்

3ஆம் வட்டாரம், குறிகாட்டுவான், புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும். செல்வாநகர், கிளிநொச்சியை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா சபாரத்தினம் அவர்கள் 31.03.2005 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - மாரிமுத்து தம்பதிகளின் அன்பு மகனும் ஜெகதீஸ்வரியின் அன்புக் கணவரும் ஸ்ரீகௌரி, ஜெயசங்கர், ரவிசங்கர், ஜெயகௌரி, தவச்செல்வி, லக்சுமிதேவி, மதிசங்கர் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சரோஜினிதேவி, சோதிமலர், ஜெகதீஸ்வரன், சுதேந்திரன், காலஞ்சென்ற தயாபரன் ஆகியோரின் மாமனாரும் மகேஸ்வரி, சிவபாக்கியம், மேகவர்ணன் ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.04.2005) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்குச் செல்வாநகர், களிநொச்சியில் அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆனந்த நகர் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
S.ரவிசங்கர் (மகன் - சுவிஸ்).

கிளிநொச்சி. (43806)(30-15-18)


EXPOAIR எக்ஸ்போ ஏயார்

your friend in the skies... வானத்தில் உங்கள் நண்பன்...





தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை

ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்

கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1

யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999

E-Mail : reservations@expoavi.com, jaffna@expoavi.com


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 03.04.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

சூரியகாந்தி
உதயன்
ஞாயிறு சிறப்பம்சம்
03.04.2005

# அடுத்த ‘சுனாமி’ வருவதற்கு முன்னரேனும் பொதுக்கட்டமைப்பு வந்துவிடுமா, என்ன?

இப்பொழுது அரசுக்கு நிபந்தனை எதுவுமின்றியே பெருமளவு நிதி கிடைத்துள்ளது. டோக்கியோவில் நிபந்தனைகளுடன் முன்மொழியப்பட்ட 4.5 பில்லியன் டொலரிலும் பார்க்க மிக அதிகமான தொகை கிடைத்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

அத்துடன், இங்கு செயற்படுகின்ற சர்வதேச



அரசசார்பற்ற தொண்டு நிறுவனங்களின் செயற்பாடுகள் மூலம் பலகோடி ரூபாய்கள் கிடைத்துள்ளன. இவற்றைவிட உலக நாடுகளுக்கு சிறிலங்கா செலுத்தவேண்டிய கடன் மற்றும் வட்டிகளினையும் பல நாடுகள் இரத்துச் செய்துள்ளன.

சுனாமிக்கு முன்னான போரின் பாதிப்புக்களின் புனர்நிர்மாணமாக இருந்தாலும் சரி, சுனாமி பாதிப்பு புனர்நிர்மாணமாக இருந்தாலும் சரி அரசு – புலிகள் ஒரு பொதுக்கட்டமைப்பு ஒன்றின் தேவையினை உணர்ந்து அதனைச் சர்வதேச சமூகமும் வலியுறுத்தி வருகின்றது. இணைந்த செயற்பாடுகள் நீண்ட கால பிரச்சினைக்கு தீர்வுகான நல்லவழி என்று மேலும் அது கூறுகின்றது.

ஆனால், அரசோ இது தொடர்பில் சிரத்தை கொண்டுள்ளதாகத் தெரியவில்லை. நோர்வே முன்வைத்த பொதுக்கட்டமைப்பை ஏற்றுக் கொண்டுள்ளனர் புலிகள். அரசு எந்த முடிவினையும் கூறாது காலத்தை இழுத்தடிக்கின்றது. சென்ற வாரமளவில் பொதுக்கட்டமைப்பு விடயம் தொடர்பில் இணக்கங்கள் காணப்பட்டுவிடும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

இப்பொழுது டோக்கியோ நிதியைப் பெற சமாதானம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். சுனாமி நிதிக்கு பொதுக்கட்டமைப்பு வலிறுயுத்தப்பட்டுள்ளது.

ஓர் இக்கட்டான நிலைக்குள் இன்று ஆளும் தரப்பு டோக்கியோ நிதியிலும் பார்க்க சுனாமி நிதியை பெறுவதற்கான வழி மிகச் சுலபமானது.

தென்னிலங்கை அரசியல் கட்சிகளின் நிலைப்பாட்டில், மாற்றம் ஏற்படுமா என்று காத்திருக்க தமிழர் தரப்பு இனியும் பொறுமை காக்கமாட்டாது. பொதுக்கட்டமைப்பு விடயத்தில் தடையாக இருப்பது தனியே ஜே.வி.பி தான் என்று கூறமுடியாது. முழுத் தென்னிலங்கைக் கட்சிகளும் இதில் தடையாகவே உள்ளன என்று நோக்கர்கள் கூறுகின்றனர்.

புலிகளிடம் அரசு போன்ற சகல கட்டுமாணங்களும் உள்ளது. சர்வதேசத்தால் பகிர்ந்தளிக்கப்படுகின்ற நிதியினை சரியான முறையில் அவர்கள் கையாள்வார்கள். இதனால், சர்வதேச சமூகத்தின் நற்பெயரும் அவர்களை அங்கீகரித்து விட்டது போலாகிவிடும். இதனால், எதிர்கால அரசியலில் பல சவால்களுக்கு சிங்கள தலைமைகள் முகம் கொடுக்க வேண்டிவரும்.

ஐ.தே.கட்சியின் நிலைப்பாடு பற்றி நண்பர் ஒருவர் பேச்சுக் கொடுத்தார். அதற்கு ஓர் உதாரணத்துடன் அமைதியானார். அதாவது, சுனாமிக்குபின் சந்திரிகா அவசரகாலச் சட்டத்திற்கு மீண்டும் உயிர் கொடுத்தவேளை, ஐ.தே.கட்சியினர் எதிர்த்தனரே. தவிர அதனை எதிர்த்து வாக்களிக்கவில்லை.

### புலிகளுடன் பேச எது நேரம்?

சுனாமிக்கு உதவியமைக்கு நன்றி தெரிவித்து வெளிநாடுகளுக்கு பயணம் மேற்கொண்ட கதிர்காமர் இந்தியாவில் கூறிய விடயம் “புலிகளுடன் பேச நேரம் இதுவல்ல” என்பதாகும். இதே காலத்தில் இலங்கைக்கு வந்த எரிக்சொல்ஹெய்ம் என்ன சொன்னார்?

சமாதான முன்னெடுப்புக்களும் ஆழிப்பேரலை அனாத்த நிவாரணம் மற்றும் புனரமைப்பு பணிகளும் ஒரே நேரத்தில் முன்னெடுக்கப்பட வேண்டியவை– என்றார். அத்துடன், அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட வடக்கு – கிழக்கு மாகாணங்களின் மீள் கட்டுமானப்பணிகளினை மேற்கொள்ள அரசு– புலிகள் உள்ளடக்கிய கட்டமைப்பு ஒன்றை வலிறுயுத்தி பேசியதுடன், அதற்கான முயற்சிகளையும் மேற்கொண்டார்.

கதிர்காமரின் கூற்றை பிற அரசியல்வாதிகளின் கூற்றுப்போலத் தான்தோன்றித்தனமான கருத்தாகக் கொள்ளமுடியாது. அது சந்திரிகாவின் நிலைப்பாட்டுடன் ஒத்துள்ள கூற்று. சந்திரிகாவின் எடுகோளாகவே கதிர்காமர் செயற்படுகிறார் என்பதை அறிவோம்.

இது ஒரு புறம் இருக்க சுனாமி புனரமைப்புக்கு நிதி உதவி செய்யப் பொதுக்கட்டமைப்புக்காகக் காத்திருப்பதாக ஆசிய அபிவிருத்தி வங்கி அரசுக்கு அறிவித்துள்ளது. விரைந்து செயற்படுமாறும் அது கேட்டுள்ளது. அது 150 மில்லியன் டொலருக்கும் அதிகமாக வழங்கவுள்ளது. பாதிக்கப்பட்ட பல நாடுகளில் இலங்கை இரண்டாவது. இதனால், அதிக உதவி கிடைத்துள்ளது. இந்த நிலை தொடர்ந்தால் இந்த உதவிகள் வேறு இடங்களுக்கு மாறினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.



இந்த நிலையில் தான் பொதுக்கட்டமைப்புக்கு புலிகள் சில புதிய யோசனைகளை வெளிநாட்டில் வைத்து நோர்வேத் தரப்பிடம் கையளித்திருக்கின்றனர். அந்த யோசனைகள் எவை என்பது தெரிவதற்கு முன்பாகவே அரசு அவற்றை ஏற்பதற்கு வாய்ப்பு இல்லை என்ற கருத்தும் தெரிவிக்கப்பட்டு விட்டது.


ஆக மொத்தத்தில் அடுத்த ‘சுனாமி’ வந்தாலும் பொதுக்கட்டமைப்பு வரவே வராது என்பதே யதார்த்தமாகத் தெரிகிறது.

சி.கேசவன்

## மனச்சாட்சி

உண்மையை உள்ளே
உட்கார வைத்து
பொய்யை வெளியே
போகச் சொல்லியது
மனச்சாட்சி
மூடி மறைத்து
கௌரவத் தூணை
கட்டிப்பிடித்து
கானல் பொய்யை
காட்டி நிற்கிறது மனம்
நெஞ்சை நிமிர்த்தி
நிரபராதியென
தற்காலிகமாக
தப்பித்தாலும்
சுயங்கள் அனைத்தும்
சோபையிழந்து
குற்றவாளியென
மண்டியிட்டு கிடக்கிறது
மனச்சாட்சி முன்

கு.தவசீலன்
விசுவமடு



தெற்கு அரசியலில் இப்படியும்
பலவிதமான வேடிக்கைக் களங்கள்!

# செருப்பு (சிரிப்பு) – அதன் சிறப்பைச் சீர்தூக்கிப் பார்ப்பதே நமது பொறுப்பு

செருப்பு மனிதர்களுக்கு அத்தியாவசியமாகத் தேவைப்படுவது. சிக்கனம் என்ற வகையிலே தேவைகளுக்கு மிஞ்சிய ஆடம்பரப் பொருள்கள் பலவற்றைத் துறந்த காந்தியடிகள் கூடச் செருப்பைத் துறந்தாரில்லை. ஒரு சமயம் அவருடைய காது அறுந்த செருப்பைச் செப்பனிட 'அவ்வளவு' கூலி கொடுக்க விரும்பாத அவர் அதனை தாமே செப்பனிட்டுக் கொண்டாராம்.

தென்னாபிரிக்கச் சிறைச்சாலையில் அவர் வாழ்ந்த போது வேலையின் மகத்துவம் கருதிச் செருப்புத் தைக்கவும் அதைச் செய்யவும் கூடக் கற்றுக்கொண்டார். அவரை அங்கு சிறைப்படுத்திய வெள்ளைக்கார அரசாங்கத்தின் பிரதமர் ஸ்மட்ஸ் என்பவராவர். 'தீமையை எதிர்க்கிறேன், ஆனால் எதிரியை நேசிக்கிறேன்' என்பதற்கிணங்க அவர் ஸ்மட்ஸ் மீதும் பகைமை பாராட்டவில்லை.

தென்னாபிரிக்காவிலிருந்து இந்தியா திரும்பிய பொழுது காந்தியடிகள் சிறைச்சாலையில் தாமே தைத்து முடித்த ஒரு சோடிச் செருப்பினை ஸ்மட்ஸ்க்கு அன்பளிப்பாக வழங்கினார். கால் நூற்றாண்டு கழிந்த பின்னர் ஸ்மட்ஸ் அது குறித்துச் சொல்லும்போது 'அந்த மகான் செய்த காலணிகளை அணிய எனக்குத் தகுதியில்லை' என்றாராம்.

முன்னர் ஒரு முறை குடையைப் பற்றி எழுதியதும் செருப்பைப் பற்றியும் எழுதலாமே எனச் சிலர் கேட்டுக்கொண்டனர். அதைப் பற்றிச் சிந்தித்தபோது நினைவுக்கு வந்த குறிப்புத்தான் மேலே கண்டது. செருப்பு என்று பொதுவாகச் சொன்னாலும் சப்பாத்து மற்றும் காலணி வகைகள் எல்லாமே இதனுள் அடங்கும்.

கைத்தடி சரியாக நடப்பதற்கு மட்டுமல்ல சமயத்தில் அது தற்காப்புத் தாக்குதலுக்கும் பயன்படலாமல்லவா? செருப்பும் அப்படித்தான். எனது ஆசான் காலஞ்சென்ற வித்துவான் க.ந.வேலன் அவர்கள் அப்பொழுதெல்லாம் வலதுகால் செருப்பின் முன்பகுதிக்குள் காலை நுழைத்துக்கொண்டு பின்பகுதி வாரை காலைச்சுற்றிப் பொருத்தாமலே விட்டிருப்பார். அதற்கு அவர் 'யாராவது என்மீது கைவைத்தால்




அல்லது வாய் வைத்தால் கழற்றிக் கொடுப்பதற்குத்தான் அப்படி.....' என்று விளக்கமும் கொடுத்தார். ஆனாலும் எனக்குத் தெரிந்தவரை அப்படி யாரும் அவரால் செருப்படி பட்டதில்லை... வாயடிதான் பட்டிருக்கிறார்கள். கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணனும் 'பாதையில் போகும் பெண்ணைப் பார்த்துப் பல்லிளிப்பதும் ஒருவகைச் சிரிப்பு. அதன் பலனாய் உடனே பரிசாய்க் கிடைப்பது பாழறுந்த பழஞ்செருப்பு' என்றிருக்கிறார். நமது இளைஞர்கள் சிலர் கூட அப்படி நடந்து பெண்களிடமிருந்து 79.90 பரிசு பெறுவதுண்டல்லவா?

ஆமாம், நம் நாட்டிலேயுள்ள இரு பெரும் காலணித் தயாரிப்பாளர்களும் மட்டமாக என்றில்லாமல் 90 சதமும் வரக்கூடியதாகவே தங்கள் தயாரிப்புக்களுக்கு விலை போட்டிருப்பார்கள். பேருந்து நடத்துநர்கள் சிலர் ஐம்பது சதம் ஒரு ரூபாய் என மிச்சம் கொடுக்காத இந்தக் காலத்திலே கூட கொழும்பிலேயுள்ள அவர்களின் காட்சியறைகளில் மறந்துவிடாமல் பத்துச் சதம் மிச்சம் கொடுப்பார்கள். அதுவும் எப்படித் தெரியுமா? விசேட தினங்களில் வெற்றிலையில் வைத்துக் கைவிசேடம் கொடுப்பது போல.... மத்திய வங்கியில் பெறப்பட்ட புத்தம் புதிய பளிச்சிடும் பத்துச்சத நாணயத்தையும் பற்றுச்சீட்டுக்குள் வைத்துத்தான்...

செருப்புடன் சென்று வெறுங்காலுடன் திரும்புபவர்கள் பற்றியும் வெறுங்காலுடன் சென்று செருப்புடன் திரும்புபவர்கள் பற்றியும் இந்த இடத்திலே சொல்லத்தான் வேண்டும்.

செருப்பு எவ்வளவுதான் முக்கியமானது என்றாலும் கோவில், திருமண மண்டபம் போன்ற இடங்களைப் பொறுத்தவரை அவைகளை வெளியே கழற்றி விட்டுத்தான் உள்ளே சென்றுவர வேண்டும். அதனால் உள்ளே சென்றவர்களின் நினைவெல்லாம் தங்கள் செருப்புகளைப் பற்றியதாகவே இருக்கும். வெளியே 'ஜோடி மாற்றம்' நிகழாமல் இருக்கவேண்டுமே– செருப்புக் காணாமற் போகாதிருக்க வேண்டுமே என்ற எண்ணமே 'போன காரியத்தை' விட முக்கியமாக அவர்களின் மனங்களில் நீக்கமற நிறைந்திருக்கும்.

பெரிய கோவில்களில் மட்டும் சைக்கிள் பாதுகாப்பு நிலையம் போல இவைகளைப் பாதுகாத்துக் கொடுக்கும் வசதிகள் இருப்பதுண்டு. கடலை விற்பனையாளர்களும் இந்தச் சேவைகளைச் செய்வதுண்டு. அவர்களில் பலரும் அதற்காகத் தனியாகக் கட்டணம் பெறமாட்டார்கள். அதற்கு நன்றிக்கடனாக கடலை, கற்பூர வகைகளை அவர்களிடமே வாங்கினால் போதும்.

செருப்புக் களவு என்பது பெரும்பாலும் தெரியாமல், தற்செயலாக மாறிக் கொழுவிக்கொண்டு போவதினால் தான் சம்பவிக்கிறது என்றும் கொள்ளலாம். இதனைத் தவிர்ப்பதற்கு ஒரு வழி சொல்லுகிறேன்.

செருப்பைக் கழற்றி விடும்போது அவைகளைச் சோடியாக– 'அரசாள' வைப்பது போலில்லாமல் அங்கொன்றும் இங்கொன்றாகவும்– வளம் மாறியும் வைக்கவேண்டும். அப்படியென்றால் உங்களைத் தவிர வேறெவரும் பின்னர் அதனை அப்படித் தேடிக்கொண்டிருக்க மாட்டார்கள். ஆனால், நீங்களே பின்னர் அப்படி உங்களுடையதைத் தேடும்போது மற்றவர்கள் உங்களைத் தவறாக நினைக்காமலும் பார்த்துக்கொள்ள வேண்டும்.

ஒரு திருமண மண்டப வாயிலில் புதிய றப்பர் செருப்பைக் கழற்றிவிட்டு நான் உள்ளே சென்றதை யாரோ 'கண்' வைத்து விட்டார்கள். கல்யாணச்சபை கதைச்சபா எல்லாவற்றையும் முடித்துவிட்டு வெளியே வந்ததும் எனது செருப்பைக் காணவில்லை. அதற்குப் பதில் எனக்காக அங்கே மிகப் பழைய ஒரு சோடி றப்பர் செருப்பு இருந்தது. வெறுங்காலுடன் சென்று செருப்புடன் திரும்புவதை விட அது பரவாயில்லை. என்கிறீர்களா?

ஆப்ரகாம் லிங்கனாக இருக்கவேண்டும். ஒரு சமயம் அவர் தமது சப்பாத்தைத் துடைத்துக் கொண்டிருக்கும் போது அவரது நண்பர் ஒருவர் வந்துவிட்டார். கேலியாக 'உங்களது சப்பாத்தை நீங்கள் தான் துடைப்பீர்களா?' என்றார். லிங்கன் அவருக்குச் செருப்படி போலப் பதிலடி கொடுத்தார். "ஆமாம்..... நீங்கள் என்றால் யாருடைய சப்பாத்தையெல்லாம் துடைப்பீர்கள்."

– சண் அங்கிள்

# சுனாமி பாதித்த கிணறுகளை இறைப்பதால் நன்னீர் வராது

ஆழிப் பேரலை அனர்த்தம் நிகழ்ந்து மூன்று மாதங்கள் நிறைவடைந்துவிட்டன. ஆனால், அதன் தாக்கம் மக்கள் மனங்களிலிருந்து முற்றாக நீங்கிவிடவில்லை.

பல்லாயிரக்கணக்கான மக்கள் உயிர்நீத்தும் சொத்துக்களை இழந்தும் அகதி வாழ்க்கைக்குப் பழக்கப்பட்டு வாழவேண்டிய தேவைக்குத் தள்ளப்பட்டமை மிக வேதனைப்படவேண்டிய விடயம்.

பல்வேறு வகையான காரணங்களையும் எடுகோள்களையும் ஆதாரப்படுத்தி விஞ்ஞானிகளும் புவிச்சரித வியலாளர்களும் சுனாமியின் தோற்றத்தை விளங்கப்படுத்தியிருப்பினும் அது எந்த ரீதியில் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக உள்ளது என்பது கேள்விக்குறி.

நாம் எல்லோரும் பௌதீக ரீதியான இழப்பிற்கு முதன்மைப்படுத்தி அதன் பெறுமதியையும் கணித ரீதியில் குறிப்பிடுகின்றோம். ஆனால், இயற்கை வளங்களின் இழப்பு, சூழல் சமநிலையின் தாக்கம் என்பவற்றைப் பெரிதாகக் காட்டிக்கொள்வதில்லை. உண்மையில் இயற்கை வளத்திற்கு நாம் குறிப்பிட்ட பெறுமதியை நிர்ணயிக்க முடியாததும் அதன் முக்கியத்துவத்தை உணராததுமே உண்மையான காரணமாகும். ஆழிப்பேரலை அனர்த்தத்தால் எவ்வகையான இயற்கை வளம் அழிக்கப்பட்டுள்ளது எனக்கேட்கும் பட்சத்தில் உடனடியாக நாம் கூறுவது பயன் தரு பல மரங்கள். இவை கடற்கரையை அண்டிய பிரதேசத்தில் அழிக்கப்பட்டுள்ளன என்பது பலரின் விடை அல்லது கருத்து.

ஆனால், மிக முக்கியமான ஒரு வளம் மிக மிகப் பாதிப்புக்குள்ளானது என்பதைப் பலரும் மிகைப்படுத்துவதில்லை என்பதுடன் அதன் முக்கியத்துவத்தை உணர்வதில்லை. அந்த முக்கிய வளமானது நன்னீர் – குடிதண்ணீராகும். யாழ்ப்பாணத்தின் சில பகுதிகளிலும் கிளிநொச்சியின் பூநகரிப் பகுதியிலுமே பொதுவாக இவ்வளம் (நன்நீர்) அரிதாகக் காணப்படுகிறது. ஆனால், இன்று சுனாமியினால் பாதிக்கப்பட்ட அனேகமான பிரதேசங்களில் குடி தண்ணீரைப் பெற்றுவந்த திறந்த கிணறுகள் உவராகிவிட்டன.

இதனால் மீளக்குடியமர உத்தேசித்துள்ளவர்களின் ஜீவனோபாயத்திற்கு இது ஒரு புதிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது.

பலரிடையே மிக முக்கியமாக எழும் கேள்விகளில் ஒன்று – அதாவது கடற்கரையை அண்டிய பிரதேசத்தில் மிகத் தூய நீர் கிடைக்கின்ற போதும் சற்றுத் தொலைவில் உவர் நீர் கிடைக்கின்றதே இது ஏன்?

இந்தக் கேள்விக்கான விடையுடன் இயற்கை வளத்தை எவ்வாறு கட்டியெழுப்ப முடியும் என்பதை ஆராய்வோம்.

கடலை அண்மித்த பிரதேசம் என்பது ஒருபுறம், கடலையும் மறுபுறம் மணல் மண்ணையும் கொண்டது.

இப்பிரதேசத்தில் நிலத்தடி நீர் ஊற்று என்னும் பேச்சுக்கிடமில்லை. அதாவது கடல் நீரானது மணற் பகுதியில் ஊடறுத்து குறிப்பிட்ட ஆழத்தில் மேற்பரப்பு கடல் நீராக காணப்படும். ஆனால், மழை காலத்தில் மழையினால் பெறப்படும் நீரில் ஒரு பகுதி வழிந்தோடிக் கடலையடைவதுடன் பெரும் பகுதி மணல் மண்ணின் ஊடறுக்கும் இயல்பினால் மணலின் ஊடாகச் சென்று கடல் மேற்பரப்பு நீர்மேல் படையாகக் காணப்படும்.

ஒரு கேள்வி:- இரு நீரும் கலக்காமல் எவ்வாறு படையாகக் காணப்படும்.

வாஸ்தவம்தான். அதாவது நீரானது மண் துணிக்கைகளுக்கிடையே செல்வதுடன் மழை நீரின் அடர்த்தி கடல் நீரின் அடர்த்தியை விடக்குறைவாக இருப்பதால் மழைநீர் ஒரு படையாகக் கடல் நீரின் மேல் காணப்படுகிறது. இதுவே கடற்கரை நன்நீர் வளத்தின் அடிப்படைத் தத்துவம்.

இதனால் தான் கடற்கரைப் பிரதேசத்தில் உள்ள கிணறுகள் ஆழம் குறைவாகவும் உயர்ந்த தரமான நீரைக் கொண்டும் காணப்படுகின்றன.

மேலும் இவ்வகையான கிணறுகளை மென்மேலும் ஆழமாக்கும் போது சில வேளைகளில் கடல் மேற்பரப்பு நீர் நன்நீர் படையை உடைத்து வருவதால் குறிப்பிட்ட கிணறு முற்றாக உவர் நீராக மாறிவிடும். இதற்கு மாற்று வழி எதுவுமில்லை. அதாவது குறிப்பிட்ட கிணற்றை மூடிவிடுவது நன்று.

சுனாமி அனர்த்தத்தால் பெரும் அலைகளாக எழுந்த கடல் நீர் கரையின் பெரும்பகுதியைத் தாக்கியுள்ளது. அதாவது மழைநீர் மேற்பரப்புப் படை கடல் நீருடன் கலந்துள்ளதால் கிணற்று நீர் சற்று சவராகவும், கிணற்றுக்கு மேலாகக் கடல்நீர் எழும்பியதால் கிணறுகள் துர்நாற்றமிக்கவையாகவும் அழுக்காகவும் காணப்படுகின்றன.

முன்னர் கடல் நீர் நன்னீருடன் கலக்கவில்லை. இப்போது எப்படி சாத்தியம்? நன்னீராவது அடர்த்தி குறைந்தது. அது கீழாகவும் சுனாமியினால் அடர்த்தி கூடிய கடல் நீர் மேலாகவும் உள்ளது. எனவே அடர்த்தி வேறுபாட்டால் நீர் கீழ் மேலாக அசையுறும் போது கடல் நீர் நன்னீருடன் கலக்கப்படும். இதுவே சவர்த்தன்மையான நீர்த்தன்மையை உருவாக்கும். பெருமளவான நன்னீர் படையுடன் சிறு அளவு செறிவு கூடிய நீர் கலந்தமையே மேற்படி சவர் நீருக்குக் காரணம். மக்கள் தங்கள் சொந்த இடங்களில் மீளக் குடியமரும் போது சில நிறுவனங்களாலும், அமைப்புக்களாலும் மேற்படிக் கிணறுகள் சுத்தப்படுத்தப்பட்டு வருகின்றன. ஆனால், ஏற்கனவே பெறப்பட்ட தரத்திற்கு ஈடான நீரைப் பெறமுடியவில்லை என்பது மிக பிரச்சினையான விடயம்.

அதாவது மேற்பரப்பு மழைநீர் தற்போது அலையினால் கொண்டு வரப்பட்ட கடல்நீருடன் கலந்துள்ளதால்தான் இவ்வகையான சுவை வேறுபாட்டிற்குக் காரணம்.

இதற்கு நீரை வெளியேற்றுதல் என்பது தீர்வல்ல. அத்துடன் அளவுக்கதிகமாகப் பலதடவை நீர் இறைத்தல் என்பது நிரந்தரமாகக் கடல் நீர் வருவதற்கான சாத்தியத்தை உருவாக்கும்.

**செ. செந்தில்குமரன்** *(நீர் சுகாதார திட்ட அலுவலர்)*

எனவே, மீளக்குடியமரும் மக்கள் கிணற்றிலுள்ள அழுக்குகளை அகற்றுவதுடன் சிறிய விசையுடன் கூடிய நீர் வெளியேற்றலை (Slow pumping) செய்வதே நல்லது (நீண்ட நேரம்).

மேலும் தற்போது செய்யப்படும் நீர் இறைப்பானது ஒரு போதும் தரமான நீரைத் தராது என்பது வெளிப்படை.

அப்போ இதற்கு தீர்வு இல்லையா....?

உண்டு. பலத்த ஒரு மாரி மழைக்குப் பின்பே இது சாத்தியப்படும். அதாவது அதுவும் உடனடியாக அல்லாமல் படிப்படியாகப் பலமான மழை பெய்யும் போது மேற்பரப்பு மழைநீரில் கலந்து கடல் நீரின் செறிவு ஐதாக்கப்படுவதுடன் ஓரளவு உப்புக்கள் கடலுக்கு அடித்துச்செல்லப்படும். இதன்மூலம் தான் பழைய தூய, தரமான குடி தண்ணீரை ஏற்கனவே உள்ள கிணறுகளிலிருந்து பெறமுடியும்.

எனவே கிணறுகளை சுத்தப்படுத்துவதற்காக அளவுக்கதிகமாக இறைக்க வேண்டாம். தேவைப்படின் குறைந்த விசையுடன் கூடிய இறைத்தலைத் தெரிவு செய்யவும். இதுவே எமது சமூகப் பிரச்சினைக்குத் தீர்வை கொண்டு வரும். ◆

## மொட்டைக் கடிதம்!

முதுகெலும்பே இல்லாத
முட்டாள் மாந்தரால்
முன்னின்று ஆற்றக்கூடிய
முதற்தரக் கைங்கரியம்தான்
மொட்டைக் கடிதம்!

பெட்டைத்தனமான
பேதை மாந்தரின்
கெட்டித்தனம் ஒன்றுதான்
மொட்டைக்கடிதம்!

தன் பெயரிட்டாலே வரும்
தரித்திரம் என்றெண்ணி
தந்திரமாய் பெயர் தவிர்க்கும்
தறுதலை மனிதரின்
தன்னிகரற்ற செயல்தான்
மொட்டைக்கடிதம்!

நற்குணத்துப் பண்பறியா
நற்குலத்துப் பிறப்புமறியா
நடைபிணங்கள் புரிகின்ற
நற்காரியம் இதுவேதான்
மொட்டைக்கடிதம்!

காய்க்கின்ற மரமதனை
கல்லெறிந்து காயப்படுத்தும்
கடைகெட்ட மனிதரின்
காரியச் சிறப்புத்தான்
மொட்டைக் கடிதம்!

வினைத்திறன் ஏதுமற்ற
வீணாய்ப் போனோரின்
விபச்சார மொத்த
விசித்திர விடயம்தான்
மொட்டைக்கடிதம்!

– மானிப்பூர் குணா

# சிரிக்கும் நாளே திருநாள்...!

நகைச்சுவை உணர்வு ரொம்ப முக்கியம். அது இல்லாது யாராலும் உண்மையான அன்பு செலுத்தவே முடியாது. மனம் விட்டுச் சிரியுங்கள். உங்களது பலம் பெருகும். தன்னம்பிக்கை பல மடங்கு அதிகரிக்கும் .

ஷல்லர் ( Robert H.schuller) என்பவரது உற்சாகமூட்டும் வார்த்தைகள் இவை.

*"உண்மையான அறிவின் வேலையெல்லாம் நகைச்சுவையுடன் கூடியதே"* என்ற பெர்னாட்ஷா

*"கொடுமை இல்லாமலே தீமையை அழிப்பதற்கு நகைச்சுவையால்தான் முடியும்"* என்றார்.

*"பெரிய பிரச்சினைகளுக்குச் சிறந்த முடிவுகளைக் காணச் சிரிப்பு உதவுகிறது. என்றார்"* ரோமானியக் கவிஞர் ஹெறாரேஸ்.

*"சிரித்துக் கொண்டே அறையுள் நுழையும் மனிதனைக் கண்டால் இன்னொரு விளக்கு அறைக்கு வந்தது போல இருக்கும்"* என்றார் றொபேர்ட் லூயி என்பவர்.

*"ஒருமுறை சாப்பிடுங்கள், இரண்டு முறை தண்ணீர் பருகுங்கள், மூன்று முறை உழையுங்கள், நான்கு முறை சிரியுங்கள்"*

*முடியுமென்றால் உங்களிடம் அந்த உண்மையான நகைச்சுவை உணர்வு உண்டு என்று நம்பலாம்"* என்றார் நகைச்சுவை நடிகர் கே.ஏ.தங்கவேலு.

சிறந்த கருத்துக்களை நகைச்சுவை கலந்து எல்லோருக்கும் புரியும்படி நயம்பட வெளிப்படுத்தமுடியும் என்பதைத் திரைப்படங்களில் சித்திரித்துக் காட்டியவர்களில் முன்னோடி, கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன்.

*"கவலைகளை மறந்து வயிறு குலுங்கச் சிரிப்பதுதான் நகைச்சுவை. ஒருவரின் மனதைப் புண்படச் செய்வது நகைச்சுவை அல்ல"* என்று நகைச்சுவைக்கு இலக்கணம் வகுத்தவர் என்.எஸ். கிருஷ்ணன் என்று கூறுகிறார் நகைச்சுவை நடிகர் நாகேஷ்.

*'சிரிப்பு இதன் சிறப்பைச் சீர்தூக்கிப் பார்ப்பதே நமது பொறுப்பு. துன்ப வாழ்விலும் இன்பம் காணும் விந்தை புரிவது சிரிப்பு....... மனக் கவலையைப்போக்கி மூளைக்குத் தரும் சுறுசுறுப்பு'* என்றார் என்.எஸ்.கே.

நகைச்சுவையும் கோபமும் ஒரே நேரத்தில் சேர்ந்தே வராது. ஆனால், அந்தக் கூட்டுறவைப் பயன்படுத்த முயற்சி செய்தால் நீங்கள் வெற்றி அடைந்ததாக உணர்வீர்கள். அதனால் எதைப் பற்றியாவது உங்களுக்குக் கோபம் வந்தால் ஒரு நகைச்சுவைப் புத்தகத்தைக் கையில் எடுத்து வைத்துக்கொள்ளுங்கள். அல்லது நகைச் சுவைத் திரைப்படத்தைப் பாருங்கள்.

விதியை விரட்டியடிக்கச் சிரிப்பைத் துணைக்கழைத்தார்.

*"நகை ஈகை இன்சொல்*
*இகழாமை நான்கும்*
*வகை ஏன்ப வாய்மைக் குடிக்கு"* – என

வகையாகச் சொன்ன வள்ளுவர், தமது குறளொன்றில் நகைச் சுவையை வெகு அழகாகக் கலக்கின்றார்.

*"முகை மொக்குள் உள்ளது*
*நாற்றம் போல் பேதை*
*நகை மொக்குள் உள்ளது*
*ஒன்று உண்டு"*

*(குறள் 1274)*

– அரும்பு தோன்றும் போது அடங்கியிருக்கும் மணத்தைப் போல் அவளது புன்முறுவலின் தோற்றத்தில் அடங்கியிருக்கும் குறிப்பு ஒன்று உள்ளது. இது கருத்து

*"அவள் மெல்லச்*
*சிரித்தாள்*
*ஒன்று சொல்ல*
*நினைத்தாள்*
*அந்த பொல்லாத*
*கண்ணனின்*
*ராதை...."*

"மோகனப் புன்னகை
ஏனோ?
*அநுராகத்தின்*
*இன்னிசை தானோ?...."*

"மோகனப்
புன்னகையில் ஓர்நாள்
மூன்று தமிழ்
படித்தேன்...."

"முத்துச் சரம் போலே
மோகனப் புன்னகை

*என்ன விலை?"*

*"என் இதயம் சொன்ன விலை!..."*

புன்னகையின் விலை மதிப்பை இந்தக் கவிதை வரிகள் உண்மையில் உயர்த்தியே விடுகின்றன.

பலரைச் சிரிக்க வைத்துக் கொண்டிருக்கும். வோல்ட் டிஸ்னி தன்கைப்பட வரைந்த கார்ட்டூன் ஒன்று ஒன்றரைக் கோடி ரூபாய்க்கு விற்பனையாகியது. அவர் 1934 இல் வரைந்த கார்ட்டூன் அது.

சிரிக்கச் சிரிக்கப் பேசுகிறவர்கள் போன ஜன்மத்தில் நிறையப் புண்ணியம் செய்தவர்கள் என்றுதான் சொல்லவேண்டும்.

சத்திர சிகிச்சையை விட ஆயிரம்



## சிரிப்பு..... அதன் சிறப்பை சீர்தூக்கிப்பார்...!

இதுதான் சந்தோஷ வாழ்க்கைக்கு வினோபா சொன்ன ஃபார்முலா (Formula)

*"சிரித்து வாழ நேரத்தை எடுத்துக்கொள். அது இதயத்தின் இன்னிசை"* என்றார் ஜேம்ஸ்துபரி.

*"சிரிக்காத நாள்தான் ஒருவன் வாழ்க்கையில் வீணாக்கிவிட்ட நாள்களில் மிக மோசமான நாளாகும்"*

*நிக்கலஸ் சாம் பேர்ட் என்பவரது கணிப்பு இது.*

*'முடிந்தால் அமைதியான சிரிப்பின் இரகசியத்தைக் கற்றுக்கொடுங்கள்'* என்று ஆசிரியரைக் கேட்டுக்கொண்டார். ஆப்ரஹாம்லிங்கன். *("If you can Teach him the secret of quiet laughter")*

*"நகைச்சுவை என்பது ஆணி மாதிரி. நம் கருத்து என்பது ஒரு பலகை மாதிரி. மக்கள் மனதில் நம் கருத்து வலுவாக நிற்கவேண்டுமென்றால் நகைச்சுவை அவசியம்"*

*நகைச்சுவை பற்றி பேராசிரியர் கணை.சிற்சபேசன் இவ்வாறு கூறுகிறார்.*

*"நகைச்சுவை என்பது ஒரு குடை போல. குடையால் மழை வராமல் செய்ய முடியாது. ஆனால், மழையிலிருந்து காப்பாற்ற முடியும். அதே போலத்தான் நகைச்சுவையும். கவலைகளை வராமல் செய்யமுடியாது விட்டாலும் அதை மறக்கச் செய்து விடும்"* என்பது இன்னொருவரது அபிப்பிராயம்.

*"இன்று நாட்டிலுள்ள எல்லாப் பிரச்சினைகளுக்கும் தீர்வு கிடைக்காவிட்டாலும், அந்தப் பிரச்சினைகளை மறக்க வைக்கும் மயக்க மருந்து மாதிரி நகைச்சுவை செயல்படுகிறது"*

*நகைச்சுவை எழுத்தாளர் கிரேஸி மோகன் கருத்து இது:*

*"வாழ்க்கையில் மிக முக்கியமாய் ஒவ்வொருவரும் பெற்றிருக்கவேண்டியது உண்மையான நகைச்சுவை உணர்வு. உங்களைப் பார்த்தே, உங்கள் செயல்களைக் கண்டே, உங்களால் உண்மையாகச் சிரிக்க முடியுமா?*

மனோதத்துவாதிகள் இதனை *'நகைச்சுவைச் சிகிச்சை'* (Humour Therapy ) என்று அழைக்கிறார்கள்.

நகைச்சுவை என்பதே நமக்குள் இருக்கும் மூர்க்கத்தனங்களுக்கு மறைமுகமாக வடிகால் என்கிறார்கள் மனோதத்துவ நிபுணர்கள்.

*'கோபத்திலேயொரு*
*சொல்லிற் சிரித்துக்*
*குலுங்கிடச் செய்திடுவான்*
*மனஸ்தாபத்திலே*
*யொன்று செய்து*
*மகிழ்ச்சி*
*தளிர்த்திட*
*செய்திடுவான்....'* –

என்றார் கண்ணனைப் பற்றிய பாடலில் பாரதியார்.

*"நான் ரகசியங்களின்*
*ரசிகன்*
*அதனால் தான்*
*புரியாத புதிர்களை*
*புன்னகையால்*
*அவிழ்க்கிறேன்"* என்றார் கவிஞர்

*மு.மேத்தா*

*"இன்பமெங்கே இன்பமெங்கே*
*என்று தேடு – அது*
*எங்கிருந்தபோதும் அதை*
*நாடி ஓடு..."* என்று சொன்ன

கவிஞரொருவர்.

*"இணையில்லா மனையாளின்*
*வாய்மொழியே இன்பம் – அவள்*
*இதழ்சிந்தும் புன்னகையே*
*அளவில்லாத இன்பம்"* என்று தமது

தேடுதலின் முடிவைத் தெரிவிக்கின்றார்.

*"நான் பார்ப்பதெல்லாம்*
*அழகின் சிரிப்பு"* என்ற கவிஞர்

கண்ணதாசன்.

*"ஆண்டவனின் தோட்டத்திலே*
*அழகு சிரிக்குது*
*ஆகாயம் பூமி எங்கும்*
*இளமை சரிக்குது*
*வேண்டுமட்டும்*
*குலுங்கிக் குலுங்கி*
*நானும் சிரிப்பேன்– அந்த விதியைக் கூட*
*சிரிப்பினாலே விரட்டி அடிப்பேன்"* – என்று

*மின்னுதடி...."*

*"சிரித்தாள் தங்கப் பதுமை*
*அடடா அடடா*
*என்ன புதுமை...!"*

*"அரும் புதிர முத்துதிர*
*அழகு சிரிக்குது*
*கரும்பு முகம் கண்டவுடன்*
*கவலை பறக்குது..."*

*"ஒரு பூ மழை தான்*
*இங்கு பொழிகிறது*
*நீ புன்னகை புரிகையிலே..."*

*"செந்தமிழ் தேன் மொழியாள் அவள்*
*சிரிக்கும் மலர்க் கொடியாள்..."*

*"செங்கனி வாய் திறந்து*
*சிரித்திடுவாய்*
*தித்திக்கும் தேன் குடமே*
*செண்பகப் பூச்சரமே...."*

*"முத்து முத்தாய் சிரிப்பதற்கே*
*பாடம் வேண்டுமா?*
*முத்தமிழே முழுநிலவே*
*மோக வண்ணமே*
*முப்பொழுதும் எப்பொழுதும்*
*நமது சொந்தமே..."*

*"பார்த்தேன் சிரித்தேன்*
*பக்கம் வரத்துடித்தேன்*
*உனக்கே என நான்*
*நினைத்தேன்..."*

*"ஏன் சிரித்தாய்*
*என்னைப் பார்த்து உன்*
*எழில் தனைப் பாடவா*
*தமிழைச் சேர்த்து..."*

போன்ற பாடல்வரிகள் இக் குறளிலிருந்து மலர்ந்து விரிந்தனவோ என்று எண்ணத் தோன்றுகிறது.

*"சோலை மலரொளியோ உனது*
*சுந்தரப் புன்னகை தான்..."* – என்ற

பாரதியார் பாடலையும் இதில் சேர்த்துக்கொள்ளலாம் போன்றே தோன்றுகிறது.

*"இதோ எந்தன் தெய்வம்*
*முன்னாலே நான்*
*ஒரேயொரு புன்னகையில்*
*கண்டேனே..."*

*"இந்தப் புன்னகை*

மடங்கு சக்தி கொண்டது சிரிப்பு.

சிரிக்கச் சிரிக்கப் பேசுகிற ஒருவரால் தான் மக்களின் தலைவராக ஆக முடியும்.

*"சிரிப்பதற்குத் தடையாக நமக்குள் ஏதாவது ஒரு இமேஜ் இருந்தால் அதை உடைத்தெறிவதைத் தவிர வேறுவழியில்லை"*

பரமஹம்ச ஸ்ரீ நித்தியானந்த சுவாமிகள் சொல்லும் கருத்து இது.

நகைச் சுவை உணர்வுக்கு வாழ்நாளை நீடிக்கும் ஆற்றல் உண்டு என நம்புகிறார் ரிச்மேன் என்கின்ற மனோதத்துவ நிபுணர்.

*"செங்கதிரால் தாமரைகள்*
*சிரித்திருக்கும்*
*சேர்மதியால் அல்லிமலர்*
*வாய்சிரிக்கும்*
*பொங்கிவரும் மழைவரவால்*
*பயிர்சிரிக்கும்*
*பொய்யாத மொழிக் குறளால்*
*குலம் சிரிக்கும்*
*துங்க முறச் சிரித்திருக்கும்*

தருவது :–
க.கணேசலிங்கம்

*அறிவால் ஆய்ந்து*
*தூயனவன் சொல்வழியில்*
*பொதுமை காண*
*இங்கினி நாம் முயலுவமேல்*
*புதுமை பூக்கும்*
*புல்லடிமை தேய்ந்து சம*
*நிலையே வாய்க்கும்"*

என்கிறார் முடியரசன் என்ற கவிஞர்.

*"காதல் கார்த்திகைத்*
*திருநாள்*
*மனம் கலந்தால்*
*மார்கழித் திருநாள்*
*சேர்வது பங்குனித்*
*திருநாள்*
*நாம் சிரிக்கும் நாளே*
*திருநாள்..."*

*"ஆனந்தம் இன்று ஆரம்பம்*
*மெல்ல சரித்தாலென்ன*
*இதழ் விரித்தாலென்ன?"*






# இனி ஆயுதங்களை அறிவோம்




அணு வெடிப்பு



ஸ்ரிங்கர் ஏவுகணை



நீர் மூழ்கி



விமானந் தாங்கிக் கப்பல்





ஆட்டிலரி



கைத்துப்பாக்கி

பாலனும் வேலனும் காட்டு வழியாகப் போனார்கள். கரடி வந்தது. பாலன் மரத்தில் ஏறினான். மரத்தில் ஏறத் தெரியாத வேலன் செத்தவன் போலக் கிடந்து கரடியை ஏமாற்றினான் என்று நாம் தொடர்ந்தும் தமிழ் சொல்லிக் கொடுக்க இயலாது. தமிழை நவீன மயப்படுத்த வேண்டும். டேனிஸ் பிள்ளைகளுடைய வாசிப்பிற்காக ஆயுதம் என்ற பெயரில் வெளியான நூலை இங்கு தமிழில் தருகிறோம். பிள்ளைகளுக்கு மட்டுமல்ல பெரியோருக்கும் இது மிக அவசியமானது.

இன்றைய உலகில் அதிகாரத்தைப் பாதுகாக்கும் கடவுளாக ஆயுதங்களே இருந்து வருகின்றன. அதி நவீன ஆயுதம் யாருடைய கையில் இருக்கிறதோ அவரே உலகின் அதிகாரத்தைக் கையாளும் வல்லரசாக மாறுகிறார். ஆதி மனிதனின் கல்லாலான ஆயுதத்தைப் பார்க்கும்போது இன்று எமக்கு நகைப்பு வருகிறது. அதுபோல இன்றைய ஆயுதங்களும் வருங்காலத்தில் நகைப்பிற் கிடமாகும். அவ்வளவு தூரம் புதிய புதிய ஆயுதங்களின் வளர்ச்சி அபாரமாக உள்ளது. சென்ற நூற்றாண்டுவரை அணு குண்டே அதிக ஆபத்தான ஆயுதமாகக் கருதப்பட்டது. ஆனால் இன்று உயிரியல் இரசாயன ஆயுதங்கள் அதைவிடப் பயங்கரமானவையாக மாறியுள்ளன. இனி ஒவ்வொரு ஆயுதங்களாகப் பார்த்துச் சீெல்வோம்.

**இங்கிலாந்தில் நடைபெற்ற நவீன கொலையும் நஞ்சு உமிழும் குடைத்துப்பாக்கியும்!**

1978 ஆம் ஆண்டு பல்கேரியாவைச் சேர்ந்த ஒருவர் இங்கிலாந்தில் வைத்து மர்மமான முறையில் கொல்லப்பட்டார். பல்கேரியாவைச் சேர்ந்த இந்த நபரைக் கொன்றவர் அவருடைய நாட்டைச் சேர்ந்த உளவுப் படையைச் சேர்ந்த ஒருவர்தான்.

ஒரு குடையில் கம்பித் துவாரத்தின் வழியாக நச்சு ஊசியை வேகமாகப் பாய்ச்சி இந்தக் கொலையை நடத்தினார். குடையைத் திறப்பதற்கான விசையைத் தட்டுவது போல தட்டினாலே போதும் உள்ளே இருக்கும் நச்சு ஊசி மறு முனையில் இருந்து புறப்படும். வலி தெரியாமலே எதிரியின் உடம்பிற்குள் ஊசி பாய்ந்துவிடும். அதன் பின்னர் அந்த ஊசியில் இருந்து கசியும் நஞ்சு உடனடியாக அந்த நபரைக் கொன்றுவிடும். சிகிச்சை அளிக்க முடியாத மரணம் இது. தெருவால் போகும் ஒருவர் கூட்டத்தோடு கூட்டமாக வந்து தனது குடையின் முனையினால் உரசிவிட்டுப் போனாலே போதும் கதை முடிந்துவிடும். இது ஆயுதங்களின் வளர்ச்சியில் ஒரு கட்டம். இனி சற்றுப் பின்நோக்கிக் கற்காலத்தில் இருந்தது ஆயுதங்களின் வளர்ச்சியைப் பார்ப்போம்.

**உலகத்தின் முதலாவது ஆயுதம் எது?**

கல்லே, மனிதன் பாவித்த முதலாவது ஆயுதம். 2,50,000 வருடங்களுக்கு முன்னர் மனிதன் பாவித்த கல்லால் செய்யப்பட்ட கோடரியை இங்கே காண்கிறீர்கள். இதுதான் நாம் அறிந்தவரை கைக்குக் கிடைத்துள்ள மனிதனின் முதலாவது ஆயுதமாகும். கூர்மையான பளிங்குக் கல்லை ஆயுதமாக்கி மிருகங்களை வேட்டையாடியிருக்கிறான் மனிதன். பின் அதனால் மனிதனே மனிதனைத் தாக்கியிருக்கிறான்.

ஆயுதங்களின் வரலாற்றிலே அடுத்து முக்கியம் பெறுபவை உலோகங்களாகும். வெங்கலக்காலம், செப்புக்காலம் என்று தோன்றிய காலங்களில் அவ்வக்கால உலோகங்களில் ஆயுதங்கள் தோன்றின. கி.மு.2000ஆம் ஆண்டளவில் இரும்மை மனிதன் கண்டறிகிறான். அதன் பின்னர் இரும்பினாலான வாள் போர்க்களத்தின் முக்கிய கருவியாகியது. சிந்துவெளி நாகரிகக் காலத்து மக்கள் வாளை அறிந்திருந்தார்கள். இரும்பை அறிந்திருக்கவில்லை. அதுபோல கேடயத்தையும் அறிந்திருக்கவில்லை. வடக்கில் இருந்து வந்த இவர்களுடன் போரிட்ட ஆரியர்கள் கேடயத்தை அறிந்திருந்தார்கள்.

கல்தோன்றி - கல்லில் இருந்து ஆயுதங்கள் தோன்றி- மண் தோன்றாக் காலத்தே- மண்ணில் இருந்து உலோகங்கள் வெளிவர முன்னரே வாளோடு முன்தோன்றிய மூத்தகுடி, தமிழ்க் குடி என்று ஒரு தமிழ்ப் பாடல் உள்ளது. இப்பாடல் கல்லை வாள்போல பாவித்த இனமாகத் தமிழர் இருந்தனர் என்ற செய்தியைத் தருகிறது. ஆதிகால ஆயுதம் என்றாலும் வாள் இன்றுவரை முக்கிய கொலைக் கருவியாகவே இருந்து வருகிறது.

**கைத்துப்பாக்கி எப்போது கண்டு பிடிக்கப்பட்டது?**

சுமார் 200 வருடங்களுக்கு முன்னர் போர்க்களத்தில் கைத்தூப்பாக்கி ஆயுதமாகப் பாவிக்கப்பட ஆரம்பித்தது. ஒற்றை வெடி வெடிக்கும் - டோல் என்ற ஒரு வகைத் துப்பாக்கியை அப்போது பாவித்தார்கள். பகை கொண்ட இருவர் பொது இடத்தில் நின்று ஒருவரை ஒருவர் சுட்டு மோதுவார்கள். இப்படியாக போருக்கு இந்தத் துப்பாக்கி பாவனைப்படுத்தப்பட்டது.

சுடுவதில் வேகமும், வீரமும் கொண்டவர் உயிர் பிழைக்க மற்றவர் மடியவேண்டிய நிலை அல்லது காயமடையும் நிலை இருந்தது. ஆனால், பல குண்டுகளால் சுடக்கூடிய றிவோல்வர் இதற்குப் பின்னரே வருகிறது. ஆறு குண்டுகளைப் போடக் கூடியவையாக இவை இருந்தன. அதைவிட அதிகமான குண்டுகளை உள்ளடக்கிய மகசீன்களைப் போடும் கைத்துப்பாக்கிகள் இப்போது பாவனையில் உள்ளன.

**துப்பாக்கிகளுக்கும் றைபிள்களுக்கும் என்ன வேறுபாடு?**

றைபிள் என்பது இரு கைகளைப் பாவித்து சுடும் துப்பாக்கியாகும். சுமார் 100 வருடங்களுக்கு முன்னர் றைபிள்கள் கண்டு பிடிக்கப்பட்டன. உட்புறமிருந்து குண்டு மின்னல் வேகத்தில் சுழன்று வெளியேறும் கைத்துப்பாக்கிகளை விட இலக்குகளை நோக்கி குறி தவறாமல் சுடக்கூடியவை றைபிள்களாகும்.

**தானியங்கித் துப்பாக்கிகள் எப்போது வந்தன?**

தானியங்கித் துப்பாக்கிகள் மிகமிக ஆபத்தானவை. 1920இல் முதல் தடவையாக தானியங்கித் துப்பாக்கி பாவனைக்கு வந்தது. முதலாவது தானியங்கித் துப்பாக்கியின் பெயர் தொம்சன். அமெரிக்காவில் இதை றொமி தொம்சன் என்று அழைத்தார்கள். ரஸ்யத் தயாரிப்பான ஏ.கே.47 இன்றும் உலகம் முழுவதும் பாவனைப்படுத்தப்படும் ஆயுதமாக இருந்து வருகிறது. இன்றுள்ள நிலையில் இயந்திரத் துப்பாக்கிகள் நிமிடத்திற்கு 1000 குண்டுகளை உமிழ வல்லன. வளைகுடாப் போரில் எம்-60 என்னும் புதுவகை இயந்திரத் துப்பாக்கி அறிமுகமானது. இவை துப்பாக்கிகளில் ஏற்பட்ட படிமுறை வளர்ச்சியாகும்.

**பீரங்கித் தாக்குதல்கள் எப்போது ஆரம்பித்தன?**

போர்த்துக்கேயர் 1505 ஆம் ஆண்டு இலங்கைக்குள் கால் வைத்தபோதே பீரங்கியை அறிந்திருந்தனர். பீரங்கிகள் கட்டிடங்களையே தகர்க்க வல்லவை. நவீன பீரங்கிகள் முதலாவது உலகப் போரில் பாவிக்கப்பட்டன. அப்போது மிகவும் பிரபலமாகப் பாவிக்கப்பட்டது பரீசக் பீரங்கி. இதை ஜேர்மனியர்கள் முதலாவது உலகப் போரில் பாவித்தனர். பாரீசைத் தாக்குவதற்காக இதைப் பயன்படுத்தியதால் பரீசக் பீரங்கி என்ற பெயர் ஏற்பட்டது . இது 128 கிலோமீற்றர் தூரத்திற்கு தாக்குதல் நடத்தக் கூடிய பீரங்கியாக இருந்தது. இன்று புதிதாக வந்த பீரங்கிகளோ ஏவுகணைகளையே வீசவல்லவை. பத்து வினாடிகளுக்கு ஒன்று வீதம் ஏவுகணைகளை செலுத்த வல்லவை. இவை 17 கிலோமீற்றர் தூரம் கடந்து இலக்குகளைத் தாக்கும். இவற்றில் இலகுவாகப் பீரங்கிகளையே ஆட்டிலறி என்று அழைக்கிறார்கள்.

**போர்களத்தில் ஆகாயத் தாக்குதல் எப்போது ஆரம்பித்தது?**


விமானத்தில் இயந்திரத் துப்பாக்கியைப் பூட்டிச் சுடும் ஆகாயத்தாக்குதல் முதலாம் உலகப் போரில் ஆரம்பித்துவிட்டது. முதலாம் உலகப் போரில் ஆகாயத் தாக்குதலில் மிகப் பிரபலம் பெற்ற விமானி ஒருவர் இருந்தார். இவர் பெயர் றெட் பரன். இவர் விமானத்தில் இருந்து ஆகாயப் போரை நடத்தி 80 விமானங்களைச் சுட்டு வீழ்த்தியவராகும். 1918ஆம் ஆண்டு நடைபெற்ற வான் போரில் மரணமடைந்தார். இந்த வகையில் இப்போது உலகில் மிகப் பிரபலமாக இருப்பது எப் -16 ஜெட் விமானமாகும்.

**கடலடியில் நடைபெறும் நீர்மூழ்கிக் கப்பல்களின் போர்!**

இன்று உலகையே அழிக்குமளவிற்கு பெருந்தொகையான நீர் மூழ்கிக் கப்பல்கள் அணு ஆயுதங்களைச் சுமந்தபடி உலக சமுத்திரங்கள் முழுவதும் ஓடித்திரிகின்றன. சில நீர் மூழ்கிக்கப்பல்கள் நீரின் அடியில் பல மாதங்கள் இருக்க வல்லவை. உலகின் மிகப்பெரிய நீர் மூழ்கிக் கப்பல் தைப்பூன். இது ரஸ்யாவைச் சேர்ந்தது. 26,000 தொன் எடை. 532 மீற்றர் நீளம். 160 பணியாளர்களையும் கொண்டது. இதில் 20 ஏவுகணைப் பிரிவுகள் உண்டு.


**பாரிய விமானம் தாங்கிக் கப்பல்கள்!**

USS HARRS S; TRUMAN தான் அமெரிக்காவின் பாரிய யுத்தக்கப்பலாகும். இது மூன்று உதைபந்தாட்ட மைதானங்களின் பரப்பளவு கொண்டது. கடலில் ஒரு நகரம்




கற்கோடாரி



வாள்கள்



குண்டு வீச்சு விமானம்



இயந்திரத் துப்பாக்கி




குடைக்குள் நச்சு ஊசி

# யாழ்ப் பாணம்



# நிஜமும் நிழலும்

**நம்** முன்னோர் சொல்லி வைத்த முதுமொழிகள் அர்த்தம் பொதிந்தவை. எக் காலத்துக்கும் ஏற்ற யதார்த்த கருத்துக்கள் அவை. அனுபவவாயிலாகக் கண்டும் கேட்டும் சம்பந்தப்பட்டும்அவர்கள்வெளிக்கொணர்ந்த உணர்வுகள் அவை. அதனால் தான் இத்தனை ஆண்டுகளாகியும் இன்றும் நிதர்சனமாய் நிலைத்து நிற்பவை.

முன்னோர் சொல்லி வைத்த முதுமொழிகள் இன்றைய இளம் தலைமுறைக்கு வேப்பங்காயாய் கசப்பவை. பழக்க தோஷத்தால் என்னைப் போன்ற வயதானோர் வாயிலிருந்து பழமொழியொன்று வெளியானால் இன்றைய இளம் தலைமுறை இலேசாக எமக்குச் சூட்டி விடும் பட்டம் பழசு, செவிண்டி. இன்னும் பல. 'அறளை பேந்து போச்சு' என்றும் விமர்சிக்கப்படுவதுண்டு.

அதனால் பல சந்தர்ப்பங்களில் என்னைப் போல் 'பழசுகள்' மௌனம் காப்பதுண்டு.

வம்பை விலைக்கு வாங்குவானேன்?

ஆனால், அண்மையில் அடுத்தடுத்து ஏற்பட்ட அனுபவங்கள் இரண்டினை இந்த வாய்ப்பின் மூலமாவது வெளிக்கொணரும் மன உந்துதலே இன்றைய யாழ்- பாணம்.

'திரை கடலோடியும் திரவியம் தேடு.' இது முன்னோர் சொல்லி வைத்த முதுமொழியொன்று.

இது யாழ்ப்பாணத்துப் பரம்பரைக்கு மிக்க பொருத்தமாய் அமைவதும் கூட.

இன்று இதனை புலம் பெயர்ந்து வாழ்தல் எனக் கொஞ்சம் நாகரிகமாகக் கூறிக்கொள்ளலாம்.

பல ஆண்டுகளுக்கு முன்னரே யாழ்ப்பாணத்தார் பலர் திரை கடலோடித் திரவியம் தேடும் நோக்கில் வெளி நாடுகளுக்குச் சென்றதும், தமது விடாமுயற்சி, கடும் உழைப்பு, நேர்மை, விசுவாசம் இவை காரணமாய் தாம் சென்ற நாடுகளில் பேரோடும் புகழோடும் வாழ்ந்து திரவியம் தேடியதும் வரலாற்றுச் செய்திகள்.

இன்றைய இளம் தலைமுறைக்கு உதாரணம் காட்டுவதானால் இன்றும் பழுத்த பழங்களாய் ஒரு சிலர் சிங்கப்பூர், மலாயன் பென்சனியர்-மார் யாழ்ப்பாணத்து மண்ணில் வாழ்வதைக் காட்டலாம்.

சென்ற நாடுகளில் அவர்களும் கூட வெவ்வேறு மொழி, மத, கலாசார சூழலில் தான் வாழ நேர்ந்தது. ஆயினும் அவர்கள் பிறந்த மண்ணுக்கேயுரிய தனித்துவத்தை, மொழிப் பற்றை, மதப்பற்றை- இவற்றுக்கெல்லாம் மேலாக இனப்பற்றை மறந்ததுமில்லை; தொலைத்ததுமில்லை. மாறாக சந்தர்ப்ப சூழ்நிலையாலோ அல்லது நோக்கத்தை எட்டியதாலோ தாம் தேடிய தேட்டத்துடன் மீண்டு வந்து இந்த மண்ணிலேயே தம் இறுதிக் காலத்தைக் கழித்தனர்- கழிக்கின்றனர்.

சரி. விஷயத்துக்கு வருவோமே!

நான் நன்கறிந்த டாக்டர் அவர். எனது ஊரையே சேர்ந்தவர். என்னை விடப் பத்து வயது மூத்தவராயிருக்கலாம்.

நேரகாலத்துடன் அரச தொழிலிலிருந்து இளைப்பாறி பிரத்தியேகமாக வைத்தியத் தொழில் செய்தவர்.

நல்ல கைராசிக்காரரெனப் பெயரெடுத்தவர். ஆகையால் வருமானத்துக்குக் குறை வில்லை.

பிறந்த மண், தாய் மொழி, தமிழ்க் கலாசாரம் - இவை மீது பெரும் பற்றுக் கொண்டவர்.

இரண்டே பிள்ளைகள், ஆணும் பெண்ணும். மீன் குஞ்சுக்கு நீச்சல் கற்றுக் கொடுக்க வேண்டியதில்லை.

இருவரும் நன்றே கற்றுக் தேர்ந்து டாக்டர்கள் ஆனவர்கள் .

தமிழர் என்பதால் இந்நாட்டில் கிட்டாத மதிப்பும் கௌரவமும் மேலை நாட்டில் கிட்டியதால் அரச தொழிலைப் புறக்கணித்து லண்டனில் தொழில் பெற்று நிரந்தரமாகத் தங்கி விட்டவர்கள்.

தாயையும் தந்தையையும் தம்முடன் அழைத்து வைத்துக் கொண்டமை ஏற்கப்பட வேண்டியதொன்றே.

பிள்ளைகளுடன் கூடிவாழ விரும்பினாலும் அவர்களுக்குச் சுமையாக இருக்க விரும்பாது இன்னும் லண்டனில் தனியார் மருத்துவமனை ஒன்றில் வைத்திய ஆலோசகராய் பணிபுரிகிறார். அவர்களது தந்தையார்- நானறிந்த அந்த வயதான டாக்டர்.

பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் என்ற பந்த பாசப் பிணைப்பில் திருப்தியாய் வாழ்வதுடன் வருடமொருமுறை பிறந்த மண்ணுக்கு வந்து உற்றார், உறவினர், நண்பர்களுடன் ஒரு சில நாள் தங்கிச் செல்வதில் அவர் ஆனந்தமும் மன நிறைவும் காண்பதாக ஒவ்வொரு தடவையும் இங்குவரும் வேளையில் அவர் சொல்லிக் கொள்கிறார். இவற்றுக்கெல்லாம் மேலாக யாழ்ப்பாண மண்ணில், யாழ்ப்பாணத்தமிழ்பேசி, நாலு பல கோவில்களில் ஆண்டவன் தரிசனம் செய்வதில் ஆத்ம திருப்தி கிட்டுவதாக அவரது அபிப்பிராயம்.

இன்றைய இளம் தலைமுறைக்கு 'நிறை குடம் தழும்பாது' என்ற முதுமொழிக்கு உதாரணம் காட்டுவதானால் அவரைத் தான் காட்ட இயலும்.

ஏறக்குறைய பத்து ஆண்டுகளுக்கு முன்னர் நாட்டில் நிலவிய பயங்கரமான அரசியல் சூழ்நிலையில், இராணுவத்தின் இரும்புக் கரங்களுக்குள் சிக்கிக் கொள்ளாது, பிறந்த மண்ணையும் உறவுகளையும் விட்டு எங்காவது தப்பி ஓடி உயிர் பிழைத்துக் கொள்ளும் நோக்கில் வெளிநாடுகளுக்கு ஓடித்தப்பிய யாழ்ப்பாணத்து இளைஞர்களில் எனது அடுத்த வீட்டுக்காறரின் மகனொருத்தனும் அடக்கம். வீட்டுக்கு மட்டுமல்ல நாட்டுக்கும் பயன்படாதவன் எனப் பெற்றவர்களால் கூடக் கருதப்பட்ட அளவுக்கு இளம்வயதிலேயே பிஞ்சில் பழுத்த அவன் உண்மையில் பாதிக்கப்பட்டு வெளிநாடுகளில் தஞ்சமடைந்த இளைஞர்களில் தானும் ஒருவனாகி ஜேர்மனி நாட்டில் கால் பதித்தான். கடந்த வாரம் தன் பிறந்த மண்ணுக்கு வந்திருந்த அவனை மரியாதையின் நிமித்தம் கண்டு பேச அயல் வீட்டுக்குச் சென்ற எனக்கு ஒரு கணம் ஏனடா இங்கு வந்தோம் என எண்ணுமளவுக்கு அடுத்த வீட்டின் சூழ்நிலை மனத் தாக்கத்தை ஏற்படுத்தி விட்டது.

"ஹாய், அங்கிள் எப்படி இருக்கீங்க?"

அவனது வரவேற்கும் பாணியே என்னை முகம் சுளிக்க வைக்கிறது!

ஜேர்மனி நாட்டில் பெரியதோர் தொழிற்சாலையொன்றில் பெரிய பதவியொன்றில் இருக்கிறானாம். யாழ்ப்பாணத் தமிழ்ப் பண்பாட்டுக்குச் சற்றும் பொருத்த மேயில்லாத நடையுடை பாவனை.

கையில் தங்கக்காப்பு ஒற்றைக் காதில் கல்பதித்த தோடு. தோளைத் தொட்டு வழியும் கூந்தல். சந்தேகமேயில்லை, சாட்சாத் அர்த்த நாரீஸ்வரர்தான்.

பெற்றோரையோ சகோதரர்களையோ கொஞ்சமும் பொருட்படுத்தியதாகக் காணோம். எங்களை எவ்வாறு அவனால் கண்டுகொள்ள இயலும்.நண்பர்கள் பட்டாளம் சூழந்துவர 'கசூரினா' பீச்சுக்குப் புறப்படும் அவசரம் அவனுக்கு.

"ஹாய் அங்கிள் ஆறுதலாக சந்திக்கிறேன்"

அவன் புறப்பட்டுப் போய் விட்டான். நானும் புறப்பட்டு வந்து விட்டேன்.

ஓரிரு நாளில் பெண்கள் மூலமாய் அவனது அத்தனை வண்டவாளங்களும் வெளிச்சத்துக்கு வந்துவிட்டன. சும்மா சொல்லக்கூடாது. இப்படிப் பட்ட விஷயங்கள் எனது மனைவியின் காதுகளுக்கு எப்படியோ வந்துவிடும்.

தலைகீழாக நின்றும் எத்தனையோ பொய்யான ஆவணங்களைச் சமர்ப்பித்தும் அவனுக்கு பிரஜா உரிமை கிட்டவே இல்லையாம்.

கடைசியில் ஜேர்மன் காரியொருத்தியை மணந்து பிரஜாஉரிமை பெற்ற பின்னர் தற்போது மனைவியை விவாகரத்து செய்து விட்டு யாழ்ப்பாணத்துப்பெண்ணைப்பார்த்துமணமுடிக்கும் நோக்கில் வந்திருக்கும் அவனை எத்தனையோ பெண்ணைப் பெற்றவர்கள் தூண்டில் போடக் கிளம்பத்தான் போகிறார்கள்....

இடையில் கொசுறுச் செய்தி ஒன்று.

ஹோட்டல் ஒன்றில் சமையல் அறையில் உதவியாளனாக வேலை செய்வதையே அவன் தனது பெரிய பதவியாக விளம்பரப்படுத்திக் கொள்வதாக எனது மனைவி கூறுகிறார். படிப்பாலும் பண்பாலும் உயர்ந்து நிற்கும் அந்த வயதான டாக்டருடன், பணத்தாலும் பகட்டாலும் உயர்ந்து நிற்பதாகக் காட்ட விழையும் அடுத்த வீட்டு இளைஞனை ஒப்பிட்டுப் பார்க்க எனது மனது மறுக்கிறது.

மனது கேட்கவில்லை. அதனால் சொல்கிறேன். 'அற்பனுக்குப் பவிசு வந்தால் அர்த்த ராத்திரியிலும் குடை பிடிப்பானாம்.'

வேண்டுமானால் இவருக்கு அறளை பேர்ந்து விட்டதென்று சொல்லிக் கொள்ளுங்கள்.



**பொன்வேலன்**

## இனி ஆயுதங்களை....

(IV பக்கத் தொடர்ச்சி)
(V பக்கம் பார்க்க)

போவது போல செல்லும். இதில் 6000 பேர் பணியாற்றுகிறார்கள். வைத்தியசாலைகள்,

திரையரங்குகள், சிறைச்சாலை, நவீன சந்தைகள் என்று ஒரு நகரத்தில் உள்ள யாவுமே இதில் உண்டு. 20 அடுக்குள் கொண்டது. மொத்தம் 2700 அறைகள் உள்ளன. 80 விமானங்களும் உலங்குவானூர்திகளும் இதன் மேல் தட்டில் போருக்குத் தயாராக இருக்கும்.

*குண்டு வீச்சு விமானம் – பொம்பர்!*

புதிய குண்டு வீச்சு விமானங்கள் ஏவுகணைகளை வீச வல்லவை. இவைகள் போடும் குண்டுகளின் உட்புறத்தில் அவற்றை நெறிப்படுத்தும் இயந்திரங்கள் இருப்பதில்லை. விமானங்கள் வீசும் போது இவை சரியாக இலக்கைத் தொடுவதுமில்லை. அதேவேளை இலக்குகளைச் சரியாகத் தாக்கும் உட்புறத்தில் சிறிய இயந்திரங்கள் பூட்டிய, அல்லது லேசர் பொருத்திய குண்டுகளும் உண்டு.

*ஸ்டிங்கர் மிசைல்ஸ்!*

கணனி மூலம் இயங்குவது ஸ்டிங்கர் மிசைல்ஸ்சாகும். தரையில் இருந்தே வானில் பறக்கும் விமானத்தைத் தாக்கி அழிக்கும் வல்லமை கொண்டது. இதேவேளை குருட்சர் ஏவுகணை என்றும் ஒன்றுண்டு. இது சுமார் ஆறு மீற்றர் நீளம் கொண்டது. இது எதிரியின் இலக்கை நோக்கி தகவல் கொடுக்கப்பட்ட வழிமூலம் சென்று தாக்கும். உலங்கு வானூர்தியில் இருந்து ஏவினால், வீட்டைக் கண்டுபிடித்து, சன்னலை அறிந்து, அதற்குள்ளால் சென்று, அறைச் சுவர்களை உடைத்து எதிரியைக் கொல்லும் ஆற்றல் உடையது.

*அணுகுண்டு!*

இதுவரை போரில் அணுகுண்டு ஒரேயொரு தடவை மட்டும் பாவிக்கப்பட்டிருக்கிறது. 1945 ஆம் ஆண்டு அமெரிக்கா, ஜப்பான் மீது இரு அணுகுண்டுகளை வீசியது. இது வெடித்ததும் பெரும் நெருப்பு வளையம் தோற்றமெடுக்கும். முகில் போல அணுக் கதிர்கள் விரைவாகப் பரவும். வானின் மேற்புறத்தில் இரும்புத் தொப்பிபோல ஒரு கவசம் உருவாகும். அதன் கீழே 10 மில்லியன் பாகை பரனைற்றில் வெப்பம் சட்டெனப் பெருகும். அங்கு பரவும் றேடியோக் கதிர்கள் சகல ஜீவராசிகளையும் பொசுக்கும். இந்த அணு ஆயுதம் இப்போது பல நாடுகளிடம் இருக்கிறது. இதைப் பாவிக்கத் தொடங்கினால் அதுவே உலகத்தின் இறுதிப் பேரழிவாக அமையும்.

*நவீன ஆயுதங்கள்!*

இவை தவிர, இவற்றையெல்லாம் வெற்றி கொள்ளத்தக்க வகையில் ஏராளமான நவீன ஆயுதங்கள் உலகம் முழுவதும் தயாராகிக் கொண்டிருக்கின்றன. கைத்தொலைபேசியில் பேசிக்கொண்டிருந்த செச்சினிய தீவிரவாதக் குழுவின் தலைவர் ஒருவர் இருக்கும் இடத்தை 'சற்லைற்' மூலம் அறிந்து கொண்டனர். அதன் பின்னர் இவர் ரஸ்யர்களின் ஏவுகணையால் தாக்கிக் கொல்லப்பட்டார்.

இன்றைய நவீன போரில் சற்றலைற்றுக்கள், உளவு சற்றலைற்றுக்கள் என்று ஏகப்பட்ட நவீன கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன. றோபேட் மனிதன், மரபணுக்களால் உருவாக்கப்படும் போர் மனிதன், விண்வெளிப் போர், ஏவுகணை எதிர்ப்புப் பீரங்கி பற்றியாற்றிக் ஏவுகணை, அழிக்கும் பீரங்கி, என்று தினந்தோறும் ஆயுத உற்பத்தி வளர்ந்து செல்கின்றன. இவைபற்றிய அறிவு இனிவரும் உலகில் ஒவ்வொரு மனிதனுக்கும் தனியான கல்வியாக மாறவுள்ளது.

உலகத்தின் கொள்கைகள் ஆயுதங்களின் ஆற்றலைப் பொறுத்தே உருவாக்கப்பட்டிருக்கின்றன. எனவே ஆயுதங்கள் பற்றிய பொது அறிவு மனிதனுக்கு மிகவும் அவசியமானது. பாடசாலை ஆசிரியர்கள் கூட ஆயுதங்கள் பற்றிய பூரண அறிவு கொண்டவராக இருக்கவேண்டும் என்று வலியுறுத்தும் காலம் வரவிருக்கிறது. ஆயுதங்களால் கொல்லப்படும் மனிதர்கள், அதைப் பாதுகாப்புக்காகவும் பயன்படுத்துகிறார்கள். அதுபற்றிய பொது அறிவை வாசித்தறிவது அவர்களுடைய பாதுகாப்பு வாழ்வுக்கு அவசியம் என்றும் உணரப்படுகிறது. 'அறிவு அற்றம் காக்கும் கருவி' என்று வள்ளுவர் கூறுவார். அற்றம் என்றால் அழிவு. நன்மை நோக்கி வரும் அழிவில் இருந்து நம்மைக் காக்க உதவுவதுதான் அறிவு என்பது வள்ளுவர் கருத்து. எதிலும் வீண் கவர்ச்சி கொள்ளாமல் அனைத்தையும் அறிவதே கல்வியின் முக்கிய பயனாகும்.

**நன்றி: அலைகள்**

## நீயில்லாத கணங்களில்.....

நீ
பேசாமல் போகிறாய்
நான் புன்னகைக்கும் நேரங்களில்..

எப்போதாவது
இடையிடையே பார்க்கிறாய்
சைகை ஏதும் இல்லாத
விழிகளால்

நீண்ட
இடைவெளிக்குப் பின்னர்
அமாவாசையைக் கிழித்த
பௌர்ணமியாய்
முகம் காட்டினாய்
கையில் சூரியனோடு


இப்போது
மூன்றாம் பிறையைத்
தேடுவது போல
உன் வரவை
நட்சத்திரங்களிடையே
வெறித்துப் பார்க்கிறேன்.....

நீயில்லாத கணங்களில் கூட
என்னால் வாழமுடிகிறது
உன் நினைவில்லாத
கணங்களை.......?

அப்போது – என்
உயிருக்குள் நஞ்சை
ஊற்றிவிட்டுப் போ!

– சுதேசிகன்.





## என் முற்றத்து பூவரசு

ஒருநாள்
என் முற்றத்து
பூவரசு என்னோடு
பேசியது
"நான்
பிறந்ததிற்குரிய
கடமையை செய்துவிட்டேன்
மகனே
நீ என்ன புரிந்தாய் கூறு?"
என்றது
என்னது நீ
கடமையை முடித்தாயா?
என்று சிரித்தேன்
"ஆமாம்
சேனைப் புலிக்கு
நிழல் கொடுத்தேன்
சிவப்பு புலிக்கு
இல்லம் கொடுத்தேன்
தேசப் புலியை
சிலவேளை தாங்கியும் உள்ளேன்.
சிங்களவனின்
சன்னங்களை என் மார்பில் வாங்கி
மறவரை காத்தேன்"
என்றது, பெருமிதமுடன்
இவ்வளவின் பின்
நான் வெட்கித்து விட்டேன்!



பாலு.தீபக் செல்வன்
யாழ்.பல்கலைக்கழகம்

சீற்றம் தணியாமல் இடைக்கிடை மேலும் சில கற்கள் விழுந்துகொண்டிருந்தன. சிலர் கொட்டுப்பட்ட பொலீஸ் போஸ்ட்டுக்குள் புகுந்து தஞ்சமடைந்திருந்தனர். அவர்களில் பலரை மாதாவும் பற்றிமோத்தும் அடையாளம் கண்டுகொண்டனர். கடுமையாகக் காயமடைந்தவர்களை ஜீப்பில் ஏற்றிக்கொண்டனர். இரண்டு பெண்களினதும் துணிச்சல் பார்ப்பவரை பிரமிக்க வைத்தது. சிலர் தேடல் பணிகளில் இவர்களுக்கு உதவி செய்யத் துணிந்து கொண்டனர்.

மலை உலை முகடு மேன்மேலும் கரிப் புகையை ஊதித் தள்ளிக் கொண்டிருந்தது. காலடியில் எரிமலைச் சாம்பர் மழையில் குழைந்து சகதியாகக் கிடக்கிறது. எதிர்பார்த்ததுதான் என்றாலும் நான்கு சடலங்கள் அவ்விடத்தில் கிடந்ததை அவர்கள் கண்டு கிலி கொண்டனர்.

உதவி கேட்டு ஒரு குரல் அலறியது. மாதாவின் நாடி நரம்புகளை ஒரு கணம் உறைய வைத்தது. அது ஸ்ரான்லி வில்லியத்தின் குரல்தான் என அவள்

பழைய வடிவம் பெற பலகாலம் பிடித்தது.

இயற்கையை இனங்காண மனிதன் முயன்றாலும், அதன் சக்தி அனைத்தையும் மிஞ்சியது என்பதற்கு வில்லியத்தின் தழும்புகள் சாட்சியாகிப் போயின. விஞ்ஞானி இகோரின் ரஷ்ய இல்லத்துக்குப் பல ஆண்டுகள் கழித்து அனுதாபம் தெரிவிக்க வில்லியம் சென்றிருந்தார். நினைவுகளையும் சோகத்தையும் பரிமாறுவதிலும் ஒரு சுகம் இருக்கத்தான் செய்தது.

ஆனாலும், அறிகுறிகள் இல்லாமல் இருந்திருக்காது. நீங்கள் தான் அவற்றை உதாசீனம் செய்துவிட்டீர்கள் என்று இகோரின் மனைவி தனது சீற்றத்தையும் வெளிப்படுத்தத் தவறவில்லை. கருவி ஒன்று தப்பான வாசிப்புகளைக் காட்டியதை வில்லியம் மனத்தில் நினைத்துக் கொண்டார்.

'சூடுகண்ட பூனை அடுப்பங்கரை நாடாது.' ஆனால், வில்லியம் பூனை அல்லவே. 1999 இல் அதே கலோரஸின் மலை உச்சி விளிம்பில் அவரும் மாதாவும் பிற ஆய்வாளர்களுடன் சந்தித்துக் கொண்டார்கள்.

ஆசைகளுக்கெல்லாம் மசிந்துகொடுத்து தமது பிழைப்பை நடத்தியாகவேண்டும்.

நீல் பெரிஷ் என்ற அயல் கிராமத்தைச் சேர்ந்த வழிகாட்டி 22 வயதான கோல் மற்றும் 21 வயதான கிறீன் ஆகிய இரண்டு பிரிட்டிஷ் இளைஞர்களுக்கு உதவிக்கு வந்து வாய்த்திருந்தான். அவர்கள் மலையுச்சிக்கு ஏறுவதற்கு கடினமானதும் தூரமானதும் மழைக் காடுகள் கொண்டதுமான பாதையைத் தெரிவுசெய்து கொண்டார்கள்.

கிராமத்து வழிகாட்டிகள் குழுக்களாக இணைந்து மலையேறும் உதவியாளர்களுக்கான கிளப்களை (Clubs) உருவாக்கிப் பிழைப்பு நடத்தி வருகிறார்கள். இவர்களின் உதவிகள் ஆபத்துக் காலங்களில் கைகொடுக்கின்றன. திரைகடல் ஓடி அல்ல எரிமலை ஏற்றி அவர்கள் வயிறு கழுவுகிறார்கள். எவ்வாறு அவர்களால் இத்தகைய ஆபத்தான

பனிப்போர்வை போர்த்திக் கொண்டிருந்தது. அவை பார்வைப் புலத்தை மறைக்கலாயின. அவற்றைக் கடந்து மேலே ஏறவும் மீண்டும் காட்சிகள் கண்ணுக்குப் புலப்படலாயின.

ஊடகங்கள் மலை ஏற வருகிறவர்களின் சாகசங்கள் மற்றும் இழப்புகள் பற்றி அதிகம் பேசிக் கொள்கின்றன. அந்தச் சூழலில் பிறந்து வாழ்ந்து பிழைப்பு நடத்தி மடியும் பெயர் தெரியாத மக்களின் வாழ்க்கையில் ஆயிரம் சோகங்கள் இருக்கின்றன. அவர்களையும் வருகிறவர்கள். அன்புடன் பழகிப் படமெடுத்துச் செல்கிறார்கள். மொழிப் பிரச்சினை பல சந்தர்ப்பங்களில் திறந்த உரையாடலுக்குத் தடையாக இருப்பதனால் எத்தனையோ சோகக் கதைகளும் சாகசங்களும் மண்ணோடு மடிந்துவிடுகின்றன.



# ஐந்து நிமிடங்கள் சீறிய பிலிப்பைன்ஸ் எரிமலை

அடையாளம் கண்டுகொண்டாள். வந்துவிட்டேன் என அவள் பதிலுக்குக் குரல் கொடுத்தாள். ஆனால், அது அவனது காதுகளில் எட்டியிராது.

மலைமுகட்டிலிருந்து உடனடியாக வெளியேறும்படி அவளது தொலைத்தொடர்புக் கருவியில் உத்தரவு வந்துகொண்டிருந்தது. பூமி அதிர்வுகள் உணரப்படுவதாக அறிக்கைகள் தெரிவித்தன. அவளது உணர்வுகள் அதை மிஞ்சி இருந்ததால் அது அவளால் அறியப்படவில்லை. எவரையும் தவிக்கவிட்டுத் தான் உயிருடன் திரும்பும் திட்டம் அவளிடம் கிடையாது.

அங்கும் இங்கும் தேடியதில் மாதாவின் கண்களில் தட்டுப்பட்டது சாம்பற் சேறு

## உலகை உலுக்கிவரும் இயற்கை அனர்த்தங்கள் 12



குளித்துத் துடிப்புடன் கிடந்த ஒரு முனகும் ஓர் அடையாளம் காண இயலாத உடல்தான். அப்படியே அதனைக் குண்டுக்கட்டாகத் தூக்கிக் கொண்டு வந்து ஜீப்பில் ஏற்றிக் கொண்டாள். மேலும் அன்டி என்ற அமெரிக்க ஆய்வாளர் எரிகாயங்களுடன் மீட்கப்பட்டார்.

எரிமலைச் சாம்பரும் இரத்தமும் தண்ணீரும் குழைத்த சாந்து மீட்கப்பட்டவர்களை அப்பி இருந்தது. வில்லியத்துக்கு தான் மீட்கப்பட்டபோது நினைவு பெரிதாக இருக்கவில்லை. கால் எலும்பு ஒன்று ஜீன்ஸிற்கு வெளியே துருத்திக் கொண்டிருந்தது. தாடை தொங்கிக் கொண்டிருந்தது. மண்டையோட்டில் வெடிப்பு ஏற்பட்டு இருந்தது பின்னர் கண்டுபிடிக்கப்பட்டது.

மேலும் காயமடைந்தவர்கள் எவரும் அப்பிராந்தியத்தில் இல்லை என்றதும் ஒரு சிறியரக ஹெலி அவ்விடத்துக்கு அழைக்கப்பட்டது. ஜீப்பில் பயணிக்கும் நிலையில் காயமடைந்தவர்கள் இருக்கவில்லை. அவர்களை ஸ்ரெச்சரில் கிடத்தி ஹெலியில் ஏற்றிவிட்ட மாதாவும் பற்றிமோத்தும் அது உயரக் கிளம்பியதும்தான் நிம்மதிப் பெருமூச்சு விட்டுக்கொண்டனர்.

மீண்டும் மலைப் பிராந்தியத்தை அவர்கள் சல்லடை போட்டுக் கொண்டனர். அன்று பல உல்லாசப் பயணிகளும் பத்திரிகையாளர்களும் சாரிசாரியாக அங்கு வந்திருந்தமை இவர்களது கலக்கத்துக்குக் காரணமாயிற்று. இனி மீட்புப் பணி என எதுவும் இல்லை எனத் தம்மைத் திருப்திப்படுத்திக் கொண்டுதான் அவர்களால் அவ்விடத்திலிருந்து விலக முடிந்தது.

வில்லியத்துக்கான சிகிச்சை இரண்டு வருடங்கள் தொடர்ந்தது. அக் காலப்பகுதியில் 17 சத்திரசிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டன. உறுதி குலையாத அந்த மனிதனின் உடல்

தமது பழைய விபத்து அனுபவங்களைப் பரிமாறிக் கொண்டார்கள். இகோரும் நெஸ்ராரும் புகைந்து பொசுங்கிப்போன இடத்தில் இப்போதும் புகைமூட்டம் கிளம்பிக் கொண்டுதான் இருப்பதை சில அடிகள் தொலைவிலிருந்து அவர்கள் கண்டார்கள்.

கி.மு., கி.பி என்பதுபோல வில்லியம் தனது வாழ்க்கையை இரண்டாக வகுத்துக் கொண்டார். கலோரஸிற்கு முன், பின் என்று வகுத்தாலும் நடைமுறையில் மாற்றம் ஏதும் தென்படவில்லை. எரிமலை முகடுகளில் புகுந்து ஆய்வுகளை மேற்கொள்ளும் பணியில் அவர் மேலும் தீவிரமாகவே இருந்தார். உயிர்காத்த மாதாவை அடிக்கடி சந்தித்து நட்பைப் பரிமாறிக் கொண்டார். பல்வேறு ஆய்வுகளிலும் இருவரும் இணைந்து செயற்படலாயினர்.

அன்றைய எரிமலை விபத்து புவிச்சரித வரலாற்றில் ஒரு குறிப்பிடத்தக்க வெடிப்பு அல்ல. அது ஒரு வழமையான சாதாரண எரிமலையின் ஓய்வுநிலைச் செயற்பாடுதான். என்றாலும் ஆய்வாளர்களின் வரலாறு என்று எடுத்துக் கொண்டால் அன்றைய நாள் ஒரு கரிநாள் ஆகிறது. நிரப்ப இயலாத ஓர் அணியினரின் இழப்பு இடம்பெற்றுவிட்டது.

தற்போது எரிமலைச் செயற்பாடுகள் பற்றிய ஆய்வுகள், எதிர்வுகூறல்களில் பெருமளவில் முன்னேற்றத்தை ஏற்படுத்தி இருப்பதாக ஸ்ரான்லி வில்லியம் தெரிவித்து வருகிறார். என்றாலும் இயற்கை தனது சக்தி மனிதனை மிஞ்சியது என தெரிவிக்க நினைத்தால் அதனை வெல்ல முடியாது.

♦ ♦ ♦

பிலிப்பைன்ஸின் கன்லன் எரிமலை இவ்வாறுதான் 1996 ஓகஸ்ட் 10 அன்று ஒரு சனிக்கிழமை மாலையில்



சடுதியாகக் குமுறிக் கொண்டது. வழமைபோலவே பல நாட்டு உல்லாசப் பயணிகள் அப்பொழுது மலையுச்சிக்கு ஏறிக்கொண்டிருந்தனர். உள்ளூர் வழிகாட்டிகள் பலரும் அவர்களுக்கு உதவியாக வருகிறார்கள்.

சூழலை நன்கு அறிந்த வழிகாட்டிகளின் உதவி 8,100 அடி உயரமான மேற்புறமலைச்சாய்வில் வசதியாக ஏறப் பலருக்கும் தேவைப்படும். வழிகாட்டிகள் தமக்கு வாய்ப்பவர்களின் ஆராய்ச்சிகள்

பிராந்தியங்களை விட்டுவிலகி இருக்க இயலும்.

அன்றும் மலையுச்சியில் சீற்றம் என்கின்ற செய்தி கிராமத்தில் பரவியதும் கிராமத்தவர்கள் முதலுதவி வசதிகளுடன் இரவு என்றும் இருட்டு என்றும் ஆபத்து என்றும் பாராமல் மலைமுகட்டுக்கு ஏறிப் பல உயிர்களைக் காப்பாற்றி இருக்கிறார்கள். அவர்களில் தாதிகளான இளம் பெண்களும் கூட பலர் உதவிக்குப் புறப்பட்டு இருக்கிறார்கள்.

விடியும் வரை காயமடைந்தவர்களுடன் காத்திருந்து விடிந்ததும் அவர்களை ஹெலிகொப்ரரில் ஏற்றுவித்துவிட்டு தாங்கள் கால்நடையாகத் திரும்பியிருக்கிறார்கள். அனர்த்தங்கள் இடம்பெற்றால் வழிகாட்டுபவர்களின் பிழைப்பில் மண்தான். என்றாலும் வருமானத்துக்காக மட்டும் செயற்படாது, தன்னலம் கருதாது கிராமத்தவர்கள் தம்முயிரையும் துச்சமென மதித்து முன்பின் அறியாத, தெரியாத மலையேறும் வெளிநாட்டவர்களைக் காப்பாற்ற ஓடிவருகிறார்கள்.

ஒரு மலையேற்றும் வழிகாட்டிகள் கிளப்பின் (Club) தலைவன்தான் நீல் பெரிஷ். அவன் தனது கிளையன்களான அந்த இரண்டு பிரிட்டிஷ் இளைஞர்களுக்கு கடந்த இரண்டரை நாள்களாக உதவிக் கொண்டிருக்கிறான். வழியில் அவனது கிளப் பையன்கள் பலரும் பிற பயணிகளுக்கு வழிகாட்டி ஏறிக்கொண்டும் இறங்கிக் கொண்டும் இருக்கிறார்கள்.



வழியில் சந்திக்கும் அவர்களுக்கும் அறிவுறுத்தல்கள் கொடுத்து வழிகாட்டும் பணியை அவன் செய்து கொண்டிருந்தான்.

ஏறுபவர்களின் பொருள்களையும் அவன் சுமந்து கொண்டாக வேண்டும். புதிதாக வருகிறவர்கள் கடினமான இடங்களில் தமது பொருள்களுடன் தடுமாறிவிடுகிறார்கள். மேலும் ஒரு குறிப்பிட்ட நேர அட்டவணைக்குள் செயற்பட்டாக வேண்டிய இக்கட்டும் இவர்களுக்கு இருக்கிறது. இழுத்துப் பறித்து ஏறுகின்ற பயந்து கொண்டு இறங்குகின்ற பயணிகளை இரவுக்கு இரவு இயன்றவரை சௌகரியமாக ஒரு கிராமத்தில் தங்க வைக்கும் வரைக்கும் கொண்டு சேர்த்தாக வேண்டும்.

ஏறுகின்றபோது வழியில் மலைமுகடுகளை ஆங்காங்கே

பாறைகளின் பொறிவு மீது மெதுவாக இறங்கிக் கொண்டிருந்தார்கள். கோல் மற்றும் அவனது வழிகாட்டியான நீல் பெரிஷ். அவர்களுக்கு சில மீற்றர்கள் பின்னால் கிறீன் மெதுவாக இறங்கி கொண்டிருந்தான். இருள் கவியப் போகின்றது என்கிற நீலிடம். அதற்கிடையில் இவர்களுக்கான சௌகரியமான இடைத்தங்கல் ஒழுங்கு செய்யப்பட்டாகவேண்டும்.

அப்போதுதான் காது செவிடு படும்படியான இடியோசை வானைப் பிளந்தது. மேலே கரும்புகார் கிளம்பி மலைமுகட்டை குடை பிடிக்கலானது. கடகடவெனக் கல்மாரி பொழியலானது. பலரும் செய்வதறியாது நாலாபுறமும் சிதறி ஓடலானார்கள். அவ்வேளை, ஏராளமானோர் முகட்டுப் பகுதியில் நின்றிருக்கிறார்கள். ஐந்து நிமிடங்களில் நிலைமை வழமைக்குத் திரும்பிவிட்டது. ஆனால், தடித்த தூசிப்படையும் புகை மண்டலமும் கௌவிக்கொண்டன.

பலர் காயங்களுடன் அலறலானார்கள்.

**.....இயற்கை தனது சக்தி மனிதனை மிஞ்சியது என தெரிவிக்க நினைத்தால் அதனை வெல்ல முடியாது!**

மேலும் பலர் மடிந்துபோனார்கள். கோலின் உடலெங்கும் கற்கள் பறந்து காயங்களைத் தந்துவிட்டன. இயங்க இயலாத நிலையிலும் அவன் தனது நண்பன் கிறினையும் வழிகாட்டி நீலையும் தேடலானான். அவர்கள் இருவரும் பலத்த காயமடைந்து கிடக்கக் காணப்பட்டனர்.

கிறீனின் ஆடைகள் இரத்தத்தில் முற்றிலும்

தருவது : மு.சிவநேசன்

தோய்ந்து கிடந்தன. நீல் ஒரு கையும் இரண்டு கால்களும் முற்றிலும் சிதைந்த நிலையில் மீட்கப்பட்டான். குறுகிய நேரத்தில் அவனது விழிகள் சொருகிக் கொண்டன. மரணம் அவனை அரவணைத்துக் கொண்டது. மீட்புப் பணிக்கென கிராமத்திலிருந்து உடனடியாக பலரும் மலை ஏறலானார்கள் . அவர்கள் துணிச்சல்தான் இங்கு பாராட்டப்பட வேண்டியது.

(பொறுத்திருங்கள்)



# நீண்ட நாள்களின் பின் மீண்டும் ஓர் அரங்கேற்றம்

உலகெலாம் வியாபித்தும் பிரகாசித்தும் காணப்படுவது பரதக்கலை. இப்பரதக்கலை மனிதனை இறைவனுடன் ஒன்றிணைத்து அவனை ஆன்மீக வழிப்படுத்தும் தன்மையுடையது. இப்பரதக்கலை தொன்று தொட்டு யாழ்ப்பாணத்தில் தமிழருடைய கலாசாரத்தைப் பேணிப் பாதுகாப்பதற்கு ஒரு ஊன்று கோலாக அமைந்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் 2004 ஆம் ஆண்டுக் கடைசியில் ஏற்பட்ட தொடர் மழை காரணமாகவும் சுனாமி அனர்த்தத்தால் ஏற்பட்ட சோகம் காரணமாகவும் பல கலைநிகழ்ச்சிகள் இடம்பெறாது மந்தமான காலமாக இருந்தது.

அந்த வகையில் நீண்ட நாள்களுக்குப் பின் 12.02.2005 அன்று வீரசிங்கம் மண்டபத்தில் செல்வி இந்திரா பிரியதர்சினி சீவரத்தினம் அவர்களின் பரத நிருத்திய அரங்கேற்றம் நடைபெற்றது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

அவர் திருமதி சாந்தினி சிவநேசனின் மாணவியாவார். அரங்கேற்ற நிகழ்வின் போது மண்டப நுழைவாயிலில் மங்களகரமாகப் பூரண கும்பம் வைக்கப்பட்டிருந்தது.

நிகழ்விற்கு வரும் அனைவரையும் அன்புடனும், மகிழ்வுடனும் வரவேற்றனர்.

அரங்கின் வலது பக்கம் அணிசேர் கலைஞர்கள் அமர்ந்திருந்தனர். இடது மூலையில் நடராஜர் திருவுருவம் வைத்து அலங்கரிக்கப்பட்டிருந்தது. அதன் கீழ் எம்மால் மதித்துப்போற்றி வணங்கும் கலைச்செல்வன் ஏரம்பு சுப்பையா அவர்களின் புகைப்படம் வைக்கப்பட்டிருந்தது.

அரங்கின் பின் மத்தியில் நடராஜர் திருவுருவப்படம் அடக்கமான வர்ணத்தில் காட்சி அளித்தது. பிற்புறத்திரைச் சீலைக்கு, பூக்களால் வெள்ளை மாலைகள் தொங்கவிடப்பட்டிருந்தன. அரங்கமே ஒரு தெய்வீகத் தன்மையுடன் திகழ்ந்தது.

அரங்க நிகழ்வில் முதலில் மங்கள விளக்கேற்றல், இறைவணக்கம் நடைபெற்றது. ஆடல் நங்கை மாதா, பிதா, குரு தெய்வ வழிபாடு நிகழ்த்தித் தனது குருவை வணங்கி, சதங்கையைப் பெற்று நடனமணிகள் திருமதி பத்மினி செல்வேந்திரகுமார், திருமதி யாசோதரா விவேகானந்தன், திருமதி வசந்தி குஞ்சிதபாதம் ஆகியோரிடம் ஆசிர்வாதங்களைப் பெற்றதும் நிகழ்ச்சி ஆரம்பமாகியது.

வீரசிங்கம் மண்டபம் நிரம்பி வழிந்த பார்வையாளர்களையும் கூடிய சிரேஸ்ட கலைஞர்களையும், பரதநாட்டிய மாணவிகளையும் கொண்டு சபை ரசித்துக்கொண்டு இருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது.

ஆரம்ப ஆடலாகப் புஸ்பாஞ்சலியுடன் கண்ட அலாரிப்பு இடம்பெற்றது. நர்த்தகி தனது ஆரம்ப நர்த்தனத்தின் போதே சபையைத் தன் வசப்படுத்திக் கொண்டார். அவர்களின் துரித வேகமான அலாரிப்பு நடனத்தினால் சொக்கிப்போய் சபையினர் இருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது.



தொடர்ந்து ஜதீஸ்வரம், சப்தம் என்பன நடைபெற்றது. 'சப்தத்தில் வெளிப்படும் பாவம் அடக்கமாகவும், உள்ளத்தைத் தொட்டு வெளிப்படும் பாவமாகவும் திகழ்ந்தது. வர்ணம் மிகவும் அழகான, நுட்பமான ஜாதிகளை இணைத்துக் கைப் பிரயோகங்களும் புதுமையாக இருந்தது. வர்ணத்தின் மூலம் நர்த்தகியின் ஆளுமையை அறிய முடிந்தது.

'என்ன தவம் செய்தனை யாசோதா' என்ற பதத்தில் கண்ணனின் பெருமையையும் குறும்புகளையும் நர்த்தகி மிகச் சிறப்பாக அபிநயத்தார். அதன் நாட்டிய அமைப்பு ஒவ்வொரு கதை அம்சங்களையும் குறிப்பிட்டு இப்படிப்பட்ட கண்ணனைப் பெறுவதற்கு நீ என்ன தவம் செய்தனை எனக் கேட்கும் ஒவ்வொரு விதமும் மெய்மறக்கச் செய்வதாய் அமைந்தது. இதில் திருமதி சாந்தினி சிவநேசன் தனது திறமைகள் அனைத்தையும் மாணவர்கள் மூலம் வெளிப்படுத்துவது மிகவும் வரவேற்க வேண்டிய விடயமாகும்.

கீர்த்தனையில், அமரர் பிரம்மஸ்ரீ வீரமணிஐயரை நினைவுகூர்ந்து அவர்களின் கீர்த்தனையைத் தனது மாணவிக்குக் கற்பித்து வெளிப்படுத்தியமை மிக்க மெச்சத்தக்கதொன்றாகும்.

தேவாரம், இடரினும் தளரினும் அதில் பாற்கடலைத் தேவர்களும், அசுரர்களும் கடைந்து அதில் எழுந்த நஞ்சை இறைவன் அருந்த, சக்தி தடுப்பது மிகவும் துல்லியமாக அபிநயிக்கப்பட்டது. பக்தி ரசம் ததும்பியது. மற்றைய அரங்கேற்றங்களோடு ஒப்பிடும் போது தேவாரம், திருப்புகழ் அமைந்தது ஒரு புதுமை.

இறுதியில் இடம்பெற்ற தில்லானா மிகவும் விறுவிறுப்பாக இருந்தது. அதில் அமைந்துள்ள மெய் அடிகள் அனைத்தும் புதிய முறையில் அழகாக அமைந்திருந்தது. அனைவராலும் விரும்பப்பட்டது.

தொடர்ந்து முடிவில் மங்களம் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கதும், வரவேற்கத்தக்கதுமாகும். அணிசேர் கலைஞர்கள் அனைவரும் தமது பங்களிப்பினை நிறைவுடன் செய்துள்ளனர்.

இசைக்கலை றொபேட்டின் பாட்டு அனைவரின் காதுகளிலும் சென்று மனதை வயப்படுத்தும் தன்மையிலும் நடனத்திற்கு மெருகூட்டியது. மிருதங்கம் வாசித்த இசைக்கலைமணி துரைராஜாவின் வாசிப்பும்




நடனத்துக்கு வலுவூட்டியது.

மிருதங்க வாசிப்பு நர்த்தகியை அசைத்து அசைத்து கொடுத்துத் துரிதப்படுத்தியது. இசைக்கலைச்சுடர் ஜெயராமனின் வயலின் இசை மண்டபத்தை லயிக்கச் செய்தது.

வித்துவான் வசந்தனின் புல்லாங்குழல் இசை மனங்களை மயக்கியது. இவற்றுடன் திருமதி .சாந்தினி சிவநேசனின் நட்டுவாங்கத் திறமையும் கலந்து மிகச் சிறப்பாக இந்திரா பிரியதர்சினியின் அரங்கேற்றம் நிகழ்ந்தது.

நாட்டிய அமைப்பில் அடையாறு கே.லட்சுமணனின் உருப்படிகளை இணைத்தும், தனது நாட்டிய அமைப்புக்களை புகுத்தியும் திருமதி. சாந்தினி சிவநேசன் பழைய உருப்படிகளை மனதிற் கொண்டு குருபத்தியை வெளிப்படுத்தியுள்ளார். இதனை வளரும் சமுதாயம் கவனத்தில் கொண்டு வருதல் வேண்டும். நர்த்தகியின் ஒப்பனை மிகவும் அழகாகவும், அடக்கமாகவும் காணப்பட்டது.

திருமதி. பத்மினி செல்வேந்திரகுமார்

# முத்தான கலைஞர்கள் மறைந்துபோனாலும் அவர்தம் கலைகள் தொடர்ந்தும் உயிர் வாழும்



ஒரு இனத்தினுடைய அடிநாதமாக விளங்குவது கலையும், பண்பாடுமேயாகும். அத்தகைய எமது இனத்தின் அடையாளத்தைக்கட்டி வளர்க்கின்ற பாரிய பொறுப்பு கலைஞர்களிடையே கொடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு எமது கலைப் பொக்கிஷத்தைப் பேணி வளர்ப்பவர்கள் மடிந்தாலும் அவர்கள் விட்டுச்சென்ற விழுதுகள் என்றும் வாழும். அவர் தம் நாமம் திக்கெட்டும் புகழ்பரப்பும்.

இந்த வகையில்தான் அண்மையில் கலை உலகத்தை விட்டு மறைந்த வி.என்.செல்வராஜாவின் புகழ் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறது.

கலைச்சோலையும், ஆன்மீக மணமும் கமழும் ஏழாலைப் பகுதியில் பிறந்த வி.என்.செல்வராஜா சண்டிலிப்பாய் சீரணிப் பகுதியினை வாழ்விடமாகக் கொண்டிருந்தார்.

ஏழாலை சைவவித்தியாசாலையில் ஆரம்பக் கல்வியையும், உயர்கல்வியைச் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியிலும் கற்றார். சிறுவயதிலே சங்கீத ஞானமுள்ள ஓர் அற்புதக் குரல் வளக் கலைஞனாகத் தன்னை அடையாளம் காட்டியதுடன் செல்லையா தேசிகரிடம் முறைப்படி சங்கீதத்தைப் பயின்றவர்.

வீமன் காமத்தில் ஆசிரியர் இரத்தினசிங்கம் நெறிப்படுத்தி அரங்கேற்றிய சம்பூர்ண அரிச்சந்திரா நாடகத்தில் தனது ஒன்பதாவது வயதில் லோகிதாஸன் பாத்திரமேற்று நடித்தார். இதுவே இவர் நாடகத் துறையில் முதல் பதித்த தடம் என்று சொல்லலாம்.

1958ஆம் ஆண்டு தமிழகம் சென்ற இவர் நாதஸ்வர வித்துவான் எஸ். எஸ். ரங்கப்பாவிடம் இரண்டு வருடகாலமாக முறைப்படி கர்நாடக சங்கீத இசையைக் கற்றார்.

சிறந்த குரல்வளமும் சங்கீத ஞானமும் இவருக்குள்ளே பரிணமித்திருந்ததால் இவ்வரை உனி லுள்ளவர்கள் பாட்டுக்காரச் செல்வராஜா என்று அழைத்தார்கள். வி.என்.செல்வராஜா இசை நாடகங்களில் பல்வேறு பாத்திரங்களை ஏற்று நடித்துப் பாராட்டுப் பெற்றவர்.

சம்பூர்ண அரிச்சந்திரா இசை நாடகத்தில் லோகிதாசன், சத்தியகீர்த்தி, அரிச்சந்திரன் போன்றபாத்திரங்களையும் ஸ்ரீவள்ளி நாடகத்தில் முருகன், வேடன், விருத்தன், நாரதர் போன்ற பாத்திரங்களையும் சத்தியவான் சாவித்திரியில் சத்தியவானாகவும் அல்லி அருச்சுனாவில் அருச்சுனன், கிருஷ்ணன் ஆகிய வேடங்களிலும் லலிதாங்கியில் அழகேசனாகவும் பூதத்தம்பி நாடகத்தில் பூதத்தம்பியாகவும் பவளக் கொடியில் கிருஷ்ணன் , அருச்சுனன் போன்ற பாத்திரமேற்றும் நடித்துள்ளார்.

கோவலன் கண்ணகியில் கோவலனாகவும் ஞானசௌந்தரியில் பிலேந்திரனாகவும் நல்ல தங்காளில் நல்லண்ணனாகவும் மகாகவி காளிதாஸர் நாடகத்தில் காளிதாஸராகவும் பக்த நந்தனாரில் நந்தனாராகவும் நடித்துள்ளார்.



'சத்தியவான்' சாவித்திரியில் சத்தியவானாக....

பாமா விஜயம், அசோக்குமார் போன்ற நாடகங்களிலும் பல்வேறு பாத்திரங்களை ஏற்று நடித்து பலருடைய பாராட்டுக்களைப் பெற்றார்.

இவரின் நடிப்பாற்றலைப் பார்த்துப் பாராட்டியவர்கள் பல்வேறுபட்ட பட்டங்களையும் வழங்கிக் கௌரவித்துள்ளனர். இதில் 1972ஆம் ஆண்டு கலையரசு சொர்ணலிங்கத்தால் இசை நடிகமணியென்றும் 1985ஆம் ஆண்டு நெல்லண்டை பத்திரகாளியம்மன் ஆலயத்தினரால் நாடக கலாஜோதி என்ற பட்டமும் 1999ஆம் ஆண்டு மானிப்பாய் பாரதி சனசமூக நிலையத்தினரால் இசை நாடக அரசு என்றபட்டமும் 2000ஆம் ஆண்டு இந்துகலாசார அமைச்சினால் கலாபூஷணம் விருதும் வழங்கப்பட்டன.

இத்துடன் 2002இல் சர்வதேச இந்து மதகுரு பீடம் நாடக கலாமணி என்ற பட்டமும் 2003ஆம் ஆண்டு வழக்கம்பரை திருநாவுக்கரசு நாடகமன்றத்தினரால் கலை அரசு என்ற பட்டமும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். இதைவிட 1987ஆம் ஆண்டு சண்டிலிப்பாய்வாழ் மக்கள் இவரது கலையாற்றலையும், நடிப்பாற்றலையும் பாராட்டிச் சீரணி நாகபூஷணி அம்மன் ஆலய முன்றிலில் பெரியதொரு விழாவினைக் கொண்டாடினர். அந்த நிகழ்வில் உதயன் நிறுவன இயக்குநர் ஈ.எஸ்.சரவணபவன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு தங்கப் பதக்கம் அணிவித்துக் கௌரவித்ததுடன் நாடக யுவராஜ் என்ற பட்டத்தையும் வழங்கிக் கௌரவித்தார். அமரர் வி.என்.செல்வராஜா கலைத் துறையில் பிரகாசித்த போது பல பிரபல நாடகக் கலைஞர்களுடன் இணைந்து நடித்துள்ளார்.

அவர்களில் ஈழத்துக் கலைஞர்களில் குறிப்பிடத்தக்கவர்களாக நடிகமணி அமரர் வி.வைரமுத்து, எம்.தைரியநாதன், கலாபூசணம் உருத்திராபதி, இசைக்குயில் திருமதி பார்வதி சிவபாதம், வில்லிசை வேந்தன் சின்னமணி, கணபதிப்பிள்ளை, நாடகக் கலைஞர் கே.ரி. செல்வராஜா, நடிக கலாமணி வி.செல்வரெத்தினம் (செல்வம்) அ...யோரைக் குறிப்பிடலாம்.

கலாபூசணம் வி.என்.செல்வராஜா ஈழத்து நடிகர்களுடன் மட்டும் நடிக்கவில்லை. தமிழகக் கலைஞர்களுடன் இணைந்தும் நடித்துப் பலருடைய பாராட்டுக்களைப் பெற்றுள்ளார்.

இவர் இணைந்து நடித்த தமிழக நாடகக் கலைஞர்களாக இசைக்குயில் எ.இராமலக்சுமி, இசைக்குயில் கன்னிகா பரமேஸ்வரி, இசைக்குயில் பால கிருஷ்ண சரஸ்வதி ஆகியோரையும் குறிப்பிடலாம்.

இவ்வாறு பலதுறை சார்ந்த நடிகர்களுடன் இணைந்து நடித்து பலருடைய பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் பெற்ற வி.என்.செல்வராஜா நோய் வாய்ப்பட்டதால் தொடர்ந்து அவரால் கலைத்துறைக்குத் தனது சேவையினை ஆற்ற முடியாமல் போனது.

இருப்பினும் தனது அவ்வமைக்கேற்ற வகையில் பல மாணவர்களுக்குச் சங்கீத ஞானத்தையும், நாடகத் துறையின் பரிணாமத்தையும் ஊட்டிச் சிறந்த கலைஞானமுள்ள மாணவர் சமுதாயத்தை வளர்த்துள்ளமை பாராட்டத்தக்கதொன்றாகும்.

## கலாபூஷணம் அமரர் வி.என்.செல்வராஜா குறித்த ஒரு நினைவுப் பார்வை





தமிழ்க் கலைப் பாரம்பரியங்களில் ஒன்றான இசை நாடகத் துறையில் தனது வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்த வி.என். செல்வராஜா கடந்த 7–11–2004 அன்று இறைவனடி சேர்ந்த செய்திகேட்டு கலை உலகம் கதி கலங்கிப் போனது.

இவரது இழப்பு கலைத் துறைக்கு நீண்டதொரு வெற்றிடத்தை ஏற்படுத்தியுள்ளது. வி.என்.செல்வராஜா மறைந்தாலும் அவரால் எறியப்பட்ட விழுதுகள் என்றும் மறையாத புகழுடன் துளிர் விட்டுக் கொண்டிருக்கும்.

எஸ்.கவிதரன்

# ஐரோப்பாவில் அரசும் புலிகளும் சுனாமி தாச்சி விளையாட்டு!





இரண்டாவது தடவையும் சுனாமி வந்தாலும் வரும்போல நிலைமைகள் உருவாகின.

ஆனால், முதலாவது சுனாமிக்கான பொதுக்கட்டமைப்பை உருவாக்குவதில் விடுதலைப் புலிகளும் இலங்கை அரசும் இன்னமும் உடன்பாடு காணவில்லை.

அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களின் தலைமையில் ஐரோப்பாவுக்குச் சென்றுள்ள விடுதலைப் புலிகளின் தூதுக்குழுவினர் கூட சுனாமிப் பொதுக்கட்டமைப்பு தொடர்பான முயற்சிகளில் இறங்கியுள்ளனர்.

விடுதலைப் புலிகளும் இலங்கை அரசும் தத்தமக்கென வெவ்வேறு ஆலோசனைகளை சுனாமிப் பொதுக்கட்டமைப்புக்கெனக் கொண்டிருந்த ஒரு சந்தர்ப்பத்தில் இரு சாரா‌ரது ஆலோசனைகளுக்கும் மதிப்புக்கொடுத்து நோர்வே நடுநிலைமைமிக்கதொரு பொதுக்கட்டமைப்புக்கான ஆலோசனை வடிவத்தை முன் வைத்திருந்தது. நோர்வே கொடுத்திருந்த நடுநிலையான வடிவத்தைத் தாம் ஏற்றுக்கொள்வதாக விடுதலைப் புலிகள் பகிரங்கமாக அறிவித்திருந்தனர். எனினும், அவ்வடிவத்தை இலங்கை அரசு ஏற்றுக்கொள்ளவில்லை.

இந்த நிலையில் அரச நிலைப்பாடுகளுக்கு ஏற்ப நோர்வே சமர்ப்பித்திருந்த நடுநிலையான வடிவத்தில் மேலும் திருத்தங்கள் நோர்வே செய்து, சுவிற்ஸர்லாந்திலுள்ள நோர்வேத் தூதரகம் ஊடாக அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனிடம் அவ்வடிவம் வழங்கப்பட்டிருந்தது. ஆனால், அந்தத் திருத்திய வடிவம் விடுதலைப் புலிகளின் எதிர்பார்ப்புக்களுக்கு ஈடுகொடுப்பதாக அமையவில்லை என்று செய்திகள் வெளியாகின.

விடுதலைப் புலிகள் அவ்வடிவம் தொடர்பாக மேலும் விளக்கங்களை பெறவிரும்பினர். இந்த நிலையில் தலைமையுடனும் இவ்விடயங்களையிட்டு பொருத்தமான வழிமுறைமைகளுக்கு ஊடாக ஆலோசனைகளை தமிழ்ச்செல்வன் மேற்கொண்டிருந்திருக்கலாம் .

புலிகள் ஏற்கனவே ஏற்றுக்கொண்ட நோர்வே தயாரித்த மூலவடிவத்தில் அரசத் தரப்பு யோசனைகளுக்கு ஏற்ப திருத்தம் மேற்கொண்ட பின்னர் விடுதலைப் புலிகளிடம் சுவிஸில் வைத்து வழங்கப்பட்ட பொதுக்கட்டமைப்புக்கான யோசனைகளை நிராகரிப்பது என்ற முடிவுக்கு விடுதலைப் புலிகள் வந்தனர். தமது தலைமைப்பீடத்துடன் ஐரோப்பாவில் இருந்தபடியே ஆலோசனைகளை நடத்தியபடி தமிழ்ச்செல்வன் செயற்படுகிறார் என்றும் செய்திகள் வெளியாகின. சுனாமிப் பொதுக்கட்டமைப்பு விவகாரத்தில் தமிழ்ச்செல்வன் அவர்கள் ஒஸ்ரியத் தலைநகர் வியன்னாவில் வைத்து. எரிக்சொல்ஹெய்மிடம் தமது புதிய ஆலோசனைகள் அடங்கிய ஒரு திட்டத்தை மார்ச் 28 ஆம் திகதி வழங்கியுள்ளார்.

விடுதலைப் புலிகள் வழங்கிய அந்த யோசனைத் திட்டத்தில் என்ன என்ன விடயங்கள் அடங்கியுள்ளன என்பதை இலங்கை அரசத் தரப்புக்கு எரிக்சொல்ஹெய்ம் அறிவித்துவிட்டார் என்றும் தெரிகிறது. ஆனால், விடுதலைப் புலிகளின் புதிய யோசனைகளை இலங்கை அரசத் தரப்பு ஏற்றுக்கொள்வதற்கான சாத்தியப்பாடுகள் மிகக் குறைவாகவே உள்ளன என்றும் செய்திகள் வெளியாகின.

2004 டிசெம்பர் 26 ஆம் திகதி சுனாமி தாக்கிய பின் இருவாரங்கள் கழிந்த நிலையில் விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்துக்கும் இலங்கை அரசின் சமாதானச் செயலகத்துக்கும் இடையில் சுனாமிப் பொதுக்கட்டமைப்பு ஒன்றை நிறுவிக்கொள்வதற்கான பேச்சுக்கள் தொடங்கின. எனினும், இருதரப்பினருக்கும் இடையில் கட்டமைப்புக்கான அங்கத்தவர்களை நியமித்தல், கட்டமைப்புக்கான அதிகாரங்கள் முதலிய விடயங்களிலிருந்து சுனாமி அழிவுகளை புனர்நிர்மாணம் செய்வதற்கான ஆளணிகள், உபகரணங்கள் முதலியவற்றை தரைவழியாகவா அல்லது கடல் வழியாகவா கொண்டுவருவது போன்ற தீர்மானத்துக்கு வருவது வரை உடன்பாடுகளை எட்டிப்பிடிக்க முடியாத இழுபறி நிலைமையே நிலவிவருகிறது.

இறுதியாக மார்ச் 28 ஆம் திகதி விடுதலைப் புலிகளால் புதிய யோசனைகளுடன் கூடிய வடிவம் எரிக்சொல்ஹெய்மிடம் வழங்கப்பட்டபோது அச்செய்தியில் இங்கு உள்ளூரில் அந்த யோசனைகளை அரசு ஏற்றுக்கொள்வதற்கான வாய்ப்புக்கள் இல்லை என்ற அவநம்பிக்கையும் சேர்ந்தே வெளியிடப்பட்டுள்ளது.

இக்கட்டத்தில் அன்று இரவு இந்தோனேஷிய நேரம் 11.09 மணியளவில் (இலங்கை நேரப்படி இரவு 10 மணி) சுமாத்திராத் தீவுப் பகுதியை அதி சக்தி வாய்ந்த நிலநடுக்கம் தாக்கியது. ரிச்டர் அளவில் 8.5 புள்ளிக்கு மேல் பதிவாகிய இந்த நிலநடுக்கத்தை அடுத்து. சுனாமி அனர்த்தம் மீண்டும் நிகழ்வதற்கான வாய்ப்புக்களையிட்டு அமெரிக்காவின் பசுபிக் சுனாமி எச்சரிக்கை நிலையம் அவசர அறிவிப்புக்களைச் சம்பந்தப்பட்ட நாடுகளுக்கு விடுத்தது.

தனது இணையத்தளத்தில் அந்த நிலையம் பிராந்திய நாடுகளின் அரச, அரசசார்பற்ற நிர்வாகிகள் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டிருந்தது.

இலத்திரனியல் ஊடகங்களும் இணையத்தளங்களும் இரவோடு இரவாக எச்சரிக்கையின் மேல் எச்சரிக்கைகளை வெளியிட்டு மக்களை அவசர அவசரமாக பாதுகாப்பு இடங்களைநோக்கி ஓடச் செய்தன. முன்னர் கொடூரமான அனுபவத்தைப் பெற்றிருந்த மக்கள் காட்டிய தீவிர அவசரத்தால் நெரிசல்களில் சிக்கி காயப்பட்டவர்களும் இறந்தவர்களும் கூட உள்ளனர். அதேவேளை, விழித்திருந்த அரசியல்வாதிகள் சிலர், ஊடகக்காரர்களையும் ஆயத்தம் செய்துகொண்டு 'நல்லாப் பவுடர் பூசி வெளிக்கிட்டுக்கொண்டு .....' பயந்து ஓடிவந்த மக்கள் மத்தியில் பிரசன்னமாகி 'ஆறுதல் ஆறுகளைப்' பாயவிட்டனர்.

முதலாவது சுனாமிக்கான பொதுக்கட்டமைப்புப் பற்றிய பேச்சுக்கள் இன்னமும் இழுபட்டுக்கொண்டிருக்கின்ற இவ்வேளையில் - இரண்டாவது சுனாமி பற்றிய எச்சரிக்கைகளால் இலங்கையின் வடக்கு - கிழக்கு உட்பட முன்னர் பாதிக்கப்பட்ட அனைத்து இடங்களிலும் அல்லோலகல்லோப்பட்ட மக்கள், அனர்த்தம் எதுவும் நிகழாமையிட்டு நிம்மதிப் பெருமூச்சவிட்டனர்.

சுனாமி அனர்த்தத்தையடுத்து, கடற்கரையில் 100M, 200M சுனாமிப் பாதுகாப்பு வலயங்களை குடியிருப்பு தொழில் முயற்சிகளுக்கு தவிர்க்கவேண்டும் எனும் வகையில் அரச மட்டங்களிலிருந்து வெளியாகும் அறிவிப்புக்கள் மீண்டும் சுனாமி வருமோ என்ற பதகளிப்பால் மீள் அழுத்தம் பெறத் தொடங்கியுள்ளன. வடக்கு- கிழக்கைப் பொறுத்தவரை அரச இராணுவக் கட்டுப்பாட்டுப்பகுதிகளிலுள்ள கடற்கரைகள் பாதுகாப்பு விவகார அடிப்படையில் நன்கு கட்டுப்படுத்தப்பட்ட நிலையிலேயே இன்றும் உள்ளன. வரையறுக்கப்பட்ட மீற்றர்களுக்கு அப்பால்தான் குடியமரலாம் எனும் விடயம் சுனாமியைக் காரணம் காட்டி வடக்கு- கிழக்கில் மீளவும் அரசால் வலியுறுத்தப்படும் நிலை தோன்றியுள்ளதையும் அவதானிக்க முடிகிறது.

தெற்கில் சுனாமிக்காக வரையறுக்கப்பட்ட மீற்றர்களுக்கு அப்பால் குடியமரவேண்டும் எனும் விடயம் ஆளும் கட்சி, எதிர்கட்சி ஆகியவற்றின் அரசியல் விவகாரமாகியுள்ளதுபோல் வடக்கு - கிழக்கில் இராணுவ உபாயங்களுடன் தொடர்புள்ள விவகாரமாகியுள்ளது.

விடுதலைப் புலிகள், அரசு ஆகியன பொதுக்கட்டமைப்பு அமைக்குமோ இல்லையோ அதற்கான பேச்சுக்கள் நடைபெறும் காலம் என்று கூறப்படும் காலத்தில் நடைபெறும். அத்தனை விடயங்களும் தெற்கிலும், வடக்கு- கிழக்கிலும் அரசியல்- இராணுவ யுத்திகளின் தாச்சி விளையாட்டாகவே பார்க்கப்பட வேண்டியவை.

இப்பொழுது கோடுகள் ஐரோப்பாவில் வரையறுக்கப்பட்டு சுனாமித் தாச்சியை நன்றாகவே விளையாடுகிறார் தமிழ்ச்செல்வன்.

- டனீஸ்ரன் லூயிஸ்

# யாரோடு நோவோம்...?

நாட்டின் பொருளாதார வளர்ச்சியைப் பறைசாற்றும் ஒரு விடயமாக மோட்டார் வாகனங்களின் பெருக்கம் பொருளியல் புள்ளிவிவரங்கள் சுட்டிக் காட்டுமளவுக்கு அதிகரித்துள்ளது.

முன்னர் சைக்கிள்களும், மாட்டு வண்டிகளும் பெற்றிருந்த இடத்தை இப்போது எரிபொருளால் இயங்கும் வாகனங்கள் எடுத்துக்கொண்டு விட்டன. கொழும்பின் புறக்கோட்டையிலும், ஏனைய புறநகரங்களிலும் நவீன மோட்டார் கார்களுக்கு மத்தியில் மாட்டு வண்டிகளை நாம் அவதானிக்க முடியும். ஆனால், யாழ்ப்பாணத்தில் வீதியால் செல்லும் ஒருவர் மாட்டு வண்டிகளைக் காண்பது அரிதாகி விட்டது.

புலம் பெயர்ந்து வெளிநாடுகளுக்குச் சென்று இரு தசாப்தங்களின் பின்னர் நாடு திரும்பும் ஒருவர் தனது பிள்ளைகளுக்குத் தனது வாழ்க்கை அனுபவம் பின்புலத்தைக் காண்பிக்க விழைகிறபோது தோல்வியையே தழுவி விடுகிறார்.

பழைய வாழ்க்கையில் அனுபவித்த வீடு உள்ளிட்ட சொத்துக்களை யுத்தம் காவு கொண்டு விட்டமை ஒரு புறம் என்றால், புலம் பெயர்ந்தோரால் அனுப்பப்படும் பணம் புதிய நாகரிக விருப்பினால் பழையனவற்றைக் கழித்து புதியவற்றை ஆக்குவது, கொள்வது மறுபுறம் இதனால் தலைவாசலும், திண்ணையும் கொண்ட வீடுகள் அழிந்து போயின. நாற்சார வீடுகள் பிடுங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. புதிய மோஸ்தர்களில் மேலைத்தேய கட்டடக் கலையின் பிரதிபலிப்புக்களாக வீடுகள் எழுந்து கொண்டிருக்கின்றன. பழமை, பாரம்பரியம் பேணுவோர் இதை எரிச்சலுடன் பார்க்க நேரிட்டாலும், ஒவ்வொரு காலகட்டத்திலும் இவ்வாறே நிகழ்ந்து வந்துள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது.

நாங்கள் தமிழர்கள் என்றோ, சைவர்கள் என்றோ மார்தட்டுபவர்கள் என்றாலும், நமக்கு வரலாற்று உணர்வு கிடையாது என்பதை ஒப்புக்கொள்ளத்தான் – அது கடினமாக இருந்தாலும் – வேண்டும்.

ஆனால், இன்று எத்தனை பாடசாலைகள் தமது பழைய பாரம்பரியமான கட்டடங்களை இடித்துத் துவம்சம் செய்து புதிய கட்டடங்களை நிறுவுகின்றன! எத்தனை ஆலயங்கள் தமது பழைய கட்டட அமைப்புக்களைத் தரைமட்டமாக்கி, புதிதாக உருவாகின்றன! பழைய பாரம்பரியங்களைச் சிதைத்தழித்துக் கொண்டு, 'பழமையான பாரம்பரியமும் தொன்மைச் சிறப்பும் மிக்க நமது...' என மேடைகளில் முழங்குவது போலித்தனமானது.

மேலை நாடுகளில் பழமையான பொக்கிஷங்கள் பேணிப்பாதுகாக்கப்பட்டு வருவதைப் பார்க்கும் புலம்பெயர் பேர்வழியொருவர் இங்கும் அதைக்கான அவாவுறின் அது சாத்தியமில்லை. எங்காவது ஓரிரு புறநடைகள் தவிர.

புலம்பெயர்ந்தவர்களின் பெருந்தொகைப் பணம் ஆலயங்கள் ,பாடசாலைகள், வீடுகள்,பொதுநிறுவனங்கள் எல்லாவற்றாலுமே பௌதிக வளப்பெருக்கத்துக்கும் பழமைப் பாரம்பரியத்தின் சிதைவுக்குமே பெருமளவில் பயன்படுகின்றன என்பது கவலைக்குரியதன்று.

ஆரோக்கியமான சமூகக்கட்டமைப்பு உருவாக்கத்துக்கு இப்பணம் பயன்படுத்தப்படுமெனில், அது நல்ல பலனையே தரும்.

இன,மத அடையாளங்கள் பேண விழையும் ஒவ்வொருவருக்கும் வரலாற்றுணர்வு அவசியமானது.இன,மத கட்டுமானங்கள் யாவும் வரலாற்று ஒழுங்கில் பாரம்பரியமாக முன்கொண்டு வரப்பட்டவை.

நமது பழைய வாழ்வை, பழைமை வாழ்வை கட்டடங்களிலும், வாகனங்களிலும், ஏனைய பௌதிக அம்சங்களிலும் மறுதலித்துக் கொண்டு இன்றைய இளைஞர்களின் 'மனம்' பற்றி விமர்சிப்பதற்கான அருகதை, நமக்கில்லை என்றே சொல்ல வேண்டும்.

ஏனெனில், புதியவாழ்வை,புதிய சிந்தனையை வித்தியாசமான மனப்பாங்கை உருவாக்கியதில் நாமே முன்னோடிகளாக இருந்திருக்கிறோம்.

ஒரு தசாப்த காலத்திற்கு முன்னர் நமது சமூகம் பழைய வாழ்க்கைக்கு சிறிய அளவிலேனும் மீண்டிருந்தது.அந்தப் புண்ணிய கைங்கரியத்தைச் செய்தவர் ஜனாதிபதியாக விளங்கிய அமரர் ரணசிங்க பிரேமதாச.அவர் தமிழர் பகுதிகள் மீது விதித்த பொருளாதாரத் தடை காரணமாக மாட்டு வண்டிகள் கோலோச்சின. துவிச்சக்கர வண்டிகள் காடு மேடெல்லாம் கடந்து, தமது இயல்புக்கும் அதிகமாகச் சுமையேற்றின. மின்சார நீர்ப் பம்பிகள் துலாக்கல்லாக பாவிக்கப்பட பட்டை இறைப்பும், சூத்திரக் கிணற்று இறைப்புமாக நீர்ப்பாசன நடவடிக்கைகள் மாற்றமுற்றன. நமது கஞ்சல், குப்பைகள் வளமாக்கிகளாகப் பயன்பட்டன. பழைய விளக்குகள் ஒளியூட்டின. இப்படிப் பல. ஒவ்வொருவருக்கும் தம்மை, தமது உழைப்பை, தமது சுயபொருளாதாரத்தை, தமது சுயவாழ்வை , தமது அடையாளத்தை அறிய வைத்தது இந்தப் பொருளாதாரத் தடையே.

– இவ்வாறு கூறுவதைப் பொருளாதாரத் தடையை நியாயப்படுத்துவதாகவோ, நவீன மாறுதல்களை எதிர்ப்பதாகவோ அர்த்தப்படுத்தக் கூடாது. சமூக மாற்றம் என்பது பொது நியதியே. எனினும், பௌதிக மாற்றங்களைச் செய்த கொண்டு, உலகின் எல்லா மாறுதல்களையும் உள்வாங்கி ஒழுகிக்கொண்டு, ஏனையவர்களை – குறிப்பாக இளஞ் சந்ததியினரை – சுட்டுவிரல் நீட்டிக் குற்றஞ் சுமத்திக் கொண்டிருப்பது அவரவருக்குள்ளே மனதைக் குறுகச் செய்யும் ஒன்று

அதேவேளை–

நமது சமய, சமூகத் தலைவர்கள் வரலாற்று அக்கறையோடு பழமைப் பாரம்பரியங்கள் ஓர் இனக்குழுமத்தின், ஒரு மதக் குழுமத்தின் அடையாளங்கள் என்பதை உணர்ந்து கொண்டு செயலாற்றுவது அவசியமாகும்.

வன்னியிலும் இணுவிலிலும் அமைக்கப்பட்டுள்ள அருங் காட்சியகங்கள் இந்த அக்கறையின் வெளிப்பாடுகளே!

ஏகலைவன்

# 43.5 பில்லியன் சொத்துகள்!

## எக் காலத்திலாவது இது வெல்லப்பட முடியுமா?

ஸ்ரீ லங்கா இன்ஷுவரன்ஸ்

## எமது தலைமைத்துவம் எக் காலத்திலும் வெல்லப்பட முடியாதது!

*சொத்துகள் மற்றும் முகாமைத்துவத்தின் கீழுள்ள சொத்துகள்.

# பிரவுன்ஸ் நிறுவனக் கிளைகள் கௌரவிப்பு



பிரவுன்ஸ் நிறுவனக் கிளைகளைக் கௌரவிக்கும் நிகழ்வில் கலந்துகொண்ட பிரவுன்ஸ் நிறுவனத்தின் இயந்திரங்கள் விற்பனை மற்றும் சந்தைப்படுத்தும் பிரிவின் தலைவர் மஞ்சுள விஜேமான்ன, கிளை வலையமைப்பு விற்பனை மற்றும் சந்தைப்படுத்தும் பிரதிநிதி நிலுஷ கஹிங்கல, யாழ். கிளை முகாமையாளர் ஏ.ஜே.ஜே. ஜெரூட் மற்றும் பிரதித்தலைவர் திருமதி ரெஸானி குரே ஆகியோர் படத்தில் இடமிருந்து வலமாகக் காணப்படுகின்றனர்.

பிரவுன்ஸ் அலுவலக இயந்திரங்கள் விற்பனை பிரிவு தனது கிளைகளின் திறமைகளை கௌரவிக்கும் நிகழ்வை கடந்த 2005 மார்ச் முதலாம் திகதி 482, டி.பீ. ஜயா மாவத்தையில் உள்ள தனது பிரதான காரியாலயத்தில் நடத்தியது.

2004இற்கான சிறந்த கிளை முகாமையாளராக யாழ். கிளையின் ஏ.ஜே.ஜே. ஜெரூட் தெரிவானதுடன், இவரை கௌரவிக்கும் நோக்கில் பஜாஜ் மோட்டார் சைக்கிள் ஒன்றும் வழங்கப்பட்டது.

அத்துடன், அலுவலக இயந்திரங்கள் விற்பனைக்கு அர்ப்பணிப்புடன் பாடுபட்ட மேலும் எட்டு கிளை முகாமையாளர்களுக்கு சிங்கப்பூர் மற்றும் மலேசியா சென்றுவர இலவச விமான டிக்கட்டுகளும் வழங்கப்பட்டன.

பிரவுன்ஸ் அலுவலக இயந்திரங்கள் பிரிவு நாடுபூராகவும் விஸ்தரிக்கப்பட்ட 32 கிளைகளையுடைய வலையமைப்பைக் கொண்டிருப்பது இதன் ஓர் முக்கிய அம்சமாகும்.

# நுவரெலியாவில் பருவகாலக் கொண்டாட்டம் SRI LANKA INSURANCE ஏற்பாடு

இவ்வருட பருவகாலக் கொண்டாட்டத்தை நுவரெலியாவில் பாரியளவில் கொண்டாட Sri Lanka Insurance நிறுவனம் பாரிய ஏற்பாடுகளை மேற்கொண்டுவருகின்றது.

இந்த ஏற்பாடுகள் Nuwera-Eliya Golf Club மற்றும் Mahagastota Hill Climb ஆகியவற்றுடன் இணைந்து மேற்கொள்ளப்படுகின்றன.

நுவரெலியா நகர் முழுவதும் Sri Lanka Insurance நிறுவனத்தின் கொடிகளால் அலங்கரிக்கப்படும்.

சிறுவர்கள் கொண்டாடுவதற்கென 'மினி முத்து சிறுவர் பூங்கா'வொன்று நிறுவனத்தால் அமைக்கப்படும். இந்தப் பூங்காவுக்கு வரும் சிறுவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் பூங்காவைச் சுற்றிவர மரங்களால் வேலிகள் அமைக்கப்படும். பூங்காவை மிகவும் சுறுசுறுப்பானதாகவும், அழகானதாகவும் வைத்துக்கொள்ள 40 டிஜிட்டல் வர்ணப்படங்கள் அங்கு வைக்கப்படும்.

மேலும், நுவரெலியாவின் நுழைவாயிலில் 4 வரவேற்புத் தூண்கள் நிறுவப்படும். பருவகாலக் கொண்டாட்டத்திற்காக வருகின்ற உள்ளூர் மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலாப்பயணிகளுக்கு இவை சரியானதொரு வழிகாட்டியாய் அமையும்.

இந்த வரவேற்புத்தூண்கள் நுவரெலியாவினதும், இலங்கையினதும் வரைபடங்களையும் கொண்டிருக்கும். இது சுற்றுலாப் பயணிகளுக்கு மாபெரும் உதவியாய் அமையும்.

நுவரெலியாவுக்கு வருகின்ற உள்ளூர் மற்றும் வெளிநாட்டுப் பயணிகளின் சுயபாதுகாப்பை உறுதிப்படுத்த அவர்கள் எவ்வாறு நடந்துகொள்ளவேண்டும் என்பதை அவர்களுக்குக் கற்பிக்க Sri Lanka Insurance நிறுவனம் பொலிஸாருடன் இணைந்து பல நடவடிக்கைகளையும் எடுத்துள்ளது.



PABC வங்கி அண்மையில் அதன் கிளையொன்றை ராஜகிரியவில் மீளத்திறந்தது. திறப்புவிழா வைபவத்தின்போது வங்கியின் தலைவர் நாடாவை வெட்டித் திறந்து வைக்கின்றார். அருகில் வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரி நடராஜா, மற்றும் உயர் அதிகாரிகள் ஆகியோர் அருகில் நிற்பதைப் படத்தில் காணலாம். இவ்வைபவத்தின்போது பல பிரமுகர்களும், அதிகளவான வாடிக்கையாளர்களும் கலந்துகொண்டனர்.

# கடந்த வருட நிதிக்கட்டமைப்பில் கொமர்ஷல் வங்கி சாதனை

2004ஆம் ஆண்டுடன் முடிவடைந்த தளம்பல் நிறைந்த நிதியாண்டுக்கு மத்தியில் கொமர்ஷல் வங்கி தனது நிதிக்கட்டமைப்பால் சாதனை படைத்துள்ளது.

கடந்த வருடம் கொமர்ஷல் வங்கி வரிக்கு முந்திய லாபமாக 250 கோடி ரூபாவைப் பெற்றுள்ளது. இம்மாதம் வங்கி வெளியிட்டுள்ள வருடாந்த அறிக்கையிலேயே இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

2004 இற்கான இந்த அறிக்கை இம்மாதம் 7ஆம் திகதி கொழும்பு ஹலதாரி ஹோட்டலில் வெளியிடப்பட்டது. இந்த அறிக்கை வெளியீட்டு நிகழ்வின்போது கலந்துகொண்ட கொமர்ஷல் வங்கியின் தலைவர் மஹேந்ர அமரசூரிய கூறுகையில்:-

கடந்த வருட நிதியாண்டில் கொமர்ஷல் வங்கி நிதி தொடர்பான அனைத்து நடவடிக்கைகளிலும் சாதனையை நிலைநாட்டி இலங்கையின் சிறந்த தனியார் வங்கி என்ற பெயரை மீண்டும் தக்க வைத்துக் கொண்டுள்ளது.

வரிக்கு முந்தியலாபத்தை 250 கோடி ரூபாவாகப் பெற்றதோடு இதன் முழு வளர்ச்சி 27.24 வீதமாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

கொமர்ஷல் வங்கியின் பணவைப்பு 27.25 வீதமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. பணவழங்கல் நிலையில் 34.75 வீதம் பதியப்பட்டுள்ளது. வழங்கப்பட்ட மொத்தத்தொகை 9,620 கோடி ரூபாவாகும். வங்கியின் மொத்தச்சொத்துக்கள் 14,180 கோடியாகும். இது 25.68 வீதமாகப் பதியப்பட்டுள்ளது.

கொமர்ஷல் வங்கியின் கூட்டு நிறுவனத்தின் வரிக்குப் பிந்தியலாபம் 8,674 லட்சம் ரூபாவாகும். இது 51.67 வீதமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு எல்லா நிலையிலும் கொமர்ஷல் வங்கிசாதனையை நிலைநாட்டியுள்ளது. எதிர்காலத்திலும் வங்கி மேம்பட்டு நிற்கவே முயற்சிசெய்யும். - என அவர் கூறினார்.





சுப்பிரிவிக்கி
மூலிகை
ஆயுர்வேத
பற்பசை

சுமுது
வாயில் உண்டாகும்
தொற்று நோய்களை
கட்டுப்படுத்தும்.

ஆயுர்வேத மூலிகை எண்ணெய் அடங்கிய பற்பசை



சித்தாலேப
குடும்பத்தின் தயாரிப்பு

வடபுல விநியோகஸ்தர்கள் :-
வனிக்கா மெடிகல்ஸ்
இல. 85, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே:- 021 2226291, பக்ஸ் :- 021 2222445.

HEWOOD (ஹேவுட்)
மரத்தை ஒத்தது . அதிலும் சிறந்தது எனலாம் !
ஒரு அழகான இல்லம் / அலுவலகத்திற்கு

- பனலிங்
- ஸ்கேட்டிங்
- மோல்டிங்
- பீடிங்
- சீலிங்




- மரத்தைவிட மிக நேர்த்தியானது.
- வர்ணம் பூசுதல் அல்லது பளபளப்பாக்குதல் தேவையற்றது.
வளையாது, சிராயாது அல்லது கெட்டுப்போகாது
- பூச்சிகளால் பாதிப்புக்குள்ளாகாது.
- ஈரத்தை உறுஞ்சாததால், தண்ணீரிலிருந்து அது பாதுகாக்கப்படுகிறது.
தலைமுறை தலைமுறையாக நிலைநிற்கும்,
- முழுமையாக பராமரிப்பற்றது.
- பலவித வர்ணங்களில் கிடைக்கும்.



HEWOOD
ஹேவாஸ் கிறாபிக்ஸ் (பிறை) லிமிட்டெட்
223, ரி.பி. ஜயா மாவத்தை, கொழும்பு -10
தொ.பேசி: 2685271, 2685174, 2687132, பக்ஸ்: 2687133
யாழ். தொடர்புகளுக்கு 077 -3024306 (ரூபன்)




# ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டோருக்கு சிலிங்கோவின் நூறு வீதக் கொடுப்பனவு

சிலிங்கோ காப்புறுதி நிறுவனம் ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட தனது காப்புறுதியாளர்களின் உரிமைக்கோரிக்கைகளுக்கு 100 வீதக் கொடுப்பனவுகளைச் செலுத்தியுள்ளது.



Ceylinco Life இன் பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளர் ஆர். ரங்கநாதன்.

Ceylinco Life இன் பிரதம நிறைவேற்று அதிகாரி ஆர். ரங்கநாதன் இதுபற்றிக் கூறுகையில்:-

இம்மாதம் முதல்வாரத்தில் ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டது தொடர்பான 165 உரிமைக்கோரிக்கைகளைப் பெற்றோம்.

அவை அனைத்துக்கும் இம்மாதம் 14ஆம் திகதியளவில் 100 வீதக் கொடுப்பனவுகளை வழங்கி முடித்துவிட்டோம்.

ஆழிப்பேரலை அனர்த்தம் காப்புறுதித் துறைக்குப் பெரும் சவாலாய் அமைந்தது. இந்த நிலையில் 100 வீதக் கொடுப்பனவுகளை வழங்குவது பெரும் பாராட்டுக்குரிய விடயம்.

அகால மரணக் காப்புறுதி செய்யப்பட்டிருந்தவர்கள் செலுத்தப்பட்ட காப்புறுதித் தொகையைக் காட்டிலும் இரு மடங்குத் தொகையை உரிமைக்கோரிக்கைக் கொடுப்பனவாகப் பெற்றனர்.

காப்புறுதி உரிமைக்கோரிக்கைகள் காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை, திஸ்ஸமஹாராம, அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை மற்றும் யாழ்ப்பாணம் போன்ற இடங்களிலிருந்து பெறப்பட்டன.

சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து உரிமைக் கோரிக்கைகளுக்கும் கொடுப்பனவுகள் அனைத்தும் கொடுத்து முடிக்கப்பட்டுவிட்டாலும், காப்புறுதியாளர்களின் குடும்பங்கள் சில காரணங்களுக்காக இன்னும் தங்களது கோரிக்கைகளை சமர்ப்பிக்காமல் இருக்கலாம். அவ்வாறானவர்கள் அருகில் உள்ள Ceylinco Life கிளைகளில் தங்களின் கோரிக்கைகளைச் சமர்ப்பிக்கலாம் எனக் கூறினார்.



# பத்து வருடங்களுக்குள் ஜனசக்தி அபார சாதனை
# வெற்றியின் ரகசியம் பற்றி அதன் தலைவர் விளக்கம்

காப்புறுதித்துறையில் கடந்த பத்து வருடங்களாக முன்னிலையில் திகழும் ஜனசக்தி காப்புறுதி நிறுவனத்தின் தலைவர் சந்திரா சாப்டர் அதன் முன்னேற்றம்பற்றி விசேட செவ்வி ஒன்றை வழங்கியுள்ளார்.

ஏப்ரல் மாதம் 3ஆம் திகதி தனது 75 வயதைப் பூர்த்திசெய்யும் அவர் காப்புறுதி தொடர்பாக வழங்கியிருந்த அவரது அனுபவத்தையும் அவர் மேற்கொண்ட முயற்சிகளையும் கீழே பார்க்கலாம்.

**கேள்வி:-** இலங்கையில் வேகமாக வளர்ந்து வருகின்ற காப்புறுதி நிறுவனமான ஜனசக்தி காப்புறுதிக் கம்பனியை நிர்வகிக்கின்றபோது உங்கள் உணர்வுகள் எத்தகையது?


**பதில்:-** ஜனசக்தியைப் போன்ற ஒரு கம்பனியை நிர்வகிக்கக் கிடைத்தையிட்டு நான் உண்மையிலேயே பெருமைப்படுகிறேன். ஜனசக்தியில் கடமைபுரிவது சவால்கள் நிறைந்த ஒரு செயற்பாடாகும். நீங்கள் கூறுவதைப் போன்று காப்புறுதித்துறையின் வல்லுனர்களுடன் போட்டியிட்டு மிகவேகமாக வளர்ந்து வருகின்ற நாம் இதுவரை எமது கடமைகளை சரிவர நிறைவேற்றியிருக்கின்றோம். எனவே, பெருமைப்பட்டுக்கொள்ள இதுவே போதும் என நினைக்கின்றேன்.

**கே:-** "காப்புறுதியின் தந்தை" என்று நீங்கள் அழைக்கப்படுகிறீர்கள். இதுபற்றி ஏதும் கூறமுடியுமா?

**ப:-** நான் பிறப்பதற்கு முன்பிருந்தே காப்புறுதி இருந்து வந்துள்ளது என்பதனால் காப்புறுதியின் தந்தை என்றழைக்கப்படுவது எவ்வளவுதூரம் சரியானது என்பது எனக்குத் தெரியாது. காப்புறுதித் துறையில் தற்போது கூட ஒன்றித்த ஈடுபாடுடைய மூத்தவர்களுள் நானும் ஒருவன் என்பதாலும், சுமார் 50 வருடகாலமாக இத்துறையில் ஈடுபட்டுக்கொண்டிருப்பதாலும் என்னை இவ்வாறு அழைக்கிறார்கள் என நினைக்கிறேன். இதுவும் ஒருவகை வெற்றியே. நீண்டகாலம் இத்துறையில் ஈடுபட்டிருந்தாலும்கூட தற்சமயம் ஊக்கத்துடன் செயற்படாதவர்களும் இருக்கிறார்கள். இதற்கு சிறந்த உதாரணம் ரெஜீ பீரிஸ். இவர் ஒரு மூத்தவராயினும் தற்போதைக்கு இத்துறையில் இல்லை. தற்போதைய இத்துறையில் இருக்கின்றவர்களுள் நீண்டகால காப்புறுதி வரலாற்றைக் கொண்ட நபர் நானாக இருக்கலாம்.

**கே:-** தொழில்நுட்பத்தைப் பொறுத்தளவில் இலங்கையின் இடம்பற்றியும் மானுடத் தொடர்புகள் பற்றியும் நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

**ப:-** உலகத்தில் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துபவர்கள் பட்டியலில் நாம் மிகவும்



ஜனசக்தி காப்புறுதி நிறுவனத்தின் தலைவர் சந்திரா சாப்டர்.

கீழ்நிலையிலேயே இருக்கின்றோம். இருப்பினும் இண்டர்நெட், ஈ -மெயில் மற்றும் தற்போதைய நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி அதன்மூலம் பயன்பெற்று மிகவேகமாக நாம் முன்னேறிக் கொண்டிருப்பதாக நான் நினைக்கிறேன். முழுமையாக இணையத்தை மாத்திரம் பயன்படுத்தி தொழிலில் ஈடுபடும் அளவுக்கு தொழில்நுட்ப முன்னேற்றத்தை நாம் பெற்றிலலையாயினும், நீங்கள் குறிப்படுவதைப் போன்று காப்புறுதித் தொழிலைப் பொறுத்தமட்டில் மானுடத் தொடர்பு அவசியம் என்பதை நானும் ஏற்றுக்கொள்கிறேன். இதனைப் புறந்தள்ளிவிட்டு நாம் முன்னோக்கிச் செல்லக்கூடாது என்பதே எனது கருத்து. ஏனென்றால், காப்புறுதிப் பத்திரமொன்றின் பின்னால் இருக்கின்ற நபரைக் கண்டுகொள்வதற்கு வாடிக்கையாளர் விரும்புவார். வெளிநாட்டுக் கம்பனிகள் இணையத்தைப் பயன்படுத்தி தொழில்செய்கிறார்களாயினும், வாடிக்கையாளர்களுக்கு மாற்று வழிகள் இல்லை என்ற காரணத்தால் அவர்களும் அதனைப் பின்பற்றுகிறார்கள். எனினும், இங்கு மானுடத் தொடர்பு இருந்தாகவேண்டும் எனக் கருதுகிறேன். வாடிக்கையாளர்களிடம் இதுபற்றி வினவினால் தமது முகவரை நேரில் காணவிரும்புவதாக அவர்கள் கூறுவார்கள்.

விசேடமாக காப்புறுதித் தொழிலைப் பொருத்தமட்டில் மானுடத் தொடர்பைப் பேணவேண்டியது அவசியமாகும். அன்றேல், அது பூரணத்துவமடையாது.

**கே:-** மிகவும் தேவைப்படுகின்ற காப்புறுதி வகை எது? ஆயுள் காப்புறுதியா? அல்லது பொதுக்காப்புறுதியா?

**ப:-** வாகனக் காப்புறுதிதான் பெற்றுக்கொள்ள மிக இலகுவான காப்புறுதி என மக்கள் நினைக்கிறார்கள். சிலவேளை, நாளுக்குநாள் வாகனங்கள் அதிகரிப்பதனால் அது தேவைப்படுவதாக இருக்கலாம். எனினும், பெற்றுக்கொள்ளவேண்டிய காப்புறுதி வகை எது என்று வேறு வகையில் நீங்கள் இக்கேள்வியை என்னிடம் கேட்டிருந்தீர்களானால், ஆயுள் காப்புறுதியும் மருத்துவக் காப்புறுதியும் என்றே நான் பதில் கூறியிருப்பேன். இந்த இரண்டு துறையும் இன்று புறக்கணிக்கப்பட்டிருக்கின்றன. ஒருவர் தனது வாகனத்தைக் காப்புறுதிசெய்ய முன்னர் மேற்படி காப்புறுதிகளைப் பெற்றுக்கொள்ள ஊக்குவிக்கும் வகையில் அரசாங்கம் ஏதெனும் திட்டங்களை வகுத்தாகவேண்டும். நீங்கள் உங்களது ஆயுளைக்காப்புறுதி செய்து, உங்களில் தங்கி வாழ்பவர்களைப் பாதுகாக்கவேண்டும் என்பதே எனது கருத்தாகும். எமது நாட்டில் வெகுவாகப் புறக்கணிக் கப்பட்டுள்ள துறைகளாக இந்த இரண்டு துறைகளும் காணப்படுகின்றன.

**கே:-** "காப்புறுதித் தீபத்தை ஏற்றிவைத்தல்" என்ற உங்களது எண்ணக்கருவை சுருக்கமாக விவரித்தால்...?

**ப:-** "ஒவ்வொரு இல்லத்திலும் காப்புறுதி தீபத்தை ஏற்றிவைப்போம்" என்றுதான் நாம் ஆரம்பத்தில் கூறினோம். ஏனென்றால், ஒவ்வொரு இல்லத்துக்கும் காப்புறுதியின் செய்தி கொண்டு செல்லப்படவேண்டும் என் நான் உண்மையிலேயே கருதினேன். நீங்கள் ஏழையாக இருக்கின்ற அள்வுக்கு காப்புறுதியின் தேவையும் அதிகரிக்கும் என்பதுவே எனது கருத்து. ஒரு பணக்காரனுக்கு காப்புறுதி அவசியப்படாது. ஏழைக்கே அது தேவை. காப்புறுதியின் செய்தியை ஒவ்வொரு இல்லத்துக்கும் எடுத்துச்செல்வது எமது அனைவரினதும் கடமையாக இருத்தல் வேண்டும். கீழ்மட்டத்தில் இருக்கின்றவர்களுக்கான குறிப்பிடத்தக்க அளவு மிக அதிகளவு என நான் கூறமாட்டேன் - காப்புறுதியை வழங்கியுள்ள ஒரு கம்பனி என்ற பெருமை எங்களுக்கு உண்டு. ஏனைய கம்பனிகள் போகாத கஷ்டப் பிரதேசங்களில்கூட எங்களது கிளைகள் காணப்படுகின்றன. இப்படித்தான் காப்புறுதியை ஒவ்வொரு இல்லத்துக்கும் கொண்டுசெல்ல நாம் முயற்சி செய்திருக்கின்றோம் என நினைக்கிறேன். ஜனசக்தி அதன் ஊழியர்களைப் பொறுத்தமட்டில் மிக அதிஷ்டசாலியாகும். மிகைப்படுத்தப்படாத எனது கருத்து என்னவென்றால், இலங்கையின் காப்புறுதிக் கம்பனிகளில் சிறந்த ஊழியர்கள் குழாம் இருப்பது எமக்கு மாத்திரம் என்பதாகும். தொழில்சார் தரத்தில் மாத்திரமல்ல, கம்பனியின்பால் உள்ள ஈடுபாடு பூரண விசுவாசம் ஆகியவற்றிலும் அவர்கள் சிறந்து விளங்குகிறார்கள். தனிநபர்களுக்கிடையேயான தொடர்பு மிக உயர்ந்த மட்டத்தில் இருக்கிறது என்பது எனது அபிப்பிராயம். ஜனசக்தியை ஒரே குடும்பமாகக் கருதவே நாம் பழகியுள்ளோம். இது ஒரு கம்பனியல்ல மாறாக ஒரு குடும்பம்.

**கே:-** உங்களது வெற்றியில் உங்கள் குடும்பத்தவர்களின் பங்களிப்பு எத்தகையது?

**ப:-** உண்மையிலேயே அளப்பரியது. ஜனசக்தி ஆரம்பித்த காலப்பகுதியில் வெளிநாட்டிலிருந்து இங்கு வந்த எனது பிள்ளைகள் அதன் வெற்றிக்கு அளப்பரிய பங்காற்றியுள்ளார்கள். அவர்கள் அனைவரும் எல்லாத் துறைகளிலும் கம்பனியின் முன்னேற்றத்துக்காக மதிப்பிடமுடியாத அளவுக்கு தமது பங்களிப்பை வழங்கியுள்ளார்கள். அவர்களது பங்களிப்பும் ஒத்துழைப்பும் இல்லைஎன்றால் இந்த நிலையை அடைதல் என்பது காணல் நீராகவே இருந்திருக்கும்.

**கே:-** நிறுவனத்திற்குள் புதுமுகங்களையும் ஆக்கபூர்வமான தன்மையையும் நீங்கள் எவ்வாறு ஊக்கப்படுத்துகிறீர்கள்?

**ப:-** பரீட்சைகளுக்கு முகம்கொடுத்து முன்னேறிச் செல்வதற்கு நிதிசார் மற்றும் மனோரீதியான ஊக்குவிப்பை வழங்குகின்ற ஒரு நிறுவனம் என்ற வகையில் படிக்க விரும்புகின்ற எவருக்கும் எமது ஊக்குவிப்பு குறைவின்றிக் கிடைக்கின்றது. பரீட்சையில் சித்தியடைந்தால் சிறந்த பலன் கிடைக்கும் என்பதை அவர்கள் அறிவார்கள். பரீட்சையில் சித்தியடைந்து தகைமையைப் பெற்றுக்கொள்கின்றவர்களுக்கு உடனடியாகவே இவற்றுக்கும் மேலாக தமது பகுதித் தலைவரின் கருத்துக்கு முரணான கருத்துக்களைத் தெரிவிப்பதற்குக்கூட நாம் அவர்களை ஊக்குவிக்கிறோம்.

**கே:-** உங்களது ஏனைய நிறுவனங்கள் பற்றி...?



ஜனசக்தி காப்புறுதி நிறுவனத்தின் தலைவர் சந்திரா சாப்டர் தனது பாரியாருடன்.

**ப:-** கொத்மலை பாலுற்பத்திக் கம்பனியை நாம் பல வருடங்களுக்கு முன்னர் ஆரம்பித்தோம். உண்மையில் ஜனசக்தியை ஆரம்பிக்க முன்னர் நாம் மிகவும் சிறிய கிராமியக் கைத்தொழிலாக ஆரம்பித்த போதிலும் தற்சமயம் 50 கோடி ரூபா சொத்து மதிப்புள்ள ஒரு கம்பனியாக அது திகழ்கின்றது. அதன் பின்னர் அண்மைக்காலம்வரை நாம் எந்தத் தொழிலிலும் ஈடுபடவில்லை. எனினும், இரண்டு, மூன்று வருடங்களுக்கு முன்னர் நாம் ஒரு நிதி நிறுவனத்தை ஆரம்பித்துள்ளோம். கெல்சிஹோம்ஸ் மற்றும் எக்ரிஸ்கொட் நிறுவனங்களின் பங்குகளைக் கொள்வனவு செய்துள்ளோம். எமக்கு சொந்தமாக ஒரு Clearing & Forwarding கம்பனியும் இருக்கின்றது. காணி கொள்வனவுக்காக நிதிவழங்கும் ஒரு நிறுவனமும் எமக்கிருக்கின்றது. எமது முக்கியமான கம்பனியாக மேற்கூரிய நிறுவனங்களே காணப்படுகின்றன. இவற்றில் அநேகமானவை 'நிதியுடன் சம்பந்தப்பட்ட' நிறுவனங்களாக இருப்பதை நீங்கள் கண்டுகொள்வீர்கள். நிதிசார் துறைக்கு அப்பால் நாம் கவனம் செலுத்தாமைக்கான காரணம் எமது சக்தி இவ்வளவுதான் என நாம் அறிந்துள்ளதனாலாகும்.

**கே:-** உங்களது ஏனைய திட்டங்கள் என்ன?

**ப:-** இவைகளைத்திறப்பதுதான். சந்தர்ப்பம் கிடைத்த பொழுதெல்லாம் நாம் அதற்கான முயற்சிகளைச் செய்துள்ளோம். ஏனைய திட்டங்களுடன் ஒப்பிடுகையில் தற்போதைக்கு இதற்கென தீர்க்கமான திட்டங்கள் ஏதும் இல்லை. தற்சமயம் எமக்கு சொந்தமாகவுள்ள நிறுவனங்களை முறைப்படுத்தி அவற்றை ஸ்திரப்படுத்துவதில் நாம் இப்போது கவனம் செலுத்திக்கொண்டிருக்கின்றோம்.

எமது துணைக்கம்பனியொன்றை மாலைதீவில் திறக்க நாம் உத்தேசித்துள்ளோம். சட்டசிக்கல்கள் இருப்பதனால் இதுவரை தீர்க்கமான முடிவுகள் ஏதும் எட்டவில்லை. மொரீஷியஸ்ஸிலும் தொழிலை ஆரம்பிக்க நாம் உத்தேசித்துள்ளோம். எனினும், அதற்கு இதுவரைஅங்கீகாரம் கிடைக்கவில்லை. இலங்கைக்கு வெளியில் இந்த இரு இடங்களில்தான் கவனம் செலுத்திவருகின்றோம். வெளிநாட்டு செலாவணி ஒழுங்குவிதிகள் காரணமாக வெளிநாடுகளில் இதற்கான சந்தர்ப்பங்கள் அரிதாகவே காணப்படுகின்றன. அதுமட்டுமின்றி இலங்கைக்கு வெளியே செல்வதாயின் அதிகளவு மூலதனமும் தேவைப்படுகின்றது.

